
சிற்பியின்
நிலவுகள்
என்.சீதாலெட்சுமி

# சிற்பியின் நிலவுகள்

## 1

"ங்கா.. "ங்கா."

மழலைக் குரல்களின் ஊடே கண் மூடிப்படுத்திருந்த அன்பரசியின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்ட வெற்றிவேந்தன், அவளுக்கு இருமருங்கிலும் படுத்திருந்த தன் இரு செல்வங்களையும் உச்சி முகர்ந்தான்.

அவனது ஸ்பரிசத்தில் மகிழ்ந்ததின் விளைவாக, அவனது பெண் வெண்ணிலா, கை - கால்களை உதைத்துக் கொண்டு தனது சந்தோஷத்தை வெளிப் படுத்தினாள். தாயின் வயிற்றிலிருந்த போது அவள் பயின்ற நாட்டியத்தை அரங்கேற்றுகிறாள் என்ற பூரிப்பில் தந்தையும் தன்னையே தொலைத்திருந்தான்.

பிறந்து மூன்று மாதங்களே ஆகியிருந்தபோதும், தன் தங்கையை மட்டும் தந்தை கொஞ்சுகிறாரே என்ற கோபத்தில், வெற்றிவேந்தனின் ஆண் வாரிசான ஆதவன் தன் குரலை உயர்த்தி, தந்தையின் கவனத்தை ஈர்த்தான்.

''என்னடா கண்ணா? அப்பா உன்னைக் கொஞ்சணுமா?'' என்ற கொஞ்சலுடன், மனைவியின் இடது புறம் படுத்திருந்த மகளை விட்டு, வலதுபுறம் படுத்திருந்த மகனிடம் சென்ற வெற்றிவேந்தன், சற்று அதிகமாய் மகளிடம் காட்டிய கொஞ்சலை, கவனத்தை ஈடு கட்டும் வண்ணம், பிள்ளையை மெல்லக் கையில் எடுத்தான். தன் மார்போடு அவனை அணைத்துக்கொண்டு ''என் செல்லக்குட்டி! என் புஜ்ஜூக்குட்டி! அம்மாவைத் தூங்க வச்சுட்டு... நீங்க ரெண்டு பேரும் முழிச்சிட்டு இருக்கீங்களா? தூக்கம் வரலையா குட்டிங்க ரெண்டு பேருக்கும்? ஹ்ம்ம்?'' என மகனின் அரும்பு மூக்கோடு தனது பெரிய மூக்கை வைத்து விளையாடியது, மலரத் துடிக்கும் ஓர் மொட்டுடன் செடி நடத்தும் உரையாடல் போல் பார்க்க ரம்மியமாய் இருந்தது.

தன் அண்ணனைத் தூக்கிக்கொஞ்சும் தந்தையை நோக்கிக் கையை நீட்டிய வெண்ணிலா போட்ட சத்தத்தில் அன்பரசியின் துயில் செவ்வனே கலைந்தது.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து கண்விழித்த அன்பரசி, அருகே கணவனைக் கண்டதும் ''எப்பப்பா வந்தீங்க?'' என்றவாறே எழுந்து அமர்ந்தாள்.

''இப்பத்தாண்டா குட்டி? நீ எப்படி இருக்கே? பசங்க ரொம்ப அடம் பண்றாங்களா?'' என மனைவியிடம்



கேள்வி கேட்டவனின் விரல்கள், மகனை மெல்ல வருடிக்கொண்டே இருந்தன.

''சாயங்காலம் தானே இந்தக் கேள்வியைக் கேட்டீங்க? ஒரு அஞ்சு மணி நேரத்தில்... என்ன மாறிடும்னு நினைக்கிறீங்க டாக்டர் சார்?'' - கேலிக் குரலில் வினவிய அன்பரசி நாம்பியல் மருத்துவனான வெற்றிவேந்தனின் தலையில் மெல்ல முட்டினாள்.

''அச்சோ வலிக்குதுடி!'' என வேண்டுமென்றே சிணுங்கிய வெற்றிவேந்தன் ''பாருடா நிலா... அம்மா என்னை அடிக்கிறா? அப்பாக்கு வலிக்குதுடா...ஞ்...ஞ்'' எனத் தன் பிஞ்சின் கைகளைத் தன் நெற்றிக்குக் கொண்டு சென்று, அவளிடம் முறையிட்டான்.

தந்தை சொன்னது புரிந்தது போல், தன் பூவிதழ் உதடுகளை விரித்துச் சிரித்தது புதிதாய் வேர்விட்டிருக்கும் பூச்செடி! ''அழகாகச் சிரிக்குது பாருடி!'' என மனைவி பார்த்தே இராத அதிசயத்தை மிகுந்த ஆவலுடன் அவளிடம் பகிர்ந்துகொண்ட கணவனின் கன்னம் பிடித்துக் கொஞ்சிய அன்பரசி, ''சாப்பிட்டீங்களா?'' என்றாள் கொஞ்சலுக்கு மாறான வாஞ்சையுடன்.

''ராத்திரி ஒரு மணிக்கு யாராவது சாப்பிடாம இருப்பாங்களா?'' - மனைவி கேட்ட கேள்விக்கான பதிலை மகனைப் பார்த்து கூறியவன், ''அம்மாக்கு அறிவே இல்லடா குட்டீஸ்! தத்தி... புத்தி ஆகிட்டா... அச்சோ அச்சோ!'' என அதற்கும் ஓர் கிண்டல் செய்தான்.

''ரொம்பத்தான்! சென்னையிலிருந்து ஏழு மணிக்குக் கிளம்பின மனுஷன்... பத்து நாள் கழிச்ச

பிள்ளைங்களைப் பார்க்க வர சந்தோஷத்தில் ஒண்ணும் சாப்பிட்டிருக்க மாட்டீங்களே? சாப்பாடு போடலாமேன்னு ஒரு நல்லெண்ணத்தில கேட்டா... ஹ்ம்ம் ரொம்பத்தான்!'' எனப் பொய்க் கோபம் காட்டிய அவனது இல்லாள், மெத்தையில் கிடந்த தன் அன்பு மலரைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

''மணி ராத்திரி ஒண்ணாகுது? ராக்கோழி மாதிரி... நல்லா திரு திருன்னு முழிச்சிட்டே இருங்க! அப்பா மாதிரியே ராத்திரி தான்... சுறுசுறுப்பே வரும்!'' என்றவள், கணவனின் மருத்துவத் தொழிலையும், அவனுக்குக் குவியும் நோயாளிகளைப் பார்த்துவிட்டு வருவதால் ஏற்படும் காலத்தாமதத்தையும் மனதில் வைத்துச் சொல்ல, பத்து ஆண்டுகளாய் தனி கிளினிக் வைத்து நடத்தும் வெற்றிக்கு அது ஞாபகம் வரவில்லை.

மாறாக ''ராத்திரில சுறுசுறுப்பா இருந்ததால தானே கண்ணுங்களா... நீங்க ரெண்டு பேரும் வந்தீங்க? அதைப் பாராட்டுவாளா? அதை விட்டுட்டு'' என அவன் கண் சிமிட்ட, ''கடவுளே! பச்சைப் புள்ளங்ககிட்ட போய் என்ன பேச்சுப் பேசுறீங்க?'' என அவன் தோளில் பலமாய் அடித்தவள் ''பாராட்டுத் தானே? கொடுத்துட்டா போச்சு'' எனக் கையைப் பிசைந்து கொண்டு, அவனை அடிப்பதற்குக் குறி பார்க்க, ''அப்பாவைக் காப்பாத்துங்க... அப்பாவைக் காப்பாத்துங்க'' எனத் தன் பிள்ளைகளிடம் கொஞ்சியவாறே, மனைவியின் மடியில் படுத்துக்கொண்டான். இருவருக்குமே, திருமணம் முடிந்து எட்டு நீண்ட ஆண்டுகள் ஆகியிருந்ததைப் பற்றியோ, புத்திர பாக்கியம் தள்ளிப் போவதை எண்ணி



ஏழு வருடங்களாக இருவரும் பட்ட மன வேதனையைப் பற்றியோ துளியும் நினைப்பிருக்கவில்லை.

செல்வத்துள் சிறந்த செல்வம் பிள்ளைச் செல்வம் என்பதற்கிணங்க, சென்னை பெசன்ட் நகரில் சொந்த வீடு, சொந்த ஊரான திருச்சியில் ஒரு தனி வீடு, இரண்டு தோப்புக்கள், ஆங்காங்கே நிலபுலன்கள், தங்களுக்கு ஒன்றும் இரு வீட்டுப் பெற்றோரின் தேவைக்கு ஆளுக்கு ஒன்றுமாய் மூன்று கார்கள், ராசியான மருத்துவர் என்ற நற்பெயர், அதற்கேற்றவாறு பெருகிய வருமானம் என மற்ற செல்வங்கள் கொட்டிக் கிடந்தாலும், துள்ளி விளையாட மழலை இல்லாமல் அவர்களது மூன்று பெட்ரூம் கொண்ட அவர்களது அடுக்கு மாடி குடியிருப்பு களையிழந்து தான் போயிருந்தது.

ஏறாத கோவில் இல்லை, சொல்லிக்கொள்ளாத பிரார்த்தனையில்லை, இருக்காத விரதமில்லை எனக் கடவுளை மட்டுமே நம்பியிருக்கும் வண்ணம், இருவருக்குமே மருத்துவ ரீதியாக எந்தவிதமானக் குறைபாடும் இருக்கவில்லை. 'மழை பெய்வதும், மங்கை பூப்பதும், மக்கள் பிறப்பதும் மகேசன் தீர்ப்பு' என்ற வாக்கிற்கிணங்க, ஏழு வருடங்களுக்குப் பின்னரே மனமிரங்கிய மகேசன், காத்திருந்த இருவருக்கும் 'இரட்டைக் குழந்தைகள்' என்ற அமிர்தத்தைப் பிரசாதமாகக் கொடுத்து, அவர்களை நெக்குருக வைத்தான்.

அன்பரசி கருவுற்றது முதல் இரு வீட்டுப் பெரியவர்களும் அவளை மாறி மாறி தாங்க, அவளது ஆருயிர் கணவன் வெற்றிவேந்தன் அவளைத் தரையில் கால் படாது, கைகளிலேயே தாங்கினான் எனலாம்.

சூரியனின் ஆட்சி நேரத்தில் அவளது உடலுக்கு வேண்டிய ஊட்டச்சத்துகள் தொடங்கி, அவளது மணிவயிற்றில் குடியிருக்கும் தன் மக்களின் ஆரோக்கியத்தையும் பேணுபவன், நிலாவும் ஆட்சி நடக்கும் வேளைகளில் மனைவியின் மடியில் தலைவைத்து அவளுள்ளிருக்கும் முத்துக்களிடம் சுவாரஸ்யமான உரையாடல்களை நடத்துவான்.

அதே நினைவில் இப்போதும் மனைவியின் மடியை அவன் நாட, பிள்ளைகள் இருவரும் தன் வயிறெனும் அரணிலிருந்து வெளிவந்துவிட்டனர் என்பதை உணர்த்தும் வண்ணம், ''எழுந்திருங்க வெற்றி! புள்ளையைக் கையில வச்சுக்கிட்டே என்ன கொஞ்சல்?'' என அவனை அதட்டி எழுப்பினாள்.

பின்னர் குழந்தைகளிடம் திருப்பி ''குட்டீஸ் வாங்க ரெண்டு பேரும் தொட்டில்ல படுத்துக்கோங்க. அம்மா போய், அப்பாக்கு சாப்பாடு போட்டுட்டு வரேன்'' என்றவாறே தன் கையிலிருந்த வெண்ணிலாவைத் தொட்டிலில் போட்டாள்.

''ம்ம். கொஞ்சினது போதும்... கொடுங்க'' என வெற்றியிடமிருந்து வாங்கிய மகனை, அடுத்தத் தொட்டிலில் இட்டவள், தாய் வீட்டில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையை விட்டு வெளியே வந்தாள். சமையலறையில் அவளது அரவத்தைக் கேட்டு, ''அக்கா, அத்தான் வந்துட்டாங்களா?'' என்று வந்தான் அவளது ஒரே சகோதரனான தமிழரசன்.

''ம்ம். வந்தாச்சு! அவங்களுக்குத் தான் சாப்பாடு எடுத்து வைக்கிறேன். நீ ஏன்... தூங்காம இருக்கே?'' என



வினவியவளுக்குப் பதிலாக ''குட்டீஸ் ரெண்டு பேரும் அழற சத்தம் கேட்டது! நீ தூங்கியிருந்தா நான் வந்து பார்த்துக்கலாமேன்னு எழுந்தேன்'' என்ற தம்பியைப் பெருமையாக பார்த்தாள், அன்பரசி.

இந்த மூன்று மாத காலத்தில், நிலாவும் ஆதியும் இரவு நேரத்தில் அசந்து உறங்கிய நாட்களை எண்ணினால் இரண்டோ மூன்றோ தான் வருமளவிற்கு அவர்கள் இருவரும் இரவில் கொட்டக் கொட்ட முழித்திருப்பார்கள். முழிப்போடு நிறுத்தியிருந்தால் கூட பரவாயில்லை, அவர்களுடன் யாராவது பேசிக் கொண்டே இருக்க வேண்டும், இல்லை விளையாட வேண்டும். இல்லையென்றால் சென்னையிலிருக்கும் தங்கள் தந்தையை எட்டிவிடும் வீரியத்துடன் கத்தி அழுவர் இருவரும்! அந்த நேரங்களில், மூட்டு வலியால் அவதிப்படும் தன் தாயார் பார்வதியைத் தொந்தரவு செய்யாமல் அன்பரசியே அவர்களைப் பார்த்துக் கொள்ள எண்ணினால், பச்சை உடம்புக் காரியின் மேல் அக்கறை கொண்டு அவளது தம்பி மட்டுமல்லாது, அவளது அன்புத் தந்தை பரமேஸ்வரனும் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வர்! தங்கள் வீட்டு இளவரசியை ராணியாக்கிய ராஜ வாரிசுகள் அல்லவா?

''சரிக்கா, நீ அத்தானை கவனி. நான் போய்... பசங்க கூட இருக்கேன்'' என்று உள்ளே ஓடியவனிடம் வெற்றி நலம் விசாரித்தவாறே இரவு உணவிற்காக வந்தனர்.

பாதி உணவின் போது ''அன்பு! நாளைக்கு... நீங்க மூணு பேரும் என்னோடவே சென்னை வந்திருங்க. பசங்களை விட்டுட்டு என்னால இனிமேல் தனியா

இருக்க முடியாது. எங்க பார்த்தாலும் அவங்க முகம் தான் தெரியுது!'' என்ற கணவனின் தலையை மெல்ல வருடியவள் ''பிள்ளைங்க ஞாபகம் தான் வருதா? பொண்டாட்டி ஞாபகம் வரலையா?'' என்றாள் விளையாட்டாக.

''அதெப்படி வராம இருக்கும்? அவங்க முகம் ஞாபகம் வரும்போது, அவங்களுக்கு ஆயா வேலை பார்க்கிற மாதிரி உன் முகமும் ஞாபகம் வரும்'' என வம்பு செய்தான் அந்த அன்புக் கணவன்.

''ஆயா வேலையா? எனக்குக் கூட உங்க முகம் ஒரு கம்பௌண்டர் ரூபத்தில் தான் ஞாபகம் வருது!'' எனப் பழிப்பு காட்டிய மனைவிக்கு, கணவன் தன் மீது கொண்டிருக்கும் காதல் புரியாமலிருந்தால் தான் அதிசயம்! இந்த எட்டு வருடத் திருமண வாழ்க்கையில் அன்பரசி துவண்டிருந்த சமயங்கள் யாவும் அவளைத் தூணெனத் தாங்கி, தலை சாயத் தோள் கொடுத்தவன், தன் அன்பினால் அவளது துயர் போக்கினான் என்றபோது அவனது அன்பை அவனது அன்பு மனைவியும் உணர்ந்திருப்பதில் என்ன அதிசயம்.

இந்த அன்னியோன்னிய தம்பதிகளின் இரட்டைச் செல்வங்களின், காது குத்தி மொட்டை போடும் விழா அடுத்த நாள் காலை வெகு விமர்சையாய், சமயபுரம் மாரியம்மன் கோவிலில் நடைபெற்றது.

தாய் மாமனான தமிழரசின் மடியில், ஐந்து நிமிடங்கள் மூத்த பிறந்த தன் முத்தான மகன் வயிற்றுப் பேரனை வைத்தார் வெற்றிவேந்தனின் தாயார் வைதேகி.

முடி எடுப்பவரின் கைகளில் கத்தியைக் கண்டதும் லேசாய் மிரண்ட ஆதி, அவர் தனது தலையில்



தண்ணீரைத் தெளித்ததும் 'ஓ' என வீரிட்டு அழ ஆரம்பித்தான். ''தமிழ் மாமாடா... அழக் கூடாது ராஜா... இங்க பாரு... தாத்தா பாரு...'' எனக் கிலுகிலுப்பை வைத்துக் கொண்டு, தனது அறுபது வயது கம்பீரத்தை மறந்து பேரனிடம் கொஞ்சிக் கொண்டிருந்த தனது தந்தை வெங்கட்ராமனைப் பார்த்துச் சிரித்திருந்தான் வெற்றிவேந்தன்.

தாய் வழிப் பாட்டனார் ஒரு புறம், தந்தை வழிப் பாட்டனார் மறுபுறம் என அவனைச் சமாதானப்படுத்த அவர்கள் எடுத்த முயற்சிகளைக் கண்டபோது, அவன் அழுகையை நிறுத்த வேண்டும் என்றால் நீங்கள் இருவரும் குட்டிக்கரணம் போட வேண்டும் என்றாலும் செய்திருப்பார்கள் என்றே தோன்றியது அன்பரசிக்கு!

ஆதியின் முறை முடிந்து நிலாவின் பங்கு வர, அன்னையாய்ச் சற்று பயந்து தான் போனாள் அவள். ஏனென்றால், நிலா எப்போதுமே அழுகையில் ஆதியை விட ஒரு படி மேல் தான்! நெஞ்சில் சிறு பயத்துடன் நின்றிருந்தவளின் கைகளில் பிள்ளையைக் கொடுத்த வைதேகி ''அன்பு, வா பிள்ளையைக் குளிப்பாட்டித் தூக்கிட்டு வந்திடலாம்... அங்க வெந்நீருக்குச் சொல்லியிருக்கேன்'' என்றவாறே அவளை அங்கிருந்து கிளப்பினார்.

தமிழின் மடியில் அமர்த்தப்பட்ட பெண்ணைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே சென்ற அன்பரசி, மகனின் குளியல் முடிந்து திரும்பி வருகையில், அவளது பயத்திற்கு அவசியமே இல்லை என்பது போல் அவளது இளவரசி, தன் மாமனின் மடியை மெத்தையாக்கி,

மெத்து மெத்தென்று மிருதுவாய் இருந்த தன் மேனியைத் துயிலில் ஆழ்த்தியிருந்தாள்.

அவளது முகத்தில் அப்போது படர்ந்த சிரிப்பை நிலைக்க விடாமல், அடுத்த அரைமணி நேரத்தில் ஆதியின் காது குத்தல் நடைபெற்றது.

''பார்த்து அண்ணே!''

''பிள்ளைக்கு வலிக்கும்... பார்த்து...''

''மெதுவா குத்துங்க!''

''ரெண்டு பக்கமும் குத்தணுமா?''

''இதென்ன ஊசி... இவ்வளவு கூரா இருக்கு?''

''மெதுவா... மெல்ல... பார்த்து'' எனப் புலம்பித் தள்ளிய தன் அண்ணியின் கைப்பிடித்து எழுப்பிய விஜயமாரன், ''அண்ணி, வெற்றி கிட்ட போய்... நில்லுங்க. அழாத பிள்ளையையும் நீங்களே அழ வச்சுடுவீங்க போலவே'' என்றான் சிரிப்புடன்.

''இல்ல விஜய்! ஆதிக்குச் சின்னதா கொசு கடிச்சாக் கூடப் பொறுக்காது... கையைக் கையை அங்கேயே கொண்டு போய்க்குவான். கண்ணில தண்ணி நின்னுடும்'' என அழு குரலில் அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஆசாரி ஆதியின் காதுகளில் ஓட்டை இட்டு, வைரத்தோடு ஒன்றை மாட்டிவிட, ''வீல்'' என அலறிய குழந்தைக்கு எதிரொலியாய் அன்பரசியும் அழுதாள்.

''என்ன அண்ணி இது? சின்னப் பிள்ளை மாதிரி...'' என விஜய் சிரிக்க, மனைவியைத் தன் பக்கம் இழுத்துக்



கொண்ட. வெற்றியின் கண்களும் கலங்கியிருந்ததை அனைவருமே ஓர் ஆச்சரியத்துடன் பார்த்திருந்தனர்.

தொடர்ந்து நடந்த வெண்ணிலாவின் காதுகுத்தில், அன்பரசியின் கண்கள் அமுத சுரபியாய்க் கண்ணீரை சுரந்து கொண்டே இருக்க, அதை நிறுத்துவதற்காக தன் பொக்கை வாய் திறந்து சிரித்த ஆதி, தன் கைகளை நீட்டித் தாயை அழைத்தான்.

அதன் பின்னர், இரு வீட்டினரும் சமயபுரம் மாரியம்மனைத் தரிசித்து விட்டு, வெற்றியின் வீட்டிற்குச் சென்றனர். மதிய உணவிற்குப் பின்னர், வெற்றி தன் மனைவி, குழந்தைகளுடன் சென்னை கிளம்ப, வைதேகியும் அவர்களுடன் இணைந்து கொண்டார்.

''நீங்க பாட்டுக்குக் கிளம்பிப் போய்ட்டா... நாங்க ரெண்டு பேரும் சாப்பாட்டுக்கு என்ன பண்றது? மரியாதையா எனக்கு ஒரு கல்யாணம் செய்து வச்சுட்டுப் போங்க'' என விஜய் வம்பு செய்ய, ''கல்யாணம் தானே? அம்மா வீட்டுக்குப் போயிருக்க வைஷுகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு செய்து வச்சுடுறேன்டா, ராஜா!'' என பிரசவத்திற்காக தாய் வீடு சென்றிருக்கும் தன் மருமகளைப் பேச்சில் இழுத்து, ''தயவு செஞ்சு கிளம்புங்க!'' என அவனது வாயாலேயே சொல்ல வைத்தார் வைதேகி.

''அம்மா வரவரைக்கும்... உங்களுக்கும் அப்பாக்கும் நா சாப்பாடு கொடுத்து விடுறேன் தம்பி'' என்ற பார்வதியை நன்றியுடன் பார்த்தார் வைதேகி.

''ரொம்ப தேங்க்ஸ், அண்ணி!'' என அவரது நன்றியைப் பொழிய, ''இதில என்னங்க அண்ணி...

இருக்கு? இந்த நேரத்தில உதவி செய்யத் தானே சொந்தம்ன்னு இருக்கோம்'' என ஒதுக்கியவர், ''இவங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு... எப்படி இருக்கப் போறேன்னு தெரியல. மூணு மாசமா... கைக்குள்ளேயே வச்சுக்கிட்டு இருந்துட்டேன்'' என்றார் ஏக்கமாக.

''அட... இன்னும் ரெண்டு மாசத்தில நீங்களும் தான் அங்க போகப் போறீங்க? அதுக்கு எதுக்கு இப்படி ஒரு ஃபீலிங்க்ஸ்'' என்று தாயை அடக்கிய தமிழுக்குமே, பிள்ளைகளைப் பிரிந்து இருக்க வேண்டுமே என்று வருத்தமாய் இருந்தது. தங்கள் வருத்தத்திற்காக பார்த்தால் அத்தானின் மனம் தவித்துப் போகுமே என்று தான் அவன் அப்படிக் கூறியது.

நெஞ்சார நடந்த பிரியா விடைகளுக்கு மத்தியில் சிக்குண்டிருந்த வெற்றியின் குடும்பம் ஒருவாறாய் சென்னையை நோக்கித் தங்கள் பயணத்தைத் துவக்கியது!!

## 2



வெற்றியின் குடும்பம் சென்னை வந்து சேர்ந்து இன்றோடு ஒன்பது மாதங்கள் நிறைவடைந்துவிட்டன. அதற்காக, அவர்கள் ஊருக்கே செல்லவில்லை என்று சொல்ல முடியாமல் பிள்ளைகள் இருவருடனும் தாய் வீட்டில் மட்டுமல்லாது மாமியார் வீட்டிலும் ஒரு



மாசத்திற்குப் பத்து நாட்கள் கணக்கில் தங்கி, கணவனை ஏங்க விட்டுக் கொண்டிருந்தாள் அன்பரசி.

இந்த மாதம் தங்கள் வீட்டுச் சந்திரனும், சூரியனும் ஒன்றாய் தங்களது முதல் பிறந்த நாளைக் கொண்டாடப் போவதால், அந்த மாதம் முழுதுமே மிகுந்த பரபரப்புடன் இருந்தாள் அன்பரசி!

''வெற்றிப்பா! உங்க கிளினிக்ல (சிறிய ஆஸ்பத்திரி என்று கூட வைத்துக் கொள்ளலாம்) இருக்கிறவங்க எல்லாரையும் பர்த்டேக்குக் கூப்பிடுங்க.''

''நானும் வரட்டுமா? நேர்ல பத்திரிகை கொடுத்தா நல்லா இருக்கும் தானே?''

''அப்புறம் உங்க பிரண்ட்ஸ் எல்லாரையும்... நேர்ல போய்க் கூப்பிட்டு வரலாம். என்ன?''

''என்னோட பிரண்ட்ஸ்ல ரெண்டு மூணு பேர்கிட்ட தான் காண்டாக்ட் இருக்கு... அவங்களை மட்டும் கூப்பிடலாம்.''

''இங்க இருக்கற சொந்தக்காரங்களுக்கு மட்டும் பத்திரிகை கொடுத்தா நல்லா இருக்காது வெற்றி! இந்த வாரக்கடைசியில ஊருக்குப் போயிட்டு... அங்க இருக்கற எல்லாருக்கும் கொடுத்திட்டு வந்திடலாம்.''

''அப்புறம்... பாப்பாக்கு என்ன டிரஸ் வாங்கலாம்? பட்டுப் பாவாடையா? அதுக்கு ஏற்கனவே நிறையப் பட்டுப் பாவாடை இருக்கு வெற்றி... மொட்டை போடும் போது பச்சைக் கலர்ல ஒண்ணு... அப்புறம் பழனிக்குப் போய் மொட்டை போடும் போது ஆரஞ்சு கலர்ல ஒண்ணு வாங்கினோமே... சமயபுரம் கோவில்

திருவிழாக்கு அத்தை மெரூன் கலர்ல எடுத்தாங்க... இங்க திருவேற்காடுல தொட்டில் கட்டும் போது தமிழ் மஞ்சள் கலர்ல எடுத்திட்டு வந்தான்... அநியாயத் திற்குப் பட்டுப் பாவாடையா இருக்கு, வெற்றி! ஹ்ம்ம் என்ன செய்றது?''

''ஹ்ம்ம். தம்பிக்கு ஷெர்வானி வாங்கிக்கலாம். பசங்களுக்குத் தான் பாண்ட், ஷர்ட்டை விட்டா வேற டிரஸ் இல்லையே? ஹ்ம்ம்... பாவம் என் தங்கக்குட்டி!''

''அப்புறம்... எனக்கு ரெக்ஸோனா கிரீன் கலர்ல பட்டுப் புடவை வேணும்...''

''உங்களுக்கு... எப்பவும் போல் கிரீம்ல ஏதாவது ஒரு கலர் கோடு போட்ட சட்டை எடுத்துக்கலாம். அந்த அழுக்கு கலரைத் தான் விடமாட்டேன்ங்கிறீங்களே!''

''ரெண்டு அம்மா - அப்பாக்கு, விஜய் - வைஷுக்கு, குட்டி பிரணவ்க்கு, தமிழுக்கு எல்லாருக்கும் டிரஸ் வாங்கணும். திருச்சில சாரதாஸ்ல வாங்கலாமா? இல்ல சென்னையிலேயே வாங்கிட்டுப் போய்டலாமா?''

''அப்புறம்... கண்ணம்மை அக்காக்கும் ஒரு டிரஸ் எடுத்துக் கொடுத்துடலாம். நம்ம ஆதின்னா அவங் களுக்கு ரொம்ப இஷ்டம்... இந்த நிலா தான் அவங்க கிட்ட போகவே போகிறது... சரியான அடம் பிடிச்ச கழுதை!'' - இரவு உணவிற்காக உணவு மேஜையின் முன்னே அமர்ந்திருந்த வெற்றிடம் வாய் மூடாமல் பேசிக்கொண்டே இருந்தாள் அன்பரசி.

சிறிது நேரத்தில், கணவன் கொட்டிய ''உம்'' கேட் காமல் போகவே, என்னவென்று பார்த்தால் தட்டின் மேல் கவிழ்ந்து தூங்கியிருந்தான், அவன்.



அவன் முதுகில் செல்லமாய் ஓர் அடி வைத்தவள், ''எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிட்டு இருக்கேன்? இப்படித் தூங்குறீங்களே? அதுவும் சாப்பாட்டுத் தட்டு மேல? சாப்பாடை சூடு பண்ணிட்டு வரதுக்குள்ள என்ன அவசரம்? முழிங்க... அட எந்திரிங்க வெற்றி!'' என அவனை உலுக்கினாள்.

''ஹப்பாடா! பேசி முடிச்சிட்டியா? குட் குட். சாப் பாடைப் போடு தாயே! சாப்பிட்டு ஓடிப் போயுடுறேன்'' எனத் தட்டைக் கையில் ஏந்திக் கொண்டு பரபரத்தான் கணவன்.

''நீங்கெல்லாம் எப்படித் தான் டாக்டர் தொழில் பார்த்துக் கிழிக்கிறீங்களோ?'' என அன்பரசி நொடித்துக் கொள்ள, ''இதென்னடி வம்பா இருக்கு? ஒரு டாக்ட ருக்குப் பசிக்கக் கூடாதா? தூக்கம் வரக் கூடாதா? அவனோட குழந்தைகளை அவன் பார்க்கக் கூடாதா? எந்த ஊர் நியாயம் இது?'' எனக் கணவனும் அநியாயத் திற்கு நொடித்துக் கொண்டான்.

''உங்களை யாரு சாப்பிட வேண்டாம்ன்னு சொன் னது? இந்தாங்க நல்லா கொட்டிக்கோங்க...'' எனப் போலியாய்ச் சலித்தவள், ''நான் சொல்றதையே கேட்க முடியாம இப்படித் தூங்கி வழியிறீங்களே... எப்படி உங்க நோயாளிங்க பேசறதைப் பொறுமையோட கேட் கிறீங்க? எனக்கு ஒரே டவுட்டா இருக்கு. அதான் அப்படிக் கேட்டேன்!'' எனக் கண்ணை உருட்டி, அவள் ஒற்றை விரல் நீட்டி மிரட்டவும் அங்கே ஓர் சிரிப்பலை படர்ந்தது.

மனைவியின் கைப்பிடித்து தன் மடியில் வலுக் கட்டாயமாக அமர்த்திக் கொண்ட வெற்றிவேந்தன் "அதுவாடி என் தங்கமே! அங்க எல்லாரும் ஒரு விஷயத்தை ஒரு தடவை மட்டும் தான் சொல்லுவாங்க... மிஞ்சிப் போனா ரெண்டு தடவை இல்லன்னா மூணு தடவை. ஆனா... நீ இருக்கியே..." என இழுத்து ஓர் சிரிப்பு சிரித்தான். பின்னர் "ஒரே விஷயத்தை - அதான் குழந்தைங்க பார்த்டே விஷயத்தை ஒரு மாசமா பேசிட்டு இருக்கே" என்றான் சிரிப்பை அடக்கி, கண்களில் பயம் போன்றொரு பாவனையில்.

"ஹையோ! பெரிய கண்டுபிடிப்பு" என்ற அன்பரசிக்கும் தனது செயல்களை எண்ணி சிரிப்பே பிரதானமாய் வெளிப்பட்டது.

"நிஜமாவே பெரிய கண்டுபிடிப்பு தான்டி! என்ன தான் தூங்கினாலும்... எப்பவும் சொல்ற விஷயங்களில் ஒண்ணை இன்னைக்கு நீ மிஸ் பண்ணிட்டே என்பதை நான் கவனமா நோட் பண்ணிட்டேனே?" எனக் குதுகலித்தான் கணவன்.

"சின்னப்பிள்ளை மாதிரி... எதுக்கு இப்படித் துள்ளிக்கிட்டிருக்கீங்க?" எனக் கணவனின் இரு கன்னங்களையும் பிடித்துக் கொண்டு கொஞ்சிய அன்பரசி "அப்படி என்ன பெரிய விஷயத்தை மிஸ் பண்ணிட்டேன்? சொல்லுங்க பார்க்கலாம்" என்றாள் சவால் போல.

"நா திருப்பதிக்கு போனதைத் தான்! அங்க வந்து நிலா பேபி, தலை மேல இரண்டு கையையும் வச்சுக்கிட்டு... "நா... நா"ன்னு கத்துச்சே... அதை விட்டுட்டியே?" என எடுத்துக் கொடுத்தான்.



"போதும் உங்க கண்டுபிடிப்பு! வாஸ்கோடகாமா தோத்தார்" என்ற சலிப்பான முனங்களுடன், அவன் மடியிலிருந்து இறங்கியவளின் கண்களில் நான்கு நாட்களுக்கு முன்னர் திருப்பதியில் வெண்ணிலா செய்த சின்ன குறும்பு நினைவில் ஆடியது.

அவர்கள் தங்கியிருந்த இடத்திலேயே மொட்டை எடுப்பதற்கான ஆட்கள் இருந்தமையால், 'முடி இறக்கும் பிரார்த்தனையுடன்' வந்திருந்த பக்தர்களுக்கெல்லாம் வெளி வராண்டாவில் வைத்தே முடியை மழித்துக் கொண்டிருந்தனர்.

வெண்ணிலா மற்றும் ஆதவனுக்கும் திருப்பதியில் முடி இறக்கும் பிரார்த்தனையை அவர்கள் அன்னை, ஏழுமலையானிடம் வைத்திருந்த போதும், ஒரே மாதத்திற்கு முன்னர் அடித்த மொட்டையின் விளைவாக வளர்ந்திருந்த மூன்று இன்ச் முடியை இப்போதே இறக்கக் கூடாது என்று விட்டான் வெற்றிவேந்தன். இன்னும் சிறிது காலம் சென்றதும் மீண்டும் திருப்பதி வந்து மொட்டை எடுத்துக் கொள்ளலாம் என அவன் கூறியமையால் தனது பிரார்த்தனையான அங்கப்பிரதட்சணத்தை மட்டும் செய்துவிட எண்ணி திருப்பதிக்குக் குடும்பத்துடன் வந்திருந்தாள் அன்பரசி.

காலையில் 'உருளுசேவா' என்று அழைக்கப்படும் அங்கப்பிரதட்சணத்தைச் செய்துவிட்டு, குடும்பத்துடன் தங்குமிடம் திரும்பியபோது, அங்கே பலருக்கு முடி எடுத்துக் கொண்டிருந்தனர் பணியாளர்கள். அதைக் கண்ட வெண்ணிலா தன் தந்தையின் கையிலிருந்து இறங்கி, மொட்டை எடுத்துக் கொண்ட ஒரோருத்தர்

முகத்தையும் அருகில் சென்று குனிந்து குனிந்
பார்த்தது.

சிறிய பூப்பந்து ஒன்று, தனது இதழ்களில் ஒன்
விரித்து நர்த்தனமாடியது போலிருந்தது வெண்ணில
கண்ணை விரித்து அவர்களைப் பார்த்தது. அதி
கவரப்பட்ட பலரும், அவளது கன்னம் பிடித்துக் கொஞ்
''பாப்பாக்கும் மொட்டை போடலாமா?'' எனக் கேட்ட
ஓர் பணியாளர்.

அவரது கேள்வி வந்தது தான் தாமதம், தலைக்கு
மேல் கையை கொண்டு சென்ற வெண்ணிலா ''நா..
நா'', ''நானா.. நானா...'' எனத் தலையை ஆட்டி ஆட்
மறுக்க ஆரம்பித்துவிட்டாள்.

''பாப்பாக்கு மொட்டை போடலடா... அந்த
மாமாக்குத் தான் மொட்டை. பாப்பாக்கு இல்லவே
இல்லை'' என வெற்றி செய்த சமாதானத்தில் லேசாய்
அடங்கியிருந்தவள், ''என்னங்க! பிள்ளை மிரண்டு
போயிட்டா போலிருக்கே? எவ்வளவு வேகமா ''வேண்
டாம், வேண்டாம்னு'' சொல்றா பாருங்க. ரொம்ப பயந்த
போய்ட்டா'' என்று அன்பரசி போட்ட அரட்டலில்
மீண்டும் ''நானா... நானா... நானா... நானா... நானா...''
என்று அலற ஆரம்பித்துவிட்டாள். இப்போது ''நானா''க்
கள் மிகுந்த வேகத்துடனும், அதிக அழுத்தத்துடனும்
வெளியே வர அன்பரசியின் பயம் அளவுக்கு மீறி
எகிறிப் போனது. அதன் விளைவாக, அன்று முழுவதும்
அன்பரசியின் கையை மேடையாக்கி ஜம்மென்று
அமர்ந்திருந்தாள் பெண்ணரசி.



அன்பரசியின் கவனம் அங்கே இங்கே சிதறுவதை
உணர்ந்துவிட்டால் போதும் ''ம்மா'' என அவளது
கன்னம் பிடித்துத் தன் பக்கம் திருப்ப முயற்சி செய்பவள்,
அது பலனளிக்காமல் போய்விட்டால் ''பப்பா... நானா...
நான்னா...'' எனத் தன் பாட்டை அழகுற பாட ஆரம்பிப்
பாள்; அன்பரசியும் ''என்னடா புச்சு? ஒண்ணுமில்லைடா
செல்லம்! என் தங்கத்திற்கு மொட்டை போடவே மாட்
டாங்க... அழக்கூடாது! அழக்கூடாது!'' எனக் கண்
ணீரே வழியாத கன்னங்களில் முத்தம் வைத்து நிமிர்வாள்.

இந்தக் கூத்து இரண்டு நாட்கள் செவ்வனே
அரங்கேற, சென்னை வந்து சேர்ந்த தினத்தன்று மூன்று
மணியளவில், ஆதிக்குப் பிடித்த, வெண்ணிலாவிற்குப்
பிடிக்காத வேகவைத்து மசித்த கேரட்டை எடுத்துக்
கொண்டு அன்பரசி வந்ததும், தலைக்கு மேல் கையைக்
கொண்டு சென்ற வெண்ணிலா ''நா... நா'', ''நானா...
நானா'', ''பப்பா.. நானா...'' எனத் தலையை ஆட்டி ஆட்டி
மறுத்தவாறே தாயை ஓரக் கண்ணால் ஓர் பார்வை
வேறு பார்த்ததும் தான், அன்பரசிக்கு விஷயம் புரிந்தது.

பெண்ணின் குறும்பு விளங்கிவிட, ''அடிக்கழுதை!
இந்த வயசிலேயே என்னழகா சாரியம் சாதிக்கிறே!
அப்பாவை உரிச்சு வச்சுப் பிறந்திருக்குன்னு சும்மாவா
சொல்றாங்க'' என மகளைக் கொஞ்சியவள், அவளது
''நானா'' க்களை சிறிதும் பொருட்படுத்தாது ''நானா'' க்கு
''நானா'' போட்டாள். அதாவது கேரட்டை ஊட்டி
முடித்தாள்.

அன்றைய தினம் வெற்றி வந்ததும் இந்தக் கதை, நடிக
நடிகையரின் கைதேர்ந்த நடிப்புடன், இயக்குனரின்

குறும்பு கலந்த திரைக்கதையுடன் ஒளிப்பதிவாளரின் அழகிய கேமரா இயக்கத்துடன் ஓர் வண்ணப்படமாக அரங்கேறியது. வெற்றிக்கு மட்டுமல்லாது திருச்சி மாநகர் முழுதும் திரையிடப் பட்ட இக்கதை இரண்டே நாட்களில் பிரபலமானது. அது தான், பேரன் பேத்திகளின் அழகு குறும்புகளை ஊருக்கு அரங்கேற்ற திருச்சியில் இரண்டு பழம்பெரும் அரங்கங்கள் இருக்கின்றனவே!!

பெண்ணின் சாமர்த்தியத்தை இன்றும் எண்ணி மகிழ்ந்தவாறே, அவனுக்காக செய்த வஞ்சிரை மீன் வறுவலை அவனது தட்டில் வைத்தாள்.

''ஹே, இன்னைக்கு மீன் செஞ்சியா? அசைவம் சாப்பிட ஆரம்பிச்சுட்டியா என்ன?'' என வியந்தான் வெற்றிவேந்தன். புத்திரப் பாக்கியம் அருளப் பெற வேண்டும் என்பதற்காக அன்பரசி இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாய் அசைவம் உண்பதை நிறுத்தியிருந்தாள். மனைவி உண்ணாத போது தனக்கு மட்டுமாய் அவள் சமைக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் தங்கள் வீட்டில் அசைவம் உண்பதைத் தவிர்த்திருந்தான் வெற்றி. அதன் வெளிப்பாடாய் தான் வெற்றி வியந்ததே!

அதற்கு பதிலாய் ''அதான்... திருப்பதிக்கு போயிட்டு வந்துட்டோமே! அங்கப்பிரதட்சணம் செஞ்சு பிரார்த்தனையை முடிச்சாச்சு இல்லையா... அதான் அசைவம் எடுத்தேன்'' என்ற அன்பரசி. ''ஒரு வருஷம் முன்னே வரைக்கும்... என்ன பிரச்சனைன்னே தெரியாம எவ்வளவு தவித்துப் போயிருந்தோம் வெற்றி!



அதுக்கெல்லாம் ஒரு தீர்வைக் கொடுத்தது வெங்கடேசப் பெருமாள் தானே? அவருக்குரிய பிரார்த்தனை நிறைவேத்திட்டுத் தான் அசைவம் சாப்பிடணும்ன்னு முடிவு பண்ணிட்டேன். என்னால... என்னோட பிரார்த்தனையால ரொம்ப கஷ்டப்பட்டீங்களா, வெற்றி?'' எனக் கண்களில் வருத்தம் மிகவுற வினவினாள்.

''ஹே என்னடா இது? நல்லாத்தானே போயிட்டு இருந்தது? எதுக்கு இப்படி ஓவர் சென்ட்டி ஆகுற?'' என மனைவியின் கன்னம் பிடித்துக் கொஞ்சிய மருத்துவன், ''அவங்க நம்ம குழந்தைங்க அன்பு! அவங்களோட நல்லதுக்காக செய்ற ஒரு விஷயத்தை உன் விருப்பம், என் விருப்பம் என்று பிரிச்சுப் பேசாதே'' என்றான் மென்மையாக.

அவள் நன்றி கலந்த பெருமையோடு கணவனைப் பார்த்திருக்க ''அம்மா தாயே அன்பரசி! நீங்க அன்பில மட்டும் தான் அரசியா? அன்னத்தில அரசி இல்லையா? இப்படி சட்டி, சட்டியா சோறை வச்சுட்டு... அதைப் போடாம... என் மேல வெறும் அன்பை மட்டும் பொழிஞ்சு, போடான்னு துரத்திடுவீங்க போலிருக்கே! ஹோ கடவுளே! என்ன கொடுமை இது? இந்தச் சின்னஞ்சிறு பாலகனை அன்னமின்றி வெறும் அன்புடன் தண்டித்துவிட்டாயே! நான் என்ன பா... புண்ணியம் செய்தேன்'' என ராகம் பாட, அதில் சுதாரித்த அன்பரசி ''சை கருமம். பிச்சைக்காரன் மாதிரி கத்தாதீங்க!'' என்றவாறே அன்னமிட்டாள்.

''என்...னது பிச்சைக்காரனா? இதெல்லாம் டூ மச்'' என அதிர்ந்தது போல் சிரித்தவனும், உணவை ரசித்து உண்டான்.

கணவன் உணவுண்ணும் அழகை ரசித்தவா
அமர்ந்திருந்த அவனது அன்பின் அரசி "வெற்றி! எப்
டிரஸ் எடுக்கப் போகலாம்?" என்றாள் தனது மு
கேள்விக்கு அழகாய் பயணித்து.

"விடமாட்டியே!" என்ற வெற்றி, "போலாமே
நாளைக்குக் கூட போலாம்!" என்றான். "நாளைக்கு
உங்களுக்கு நாளைக்கு நைட் எட்டு மணிக்கு வரைக்கு
அப்பாயிண்ட்மென்ட் இருக்குதாமே? அப்புறம் எப்படி
போறது?" என அன்பரசி சந்தேகமாய்ப் பார்த்தது
"எனக்கு நாளைக்கு அப்பாயிண்ட்மென்ட் இருக்குன்னு
எனக்கேத் தெரியலை. உனக்கு எப்படிடி தெரியும்?" என
அவன் மனைவியின் காதைப் பிடிக்க, "இந்த வன்முறை
பேச்சுவார்த்தையெல்லாம் என்கிட்டே வேணாம்
மிஸ்டர். வெற்றிவேந்தன். நாங்கெல்லாம்... ஒரு இடத்
துக்கு நாலு ஸ்பை வச்சிருக்க ஜகஜால கில்லாடி
யாக்கும்" என்றாள் துணைவி சிரிப்புடன்.

"சரிடி, நாளன்னைக்குப் போகலாம்! அப்பாயிண்ட்மென்ட்
கொடுக்காதீங்கன்னு சொல்லிடுறேன்" என்றவன்,
"உன்னோட பெரிய லிஸ்ட்டை வாங்குறதுக்கு ஒரு நாள்
போதுமா? இல்லை இன்னும் ரெண்டு நாள் வேணுமா?"
என்ற கிண்டலுடன் தன் சம்மதத்தை முடித்தான்.

"அதெல்லாம் ஒரு நாள் போதும்!" என்ற அன்பரசி,
திடீரென "என்னங்க, ஒரு முக்கியமான விஷயம்
சொல்ல மறந்துட்டேன்! இன்னைக்கு ஆகாஷ் குட்டி
ஊரிலிருந்து வந்துட்டான். வந்ததும் வராததுமா நம்ம
வீட்டுக்குத் தான் துள்ளிட்டு வந்தது. செல்லம்! சுபத்ரா
அக்கா சொல்றாங்க... ஆகாஷுக்கு ஊரில முழுசும் நம்ம



குட்டீஸ் பத்தின பேச்சு தானாம். "அன்பத்தை. அன்பத்தை"ன்னு என் புராணமே பாடிட்டு இருந்தான் போல" என்றாள் கண்கள் விரிய.

ஆகாஷ் - அன்பரசியின் பக்கத்துக்கு வீட்டுப் பையன். அந்த அடுக்குமாடிக் குடியிருப்பினை மூன்றாவது மாடியிலிருந்த மூன்று வீடுகளுள் அன்பரசியின் வீடும், ஆகாஷின் தாயார் சுபத்ராவின் வீடு ஒன்று.

தன் கணவர் ஆனந்தின் கைப்பிடித்த மூன்றாமாண்டு ஆகாஷை ஈன்றெடுத்த சுபத்ரா, ஆகாஷ் மூன்று மாத சிசுவாய் இருக்கும் போது அன்பரசியின் வீட்டருகே குடிவந்தாள். அந்த நேரம் அன்பரசி மற்றும் வெற்றிவேந்தனுக்கும் திருமணம் முடிந்து ஆறாண்டுகள் ஆகியிருக்க ஆகாஷ் அவர்களின் வற்றிப் போன வாழ்வின் ஜீவனதியானான்.

சுபத்ராவும், அன்பரசியின் பிள்ளைக்கான ஏக்கம் புரிந்து ஆகாஷை எந்நேரமும் அன்பரசியின் வீட்டிலேயே விட்டு வைப்பாள். குளியல், உணவு, விளையாட்டு மட்டுமில்லாமல் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை தினங்களில் ஆகாஷிற்கு என்று அன்பரசி கடை கடையாக ஏறி துணி வாங்குவது கூட நடந்தேறிக் கொண்டிருந்தது.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்" என்ற வாக்கிற்கு ஏற்ப, அன்பரசியின் வயிற்றில் அவளது பிள்ளைகள் தானாய் உருவாகி விட்டிருந்தனர். ஆகாஷின் தளிர்மேனி ஸ்பரிசத்தால் தான் தனக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தது என்

றெண்ணிய அன்பரசி, அவன் மீது அன்பை முன்னை விட அதிகமாய்ப் பொழிந்தாள்.

அந்த சிறு கன்றும், ''அத்தே! டீ பாப்பா வரப் போகுதா? ஆகாஷ் கூட விளையாட... தெண்டு பாப்பா! ஹைய ஜாலி! நா... என்னோட டொய்ஸ் எல்லாம் கொடுப்பேனே... பாப்பாவும் நானும் ஜாலி ஜாலியா வெளாடுவோம்'' எனத் துள்ளிக் குதித்தது. அதற்கேற்ப அன்பரசி தாய் வீட்டிலிருந்த நாள் தொட்டு, ஆகாஷின் வாசம் அன்பரசியின் வீட்டில் என்றானது.

அன்பரசியின் செல்வங்களுக்கும் ஆகாஷின் வருகை பெரும் மகிழ்வைத் தருவதாய் அமைகிறது என்பதை அவர்களின் விரிந்த முகமும், கையையும் காலையும் ஆட்டிக் கொண்டு ''வா...வா'' என்று செய்கையால் அழைக்கும் விதமும், புதிதாய் வந்திருக்கும் விளை யாட்டுச் சாமான்களை அவனிடம் காட்டத் துடிக்கும் அவர்களது ஆர்வமும், அவன் ஏதாவது பேசினால் அவனது வாயையே அண்ணாந்து பார்த்துக் கொண் டிருக்கும் அழகும், உணவுண்ண அடம் பிடிக்கும் வேளை களில், ஆகாஷ் உணவு உட்கொண்டால் தாங்களும் அடம் செய்யாமல் உணவு உட்கொள்ளும் பாங்கும் வெளிப்படுத்தின.

பிள்ளைகளுக்கும், தனக்கும் பிடித்தமான ஆகாஷ் ஒரு வாரத்திற்கு அவனது சொந்த ஊரான மதுரைக்குச் சென்று திரும்பியிருப்பதைப் பற்றி தான் அன்பரசி பேசிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்ட வெற்றியும் ''ஹோ! அஷு பையன் வந்துட்டானா? இனிமேல் மூணு பேருமா சேர்ந்து அபார்ட்மெண்ட்டை ரெண்டாக்காம



இருக்கணும்'' என்றான் சிரிப்புடன், கூடவே ''ஆமா, குழந்தைங்க பர்த்டேக்கு அவனுக்கு டிரஸ் வாங்க வேண்டாமா? ஆதிக்கு எடுக்கிற மாதிரியே அவனுக்கு செர்வானி வாங்கிடலாம்'' என்றான்.

''ஹ்ம்ம், நானும் இதையே தான் நினைச்சிட்டே இருந்தேன்'' என்ற அன்பரசியை ''ஒத்த மனம்! அன் புக்கும் வெற்றிக்கும் ஒத்த மனம்!'' என வம்பு செய்த வெற்றி, பிள்ளைகளை நாடிச் சென்றான்.

பத்து பேர் புரளலாம் போலிருந்த கட்டிலின் நடுவே படுத்திருந்த அவனது செல்வங்கள் இரண்டும், அவரவர் பாணியில் அவனைக் கொள்ளை கொண்டனர். அவனது இளவரசியார் - கால் மேல் கால் போட்டு, கைகளை நெற்றியில் பதித்து உறங்கிக் கொண்டிருந்தாள். அதற்கு முற்றிலும் மாறாய் ஒருக்களித்துப் படித்து, தனது நண்பனான ரிமோட் காரை கட்டிப் பிடித்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தார் இளவரசர்.

சற்று நேரம் அவர்களது அழகில் அவன் மயங்கி நிற்க, ''பிள்ளைங்க தூங்கும் போது கண் போடாதீங்க! அவங்க உடம்பிற்கு ஏதாவது வந்திடும்'' எனச் சமையலறை யிலிருந்து கத்தினாள் அன்பரசி.

''சரியான ஹிட்லர்! கிட்சென்ல இருந்தே பெட்ரூம்- இருக்க என்னைக் கண்காணிக்கிறா'' என முணுமுணுத்த அவளது கணவன், பிள்ளைகளின் நெற்றியில் ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு, அருகே படுத்துக்கொண் டான்,

குடும்ப வாழ்வின் அர்த்தமாய் இரு செல்வங்களும் அவர்களது தாம்பத்தியத்திற்கு அர்த்தம் சேர்க்க,

எப்போதும் அன்பரசி படும் வேதனையை எண்ணி
வெகு நேரம் முழித்திருக்கும் வெற்றி, இப்போது படுத்
ததும் உறங்கிப் போனான்!

# 3



சரியாக பதினைந்து நாட்கள் கழித்து வந்த ஓர்
அழகிய சந்திரோதய நன்னாளில், சூரியனாரும் சந்திர
மங்கையும் தாங்கள் பூவுலகம் வந்து சேர்ந்த மகிழ்ச்சியை
பிறருடன் பகிர்ந்து கொள்ளக் காத்திருந்தனர். அவர்
களுக்கும் மேலாய், அவர்களைப் பூவுலகிற்கு அறிமுகம்
செய்த அன்பரசியும் வெற்றியும் மிகுந்த ஆவலுடன்
காத்திருந்தனர்.

பிள்ளைகளின் பிறந்த நாளன்று அதிகாலை ஐந்து மணிக்கு வாசல் மணி அடிக்க, தூக்கம் கலைந்து, அழுத ஆதியைத் தட்டி உறங்க வைத்த அன்பரசி, வெற்றியை உலுக்கி எழுப்பினாள். பிள்ளை உடம்பை முறுக்கிக் கொண்டு தாயிடம் ஒண்ட, அவளை அணைத்தவாறே படுத்து, தலையணையை தலை மீது கவிழ்த்துக் கொண்டு உறங்கும் கணவனை மேலும் உலுக்கினாள்.

''என்னடி'' - எரிச்சலுடன் எழுந்த வெற்றிவேந்தன், மகளைத் தூக்கி மார்பில் போட்டுக் கொண்டு மீண்டும் உறங்கத் துவங்க, ''தமிழ் வந்திருக்கான் போல, போய்... கதவைத் திறங்க!'' என்றாள் மெல்லிய குரலில்.



''முழிச்சிருக்க நீ... போறது தானே! தூங்குறவனை எழுப்பிக்கிட்டு?'' என அவன் கடிந்து கொள்ளும்போதே ''ஆதி சிணுங்க ஆரம்பிக்கிறான். விட்டுட்டுப் போனா அழ ஆரம்பிச்சிடுவான். அழற பிள்ளையை நீங்க சமா தானப்படுத்துறதா இருந்தா நான் போறேன்'' என இடைவெட்டிய அன்பரசியின் குரல், மெல்லியதாய் இருந்த போதும் கறாராய் இருந்தது.

''வர வர... உன்னோட அராஜகம் தாங்க முடியலை! எதுக்குத் தான் மிரட்டல் விடுப்பதுன்னு ஒரு வரை யறையே இல்லாம போச்சு'' என சத்தமாய்ச் சலித்துக் கொண்டே வாசல் நோக்கி அவன் நகர, ''சத்தம் போடாம போங்க'' என அதற்கும் ஓர் அதட்டல் விழுந்தது.

சட்டெனப் படுக்கையின் புறம் திரும்பி ''வந்தேன்! மகளே... உதை தான் உனக்கு'' என ஒரு விரல் நீட்டி மிரட்டியவனின் உதடுகள், மொட்டெனக் குவிந்து வேறு மொழி பேசின.

''*சீ* போங்க'' எனச் சிவந்த அன்பரசி, ''ம்ம்ம்'' என ராகம் பாடத் துவங்கிய மகனிடம் குனிந்து ''தாச்சுடா செல்லம்'' எனத் தன் கவனத்தைத் திசை திருப்பினாள்.

வெற்றி வாசல் கதவை அடையும் முன்னரே, அவனது தந்தை வெங்கட்ராமன் கதவைத் திறந்து ''வாப்பா தமிழ்!'' என வரவேற்றும் முடித்திருந்தார். அதன் பின்னர், தூக்கம் பிடிக்காது போக உடற்பயிற்சி, குளியல் என வெற்றி தன் காலை நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்க, அன்பரசி அறையை விட்டு எழுந்து வந்தபாடாய் இல்லை.

''இன்னும் என்ன செய்றா?'' என்ற கேள்வியுட அவன் அறைக்குள் செல்லத் துவங்க. ''நாங் வந்திருக்கும் போது தான் அவளால தூங்கவே முடியு நீ போய்... எழுப்பிவிடாதே'' எனக் கண்டித்து அடக் விட்டார் அவனது தாயார் வைதேகி.

''குழந்தைகளும் எழுந்த மாதிரி இல்லையே?'' என அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அன்பரசியின் அழுகுரல் மெல்லக் கேட்க ஆரம்பித்தது.

''அத்தே... அம்மா... என்னங்க... இங்க வாங்க...'' என அவள் அனைவரையும் ஒரே குரலில் அழைக்க, செய்து கொண்டிருந்த வேலைகளை அனைத்தையும் அப்படியே கை விட்டப்படி அறைக்குள் விரைந்தன மூவரும்.

மற்றவர்கள் அனைவரும் அறை வாயிலில் தயங்கி நிற்கையில், அன்பரசியின் அருகே அமர்ந்த வைதேகி அவளது தோள் தொட்டு ''என்னாச்சு அன்பு? எதுவா இருந்தாலும் அழுகையை நிறுத்திட்டுப் பேசு'' என அன்பாய் அரவணைத்தார். அதே நேரம், அன்பரசியின் கையிலிருந்த பிள்ளையைத் தன்னிடம் மாற்றிக் கொண்ட அவளது அன்னையோ'' என்னடா கண்ணா ஆச்சு? அம்மா எதுக்கு அழறா?'' என அழுத பிள்ளையைக் கவனமாய் ஆராயத் துவங்கினார்.

''அம்மா... பிள்ளையோட வயித்தில பொட்டு மாதிரி ரெண்டு இடத்தில சிவப்பா இருக்கும்மா. பிள்ளை வேற... உடம்பை முறுக்கி முறுக்கி அழுறான். பசியோன்னு நினைச்சு பாலைக் கொடுத்தா குடிக்கவும்



மாட்டேங்கிறான்... தள்ளித் தள்ளி விட்டுட்டு ஒரே சிணுங்கல். முதல... சின்னதா எறும்பு கடிச்சது மாதிரி இருந்தது அத்தே! இப்போ பாருங்களேன்... எவ்வளவு பெருசா இருக்கு... எனக்குப் பயமா இருக்கே! ஆதிக்கு வந்த மாதிரி நிலாக்கும் வந்திடுமோன்னு வேற பயமா இருக்கு?'' என அவள் அழும்போதே, ''லூசு மாதிரி பேசாதேடி! ரெண்டு பேரும் பிரடேர்னல்(fraternal) ட்வின்ஸ்டி, ஒருத்தருக்கு வரது இன்னொருத்தருக்கு வர வாய்ப்பு ரொம்ப கம்மி!'' என அதட்டிய வெற்றியின் கைகள் பிள்ளையை ஓர் மருத்துவனின் நோக்குடன் ஆராய்ந்தன.

''எறும்பு கடிச்ச மாதிரி தான் இருக்கு'' எனப் பார்வதியும், வெற்றியும் ஒரு சேர ஓர் முடிவிற்கு வந்தபோது அன்பரசி அதை நம்புவதாய் இல்லை. ''இங்கு எங்க எறும்பு இருக்கு? சின்னதா தூசி தும்பு கூட இல்லாத மாதிரி கண்ணம்மை அக்கா தினம் வீட்டைத் துடைக்கிறாங்க. ஒரு வேளை கொசு கடிச்சிருக்குன்னா... கொசு கூட வராத மாதிரி ஜன்னல் எல்லாம் ஆறு மணிக்கே அடைச்சு, ஆல் அவுட் போட்டுடுகிறோம். அப்புறம் எப்படி கொசு, பூச்சி, எறும்பு... இதெல்லாம் வரும்? வர வாய்ப்பே கிடையாது! பிள்ளை உடம்பிற்குத் தான் ஏதோ முடியலை'' என அடித்துச் சொல்லிய அன்பரசி பிள்ளையை மேலும் ஆராயத் துவங்கினாள். அவனும் அன்னையின் அழுகையைக் கண்டு மேலும் தன் அழுகையை உயர்த்தினான்.

''அவனை என்கிட்டேக் கொடு!'' என்ற கணவனை ஏறெடுத்தும் பாராமல் பிள்ளையை இறுக்கிப் பிடித்திருந்

தவனிடமிருந்து மகளை வலுக்கட்டாயமாக வாங்கியவன், ''அத்தை, நீங்க அவனுக்குப் பசும் பால் காய்ச்சி எடுத்திட்டு வாங்க'' என்றவாறே பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியே செல்ல எத்தனித்தான்.

''பாருங்க அத்தே! நான் சொல்றதை நம்பாம அவர் பாட்டுக்கு அவனை எடுத்திட்டுப் போறார். அவனுக்குப் பால் கொடுக்க எவ்வளவு நேரமா... போராடுறேன், தெரியுமா?'' எனத் தன் மாமியாரிடம் முறையே முறையிட்டாள் அன்பரசி.

இரு மாமியார்களும் தத்தம் மருமக்களுக்குப் பதில் சொல்லும் முன்னர் ''நீ என்கிட்டே உதை தான் படப் போறே! என்ன விஷயம்னே தெரியாம சும்மா அழுது வடியாதே அன்பு. நான் பார்த்திட்டுச் சொல்றேன்'' எனக் குரலில் அவன் கொடுத்த அழுத்தம் அன்பரசியை வாயடைக்க வைத்ததா இல்லை வெண்ணிலா தூக்கம் கலைந்து அன்னையைத் தேடியது வாயடைக்கச் செய்ததா என்பது புரியாமல், அடுத்த வினாடி வெண்ணிலா அன்பரசியின் கையிலிருந்தாள்.

''நிலா குட்டி! உனக்கும் வயிறு வலிக்குதாடா? அண்ணா மாதிரி... சூடு பிடிச்சுகிச்சா?'' என மகளை அவள் ஆராய'' அன்பரசி! லூசு மாதிரி பேசாதேன்னு ஏற்கனவே சொன்னேன்!'' என வெளியிலிருந்து குரல் கொடுத்த வெற்றி, ''அவனுக்கு உடம்பு நல்லா இருந்தாலும், உங்க மருமக அழுதே எதையாவது வரவச்சிடுவா'' எனத் தந்தையிடம் கடிந்து கொண்டான்.

''பெத்த மனசுடா, பிள்ளைக்கு ஒண்ணுன்னா பதறத் தான் செய்யும்'' என வைதேகியும் வெங்கட்ராமனும்



பரிந்து கொண்டு வர, ''அதுக்காக, ஒரு மனுஷி கற்பனைக் குதிரையை இவ்வளவு வேகமாகவா ஓட விடுறது? ஒரு மணிக்கு அறுபது கிலோ மீட்டர் வேகமே ஜாஸ்தின்னா... இவ ஒரு வினாடிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் கற்பனையை ஓடவிடுறா. நல்லா கற்பனை செஞ்சாக் கூட பரவாயில்லை... எல்லாமே ஒரு எக்ஸ்ட்ரீம் லெவல் தான்'' என மனைவியை அச்சுப் பிசகாமல் கணித்தான் கணவன்.

மருமகனின் கணிப்பை மனதிற்குள் மெச்சியவாறே வந்த பார்வதி ''நீங்க சொல்றது நூத்துக்கு நூறு சரி மாப்பிள்ளை. கண்டது கழியதையும் கற்பனை பண்ணி, தானும் பயப்பட்டு, பிள்ளைகளையும் பயப்படுத்தி, ப்ச... அவளைச் சொல்லியும் குத்தமில்லை... ஏழு வருஷம் கழிச்சு தவமா தவமிருந்து பெத்திருக்கா இல்லையா?'' மருமகன் பக்கமும் பேசி, மகள் பக்கமும் பேசி ஒருவாறு பூசி மொழுகினார்.

''அம்மா, சேம் சைடு கோல் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா... நீங்க இப்போ நீங்க போட்டது சேம் சைடு கோல்ல கூட சேர்த்தியில்லைமா... டபுள் சைடு கோல்மா... சும்மா ரெண்டு பக்கமும் பறந்து பறந்து அடிக்கிறீங்க!'' எனத் தமிழ் இடைப்புகவும், அதுவரை இருந்த இறுக்கமான சூழல் மாறி சட்டென ஓர் சிரிப்பலை படர்ந்தது.

அனைவரும் இறுக்கம் தளர்ந்து மனம் விட்டுச் சிரிக்கவும், அதன் எதிரொலியாய் ஆதியும் தன் பொக்கை வாய் திறந்து சிரித்தான்.

''ஹேஹ, ஆதி சிரிச்சுட்டான்'' என அவனது மாமன் குதூகலிக்க, ''டேய், அவன் வயித்தில எண்ணெ தடவியிருக்கேன். மேல அப்பிக்கப் போறே'' என வெற்றிக்கும் பிள்ளை சிரித்ததில் நிம்மதியாக இருந்தது.

''ஆதி அழுகையை நிறுத்திட்டானா?'' என்ற தமக்கையின் கேள்விக்கு ''ஆதிக்கு பர்த்டே டிரஸ் போடலைன்னு தான் கோபமாம். அதான் அழுதானாம். அத்தான் அவனோட பர்த்டே டிரஸ்சை போட்ட நிமிஷம் சார் க்ளோஸ்-அப் பேபி மாதிரி ஆகிட்டார்'' எனப் பதிலளித்த தம்பியப்பன், தன் மருமகனை மேலே தூக்கிப் போட்டுப் பிடித்தான்.

தன் மாமனின் அச்செயல் பிள்ளையை மேலும் மகிழ்விக்க, அவளது சிரிப்பு பன்மடங்காய்ப் பெருகி வீட்டையே ரம்மியமாய் நிறைத்தது.

தம்பியின் பதிலிலும், பிள்ளையின் சிரிப்பிலும் கவரப்பட்டு மகளைக் கையில் ஏந்திக் கொண்டு வெளியே வந்த அன்பரசி ''குளிக்கிறதுக்கு முன்னாடியே எதுக்குப் புது டிரஸ்சை மாட்டி விட்டீங்க?'' எனக் கணவனைக் கடிந்துகொண்டே வெளியே வர, ''எல்லாத்திலையும் அவசரம். முதல்ல நிமிர்ந்து பிள்ளையைப் பாரு'' எனப் பதிலுக்குக் கடிந்து கொண்டார் வெற்றியின் மாமியார்.

''நீங்க இருக்கிறதால நான் தப்பிச்சேன் அத்தே! இல்லன்னா இந்நேரம் என்னை அடிச்சிருப்பா'' எனப் பயந்தவன் போல் வெற்றி நடிக்க, அவனிற்கு ஒரு முறைப்பைப் பரிசாக கொடுத்த அன்பரசி மகனை நிமிர்ந்து பார்த்ததும் அவளது பளிங்கு முகம் போன



போக்கைப் பார்க்க வேண்டுமே? லாரி லாரியா அசடு கரைபுரண்டு ஓடியது!! ஏனென்றால், தமிழ் குறிப்பிட்ட பிறந்த நாள் உடையானது ஆதியின் பிறந்த மேனி!!

மருமகளின் அசட்டு முகத்தைப் பார்த்த வைதேகி அவளது மூக்கைப் பிடித்து ஆட்டி ''வெற்றி, பிள்ளையோட டிரஸ்சைக் கழட்டி, சிவந்திருந்த இடத்தில கொஞ்சமா நல்லெண்ணெய் தடவியதும் பிள்ளைக்கு அந்த இடத்தில இருந்த எரிச்சல் குறைந்து, மறைந்தே போச்சு. அதுக்குள்ளே... என்ன ஆர்ப்பாட்டம் செய்துட்டே'' எனத் தன் மருமகளைச் செல்லமாய் சீராட்டினார்.

அப்போதும், ''இங்கே எறும்பு வர வாய்ப்பே இல்லையே அத்தே! அப்புறம் எப்படி? வேற ஏதாவது இருக்கப் போகுது அத்தை. ஒரு நல்ல டாக்டரா பார்த்திடலாம்'' என்றாள் மிகத் தீவிரமான குரலில்.

''ஆனாலும், இது அநியாயம்க்கா! நீயே அத்தானை இப்படிச் சொல்லலாமா? பாவமில்லையா அவர்? நீ பேசறதைக் கேட்டா... அவருக்கு வர ஒண்ணு ரெண்டு கேசும் புட்டுக்கப் போகுது!'' என்ற தமிழின் தோள் மீது கைப்போட்ட வெற்றிவேந்தன் ''அப்படிச் சொல்லுடா மாப்பிள்ளை! வர வர... என்னோட அமைகையை சிதைப்பதே இவளுக்கு வேலையாப் போச்சு'' என 'உச்சு' கொட்டினான்.

''ஹய்யோ அத்தான்! இதுக்கு நீங்க என்னை நேரடியாவே திட்டியிருக்கலாம். அதென்ன அமைகை... அதை வேற சிதைக்கிறது'' எனத் தமிழ் தலையில்

அடித்துக்கொள்ள, அன்பரசி பொங்கி எழுந்துவி டாள்.

"நா எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிக்கிட் இருக்கேன். நீங்க ரெண்டு பேரும் சின்னப்பிள்ளை தனமா விளையாடிக்கிட்டு இருக்கீங்க? இப்பே நிறுத்தப் போறீங்களா இல்லையா?'' என அவ போட்ட சத்தத்தில் 'அமைகை சிதைவு' என்பது 'இமே டேமேஜ்'ஐ குறிக்கும் செந்தமிழ் சொல் என்ப தமிழுக்குத் தெரியாமலேயே போய்விட்டது. தமிழ் என் பெயரை வைத்துக் கொண்டு ஓர் செந்தமிழ் சொ லிற்கு விளக்கம் கேட்கிறானே என்ற கோபத்தில், தமிழ் தாய் அன்பரசியின் உடம்பில் புகுந்து பொங்கிவிட்டாள் போலும்!

மனைவி போட்ட சத்தத்தைவிட, அவளது குரல் லிருந்த நடுக்கமும், விட்டால் மீண்டும் அழுதுவிடு வேன் போன்றதொரு பாவனையும் வெற்றியைக் கரைக்க, "என்னமா? எதுக்கு இவ்வளவு கோபம்? அவனுக்கு ஒண்ணுமில்லைடா. நைட் போட்டிருந்த டிரஸ்லிருந்த பட்டன் அளவுக்கு அதிகமா அழுத்தி விட்டுடுச்சு போல. அவனுக்குத் தான் ரொம்ப சென் சிடிவ் ஸ்கின் இல்லையா? அதான் உடனே சிகப்பா கிடுச்சு! அதோட அழுத்தம் தாங்கமா தான் பிள்ளை அழுதிருக்கான். துணியைக் கழட்டிட்டு, எண்ணைத் தேய்ச்சதும் எரிச்சல் குறைஞ்சு சிரிக்க ஆரம்பிச்சுட்டான். வேற ஒண்ணுமில்லை'' என ஓர் குழந்தைக்குச் சொல்வது போல் அவன் விளக்கி முடிக்க,

"ஹோ'' என்ற ஒற்றைச் சொல்லுடன் அதை உள்வாங்கிய அன்பரசியின் அடுத்த வாக்கியம் தான்



இங்கே கோடிட்டுக்காட்ட வேண்டிய பகுதி. அதாகப் பட்டது- "நல்லவேளை, குழந்தைக்குப் பெருசா எதுவுமில்லை. பிறந்த நாள் அதுவுமா பிள்ளை அழுததும்... பயந்து போய் ரத்னகிரீஸ்வரர் கோவில அராளகேசி அம்மனுக்கு ஒரு மாவிளக்கு வைக்கிறதா சொல்லிக்கிட்டேன். இன்னைக்கே வச்சுடலாமா அத்தே?'' என்றாள் நிம்மதி நிறைந்த குரலில்.

அவளது கேள்வியில் அயர்ந்துபோன வெற்றி "பார்த்தீங்களா?'' எனக் கண்ணாலேயே இருபக்கப் பெரியவர்களிடமும் முறையிட்டு விட்டு நகர்ந்தான். ஆனால், மகனுக்கு மாறாய் "பசங்க பிறந்த நாள் அன்னைக்கே மாவிளக்கு வைக்கிறது நல்லது தான் அன்பும்மா. இன்னைக்கே வச்சிடலாம். நான் போய் அதுக்கு ரெடி பண்றேன். நீ குளிச்சிட்டு வா'' என வைதேகி நகர, "நல்ல பொண்ணு போ! எதுக்குத் தான் பயப்படறதுன்னு இல்லை'' என சலித்துக்கொண்ட அவளது தாயாரும், தன் சம்பந்திக்கு உதவி செய்யும் பொருட்டு உள்ளே நகர்ந்தார்.

சற்று நேரத்தில், விஜயின் குடும்பமும் இணைந்து கொள்ள, மூன்று பிள்ளைகளின் சங்கமத்தில் வீடே மகாமக சந்தோஷத்தில் திளைத்திருந்தது. சாதாரண நாட்களிலேயே அன்பரசியை கிண்டலெனும் கடலில் தள்ளி அவளைத் திணறத் திணற முறைக்க வைக்கும் சகோதரப் பெருந்தகைகளுக்கு இன்று காலை அவள் செய்த கூத்து, தெவிட்டாத அல்வாவாய்த் தித்தித்தது. அதன் விளைவாக, அன்பரசி "மாமா, இங்க பாருங்க மாமா! என்னையே கேலி பண்ணிட்டு இருக்காங்க''

எனக் குறைந்தது நூறு முறை முறையிடும்படி, அவளை வாட்டி வதைத்தனர் சிறு வயது ஆண்கள் மூவரும்.

''குழந்தைக்குப் பட்டன் அழுத்தினதுக்கே அம்பாளுக்கு மாவிளக்கா? அம்மா... நீங்களும் தான் இருக்கீங்களே? எனக்கு வயிறு சரியில்லாம ''ஹய்யோ, அம்மா''ன்னு துடிச்சப்போது மாவிளக்கு வேண்டாம், ஒரு மண் சோறு, அங்கப் பிரதட்சணம், ஒரு பால் குடம், அட்லீஸ்ட் ஒரு அக்னிச் சட்டி... ஏன் ஒரு தீ மித்தலாவது செய்தீங்களா?'' என விஜய் ஏகத்திற்கும் வருத்தப்பட்டதில் வீடு அதிர்ந்தது என்றால்,

''உங்களுக்கு ஏன் வயிற்றுவலி வந்ததுன்னு எங்களுக்குத் தெரியாதாக்கும்? பிரண்ட்ஸ் கூட சேர்ந்து கண்டது, கழியதையும் உள்ள தள்ளிக்கிட்டு வந்து வீட்டில விழுந்து புரண்டா... உங்களைத் தூக்கி வச்சுக் கொஞ்சுவாங்க பாருங்க? முதுகில ரெண்டு அடி போட்டு, வீட்டோட அடக்கி வைக்காம இருந்தோமேன்னு சந்தோஷப்படுங்க'' என அவனது மனைவி வைஷ்ணவி கொடுத்த பதிலடியில் வீடு சிரிப்பினால் குலுங்கியது!

மனம் நிறைந்த சந்தோஷத்துடன் கோவிலுக்குச் சென்று வந்தவர்கள், மாலை நடக்கும் விழாவிற்கான ஏற்பாட்டை வேகத்துடன் செய்ய ஆரம்பித்தனர்.

மாலை ஐந்து மணியளவில் - வெண்ணிலா தனது வெண்ணிற உடம்பில் பச்சைக்கரையும், அங்கங்கே பூப்போன்ற அமைப்பில் பச்சை நிறக் கற்களும் பதித்த காக்ரா சோலியில் வானுலக தேவதையாகவும் வனத்தின் அரசியாகவும் ஜொலிக்க, ஆதவனோ தன் தங்கை



அணிந்திருந்த அதே பச்சை நிறத்தில் பட்டுக் கால் சட்டையும், வெண்ணிறப் பட்டில் மேல் சட்டையும், கால் சட்டையின் நிறத்தில் ஓர் சின்ன துப்பட்டாவும் என அவனது செர்வானியில் ராஜாவைப் போல் கம்பீரமாய் நின்றான்.

அவர்களுக்கு இணையாக, அன்பரசி பச்சை வண்ண உடலில் வெண்தாமரை மலர்கள் பூத்திருந்த சேலை உடுத்தி வெளியே வந்தாள்.

வெள்ளை வேஷ்டி மற்றும் பச்சைக் கட்டங்கள் இட்ட வெண்ணிற சட்டையில் கிளம்பி வந்த வெற்றிவேந்தனின் கண்கள் மனைவியை அள்ளிப் பருக, கைகள் தாமாக அவளை வளைத்து, முத்தென ஜொலித்த அவளது கன்னத்தில் முத்தம் வைத்து, பவளமென அதைச் சிவக்க வைத்தான்.

''விடுங்க'' என அன்பரசியின் வாய் முனங்கிய போதும், கணவனின் ஆழ்ந்த அணைப்பில் கட்டுண்டு கிடக்க மனமும், உடலும் ஏங்கித் தவித்தது!

இருவரும் ஒருவரோடு ஒருவர் பிணைந்திருக்கையில் ''அன்பத்தை'' என்ற அழைப்பு காற்றில் பறந்து வந்து ''அஷு வந்திருக்கான்... விடுங்க'' என அன்பரசியைச் சிட்டாய்ப் பறக்க வைத்து.

''ஹே அஷு குட்டி! ஸ்கூல் முடிஞ்சாச்சா? ஹையா என் அஷுவோட டிரஸ் சூப்பரா இருக்கே!'' என அவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டவள், கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

மகனின் பின்னால் வந்த சுபத்ரா ''சாரி அன்பு! முன்னாடியே வந்து ஹெல்ப் பண்ண முடியல... இவன்

ஸ்கூல்ல ஏதோ குறும்பு பண்ணிட்டான்னு அவங்க மி
என்னைக் கூப்பிட்டு அனுப்பிட்டாங்க. அந்த
பஞ்சாயத்து முடிஞ்சு வரவே நேரமாகிடுச்சு'' என்றா
உண்மையான வருத்தத்துடன்.

''உன்னோட ஹெல்ப் இனிமேல் தான் அவசியம
தேவை. அதனால் அனாவசியமா வருத்தப்படாதே
எனத் தேற்றிய அன்பரசி, ''பசங்களுக்குக் கொடுக்க
வேண்டிய கிஃப்ட் பாக் பூஜை ரூம்ல இருக்கு... அதை
ஒரு முறை சரி பார்த்திடு'' எனத் தோழியின் மன
வருத்தத்தை சொல்லாலும், செயலாலும் போக்கினாள்.

சுபத்ரா சந்தோஷமாய் அந்தப் பக்கம் செல்ல, அன்
பரசியின் கவனம் முழுவதுமாய் ஆகாஷிடம் திரும்பியது
தன்னிடமிருந்து இறங்கத் துடித்தவனை இறுகப் பிடித்துக்
கொண்டு ''ஸ்கூல்ல என்ன குறும்பு செஞ்சே அஷு
எதுக்கு மிஸ் அம்மாவைக் கூப்பிட்டாங்க?'' என்றாள்
ரகசியமாய்.

சிறுவனும் அதே ரகசியக் குரலைப் பின்பற்றி ''என்
பக்கத்தில ஒரு கேர்ள் உட்காவாளே?'' எனக் கேட்டு
''ஹான்... நிவேதா'' என்ற அன்பரசியின் பதிலைத்
தொடர்ந்து ''அவட்ட இதென்னதுன்னு கேட்டேன்'' என
அன்பரசியின் முடியைக் காட்டினான். ''முடிடா ராஜா...
இதைப் போய் அவகிட்ட ஏன் கேட்டே?'' என அன்பரசி
குழம்ப, ''இதெல்லாம் நீளமா இக்கு அத்தே... அவது
குத்தியா இருந்துச்சு. அவ குதிரை வாலு சொன்னாளா.
நான் அதைப் பிடிச்சு குதிரை ஓட்டினேன். அதான் மிஸ்
அடிச்சுட்டா'' எனக் கண்ணை விரித்துக் காரணம்
சொல்ல, ''ஹய்யோ என் சமத்து சக்கரைக் கட்டி!'' என



அவனை மேலும் அழுத்தமாய் முத்தமிட்டாள் அன்
பரசி.

''நிலா பாப்பாவும் ஆதியும் காணோம்? அவங்க
ஹாப்பி பத்டேக்கு நான் டெட்டி பியர் வாங்கிட்டு
வந்தேனே'' என அவள் துள்ள, ''ரெண்டு பேரும் கீழே
போய்ட்டாங்க. நீயும் கீழே போறியா? அஷுவோட
பர்த்டே நடந்த இடத்தில தான் இருப்பாங்க'' என
அவனது முதுகில் தட்டி அனுப்பி வைத்த அன்பரசியின்
முகத்தில் சிரிப்பே நிறைந்திருந்தது.

சிறிது நேரத்தில் களை கட்டிய பிறந்தநாள் அரங்கம்,
பலூன், கலர் பேப்பர், வண்ணப் பூக்கள், கார்ட்டூன்
பொம்மைகள் எனப் பலவிதமாய் அலங்கரிக்கப்பட்டு
மின்னியது! வந்த குழந்தைகள் அனைவருக்கும்,
அட்டையால் செய்யப்பட்ட தொப்பி ஒன்றும், ஒரு
குட்டி பக்கெட்டில் பாப் கார்னும் நிரப்பிக் கொடுத்தனர்.
கூடவே, அவர்களுக்குப் பிடித்த கார்ட்டூன் பொம்மை
களைக் கையில் டாட்டூ போல் போட்டு விட்டு அவர்
களை மகிழ்வித்தனர்.

சரியாக மணி ஏழு அடித்ததும், அன்பரசி மற்றும்
வெற்றிவேந்தனின் அன்பு வெற்றி பெற்றதன் அடை
யாளமாக வானை ஆட்சி செய்யும் இரு கட்சித் தலை
வர்களும், தங்களது பூலோக வருகையை ஆளுயர கேக்
ஒன்றை வெட்டி, உலகிற்கே அறிவித்து மகிழ்ந்தனர்.
ஆதவனையும் வைதேகியும் வெண்ணிலாவை பார்
வதியும் கைகளில் ஏந்தியிருக்க, பிரணவ்வை அன்
பரசியும் ஆகாஷை வெற்றியும் ஏந்திக் கொண்டு பிறந்த
நாள் கேக்கை இனிதே வெட்டி அனைவரது கைத்
தட்டலையும் பெற்றனர்.

அதைத் தொடர்ந்து, பிள்ளைகளுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகள் மிகுந்த ஆரவாரத்துடன் நடந்தேற, கடைசியாக சிறுவர்களை அவர்களுக்குப் பிடித்த பாட்டைப் பாடச் சொல்லி அதற்கேற்ப நடனமும் ஆட வைத்தனர் விஜயும், தமிழும்.

கடைசியாக மிகுந்த கரகோஷத்துடன் மேடையேறினான் ஆகாஷ். தனக்குப் பிடித்த விஜயின் பாட்டைப் பாடுவதற்கு அனுமதி கோரி, தன் தந்தையைப் பார்த்தவன் அவரது அனுமதி கிடைத்ததும்,

இடது காலை மடிக்கி, இடது கையால் இடது தொடையில் ஓர் அடி போட்டவன்

''நா அடிச்சா தாங்க மாட்டே
நாலு மாசம் துங்க மாட்டே
மோதி பாரு வீடு போய் சேர மாட்டே!''

எனப் பாடியபோது ஆச்சரியத்தில் விரிந்த பல கண்களில் பாராட்டுதல், அவன் பாடி / ஆடி முடித்த போது பலத்த கரகோஷத்துடன் அரங்கத்தை அதிரச் செய்தது!

## 4



பிள்ளைகளின் பிறந்தநாள் முடிந்து மேலும் ஈரைந்து மாதங்கள் ஓடியிருக்க, அன்பரசியின் செல்வங்கள் இருவரும் பேச்சில் தங்களை வல்லவர்களாக்கிக் கொண்டிருந்தனர்.



காலையில் கண் விழிக்கும் சிறார்கள், தந்தையின் மீதேறிப் படுத்துக் கொண்டு ''அப்பூவா...'' என நிலா கொஞ்ச, ''அப்பா'' என ஆதி கொஞ்ச, ''குது மாத்திங்'' எனத் தங்களது மழலையால் அவனது காலையை மட்டுமல்லாது நாளையும் மென்மேலும் இனிதாய்த் துவக்குபவர்கள், நாள் முழுதும் தங்களது வார்த்தை விளையாட்டை இனிதே நடத்தி முடிப்பர்.

அன்றும் பிள்ளைகளின் ''அச்சர'' சுத்தமான காலை வணக்கத்துடன் எழுந்த வெற்றி, ''மணி... ஆறரை தான்டா குட்டீஸ் ஆகுது? அதுக்குள்ளே அப்பாவை எழுப்பிட்டீங்களே?'' என ''உச்சு'' கொட்டி, ''குட்டீஸ், இனிமேல் கண்ணம்மைக்கா வந்ததும் அப்பாவை எழுப்புங்க. என்ன சரியா?'' என அவர்களிடம் ரகசியம் பேசினான்.

அவனது மகளோ ''சயிப்பா'' என அதே ரகசிய குரலில் பேசி, தலையை அழகாக மேலும் கீழுமாய் ஆட்டி அவனை மகிழ்வித்தாள் என்றால் அவனது தலை மகனோ ''ம்மா, அப்பா தாச்சு பந்தா, வாம்மா... அச்சு வா'' என அவனுக்கு ஆப்பு வைத்தான்.

''பாருடா நிலா... ஆதி என்னை அடி வாங்க வைக்கிறான்'' என வெற்றி முறையிட்டுக் கொண்டிருக்கும் போதே, ''ரெண்டு பேருக்கும் வர சண்டை பத்தாதா? நீங்க வேற ஏன் புதுசா கிளப்பி விடுறீங்க? முதல்ல கட்டிலைவிட்டு எழுந்துறீங்க! ஜாக்கிங் கிளம்புங்க'' என விரட்ட ஆயத்தமானாள் அன்பரசி.

''வெவெவே'' என வெற்றி அழகு காண்பிக்க, தந்தையையே பார்த்திருந்த வெண்ணிலாவும் உதட்டிச்

சுருக்கி அம்மாவை வம்பு செய்ய, தந்தை மற்றும் தங்கையைப் பின்பற்றி ஆதியும் ''வெவெவே'' செய்ய, அன்பரசியின் கை ஓங்கியதில் மூவரும் அடங்கிப் போயினர்.

''அந்த மரியாதை இருக்கட்டும்! எல்லாரும் கட்டிலை விட்டு இறங்குங்க'' என ஆணையிட்டவள்,'' ஆதி, நிலா... ரெண்டு பேரும் பால் குடிக்க வாங்க'' எனப் பிள்ளைகளை விரட்டினான்.

''ஹையா பா!'' என நிலா துள்ளிக்குதிக்கும் அளவிற்கு அவளுக்கு ''நேன்'' ஹார்லிக்ஸின் மீது அபாரப் பிரியம்! இதிலும் தங்கைக்கு மாறாய் ''நானா... நானா'' எனத் தலையை ஆட்டி மறுத்த ஆதி தந்தையின் மடியில் தலையைப் புதைத்துக்கொண்டு, அவனது இடுப்பை வளைத்தவாறே பேசாமல் இருந்தான்.

''ஆதிக்கண்ணா! ப்ளீஸ்டா ராஜா'' என்ற கொஞ்சலுடன், மகனை வலுக்கட்டாயமாக அன்பரசி தூக்க, அவனது பிடிவாதம் அதிகமானது. ''இந்த வயசிலேயே என்ன பிடிவாதம் பாருங்க? பால் குடிக்க இந்தப் பாடு படுத்துற பிள்ளையை இப்போ தான் பார்க்கிறேன்... அஷு, நிலா... ஏன் பிரணவ் கூட ஒழுங்கா பாலைக் குடிச்சிடுறாங்க! இவன் தான்!'' என அன்பரசி கோபத்தைக் கூட்டவும், ''ஷ்! இப்போ என்ன அவன் பாலைக் குடிக்கணும். அவ்வளவு தானே? நான் குடிக்க வைக்கிறேன்'' என்றவன், பலத்த ''நானா, நானா'' களினூடே படுத்திருந்த பிள்ளையிடம் குனிந்து ''தம்பி பால் வேண்டாம். அவ்வளவு தானே? அப்பாக்கும் வேணாம்... தம்பிக்கும் வேணாம்... ரெண்டு பேரும் ஹைபை கொடுப்போமா?'' என்றான் குழந்தை குரலில்.



''அப்புாக்கும் நானாவா?'' என சந்தேகமாய் கேட்ட பிள்ளை, மெல்ல தலை நிமிர்த்தி, தந்தையைப் பார்த்தது. ''ஆமா, வேணவே வேணாம்'' என வெற்றி அழுத்தம் திருத்தமாய் மறுத்தான்.

அந்த வாக்குறுதியில் சந்தோசம் கொண்ட பிள்ளை, தனக்கொரு துணை இருக்கிறது என்ற தைரியத்தில் தந்தையின் மடியில் உட்கார்ந்துகொண்டு அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

அவனை அப்படியே வாரியெடுத்துக் கொண்டு வெளியே வந்த வெற்றி, சற்று நேரம் அவனோடு சல சலத்துவிட்டு, ''அப்பா, ஜாகிங் போயிட்டு வரேண்டா ராஜா! இறங்கிக்கோ!'' என்றான் சாதாரணமாய்.

எங்கே இறங்கினால் தாய்ப் பாலை வயிற்றுக்குள் அடைத்துவிடுவாளோ என்ற எண்ணத்தில், ''போனாம்'' (போக வேண்டாம்) என்றான் ஆதி அழுத்தமாக.

''போக வேண்டாமா? ஹ்ம்ம்... ஜாகிங்கும் போகாமல் பாலும் குடிக்காம இருந்தா அப்பா ஆதி மாதிரி குட்டியா ஆகிடுவேன். ஹ்ம்ம் அப்பா ஆதி மாதிரி... குட்டியா, ஒல்லியா ஆகணுமா? ஆதி அப்பா மாதிரி... பிக் மேன்னா, ஸ்ட்ரோங்கா ஆகணுமா?''

பிள்ளை விழித்துக் கொண்டிருக்க, ''அப்பா ஆதி மாதிரி குட்டியாகிட்டா... ஆதிக்குட்டியைத் தூக்கிப் போட்டு பிடிக்க முடியாது, கார்ல ஆதியை வச்சு ரவுண்டு அடிக்க முடியாது, தம்பியை உப்புமூட்டைத் தூக்க முடியாது... ப்ச்... அப்பா பாவம்!'' என உரு ஏற்றியவன்.

''ஆனா, ஆதி அப்பா மாதிரி பிக் மேன் ஆகிட்டா... கார் ஓட்டலாம், நிலா குட்டியைத் தூக்கலாம்... அப்புறம்

ஜாகிங் போகலாம்'' எனச் சொல்லிக் கொண்டே போனான்.

முடிவில் ''ஆதி மாதிரி அப்பாக்கும் பால் பிடிக்கா போனதால, அப்பா ஆதி மாதிரி ஆகப்போறேன் என்றவன், பிள்ளையைத் தரையில் இறக்கிவிட்டு அவன் உயரத்திற்கு மண்டியிட்டான். பின்னர், சிறு பிள்ளைப் போல் அவன் தவக்கவும் ''ப்பா! பா குச்சா.. பிக் ஆவமா?'' என்றது பிள்ளை.

''ஆமாடா ராஜா!'' என வெற்றி கண்ணை விரிக்க ''அப்போ... அப்பாவும், ஆதியும் குக்காம்'' எனப் பிள்ளையும் ஒருவாறு சமாதானமாகி, அம்மாவிடம் ஓடியது.

''எக்கும், அப்பாவுக்கும் பா... தாம்மா'' எனத் தாயிட கேட்டு வாங்கிக் குடித்தவன், பாதி குடித்து முடித்ததும் ''ப்பா... ஆதி பிக் ஆய்த்தாவா (ஆகிட்டேனே)'' என்று ஆர்வம் மிகவுற தந்தையைப் பார்க்கவும், ''ரெண்டு நிமிஷத்தில எப்படிடா பிக் ஆவே?'' என்று சிரித்த அன்பரசியின் வாயை மூடிய வெற்றி, ''இப்போ கொஞ்சூண்டு பிக் ஆகிட்டான் தம்பு! டெய்லி பால் குடிச்சிட்டே இருந்தா.. அப்பா மாதிரி பிக் பிக் ஆகிடுவான்'' எனத் தன் வலுவான புஜங்களை உயர்த்திப் பிள்ளையை ஈர்த்தான்.

''ஹையா ஜாலி! தம்பு பிக்... பிக் ஆவான்.. ம்மா.. தம்பி பிக் ஆவானே?'' எனக் கத்திக் கொண்டே வெளியே ஓடிய பிள்ளையைப் பார்த்து ''உங்களுக்கும் கொஞ்சூண்டு அறிவிருக்கு, வெற்றி!'' என்றாள் அன்பரசி மெச்சுதலாக.

தனது 'பாராட்டிற்குப்' பரிசாய் ஓர் முறைப்பை எதிர்பார்த்திருந்த அன்பரசியின் எதிர்பார்ப்பில் மண்ணைப்



போடும் வண்ணம், ''உச்சு... உச்சு... உச்சு'' என ராகத்துடன் அனுதாபப்பட்டான் கணவன்.

''என்னவாம்?'' என அன்பரசி கேள்வியாய் நோக்க, ''எனக்கிருக்க கொஞ்சூண்டு அறிவு கூட உனக்கில்லையேன்னு நினைச்சா... என் நெஞ்சமே வலிக்குதே அன்பரசி! நெஞ்சமே வலிக்குதே!'' என அனுதாப வசனம் பேசி, நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கீழே சரிந்தான்.

''உங்களை'' என அன்பரசி பாய, அவள் பின்னே ''ம்மா... அப்புவா பாவம்... அச்சாதே'' என்ற சொல்லோடு வெண்ணிலா பாய, ''ஏய் நிலா...ம்மா அச்சா அச்சுவேன்'' என்ற கண்டிப்போடு ஆதி பாய, மனைவி - மகள் - மகன் என முறையே வெற்றி மீது சாய்ந்திருந்தனர்!

அங்கே ஓர் அழகான சங்கமம் நடந்தேற, வேலைக்காரப் பெண்மணியான கண்ணம்மையின் வருகை அதைக் களைத்து நடப்பிற்கு இட்டு வந்தது.

அரசு மருத்துவமனை ஒன்றில் நடக்கவிருக்கும் அறுவை சிகிச்சைக்காக காலையில் கிளம்பிச் சென்ற வெற்றிவேந்தன், மாலை நாலு மணியளவில் வீடு திரும்பியபோது வெண்ணிலாவின் அழுகை கீழே கார் பார்க்கிங் வரை கேட்டது.

வீட்டினுள் நுழையும் போதே ''நிலா குட்டி, ஏன் அழறா?'' என்ற விசாரிப்புடன் வந்த வெற்றி, அங்கே தன் தம்பியைக் கண்டதும் ''வந்ததும் வராததுமா பிள்ளையை அழ வச்சுட்டியா? என்னடா சொன்னே?'' என்றான் சிரிப்புடன்.

''பாருங்க அண்ணி! வந்தவனை ''வா''ன்னு கேட்க வேண்டாம்... ஏன் வந்தே என்ற மாதிரி கேட்கிறார்.

ம்ம்..." என சோகக் குரலில் சொல்லியவன், வேண்
மென்றே கண்ணைக் கசக்கிக் கொண்டான்.

"ஓவரா சீன் போடாதேடா" என வெற்றி அதற்கு
சிரிக்க, "என்ன வெற்றி இது? விஜய் செய்திருக்க நல்
காரியத்தைக் கேட்டா நீங்களே அவரை ரத்தினக்கம்பள
விரித்து வரவேற்பீங்க தெரியுமா?" எனக் கண் சிமிட்டின

"அதானே!" என விஜயும் சிரிக்க, தன் மீதிரு
கவனம் குறைந்ததில் மேலும் வீறிட்டாள் வெற்றியி
செல்வமகள்.

"என்னடி? பிள்ளை எதுக்கு அழறா?" என அன்ப
யிடம் கேள்வி கேட்டவாறே, மகளைக் கையில் ஏந்
யவன் "என் குட்டிம்மாவுக்கு எதுக்கு அழை... அழு
வருது? அழுகையை நிறுத்திட்டு அப்பாக்கிட்ட
சொல்லுங்க..." என்றான் அவளது கன்னங்களி
படிந்திருந்த காவேரியின் கறைகளைத் துடைத்தவாறே

"அப்புவா! ஆதி... எக்கு... சாக்கியே தவ மாத்தான
எக்கு வேணும்..." எனத் தன் தமையனைக் கை காட்
அவள் அழ, "இது உன்னோட வேலையா? அதென்
அவனுக்கு மட்டும் மில்கி பார் வாங்கிட்டு வந்திருக்கே
ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி சாக்லேட் வாங்கிட்
வாது தானேடா?" என்று தம்பியிடம் எரிந்து விழுந்தா
அவன்.

"அவனை எதுக்குத் திட்டுறீங்க? ரெண்டு பேருக்கு
ஒரே மாதிரி தான் சாக்லேட் வாங்கிட்டு வந்தார்... உங்
சிறந்த புத்திரி தான், அவளுக்குக் கொடுத்ததை வே
வேகமாக சாப்பிட்டுட்டு, அவனோடதையும் கேட்குது
சரியான அடவாடிக் கழுதை! பாவம்... தம்பு... நிறுத்



நிதானமா சாப்பிடுது.. அதையும் இவளுக்குக் கொடுக்கணுமாம்?" என மகளோடு சேர்த்து கணவனையும் வைதாள்.

"அச்சச்சோ! அப்படியா விஷயம்? அழாதடா ராஜாதி! அப்பா உனக்கு... டீ சாக்லேட் வாங்கித்தரேன்! அழாதே!" எனத் தந்தைக்கும், மகளுக்குமான கொஞ்சல் நடந்தேறிய அதே வேளையில் "அண்ணி... ரத்தினக் கம்பளம்... ரத்தினக்கம்பளம்" என மெல்லியதாய் முனங்கினான் விஜயமாரன்.

"அங்கென்ன குசுகுசுன்னு?" என வெற்றி வினவியது தான் தாமதம், "இன்னைக்குப் பசங்க ரெண்டு பேரும் புதுசா ஒரு வார்த்தை... ம்ஹ்ம்ம்... ரெண்டு வார்த்தை பழகியிருக்காங்க. அதை சொல்லிக்கொடுத்த விஜய்யை நீங்களும் புகழணுமாம். அதான்... அவங்க சொல்றதைக் கேட்டுட்டு உங்க தம்பியை மறக்காமப் புகழ்ந்திடுங்க" என்றாள் அன்பரசி சிரிப்பும், துடிப்புமாக.

"அப்படியா? ஹே குட்டீஸ்... அப்பாக்குச் சொல்லிக் காம்பிங்க" என வெற்றி ஆசையாய்ப் பிள்ளைகளின் முகம் பார்த்தான்.

ஆனால் தந்தையின் ஆர்வத்தைப் பின்னுக்குத் தள்ளிய பெண்ணரசியோ "அப்புவ்வா... சாக்கி வாங்கித் தவுவியா?" என மீண்டும் ஒரு முறை கேட்டு உறுதி செய்துகொண்ட கையோடு தன் தமையனிடம் போய் நின்று கொண்டாள்.

"ஏய் ஆதி... அப்பா எக்கு மட்டும்..." என அவள் தொடங்கியதும், நடுவில் புகுந்த அன்பரசி "அதிருக் கட்டும். சித்தப்பா சொல்லிக் கொடுத்ததை ஒழுங்கா

சொன்னாக்கா... அப்பா டூ இல்லை ஃபோர் சாக்கி வ
கித் தருவாங்க" என ஆசை காட்டி, அவர்களின் கவ
னத்தைத் தன்னிடம் திருப்பினாள், நல்லதொரு தாயாக!

நான்கு மிட்டாய்கள் என்பதில் கவரப்பட்ட பிள்ளை
கள் இருவரும் தாயின் கேள்விக்காக காத்திருக்கை
லேயே நேரத்தை வீணடிக்காமல், "அம்மா பேர் என்ன
சொல்லுங்க பார்க்கலாம்" என அன்பரசி கொஞ்ச, "தே
பேர் எல்லாம் சொல்ல வருதா? வந்ததுக்கு ரொ
நல்ல வேலை செய்திருக்கேடா, விஜய்" என வெற்
வியக்க, "இருங்க அண்ணா சார். சொல்லி முடிக்கட்டு
அப்புறம் மொத்தமா என்னைப் புகழுங்க!" என
காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான் விஜயமாறன்.

"ம்ம் சொல்லுங்கடா" என அன்பரசி சிணுங்க, "அ
பச்சி" என இருவரும் ஒரே குரலில் சொல்லி மூன்
பெரியவர்களின் கை தட்டலையும் பெற்று கொண்டா

"அப்பா பேரு?" என்ற அடுத்த கேள்விக்கு அவர்க
கொடுத்த பதிலில், வெற்றி தனது அன்பு தம்பிை
ரத்தினக்கம்பளம் விரித்து வரவேற்காமல் இருந்தா
என்று வருத்தம் கொள்வதா? இல்லை வீட்டை ரத்த
களரியாக்காமல் விட்டு வைத்தானே என்று சந்தோஷ
படுவதா? என்பது பகுத்தறிய முடியாத ஒன்று.

அப்படி என்ன பதில் என்று கேட்கிறீர்களா? வெற்
யின் அன்புச்செல்வங்கள் அவனது பெயரை உச்சரித்
விதம் இதோ - "வெட்டிவேந்தன்!"

"அடப்பாவி! ஏன்டா உனக்கு இந்த வெட்
வேலை?" எனத் தம்பியிடம் பாய்ந்த வெற்றியை "ஹே
இரு இரு. இப்படியெல்லாம் பாராட்டக் கூடாது! இடுப்



வரை குனிந்து... ஒரு சலாம் வைத்து..." என விஜய் சொல்லிக்கொண்டே போக, அங்கே சற்று நேரம் பலத்த சலசலப்பு நிலவியது.

ஆரவாரம் அடங்கி, இருவருமாய் அன்பரசி செய்து கொடுத்த சேமியா கேசரியை ஒரு கை பார்த்துக்கொண்டிருக்க, "என்னடா திடீர்னு சென்னை வந்திருக்கே? அப்பா நானே வரதா இருந்தது?" என்றான் வெற்றி வேந்தன்.

"ஒரு ஆடிட் விஷயமா வந்தேன், வெற்றி! அப்பா தான் வரதா இருந்தது... அம்மாவும் பசங்களைப் பார்க்க வரலாம்ன்னு குஷியா இருந்தாங்க. ஆனா அப்பாக்கு கோயம்புத்தூர்ல ஒரு வேலை வந்திடுச்சு... அவர் மட்டுமே போக வேண்டிய நிலைமை, அதான் நான் வந்தேன்" எனத் தந்தையுடன் தான் செய்யும் கணக்காளர் வேலையைப் பற்றி சொன்னான் இளையவன்.

"ஹோ சரி! அம்மாக்குத் தான் இங்க வரமுடியலைன்னு வருத்தமா இருந்திருக்கும். அப்பாக்கு மட்டும் சுகர்... பிரஷர்... பத்திய சாப்பாடுன்னு எதுவுமில்லன்னா அம்மாவை திருச்சியில பிடிச்சு வைக்கிறது ரொம்பக் கஷ்டம்... பேரன் - பேத்தியோட இருக்கிறதுக்கு இங்க ஓடி வந்திருப்பாங்க" என்ற வெற்றியின் குரலில் பெருமிதமிருந்தது.

"பிரணவ் இருக்கிறதால பரவாயில்லை... அதுக்கு முன்னாடி இதே புலம்பல் தான்!' என ஆமோதித்த விஜயமாறன், "நேத்திக்கு அத்தை நம்ம வீட்டுக்கு வந்திருந்தாங்க அண்ணி... அவங்களும் இதே புலம்பல் தான். கால் வலியோட சேர்ந்து மாமாவோட

உடல்நிலையும் அவங்களை அங்க கட்டிப்போடுதுன்னு பசங்களைப் பார்க்க ரெண்டு பாட்டீஸ்லாம் துடிக்கிறது ரொம்ப வெளிப்படையாத் தெரியுது! ஒரு தடவை பசங்களோட வந்துட்டுப் போங்கண்ணி... வந்து ரெண்டு மூணு மாசமிருக்குமே?" - இரு பக்கத் தாயாரின் சார்பாகவும் பேசினான், அந்தப் பாசக்காரன்.

"கண்டிப்பா விஜய்! பசங்க பிறந்த நாளுக்கு முன்னாடி திருப்பதிக்குப் போகணும்... அங்க போயிட்டு ஊருக்கு வரலாம்னு இருந்தோம். இப்போ ஊருக்கு போயிட்டுத் தான் எங்காளும்னு முடிவு பண்ணி யாச்சு" என்றாள் அன்பரசியும் இரு நல்ல உள்ளங்களின் ஏக்கத்தைத் தனதாய் உணர்ந்து!

"அது தான் அண்ணி!" என்று விஜய் சிலாகித்துக் கொண்டிருக்கும் போதே "பசங்க ரெண்டு பேரையும் கீழே விளையாட விட்டுக் கூட்டியாறேன்மா" என்று வேண்டுகோளுடன் வந்து நின்றாள் கண்ணம்மை.

"கூட்டிட்டுப் போ கண்ணம்மை! வாய் - கை - சட்டை எல்லாத்திலும் சாக்லேட்டை அப்பி வச்சிருக் காங்க. வெந்நீர் வச்சுத் துடைச்சு விட்டுட்டுக் கூட்டிட்டுப்போ!" என எஜமானியாய் அனுமதி கொடுத்தாள் அன்பரசி.

பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வேலைக்காரப் பெண்மணி உள்ளே நகரவும் "என்னண்ணி இது? நீங்க பாட்டுக்கு அவங்களோட பசங்களை அனுப்புறீங்க? நீங்களும் கூடப் போறது தானே?" என விஜய் அதிசய மாய்க் கேட்டான். அவனுக்கும், பிள்ளைகளுக்குச் சின்னக் கொசக்கடி என்றாலும் நெஞ்சம் பதறிப்போகும்



அண்ணியா இப்படி ஓர் வேற்றாளை நம்பிக் குழந்தை களை அனுப்புவது என்று வியப்பாய் இருந்தது. அதையே அவன் வாய் விட்டும் சொல்லிவிட, அதற்கு அன்பரசி கொடுத்த விளக்கத்தை அவனால் ஒத்துக் கொள்ளாமல் இருக்கமுடியவில்லை.

"கண்ணம்மை... நம்ம வீட்டுல ஏழு வருஷமா வேலை பார்க்கிறாங்க விஜய்! என்னைப் போலவே... என் னைக்கும் மேலா பசங்களைப் பார்த்துப்பாங்க. அது ஒரு பக்கமிருந்தாலும், பசங்களை எப்போ பார்த்தாலும் நம்ம கைக்குள்ளே வச்சுக்கிட்டா அது கூட அவங்க உடம்புக்கு ஏதையாவது கொண்டு வந்துவிட்டுடும். அவங்க இஷ் டப்படி, ஓடியாடி விளையாட விட்டாத் தான் இன்னும் ஹெல்தியா இருப்பாங்க. "காய்ச்சல் வந்திடும்... சளி பிடிச் சிடும்... விழுந்திடுவே... அடி பட்டிடும்... கட்டுக் குவே..."ன்னு சொல்லி, சொல்லி அவங்களை முடக்கி வச்சா... எதையுமே தைரியமா எதிர்கொள்ளவே மாட் டாங்க..." என்ற அன்பரசியின் நீண்ட விளக்கத்தைத் தொடர்ந்து "நீங்க சொல்றதும் சரி தான்" என ஆமோதித் தான்.

அவனது ஆமோதிப்பைப் பெற்று விட்டப் பின்னரும் "இப்பவும் அவங்க உடம்புக்கு ஏதாவது ஒண்ணுன்னா துடிச்சுப் போயிடுவேன் தான். இல்லைன்னு சொல் லலை... ஆனா, உடம்புக்கு எதுவுமே இல்லாத போது... வரவே இல்லாத ஒண்ணை நினைச்சு அவங்களை முடக்கி வைக்கிறது தப்புன்னு தோணுது. அதான் எல்லாரோடை யும் பழக விடுறேன்... அவங்க இஷ்டப்படி விளையாட விடுறேன்... சாப்பாட்டு விஷயத்தில மட்டும் கொஞ்சம் கண்டிப்பா இருப்பேன்... அவ்வளவு தான்" என்றாள்

சிரித்த முகத்துடன். பிள்ளைகளுக்கு நல்லது என்பதால் இதை மாறாது கடைப்பிடிக்கும் இதே அன்பரசி, இன்னும் சிறிது காலத்தில் பிள்ளைகளுக்கு நல்லது என்று இவையனைத்தையும் தானே நிறுத்தி வைக்கப் போவதை அறியவில்லை.

''ஓகே ஓகே! நீங்க ஒரு அக்மார்க் அம்மா என்று நான் ஒத்துக்கிறேன்'' எனக் கையெடுத்துக் கும்பிட்ட விஜயின் முதுகில் ஓர் அடியுடன் அந்த உரையாடலை முடித்தாள் அன்பரசி.

வேலையின் காரணத்தால், மனைவி மற்றும் குழந்தைகளைத் தனது தம்பியுடன் திருச்சி அனுப்பி வைத்தான் வெற்றிவேந்தன். ''பசங்களைப் பார்க்கணும் போலிருக்கு'' என்ற தாயாரின் ஏக்கம் ஒரு வாரம் சென்று நடக்கவேண்டிய அப்பயணத்தை அடுத்த நாளே நடக்க வைத்தது.

பதினைந்து நாட்களுக்கும் மேலாய் திருச்சியில் சீராடியபோதும், ''திருப்பதி செல்ல வேண்டும். அம்மாக்கள் இருவரும் வர வேண்டும்'' என்ற கோரிக்கையை முன்வைத்து, பார்வதி மற்றும் வைதேகியை அழைத்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தாள் அன்பரசி.

அவர்கள் சென்னை வந்த தினத்தன்று மாலை, அன்பரசியின் வீட்டிற்குள் நுழைந்த ஆகாஷ் ''என்னை விட்டுட்டு ஊருக்குப் போய்தீங்க! ஆதி... நிலா... நீங்க... யாருமே இல்லாம... அஷுக்கு எவ்வளவு போர் அடிச்சது தெரியுமா?'' என்ற வாக்கியத்தை முடிக்கும் முன்னர் அவனது கண்களில் நீர் நிரம்பிவிட்டது.

''ஹையோ அஷு கண்ணா! இனிமேல் அன்பத்தே எங்கேயும் போகலை.... அப்படியே போனாலும்



அஷுவையும் கூட்டிட்டுப் போறேன் ஓகேவா? ப்ளீஸ் ராஜா... இதுக்குப் போய் யாராவது அழுவாங்களா? என் அஷு கண்ணன் சமத்தில்லையா? ஹ்ம்ம்'' என்ற கொஞ்சலில் ஆகாஷின் அழுகை சற்றே குறைந்திருந்த போதும், முழுதாய் மறையவில்லை.

பல நிமிடக் கொஞ்சலுக்குப் பின்னர், ஒருவாறாய் சமாதானமடைந்த ஆகாஷ் ''ஆதி பார்க்கப் போறேன்...'' என இறங்கினான்.

அதே சமயம், ஆதவனும் வெண்ணிலாவும் ''அஷு அண்ணா'' என்ற ஆரவாரத்துடன் துள்ளிக்கொண்டு ஓடி வர, அவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் கொஞ்சிக் கொள்வதையும், பெரிய மனிதர்கள் போல் பிரிவாற்றிக் கொள்வதையும் பார்க்கப் பரவசமாய் இருந்தது.

பிள்ளைகளின் சந்தோஷத்தில் நாங்களும் மகிழ்ந்து ''மூணு பேரும் பாசமா இருக்கிறதைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை! இன்னைக்கு நைட் மூணு பேருக்குமா சுத்திப் போடணும்...'' என வைதேகியும், ''பசங்களுக்கு ஒரு அண்ணன் இல்லாத குறையை ஆகாஷ் குட்டித் தீர்த்துடுறான், மூணு பேரும் பேசிக்கிறதைப் பார்க்கிறதே அழகு தான்'' எனப் பார்வதியும் அகமகிழ்ந்து போயினர்.

ஆனால், இந்த மகிழ்ச்சி அவர்கள் திருப்பதி கிளம்பிச் சென்ற தினம், ஆகாஷின் ''நானும் வாரேன்... அன்பத்தே... நானு... நானு'' என்ற அழுகையில் சற்றே குறைந்தது.

அவனது அன்னை சுபத்ராவிற்கும், ஆகாஷை அவர்களுடன் அனுப்ப இஷ்டம் தான் என்றாலும், ஊரிலிருந்து

வரும் மாமனார் மாமியார் தங்களது ஒரே பேரனைக் காணாது வருத்தப்படுவாரே என்று தயங்கினாள்.

அவளது நிலைமையைப் புரிந்து கொண்ட அன் பரசியும், ஆகாஷை முயன்று சமாதானம் செய்து, முடிவில் ''அடுத்த வாரம் அனைவருமாக கிஷ்கிந்தா போகலாம்'' என்ற உறுதிமொழியை வைத்தப் பின்னரே கிளம்பிச் சென்றாள்'' அப்போதும் மனதின்றியே தான்!!

லேசான சுணக்கத்தோடு நடந்த அப்பயணத்தை சுவாரஸ்யமாக்க வெண்ணிலாவின் ''கோவிந்தா... கோவிந்தா... மொத்தை... மொத்தை'' என்ற அலும்பல் போதுமானதாய் இருந்தது எனில், பிள்ளைகள் இருவரின் அழகிலும் கவரப்பட்டு பல புதியவர்கள் பிள்ளைகளைக் கையில் வாங்கிக் கொண்டதும், பிள்ளைகள் முகம் சுளிக்காது அவர்களிடம் சிரித்துப் பேசியதும் பெற்றவ ளாய் அவளைப் பெருமிதம் கொள்ளச் செய்தது.

சுவாரஸ்யம், சந்தோசம், பெருமிதம். பெருமாளின் தரிசனம் கிடைத்த மகிழ்ச்சி, பிரார்த்தனை நிறைவேற்றி விட்ட நிம்மதி என நல்லவிதமான உணர்வுகளுடன் சென்னை வந்து சேர்ந்த அன்பரசியை உலுக்கி எடுப்பதற்காகவே ''ஆகாஷ் கடத்தப்பட்டிருக்கிறான்'' என்ற செய்தி காத்திருந்தது!



# 5

திருப்பதியிலிருந்து இரவு பதினோரு மணிக்கு மேல் வீடு திரும்பிய வெற்றிவேந்தனுக்கு, அந்த



நேரத்தில் ஆனந்தின் வீட்டில் விளக்கு எரிந்தது ஏனோ உறுத்தியது.

தூங்கியிருந்த ஆதவனைத் தோளில் சாய்த்துக் கொண்டு படியேறிய அன்பரசி, வெற்றியின் பார்வையில் ஆகாஷின் வீட்டைப் பார்த்தபோது அவளுள் தோன் றியது - சுபத்ராவின் வயதான மாமனார் மற்றும் மாமி யாருக்கு உடல்நிலை மோசமாகி விட்டதோ? என்பது தான்.

''என்னன்னு தெரியலையே? இந்த நேரத்தில விளக் கெரியுதே? நான் போய்.... என்னன்னு கேட்டுட்டு வரவா, வெற்றிப்பா?'' என அன்பரசி லேசான குழப்பத் துடன் வினவ, ''இந்த நேரத்திலயா அன்பு?'' என்று மகனுக்குப் பதிலாய் இடைப் புகுந்தார் வைதேகி.

''ஹ்ம்ம். இல்லைம்மா. ஆனந்தோட அப்பா ஹார்ட் பேஷண்ட்... என்னவென்று கேட்டு விட்டுப் படுத்து விட்டால் நிம்மதியாக இருக்கும்'' என மனைவியை அப்படியேப் பிரதிபலித்தான் வெற்றிவேந்தன்.

''சரிப்பா. ஆதியை என்கிட்டே கொடுத்திட்டு கேட் டுட்டு வாம்மா. நம்மளால ஒரு உதவி ஆகுதுன்னா சந் தோசம் தானே?'' என்ற வைதேகி, மருமகளின் கைக ளிருந்து பேரனை வாங்கிக்கொள்ள, ''நீங்களும் அன்பு கூட போயிட்டு வாங்க, மாப்பிள்ளை'' என்ற பார்வதி நிலவரசியை தன்னிடம் இடமாற்றிக் கொண்டார்.

சிறு தயக்கத்துடனே அழைப்பு மணியை அன்பரசி அழுத்தியது தான் தாமதம் - மின்னல் வேகத்தில் கதவைத் திறந்த ஆனந்தின் கண்களில் கலக்கத்துடன் கண்ணீரும் நிறைந்திருந்தது கணவன் - மனைவி இருவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''என்ன ஆனந்த்? அப்பாக்கு உடம்புக்கு எதுமா?
என்ற வெற்றியைப் பாய்ந்து அணைத்துக் கொண்
ஆனந்த் அழுகையில் குலுங்கினான். ஓர் மூத்த சகோ
தரனைப் போல் அவளை அணைத்த வெற்றியின் ம
தில் ஆனந்தின் பெற்றோரே வலம் வந்தனர் என்பதா
''ஆனந்த், என்னப்பா இது? எதுவானும் நிதானமா இரு
முதல என்னாச்சுன்னு சொல்லு'' என்றான் கனிவுடன்

ஆனந்தின் நிலையைக் கண்டு அதிர்ந்து போயிருந்
அன்பரசியை மேலும் அதிர வைப்பது போல் ''அன்புபுபு
என்ற கதறலுடன் அவளிடம் சரண் புகுந்தாள் சுபத்ரா

''என்னாச்சு சுபா? ஹே அழாதே? என்னது இது
நீங்க ரெண்டு பேருமே இப்படி அழுதா... உங்களை
பார்த்து ஆகாஷ் மிரண்டு போக மாட்டானா?'' எ
அவன் முடித்தது தான் தாமதம் சுபத்ராவின் கதற
அதிகமானது. ''அஷு, அஷு... என்னோட அஷு'' என
நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அவள் கதற, அவளது
மாமனாரும் மாமியாரும் உள்ளே இருந்து எட்டிப் பார்த்த
போது வெற்றி துணுக்குற்றான்.

தளர்ந்த நடை என்றாலும் அவர்களது உடம்பிற்குப்
பெரிதாய் ஒன்றுமில்லை என்பதை அவனது மருத்துவ
மூளை ஐந்தே விநாடிகளில் கணக்கிட்டு விட, ''ஆனந்தும்
சுபத்ராவும் உடைந்து போவது போல் வேறென்ன நடந்
திருக்க முடியும்?'' என வெற்றி யோசிக்கையிலேயே,
தன் தோளில் சாய்ந்திருந்த சுபத்ராவின் கனம் கூடு
வதை உணர்ந்த அன்பரசி ''சுபா... சுபா'' எனக் கன்
னத்தைத் தட்டினாள்.

மனைவியின் நிலையைக் கண்ட ஆனந்த், துரித
மாய்ச் செயல்பட்டு அவளைக் கையில் ஏந்திக்கொண்டு



உள்ளே விரைந்தான். சோபாவில் அவளைப் படுக்க வைத்துவிட்டு, அவன் நிமிரும் முன்னர் கையில் ஓர் குவளைத் தண்ணீருடன் அன்பரசி வேகமாய் வந்துவிட, வெற்றி அவளது நாடித் துடிப்பை அறிய ஆயத்தமானான்.

''சாதாரண மயக்கம் தான்'' என அவன் நிமிரும் போதே, ''இன்னைக்கு மட்டும் பத்து தடவைக்கும் மேலா... இப்படி மயங்கி விழுந்துட்டா தம்பி!'' எனக் கண்களைத் துடைத்துக் கொண்டார் பெரியவர்.

''இங்க... என்ன நடக்குது ஆனந்த்? சுபா மயங்கி விழற அளவுக்கு என்ன விஷயம்?'' என வெற்றி தலையை அழுத்திக்கொள்ள, வீட்டைச் சுற்றி கண்ணைச் சுழற்றிய அன்பரசியின் கவனத்தில் திறந்திருந்த இரு படுக்கை யறைக் கதவுகளும், காலியாக இருந்த படுக்கைகளும் பட்டன. கூடவே, முழுதாய்த் திறந்திருந்த ஆகாஷின் அறையில் கலைந்து போகாது... வைத்தது வைத்தபடி இருந்த சாமான்களும், அவனது குட்டிப் படுக்கையில் விருப்பின் மடிப்பு கூடக் கலையாது இருந்த சுத்தமும் மேலும் மேலும் சந்தேகத்தைக் கிளப்பின.

''ஆக்... ஆகாஷ் எங்கே?'' என்றவளின் குரல் ஏதோ விபரீத பதிலை எதிர்பார்த்தது போல் திக்கித் திண றியது.

''ஆகாஷ்! அவனைத் தான் தொலைத்து விட்டு நிற்கிறோம் அன்பரசி!'' என்ற ஆனந்தின் கண்களில் எல்லையில்லா வேதனையிருக்க, அப்பதிலைக் கேட்ட அன்பரசி ''ஹய்யோ'' என அலறிவிட்டாள்.

''என்ன ஆனந்த்... என்ன சொல்றே? வீட்டில நல்லா தேடினீங்களா? ஆகாஷ் ஏதாவது குறும்பு செஞ்சிட்டு

எங்கேயாவது ஒளிஞ்சுக்கிற டைப் தானே பா? அப்ப தான் எங்கேயாவது இருப்பான்...'' என்ற வெற்றிக்கு அதிர்ச்சி தான் என்றாலும், ஆகாஷைக் காணவில்லை என்பதை அவனது அன்பு கொண்ட மனதால் ஒத்து கொள்ள முடியவில்லை. அவனது மனதின் ஓர் மூலை ஆகாஷ் இங்கே தான் இருக்க வேண்டும் என அழுத்த மாய் சொல்ல, மறு மூளையோ அவனைக் காத்தருள் கடவுளே என மனதார வேண்டியது.

''வீட்டுக்குள்ள இல்லை என்றாலும்... வேற எங் காவது... கீழே இருக்க பார்க்ல இல்ல வேறு யாராவது வீட்டில்...'' என அன்பரசியும் தொடரும் போதே, ஆகாஷ் அப்படிச் செல்ல மாட்டானே... குறும்பு செய்துவிட்டு சுபத்ராவிற்குப் பயந்து கொண்டு வீட்டின் இடுக்குகளில் ஒளிவான் தான்... அப்படியே அவர்கள் வீட்டில் இல்லை என்றாலும் தங்களது வீட்டிற்கு வந்து அன்பரசியிடம் ஒண்டிக் கொள்வானே ஒழிய வேறிடங்களில் ஒளிய மாட்டானே... அப்படியே நூற்றில் ஒரு பங்காய் ஒளிந் திருந்தாலும் இவ்வளவு நேரத்திற்கு வெளியே வராமல் இருக்க மாட்டானே... அவனால் ஓரிடத்தில் ஐந்து நிமிடம் தொடர்ந்திருக்க முடியாதே... அதற்கும் மேலாய் இருட்டைப் பார்த்தால் பிள்ளைக்குப் பயமாகிற்றே... ஆனந்தின் தந்தை சொல்வதை வைத்துப் பார்த்தால் வெகு நேரமாக அவனைக் காணவில்லை என்றல்லவா ஆகிறது... என எண்ணங்கள் நீண்டு கொண்டே போக, அன்பரசியின் நெஞ்சம் வற்றிக் கொண்டே போனது.

அவளது எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் ''ஸ்கூலுக்குப் போனவன் திரும்ப வரவே இல்லை, அன்பரசி!'' என்று அமைந்தது ஆனந்தின் பதில்.



''உங்க கார்ல தானே ஆனந்த் போயிட்டு வருவான்? அப்புறம் எப்படிக் காணாமல் போக முடியும்? ஸ்கூல் லிலும் செக்யூரிட்டி பயங்கரமா இருக்குமே? நீங்க சொன்ன ஆள் வராம... பிள்ளையை விட மாட்டாங் களே!?'' என வெற்றி குழம்ப,

''அங்க தான்... தம்பி வினையே வந்திருக்கு. அந்த டிரைவர் பய தான். எங்க ராசாவைத் தூக்கிட்டுப் போய்ட் டான்... படுபாவி! கட்டையில போறவன்.. பச்சைப் புள்ளையை போய் தூக்கிட்டுப் போயிருக்கான்...'' என்றார் ஆனந்தின் தாயார் அடங்காத ஆத்திரமும், நிற்காத கண்ணீருமாய்.

''என்னது? பரமு அண்ணனா? என்ன சொல்றீங்கம்மா? ஹய்யோ கடவுளே?'' என்று பதறியபோது, தனக்கே உயிர் போவது போல் இருக்கிறதே. சுபத்ரா எப்படித் தாங்கி யிருப்பாள் என உள்ளம் தாயாய் ஓர் தாய்க்காய்ப் பதறியது.

''ஆமா, அன்பரசி! பரமுவே தான்'' என்றான் ஆனந்த் வெறுப்புடன்.

''முழு விவரம் சொல்லு ஆனந்த். என்ன நடந்தது என்று முழுசா தெரிஞ்சா என்னோட பிரண்ட் ஒருத்தன் போலீஸ்ல இருக்கான். அவனை வச்சு ஏதாவது மூவ் பண்ணலாம்'' என வெற்றிவேந்தன் முடிக்கக்கூட இல்லை.

''ஹய்யோ! போலீஸுக்குப் போகக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க அண்ணா. வேண்டாம்... வேண் டாம்... அஷுவை ஏதாவது செய்துடுவாங்க'' என நடுங்கத் தொடங்கிவிட்டாள் மயக்கத்திலிருந்து கண் விழித்த சுபத்ரா.

''சரிம்மா சரிம்மா. போலீஸ் வேண்டாம். என்கி
சொன்னா... வேற ஏதாவது வழியில யோசிக்கலா
லையா?'' என வெற்றி நயமாக, சமாதானம் செய்ய
''ஏதாவது செய்ங்கண்ணா! பிள்ளை... எந்த நிலை
இருக்கானோ? எனக்குப் பயமா இருக்கே... அ
அவனை விட்டு நான் ஒரு நாள் கூட இருந்த
லையே!'' என மறுகிப் போனாள் சுபத்ரா, பத்து ம
சுமந்து பெற்ற வயிறல்லவா!?

உயிர் கொடுத்த தந்தையும், ஊன் கொடுத்த த
உடைந்து போயிருக்க, தங்கள் அன்பெனும் அமு
தைத் தங்களது ஒரே பேரனுக்குத் தெவிட்டாது புகட்
பெரியவர்களோ நொறுங்கிப் போயிருந்தனர்.

வெற்றியிடம் முழு விவரமும் சொல்வதால், ச
தெம்பும், அடுத்து என்ன செய்யலாம் என்ற தெளி
கிடைக்கும் என்றெண்ணிய ஆனந்த், கண்க
அழுந்தத் துடைத்துக்கொண்டு மென்குரலில், மு
இறுகச் சொல்ல ஆரம்பித்தான்.

''இன்னைக்குக் காலையில பரமு தான்... ஆகா
ஸ்கூல்ல கொண்டு போய் விட்டிருக்கான்... அப்ப
அம்மா வந்திருப்பதால் பிள்ளை ஸ்கூல்லுக்குப் போ
மாட்டேன்னு சொல்லியிருக்கான்... இவ தான், இந்த
நாள் படிப்பில் தான் அவன் படிச்சு கலெக்டர் ஆ
போற மாதிரி... சை... இப்போ குழந்தையைத் தொலை
சிட்டு தவிக்கிறோம்'' - விவரத்தில் தொடங்கிய வை
லில் பயணித்து முடிவில் வேதனையில் முடித்தான்.

கணவனின் குற்றச்சாட்டில் மேலும் உடைந்த சுபத்
முகத்தை மூடிக்கொண்டு விசும்ப ''அவளைக் குல



சொல்லாதே ஆனந்து! பெத்தவளே பிள்ள தொலஞ்சு போக வழி செய்வாளா? பிள்ளையைத் தூக்கிவிட்டுப் போனவனுக்கு - நாளும், நட்சத்திரமுமா கணக்கு? என்னிக்கிருந்தாலும் அவன் காரியத்தைச் செய்திருப்பான்'' என மகனைக் கடிந்து கொண்ட அவனது தாயார், மருமகளின் அருகில் அமர்ந்து மெல்ல அவனது முதுகை வருடிக் கொடுத்தார்.

''அவங்க சொல்றது சரி தான். ஆனந்த்! ஸ்கூல் போகும் போதே பிள்ளையைத் தூக்கிட்டுப் போயிட்டானா?'' என ஆனந்திடம் வேறு விவரம் கேட்டான்.

''இல்ல, வெற்றி! ஆகாஷ் கிளாஸ் அட்டெண்ட் பண்ணியிருக்கா... முழு நாளும் கிளாஸ் ரூம்ல இருந்தா அவங்க கிளாஸ் மிஸ் சொல்றாங்களே? சாயங்காலம், ஸ்கூல் விட்டதும் பரமு தான் ஆகாஷைக் கூப்பிட வந்தானாம். அவன்கிட்ட இருக்க லெட்டரை (பிள்ளைகளை இவருடன் நம்பி அனுப்பலாம் என்று பெற்றோர் கையொப்பம் இட்டுக் கொடுக்கும் கடிதம்) சரி பார்த்திட்டுத்தான் ஆயம்மா ஆகாஷை விட்டிருக்காங்க.''

''ஸ்கூல்ல இருந்து பிள்ளையைக் கூட்டிட்டு வரப் போன பரமு கிட்டத்தட்ட ஒரு மணி நேரமா வீட்டிற்கு வரலை என்றதும்... சுபா பயந்து போய் ஸ்கூல்லுக்கு போன் செய்திருக்கா... அவங்க ஆகாஷ் கிளம்பிட்டான் என்றதும்...'' என்ற ஆனந்தை இடை மறித்த சுபத்ரா.

''வரும் வழியில் விபத்து ஏதம் நடந்துவிட்டதொன்னு பயந்து போயிட்டேன் அண்ணா, பரமு அண்ணனோட செல்லுக்கு அடிச்சிட்டே இருந்தா... அது சுவிட்ச் ஆப் என்ற வேற வந்ததா? ரெண்டு பேருக்கும் ஏதோன்னு

ரொம்ப பயந்து போயிட்டேன்...'' என்ற பே
சுபத்ராவின் அப்போதைய நிலைமை அன்பரசிய
உணர முடிந்தது.

''பாமுவோட போன் எடுக்கலை என்றதும் எனக்கு
கூப்பிட்டா... அடிச்சுப் பிடிச்சு ஓடி வந்து ரோடு, ரோ
அலைஞ்சது தான் மிச்சம். பிள்ளையை எங்கே
காணலை... அவனோட பிரண்ட்ஸ் வீட்டுக்கு ஸ்கூ
கிரௌண்ட், அபார்ட்மென்ட் காம்ப்ளெக்ஸ் என்
எல்லா இடமும் தேடிட்டு வீட்டுக்கு வந்தா... தெரிய
நம்பரிலிருந்து போன்!'' என்ற ஆனந்தின் மு
சுருங்கியது.

''எடுத்துப் பேசினா'' உன் மகனை உயிருடன் பார்க்
வேண்டுமென்றால் பத்து லட்சம் பணம் கொண்டு வா
என்று சினிமா வசனம் பேசுறான்... இடியட்!!'' என
பல்லைக் கடித்தான் ஆனந்த்.

அந்த வாக்கியத்தில் வெற்றியின் நெற்றியி
சிந்தனைக் கோடுகள் ஓடின என்றால் அன்பரசியே
''அவள் கேட்கிற பணத்தைக் கொடுத்து பிள்ளையை
கூட்டிட்டு வந்திருக்க வேண்டியது தானே. அண்ணா
ஹய்யோ எவ்வளவு நேரமாச்சு! பசியோடு இருப்பானே
இந்தப் பாவிகள் என்ன செய்தார்களோ'' என ஒ
தாயாய்த் தவித்தாள்.

''ஷ். கொஞ்ச நேரம் சும்மா இரு அன்பு!'' என அவளை
அடக்கிய வெற்றி, ''பேசினது பாமு தான் என்று எப்ப
தெரியும், ஆனந்த்? பாமுவை அடிச்சுப் போட்டுட்
வேற யாரும் கூட பிள்ளையைக் கடத்தியிருக்கலா
இல்லையா?'' எனத் தன் சந்தேகத்தை முன்வைக்கவு



''இல்லை வெற்றி! பாமுவோட இணக்கமில்லாமல் இது நடந்திருக்கவே முடியாது. ஏன் அப்படி சொல்றேன்னா... ஸ்கூல்லுக்கும் வீட்டுக்குமான மூன்று கிலோமீட்டர் தூரம் முழுதும் சிட்டிக்குள்ள தான் இருக்கு. அதுவும் நல்ல மெயின் ஏரியா... காரை மடக்கி, டிரைவரை அடிச்சு, பிள்ளையோட காரையும் எடுத்துப் போறது என்பது முடியாத காரியம் இல்லையா?'' என ஆனந்த் விளக்கியபோது, வெற்றியால் மறுத்துக் கூற முடியவில்லை.

''இந்தக் கடத்தலில் பாமுவோட பங்கு கண்டிப்பா இருக்கு... நேரடியா இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் அவனோட ஆதரவில்லாமல் இந்த காரியம் நடந்திருக்க முடியாது'' என்றான் ஆனந்த் தீர்மானமாக.

கடத்தலுக்குக் காரணமானவனைக் கண்டுவிட்டப் போதும், தன் கண்ணின் மணியைக் கண்டுபிடிக்க முடியவில்லையே என்ற வேதனை அவனுள் அனலாய் தகிப்பதை வெற்றியால் உணர முடிந்தது.

''ஒரே ஒரு போன் கால் மட்டும் தான் வந்ததா? ஆகாஷ் பேசினானா? வேற யாரு... யாரு பேசினாங்க? ஒரே ஆளா? ரெண்டு மூணு பேர் கும்பலா இருக்காங்களா? பணம் கொடுக்கிறதுக்கு எந்த இடம்... எந்த நேரம் மாதிரியான விவரங்கள் சொன்னாங்களா? கார் அவங்களிடமிருக்குன்னா... காரை ட்ரேஸ் பண்ணி அவங்க இருக்க இடத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யலாம்'' என ஆனந்தை உலுக்கி விவரமறிய முற்பட்டான் வெற்றி.

''நீங்க வரதுக்கு ரெண்டு நிமிஷம் முன்னாடித் தான் அவங்ககிட்ட இருந்து போன் வந்தது. நாளைக்கு ராத்திரி தான் இடம் சொல்வாங்களாம்... ஆனா பணம் மட்டும்

பத்து லட்சம் கண்டிப்பா இருக்கணும். பணத்தை நா
அங்க கொடுத்தும் இங்க... அதாவது வீட்டில பி
ளையை விட்டுடுவாங்களாம். சரின்னும் சொல்லா
இல்லைன்னு சொல்லாம ஆகாஷ்கிட்டப் பேசணு
என்று கேட்டதற்கு ரெண்டு நிமிஷம் அவனிட
போனை கொடுத்தாங்க, வெற்றி!''

''அப்பா... அப்பான்னு அவன் கத்தினதைக் கேட்
சகிக்கலை... கத்தி, துப்பாக்கி எல்லாம் வச்சிருக்காங்
போல... அவனோட கண்ணைக் கட்டியிருக்காங்களாம்.
அவன் குரலைக் கேட்டு வச்சதும் நீங்க வந்தீங்களா
என்னை என்னால கட்டுப்படுத்திக்க முடியல'' என்
ஆனந்தின் குரலில், பெற்ற பிள்ளையைக் காப்பாற்
முடியாமல் திராணியற்று நிற்கும் மனக்குடைச்ச
அப்பட்டமாய்த் தெரிந்தது.

''கத்தி வச்சிருக்கது ஆகாஷுக்கு எப்படி தெரியும்
ஆனந்த்? காயம் ஏதும் உண்டு பண்ணிட்டாங்களா?''
என வெற்றி பதற, ''கடவுளே! என்னங்க இது? கண்ட
கேள்வியும் கேட்டுட்டு! ஆகாஷுக்கு ஒண்ணும் ஆ
யிருக்காது. அவன் பத்திரமாக வந்திடுவான்'' என்
அன்பரசியின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. பத்து
மாதங்கள் வயிற்றில் சுமக்காத போதும், ஏழு வருடங்
களுக்கும் மேலாய் அவளது வாழ்வில் வசந்தம் வீசச் செய்த
தங்கமகன் அல்லவா! தாயாகும் முன்னே அவளைத்
தாயைப் போல் உணர வைத்தவன் அல்லவா!

அவளது வேதனை தாங்க முடியாமல் ''அவன் சத்தம்
போட்டால் - கத்தியால் குத்துவதாய் மிரட்டுகிறார்கள்
போல துப்பாக்கி வைத்திருப்பதை அவர்களுள் நடந்த



உரையாடலின் வழியாக கண்டுபிடித்திருப்பான் போல''
என விளக்கம் போல் சமாதானம் செய்தான் ஆனந்த்.

ஆகாஷைக் கடத்திய விவரம் சொல்லி முடிக்கப்பட்டதும், அங்கே பலத்த அமைதி நிலவியது. பல நிமிடங்கள் நிலவிய அமைதியைக் கிழித்தெறியவென, ''என்னாச்சுப்பா வெற்றி? நீங்க ரெண்டு பேரும் இங்க வந்து அரை மணிக்கும் மேலாச்சேன்னு பார்க்கவந்தேன்'' என்று வந்தார் வைதேகி.

கலங்கியிருந்த அனைவரது முகத்தையும் பார்த்தவரின் பார்வையில் கேள்விகள் விரிந்துகொண்டே போவதை உணர்ந்த வெற்றி, அவரைத் தன் கைப்பிடியிலேயே தங்களது வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

மகன் கூறிய விவரங்களின் முடிவில் ''கடவுளே!'' என அலறிய வைதேகியிடம் ''இந்த விஷயம் வெளிய யாருக்குத் தெரியக்கூடாதும்மா. அபார்ட்மென்ட்ல இருக்கிறவங்க என்றில்லை... நம்ம வீட்டிலேயும் யாருக்கும் தெரியக்கூடாது. அத்தைகிட்ட மட்டும் பக்குவமா சொல்லுங்க. அவங்ககிட்டயும் விஷயம் வெளிய போகவே கூடாது என்று கண்டிப்பா சொல்லுங்கம்மா. பசங்களை... நீங்க ரெண்டு பேரும் பார்த்துக்கோங்க. நானும் அன்புவும் ஆனந்த் வீட்டில இருக்கோம்'' அதிவேகமாய், அதே சமயம் ஆதி அழுத்தமாய், சொல்ல வேண்டிய விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு, ஆனந்தின் வீட்டிற்கு விரைந்தான் வெற்றி.

அங்கே அவன் கண்ட காட்சி - ஓர் தாயின் மனக் குமுறலை வெளிக்காட்டுவதற்கு இரண்டு கண்கள் போதாது... கோடானு கோடி கண்கள் வேண்டும் போலவே என்ற எண்ணத்தை அவனுள் விதைத்தது.

அன்பரசியின் கைகளைப் பிடித்திருந்த சுபத்ரா அதிலேயே முகம் புதைத்து ''உங்களோட திருப்பதிக் வரேன்னு அடம் பிடிச்சான்... அன்பு! அப்போ அனுப்பி வச்சிருந்தா இந்த வேதனை அனுபவிச்சிரு வேண்டாமே?''

''இன்னைக்கும் காலையில கூட... ஸ்கூல்லுக்கு போகமாட்டேன்னு ஒரே அழுகை அழுதான். நான் தா அடிச்சு அனுப்பி வச்சேன்... பாவி! பாவி! என் பி ளையை நானே தொலைச்சுட்டேனே!''

''சிட்டு மாதிரி வீட்டையே சுத்தி வந்தவன்.. அவனில்லாம எனக்கு மூச்சு முட்டுது அன்பு!''

''பணத்தை வாங்கிட்டு பிள்ளையை இப்போவே விடலாம் தானே? ஏன் இப்படி காட்டுமிராண்டித்தன செய்றாங்க...''

''ஆகாஷுக்குப் பசி வந்துட்டா... புரியாத அழுகையு கூடவே வந்திடும். அந்த நேரத்தில் பிடிக்காத சாப் பாடைக் கொடுத்தா... அவ்வளவு தான்! ப்ச்... அவனுக்கு என்ன சாப்பிடக் கொடுத்தாங்களோ?''

''சாப்பிட ஏதாவது கொடுத்திருப்பாங்களா அன்பு?''

''சை... இந்த பரமு அண்ணா! எங்க வீட்டில மூணு வருஷமா வேலை செய்றார் அன்பு... ரொம்ப நம்பிக்கை யானவர்ன்னு நினைச்சேனே... அவரா இப்படி? இந்த உலகத்தில யாரை நம்புறதுன்னே தெரியலையே! ஆகாஷ் தம்பி''ன்னு என்னமா கொஞ்சுவார் தெரியுமா?''

''பணம் எதுவும் தேவைப்பட்டிருந்தா என்னை கேட் டிருக்கலாமே! தாராளமா தூக்கிக் கொடுத்திருப்பேனே... என் பிள்ளையைத் தூக்கிட்டுப் போயிட்டானே பாவி!!''



''ஆகாஷ் எனக்கு வேணும்...அன்பு! என் பிள்ளை எனக்கு வேணும்! கடவுளே... அவனுக்கு எந்த தீங்கும் வரவிடாது அவனை என்னிடம் சேர்த்துவிடு... சேர்த்து விடு... சேர்த்துவிடு! அவன் எனக்கு வேணும்.''

என அவள் விடாது புலம்பிக் கொண்டே போக, கேட்டிருந்த அனைவருமே உடைந்து போயினர். அது வரையில், கண்களில் கண்ணீரின் சாரல் அடிக்காம லிருந்த வெற்றியின் கண்களே கலங்கியிருந்தது என்றால் சுபத்ராவின் நிலைக்குச் சற்றும் குறையாமல் ஆகாஷின் மீது பாசம் வைத்திருந்த அன்பரசியின் கண்கள் காவிரிக்கு நிகராய் நீரைப் பொழிந்தன.

## 6



மருமகளின் கண்ணீர் உண்டு பண்ணிய காயத் திலும், பேரனின் மீது கொண்ட பாசத்திலும் கரைந்து போன பெரியவர்கள் இருவரும் பேரனைக் காப்பதற்குத் தங்களின் முயற்சியாக கடவுளிட.ம் சரண் புகுந்தனர்.

''கவலைப்படாதே மா, நம்ம கும்பிடும் மீனாட்சி அம்மன் நம்மளை கை விட மாட்டா! நம்ம வீட்டு வாரி சைப் பாத்திரமா நம்மிடம் கொண்டு சேர்த்துவிடுவாள்'' - தங்களது வேதனையை மறைத்துக்கொண்டு மரு மகளுக்கு தைரியம் சொன்னவர்கள், தங்கள் வாக்கைப் பலிக்க. வை தாயே என்ற வேண்டுதலுடன் பூஜை யறையில் தஞ்சமடைந்தனர்.

அழுது ஓய்ந்திருந்த சுபத்ராவைத் தன் தோளி... சாய்த்துக்கொண்டு ஆதரவாய் முடி கோதி, முதுகு வரு... தைரியமூட்ட முயன்று கொண்டிருந்தாள் அன்பரசி.

வயதான காலத்தில் மனத்தால் துன்புறும் பெ... றோரையும், ஒரே நாளில் தன் ஜீவன் அனைத்தையு... தொலைத்துவிட்டு நிற்கும் மனைவியையும் காண... சகிக்காமல் வீட்டின் முற்றத்திற்கு நடந்த ஆனந்... வெற்றியையும் கண்ணால் அழைத்தான்.

"வெற்றி! எனக்கு எப்படி கேட்பது என்று தெரி... வில்லை... இரண்டு சிறு குழந்தைகள் இருக்கையி... உங்களோட நிலைமையைப் புரிஞ்சுக்காம கேட்கிறே... என்று நினைக்காதீங்க.. எனத் தயக்கமான குரலில் தொட... கியவனின் கைகளை அழுத்தி, "நீங்க எதுவும் கேட்க... தேவையில்லை, ஆனந்த். ஆகாஷ் எங்களுக்கு பைய... மாதிரி தான். அவன் வீடு வரும் வரை... நாங்க இங்... கேயே இருக்கோம். அன்பு கூட இருந்தா சுபத்ராவிற்கும்... தெம்பாய் இருக்கும்!" என முடித்து விட்டான் வெற்றி.

"தேங்க்ஸ் வெற்றி!" என உளமார நன்றி கூறிய ஆனந்த், சிறு அமைதிக்குப் பின்னர் "ஆகாஷ் கிடைத்து விடுவான் தானே, வெற்றி!" என்றான் ஒரு தந்தையின் பதைப்புடன். கண்களில் நீர் கோர்த்து, குரல் நடுங்கி, தேகம் குளிர்ந்து விட்டிருந்தது. பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கு இருக்கும் அதே பாசம் உயிர் கொடுத்த தந்... தைக்கும் இருப்பதில் என்ன அதிசயம்? தனது உயிரணு... விலிருந்து உயிர் பெற்று, தனக்கு உயிர் கொடுத்த தந்தையின் உருவாய் திகழ்ந்த செல்வமகன் அவனது உயிரானதில் என்ன வியப்பு!



"கண்டிப்பாக" என்ற வெற்றியின் குரலில் சற்றே தெளிந்தாலும்" எனக்கு ரொம்ப பயமா இருக்கே? பத்து லட்சம் பணம் ஒண்ணும் எனக்குப் பெருசில்லை. வெற்றி! ஆனால், அவனோட உயிருக்கு எந்த ஆபத்தும் வராமல் இருக்கணுமே... தினமும் பேப்பர்ல எத்தனை நியூஸ் படிக்கிறோம்.. குழந்தைகளைக் கடத்தி, என்னவோ செய்றாங்களே! என் பிள்ளை அதையெல்லாம் எப்படி தாங்குவான்..." என அவன் பதற, ரியல் எஸ்டேட் துறையில் கொடி கட்டிப் பறக்கும் ஓர் தொழிலதிபனாய் அவனைக் கண்டிருந்த வெற்றிக்கு அவனது பாசம் மெய் சிலிர்க்க வைத்தது.

"பாசிடிவ்வாகவே நினைக்கலாம் ஆனந்த். ஆகாஷ் நல்லபடியா திரும்பி வந்திடுவான்..." என அவனது தோள்களில் ஆதரவாய் தட்டிய வெற்றி, ஏதோ நினைவு வந்தவன் போல் "பரமுவின் குடும்பத்தாரிடம் விசாரிக்கலாமே ஆனந்த்?" என்றான் பரபரப்பாக.

"ப்ச். அவனோட அப்பா - அம்மா மதுரை பக்கம் சோழவந்தான்ல இருக்கிறதா சொன்னான், வெற்றி. இங்க தாம்பரத்தில பசங்களோட ரூம் எடுத்துத் தங்கியிருப்பா சொன்னான். ரெண்டு அட்ரஸிலும் ஆட்களை விட்டு விசாரிக்கச் சொல்லிட்டேன். வெற்றி. ஊரில் இருக்க அவனோட அப்பா - அம்மாக்கு விவரம் ஏதும் தெரியலை... ஒரு வேளை அவங்களுக்கு அவன் தொடர்பு கொள்ளலாம் என்பதால் அங்கேயே ஒரு ஆளை இருக்கச் சொல்லியிருக்கேன்... இங்க அவன் ரூம் பூட்டியிருக்காம்" என நீளமாய் விவரம் சொன்னான் ஆனந்த்.

அதற்கு மேல் வழியேதும் தெரியாமல், இருவரு மௌனத்தில் கழித்துக் கொண்டிருக்க, ''ஆனந் வீட்டில் காலர் ஐ.டி. இருக்குத்தானே? அவன் போ பண்ணின நம்பர் வந்திருக்கும் இல்லையா? அ கொடுங்க'' என்றான் வெற்றி.

''இதோ இருக்கு வெற்றி'' எனத் தன் கைப்பேசியில் ஏற்றியிருந்த எண்ணை வெற்றியிடம் கொடுத்தவ னுக்கும் மனதினுள் யோசனை ஓடியது. ''இந்த நம்பர். ஏர்செல் நம்பர் மாதிரி இருக்கே?'' என வாய் விட்டே சொன்ன வெற்றி, தன்னுடன் படித்த நண்பன் ஒருவ னுக்கு அழைத்தான். இரவு நேரத்தில் அழைப்பதற்காக மன்னிப்பு கேட்டவன், அவனது மைத்துனன் ஒருவன் ஏர்செல் நிறுவனத்தில் வேலை செய்வதை உறுதி செய்து கொண்டு, அவனது எண்ணை வாங்கினான்.

அடுத்த நொடி, வெற்றியின் கைப்பேசியில் அந்த எண்கள் அழுத்தப்பட, பெரும் தூக்கத்திலிருந்த அந்த நபர் உச்சக்கட்ட எரிச்சலுடன் போனை எடுத்ததும், ''என்னை தயவு செய்து மன்னித்துவிடுங்கள். மிஸ்டர். பிரபு, ஓர் உயிர் சம்மந்தப்பட்ட விஷயம். அதனால தான்'' எனத் தணிந்து போனான் வெற்றிவேந்தன்.

''பரவாயில்லை சொல்லுங்க'' என அவர் சமநிலைக்கு வந்ததும், ஆகாஷின் கடத்தல் பற்றி சுருக்கமாய் விவரம் கூறியவன், ஆனந்த் கொடுத்த எண்ணைக் கொடுத்து, அந்த எண்ணின் விவரங்களைக் கேட்டான்.

ஒரு சிறுவனின் உயிர் விஷயம் என்றதும், அவரும் துரிதமாய் செயல்பட்டார். ''நீங்கள் கேட்கும் விவரம் என் கையில் துரிதமம் இல்லை, டாக்டர். எனக்கு ஒரு மணி



நேரம் டைம் கொடுங்கள். ஹெட் ஆபீஸ்ல விவரம் கேட்டுச் சொல்ல முயற்சி செய்றேன்'' என நம்பிக்கை கொடுத்து அழைப்பை வைத்தார். ஆனால் அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற முடியாமல் ''சாரி டாக்டர். காலையில் தான் முழு விவரம் தெரியும் போல. எண்ணை வைத்துப் பார்த்தால் செம்பாக்கம் கிழக்கு தாம்பரம் டவரில் பதிவாகியிருப்பது தெரிகிறது. கால் ட்ரேஸ் செய்ததில் தாம்பரம் பகுதியிலிருந்து தான் வருதுன்னு உறுதியா சொல்ல முடியுது. துல்லியமான இடம் சொல்ல முடியலை.. ரொம்ப சாரி டாக்டர். நாளைக்குக் காலையில எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முழு விவரம் கேட்டுச் சொல்றேன்'' என்றார் மிகுந்த வருத்தத்துடன்.

''பரவாயில்லை சார். உங்களால முடிஞ்சதை செய்ததற்கு ரொம்ப நன்றி சார். நாளைக்குக் காலையில் உங்களோட அழைப்பை எதிர்பார்த்திட்டு இருப்பேன்'' என்று விட்டு அழைப்பை வைத்தான்.

''பரமு தங்கியிருக்கும் இடமும், அழைப்பு வந்த இடமும் ஒன்றாய் இருக்கிறது ஆனந்த். நீங்க பரமு மேல சந்தேகப்பட்ட போது நான் அவ்வளவா அதை நம்பலை... ஆனா இப்போ பரமு தான் முழு காரணமாய் இருப்பானோ என்று தொண்ணூறு சதவீதம் சந்தேகம் வந்திருக்கிறது'' என்றான் வெற்றி. நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டு.

''சந்தேகமே இல்லாமல் அவன் தான் வெற்றி. ஆகாஷ் கிடைத்ததும்... அவனுக்கு நான் யாருன்னு காட்டுறேன். பொறுக்கி நாய்... கை நீட்டி சம்பளம் வாங்கின

வைக்க என்னவொரு
இருக்கணும்? பொறுக்கி...'' எனப் பல்லைக்
அவன் கர்ஜிக்க, ''ரிலாக்ஸ் ஆனந்த்'' என்ற வெற்றி
அதே கோபம் தான் உள்ளே எரிந்தது.

அவர்களது கோபத்தை மேலும் அதிகப்படுத்த
வீட்டின் தொலைப்பேசி ஓங்கி அடிக்கவும், ஆ
உள்ளே ஓடினான்.

ஏற்கனவே கண்ணீரில் நனைந்திருந்த சு
திடுக்கிடலுடன் நிமிர்ந்து பார்க்கையிலேயே, அழை
எடுத்துவிட்ட ஆனந்த் ''நான்... தான் நீ கே
பணத்தைத் தரதா சொல்லிட்டேனே? அப்புறம் எ
குழந்தையை தரதில் தாமதம் செய்றே? இப்போ
பணம் எடுத்திட்டு வரேன்... பிள்ளையைத் தந்துவி
என்றான் தவிப்புடன்.

அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ, ''பிள்
உன்னிடமிருக்கும் பட்சத்தில் எதுக்கு இவ்வ
தாமதிக்கிறாய்? ஒரு வேளை... ஒரு வேளை... அ
உன்னிடம் இல்லையா? அவனைப் பேசச் சொல்
ப்ளீஸ்... ஆகாஷிடம் போனைக் கொடு'' எனப் பு
விட்டான் ஆனந்த்.

''அமைதியாகப் பேசு ஆனந்த்!'' என வெற்றி இங்
கூறிக்கொண்டிருக்கும் போதே ''ஆகாஷ் கண்ணா!
என்றான் ஆனந்த் தழுதழுத்த குரலில்.

அவனது அழைப்பு கேட்ட மறுநொடி, தொலை
பேசிக் கருவி சுபத்ராவின் கைகளில் இடம் பெயர்
திருந்தது. ''அஷு... அஷு கண்ணா! அம்மா பேசுறேன்
ராஜா! எப்படி இருக்கேமா? சாப்பிட்டியா?'' என
கண்ணீரை உள்ளுக்கு இழுத்தபடி பரபரத்தாள் சுபத்ரா.



சில வினாடி அமைதிக்குப் பின்னர் ''அழக்கூடாது ராஜா! அப்பா சீக்கிரமே வந்து அஷுவைக் கூட்டிட்டு வந்திடுவாங்க... என் கண்ணனுக்கு அவங்க சாப்பிட எதுவும் தரலையா? அச்சோ... கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ ராஜா... வீட்டுக்கு வந்ததும் நல்லா சாப்பிடலாம்'' என்ற சுபத்ராவால் அழுகையை அடக்க முடியவில்லை.

அதற்குள் அந்தப் பக்கம் அழைப்பு துண்டிக்கப்பட்டுவிட, ''ஹலோ, ஹலோ'' என சுபத்ரா அலறியது அன்பரசியை மட்டுமல்லாது அனைவரையும் தகர்த்தியது.

அதற்கும் மேலாய் ஆவேசமாய் எழுந்த சுபத்ரா, கணவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு ''பிள்ளைக்குச் சாப்பிடக் கூட எதுவும் கொடுக்கலையாம்... நீங்க இந்தப் பணத்தை வச்சிக்கிட்டு என்ன செய்யப் போறீங்க? சீக்கிரம் கொடுத்துச் சீக்கிரமே அவனைக் கூட்டிட்டு வாங்க... என் பிள்ளையை விட உங்களுக்கு உங்க பணம் தான் முக்கியமா? பணம் தான் முக்கியம் என்றால்... என் நகை எல்லாத்தையும் எடுத்துத் தரேன்... வித்து... அந்தக் காசை அவன் முகத்தில தூக்கி எறியுங்க... என் பிள்ளை எனக்கு வேணும்! இப்பவே வேணும்! வேணும்! வேணும்!'' எனக் கத்தியபோது, ''சுபி, சுபி, ப்ளீஸ்மா. எனக்கும் பணம் முக்கியமில்லைமா உன் முன்னாடி தானே... பணத்தை இப்போவே கொடுக்கிறதா சொன்னேன். அவன் தான்மா லேட் பண்றான்... எனக்கும் ஆகாஷ் பிள்ளை இல்லையா? அவன் உயிருடன் கிடைப்பது எனக்கு முக்கியமில்லையா? புரிஞ்சுக்கோ சுபி! ப்ளீஸ் மா'' என அமைதியாகவே பதில் சொன்னான் அவளது கணவன்.

"பணத்தை நாம கொடுக்கிறதா சொன்னப் பிறகும் எதுக்கு பிள்ளையை அவன் வச்சுக்கிட்டு இருக்கான்? ஐய்யோ ஆகாஷ் பசி பொறுக்க மாட்டானே... இந்த பாவிங்க சாப்பிடக் கூட எதுவும் கொடுக்கலையாம். பயமா இருக்கும்மா... பயமா இருக்கும்மா பிள்ளை அழுறானே, என்னால தாங்க முடியலையே! வயிறெல்லாம் காந்துதே!" எனத் தோய்ந்து அமர்ந்த சுபத்ராவிற்கு மீண்டும் ஒரு முறை மயக்கம் வந்ததில் ஆச்சரியம் எதுமில்லை!

"சை! பணத்தைத் தரேன்னு சொன்னப் பிறகும்... இப்போ வாது எனக்குப் பாதுகாப்பில்லை... நாளை இரவு தான் சௌகரியப்படும் என்று பேத்துகிறான்! சை... சரியான இடியட்!" என ஆனந்தால் கோபம் தான் கொள்ள முடிந்தது.

பிள்ளை இருக்கும் இடமும் தெரியவில்லை, பண மிருந்தும் அவனை மீட்கும் மார்க்கமும் தெரியவில்லை. குற்றவாளி இவனென்று தெரிந்தபோதும் அவனைப் பிடிக்கமுடியவில்லை, அழுதே கரையும் மனைவியை சமாதானம் செய்யமுடியவில்லை, பசியோடிருக்கும் பிள்ளையின் பிணி தீர்க்க முடியவில்லை - பல இல்லைகளுக்கு நடுவே சிக்கப்பட்ட ஆனந்தால் கோபம் மட்டுமே கொள்ள முடிந்தது!!

மயக்கத்திலிருந்த சுபத்ராவிற்கு உறக்கத்திற்கான ஒர் மருந்தை ஊசியால் ஏற்றிய வெற்றி, "ஆனந்திற்கும், அப்பா - அம்மாவிற்கும் குடிக்க ஏதாவது கொண்டுவா, அன்பு! சாயந்திரம் தொட்டு எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டாங்க" என்றான்.



ஆனந்த் மறுக்கத் தொடங்கும் போதே, "நாளை இரவு தான் பிள்ளை கிடைப்பான் என்று முடிவாகிவிட்டது. அவனை மீட்பதற்காகவேனும் நீ தெம்புடன் இருக்க வேண்டாமா?" என அடக்கிவிட்டான்.

அன்பரசி கைகளில் பானத்தோடு வந்ததும் "அப்பா - அம்மாவும் வயசானவங்க ஆனந்த். இந்த சமயத்தில் தூக்கம் வருவது கஷ்டம் தான் என்றாலும்... அவங்களைக் கண் மூடி ஓய்வாய் படுக்கச் சொல்லுப்பா. வீட்டுக்குத் திரும்பி வரும் பேரப்பிள்ளையைக் கொஞ்ச அவங்க ஆரோக்கியத்தோட இருக்க வேண்டாமா? ஹ்ம்ம். போய் அவங்களைப் படுக்கச் சொல்லு" - ஓர் மருத்துவனாய் பெரியவர்களின் நலம் பேணினான்.

அவன் எண்ணியது போலவே "ஆகாஷ் இன்னும் வீடு வந்து சேரலையா? நாங்க எப்படி தூங்குறது? பாட்டி - கதை சொல்லுங்கன்னு என் பேரன் என் கழுத்தைக் கட்டிக்காம நான் எப்படி தூங்குவேன்" என அரற்றினார் ஆகாஷின் செல்லப் பாட்டி, மனைவியைப் போல் வாய் வார்த்தையாகச் சொல்லாமல் கண்களில் கலக்கத்தோடு, உணவையும் உறக்கத்தையும் மறுத்த பெரியவர்களிடம் அரை மணிக்கும் மேலாய் தைரியம் சொன்ன வெற்றி அவர்களை ஓய்வாக படுக்க வைத்துவிட்டே நிமிர்ந்தான்.

அதன் பின்னர் ஒரோர் மணி நேரமும் யுகமாய் செல்ல, இதுவரை ஆகாஷின் பாட்டி குடியிருந்த பூஜையறையில் அன்பரசி குடிபுகுந்தாள். மனம் உருக, பெருமாளிடம் தனது கோரிக்கையை விடாமல் வைத்துக் கொண்டே போக, விடியலும் விண்ணைத் திறந்து கொண்டு வெளிவந்தது.

உறக்கமின்றி கழிந்த இரவின் தொடராய் ...
விடியலும் துக்கத்துடன் கழியப் போகிறதே ...
திகிலுடனும், பதைப்புடனுமே இருந்த அன்பரசி...
"இந்த நாள் இனிய நாளாய் அமையும்'' என்று ...
முகமாய் உணர்த்த முற்பட்ட கடவுள், ஆதவ...
"ம்மா...ம்மா...ம்ழுவா... ம்மா'' எனக் கத்த வைத்த...

திறந்திருக்கும் கதவின் வழியே பறந்து வந்த மழ...
குரல், உறக்கத்திலிருந்த சுபத்ராவை விழிக்க...
செய்துவிட, "அன்பு, நீங்க போய் பசங்களைப் பாருங்...
என அன்பரசியை அங்கிருந்து கிளம்ப வைத்தது.

"இல்லை சுபா! அத்தை, அம்மா ரெண்டு பேரு...
இருக்காங்க. அவங்க பார்த்துப்பாங்க'' என அன்ப...
அவளுடனே இருக்க முற்பட, "எனக்கா பார்க்காத்...
அன்பு! பசங்க... அம்மா அம்மான்னு அழும்போது ந...
அங்க போகலன்னா அவங்களுக்கு ஏமாற்றமா இருக்கு...
அழுகையும் ஜாஸ்தியாகும். இவங்க ரெண்டு பே...
மாவது நல்லபடியா... சந்தோஷமா இருக்கட்டும்...
அழுத்தத்தில் தொடங்கிய சுபத்ராவின் பேச்சு வார்த்தை...
அழுகையில் முடிந்தது. தாயிடமிருந்து மகனி...
பிரிப்பது, சூரியனை வானிடமிருந்...
பிரிப்பது போல் சாத்தியப்படாத காரியமன்றோ!

தொடர்ந்து நடந்த பிரார்த்தனையின் விளைவாக...
சரியாக ஏழரை மணிக்கு ஏர்செல் நிறுவனத்திலிருந்...
அந்த அழைப்பு வந்தது. செம்பாக்கம் நேரு நகர்...
வெற்றி கொடுத்த எண்ணைப் பற்றிய விவரங்களும்...
லிருக்கும் டவரில் முதலில் பதிவாகியிருப்பதும் தெரிய...
வந்தது.



"கிரேட்!'' எனக் கூவிய வெற்றி," ஆனந்த், நீ இங்கேயே இரு. அவங்ககிட்ட இருந்து போன் வந்தா எடுத்துப் பேசு... நா போய் இந்த ஏரியால தேடிப் பார்க்கிறேன்'' என வெளியே விரைந்தான்.

"ஹய்யோ அண்ணா, அவங்க போலீஸுக்குப் போகக் கூடாதுன்னு சொன்னாங்களே'' என சுபத்ரா அவனைத் தடுக்கவும், "நான் போலீஸ் என்று உனக்கு யாரு சொன்னா? எம்.டி. படிச்ச ஒரு டாக்டர் மா... என்னம்மா நம்பிக்கை வரலையா? சர்டிபிகேட் எடுத்துக் காட்டவா?'' என வெற்றி சிரிப்புடன் வினவ, சுபத்ராவின் உதட்டில் சிறு சிரிப்பு வந்தது.

"சரிண்ணா, பார்த்துப் போங்க. ஆகாஷை... ஆகாஷைப் பத்திரமா...'' எனக் கத்தினாள். "கவலைப்படாதேமா. அவனுக்கு ஆபத்து வர மாதிரி இருந்தா... நான் அப்படியே திரும்பி வந்துடுவேன். பணம் கொடுத்தே மீட்டுக்கலாம். நீ.. கவலைப்படாதே!'' எனத் தைரியம் சொன்னவனிடம், "ரொம்ப ரிஸ்க் எடுக்க வேண்டாம். வெற்றி ஏன் சொல்றேன்னா... பையனோட உயிர்...'' என்ற ஆனந்தின் கைகள் நடுங்குவதை, அதை பற்றியிருந்த வெற்றியால் உணர முடிந்தது.

ஒன்றும் சொல்லாது அதை தட்டிக் கொடுத்த வெற்றி, வீட்டு வாசலை அடையும் முன்னா அவனது கைப்பேசியில் அவனது ஆஸ்பத்திரியின் எண்கள் மிளிர்ந்தன. "இந்த நேரத்தில் அழைக்கிறார்களே? என்ன விஷயமாய் இருக்கும்? அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு ஏதும் பிரச்சனையா? அப்படியிருந்தால், தன்னால் இப்போது போக முடியாதே? வேறு யாரையாவது

கேட்டுப் பார்க்கலாம்!'' எனப் பல விதமான யோசனைகளுடன் அதை எடுத்துக் காதில் வைத்தவனிடம், ''சார்... கிழக்குத் தாம்பரம் போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து இன்ஸ்பெக்டர் பேசினார் சார்'' என்றார் இரவு நேரப் பணிப்பெண்.

''இன்ஸ்பெக்டரா? என்ன விஷயம்?'' என்று பரபரத்த வெற்றிக்கு, ''கிழக்குத் தாம்பரம்'' என்ற சொல் பல விபரீத எண்ணங்களை அலையென பாய வைத்தது.

அவனது பரபரப்புக்கு சற்றும் குறையாத பரபரப்புடன் இருந்த அந்தப் பணிப்பெண்ணும் ''ஆகாஷ் என்ற பையன் அவங்க போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கானாம்'' என்றபோது, வெற்றியால் காதில் தேன் வந்து பாய்வதை செய்முறையில் உணர முடிந்தது!

## 7



''ஆகாஷ்'' என்ற பெயரில் உடம்பின் மொத்த ரத்தமும் மனதிற்குள் ஒன்றாய் பாய, ரத்தத்தைப் பிரிக்கும் இதயமே இரத்தத்தின் வரவில் திக்குமுக்காடிப் போனது!

''ஆகாஷ் என்றா சொன்னார்? எந்த ஸ்டேஷன்? சரியான விவரம் கேட்டீங்களா?'' எனத் தொடர்ந்து பத்து நிமிடங்கள் பேசியவன், கைப்பேசியை அணைத்து விட்டு வீட்டினுள் விரைந்தான்.



காபிக் கோப்பையை வெறித்துக் கொண்டு, பால்கனியில் நின்றிருந்த ஆனந்தின் கைப்பிடித்து வெளியே கூட்டிச் சென்றவன் ''ஆகாஷ் கிடைச்சுட்டான்!'' என்றான் மெல்லிய குரலில்.

''என்ன வெற்றி சொல்றீங்க? நீங்க கிளம்பி பத்து நிமிஷம் கூட இருக்காதே... அதுக்குள்ளே எப்படி? வழியிலேயே பார்த்துட்டீங்களா? ஆகாஷ் எங்க?'' என அதி வேக கேள்விக்கணைகளுடன் நலமா பக்கமும் அவனது பார்வை அலைபாய, ஓர் தந்தையின் தவிப்பு அதில் மிளிர்ந்தது.

''ஆகாஷ் இங்கே இல்லை'' என்ற வெற்றி தொடர்ந்து பேசும் முன்னர், ''அப்புறம்? கிடைச்சுட்டான்னு சொன்னீங்களே? அவன் உடம்புக்கு ஏதாவதா? அதனால தான் என்கிட்டே மட்டும் சொன்னீங்களா? ஹய்யோ கடவுளே'' என அவன் அலறத் துவங்க, ''பொறுமை, பொறுமை!'' என அவனது வாய் மீது கைவைத்து அடக்கிய மற்றவன் ''ஆகாஷ் கிழக்குத் தாம்பரம் போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கிறதா தகவல் வந்திருக்கு - நாம ரெண்டு பேருமா அங்க போய் பார்த்திட்டு...ஆகாஷை கூட்டி வரலாம். எல்லாருக்கும் விஷயத்தைச் சொல்லி... ஒரு வேளை... நூத்தில ஒரு சதவீதமா ஆகாஷ் அங்க இல்லைன்னா மனசு கஷ்டமாகிடும் இல்லையா? அதான் உன்னை மட்டும் கூப்பிட்டேன்'' என விளக்கினான் வெற்றி.

வெற்றியின் வார்த்தைகளில் விரிந்து கொண்டே வந்த ஆனந்தின் முகம், அவனது கடைசி வரியில் கவலையில் தொய்ந்து போனது. பொங்கி வந்த பாலில் விழுந்த குளிர் நீராய் சந்தோசம் வடிந்துவிட ''என்ன

வெற்றி? ஆகாஷ் அங்க இருக்கான்னு ஒரு நம்பி கையைக் கொடுத்திட்டு... இப்போ அது இல்லைன்னு என்று பேசுறீங்க? ஆகாஷ் அங்க இருப்பான் தானே?" என்றான் கவலையுடன்.

''கண்டிப்பா இருப்பான், ஆனந்த். இங்கிருந்து தாம் பரம் முக்கால் மணிநேரம்... போய் பார்த்து தெரிஞ்சிட்டு போறது. அப்படியில்லைன்னா இந்த நாய்களுடன் பேரம் பேசி... பிள்ளையை வாங்கலாம்'' என வெற்றி முடிக்க ''நீங்க சொல்ற நூத்தில் ஒரு சதவீதமா பையன் அங்க இல்லைன்னா... ஏன் போலீஸுக்குப் போன என்று இவனுங்க பையனை ஒன்றும் செய்துவிட மாட்டாங் களே'' என நாலையும் யோசித்து, கலங்கியது அந்த அன்பு கொண்ட நெஞ்சம்.

''நூத்தில தொண்ணூற்றி ஒன்பது சதவீதமாய் ஆகாஷ் அங்கே இருந்தால்...இவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்துவதே வெட்டி வேலை இல்லையா?'' என்றான் வெற்றி அதற்குப் பதிலாய்.

அப்போதும் ஆனந்தின் முகம் தெளியாமல் இருக்கக் கண்டு ''ஹே ஆனந்த், ஒன்று பெருசா...தொண்ணூற்றி ஒன்பது பெருசா என்று என்னை அல்பத்தனமாய் கேள்வி கேட்க வைத்து, அதுக்கு உன் பையனை மாதிரி ஒன்று தான் பெருசுன்னு சின்னப்புள்ளத் தனமா பதில் சொல் லிட்டு இருக்காம... மரியாதையா கிளம்பி வா'' என்றான் வெற்றி மிதமான சிரிப்புடன். அவனது சிரிப்பிற்குக் காரணம் - ஆகாஷ் கிடைத்துவிட்டான் என்ற நம்பிக்கை.

''போலாம் வெற்றி!'' என்ற ஆனந்தின் முகத்தில் தெளிவும் சிரிப்பும் ஒருங்கே வந்து சேர்ந்திருந்தன.



மகனைப் பற்றிய சிறு தகவல் கிடைத்த உற்சாகத் திலும், அங்கே இருப்பது தன் தலைமகனாக இருக்க வேண்டுமே என்ற வேண்டுதலை மறந்துவிட வில்லை ஆனந்த். பதைப்புடன் வண்டியை தாம்பரம் நோக்கி விரட்டிய ஆனந்த், சோழிங்கநல்லூரைத் தாண்டியதும் ''ஹய்யோ! என்னைக் காணாம சுபா தவிச்சுப் போயி ருப்பாளே? கடவுளே! இந்த நேரத்தில் அந்த கடன் காரங்க போன் பண்ணினா... அவ தாங்க மாட்டா... வெற்றி! என்ன ஒரு மடத்தனம் செய்துட்டேன்'' எனத் தலையில் பலமாக அடித்துக்கொண்ட ஆனந்தின் கைகளில் கார் கதகளி ஆடியது.

''ஹே...ஹே பார்த்து... பார்த்து'' எனக் கூவிய வெற்றி, ஸ்டீரிங்கை தன் கைக்குக் கொண்டு வந்து வண்டியை ஓரம் கட்டினான். ''தாம்பரத்திற்குப் போக வேண்டிய ரெண்டு பேரையும் பெட்ரோல் செலவே இல்லாம பரலோகம் கூட்டிட்டுப் போயிருப்பே போலவே'' எனக் கடிந்துகொண்டவன், ''நீ...கார் எடுக்கப் போன நேரத்தில் அன்பரசிக்கு போன் பண்ணி விவரம் சொல்லிட்டேன். சுபாவை அவ பார்த்துப்பா'' என்ற வெற்றி ''தயவு செய்து, நீ இந்தப் பக்கம் வா. நான் வண்டியை ஓட்டு றேன்'' என்றான்.

மறுபேச்சின்றி மறுபுறம் மாறிக்கொண்ட ஆனந்த், கண்மூடி சாய்ந்திருக்க, அவனது நிலை உணர்ந்தவன் போல வெற்றியும் பேச்சின்றியே வண்டியை தாம்பரம் காவல் நிலையம் நோக்கி விட்டான். அரை மணி நேரப் பயணத்தில் அந்த இடத்தை அடைந்தவர்கள், நெஞ்சில் திகிலுடனே உள்ளே நுழைய, அவர்களது காலடி காவல் நிலைய உட்புற வாசலில் பட்ட வினாடி

‘‘அப்ப்ப்ப்பாபாபாபா...’’ என்ற கூவலுடன் ஆனந்திடம் சரணடைந்தான் ஆகாஷ்.

என்ன தான் ஆனந்திற்குத் தைரியமூட்டியிருந்த போதும், வெற்றிக்கும் அந்த ஒரு சதவீதத்தை எண்ணி பெரும் கலக்கமாய் தான் இருந்தது. அவனது கலக்கம் முழுதையும் பறந்தோடச் செய்வது போல், ஆகாஷின் தேன் குரல் தெள்ளமுதாய் காதினில் விழவும் அடங்கியிருந்த பெருமூச்சு நிம்மதியின் சாரலுடன் சந்தோஷமாய் வெளிவந்தது.

‘‘ஆகாஷ்... ஆஷு கண்ணா... அஷு’’ என்றதைத் தவிர ஆனந்தின் வாயிலிருந்து வார்த்தைகள் எதும் வராது போக, பிள்ளையை அணைத்து முத்தமழை பொழிந்து கொண்டிருந்தான் அவன். தந்தை-மகன் இருவரின் அன்பு பிணைப்பிலும், ஓர் பன்னிரெண்டு மணி நேரப் பிரிவு அவர்களிடம் உண்டு பண்ணியிருந்த தாக்கம் வெளிப்பட்ட விதத்திலும் அடைத்துப்போயிருந்த தொண்டையை சரி செய்து கொண்டு, காவற் துறை கண்காணிப்பாளரிடம் சென்றான் வெற்றி.

‘‘ஹலோ சார், நான் வெற்றிவேந்தன். நீங்க காலையில கூப்பிட ‘‘அன்பு மருத்துவமனை’’யின் சீப் டாக்டர்’’ எனத் தன்னை அறிமுகம் செய்து கொண்டவனிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டவர் ‘‘ஆகாஷுக்கு நீங்க என்ன வேண்டும்?’’ என்றார்.

‘‘ஆகாஷோட அங்கிள்...மீனிங் நாங்களும் ஆகாஷ் குடும்பமும் பக்கத்து பக்கத்து வீட்டில இருக்கோம்’’ என வெற்றி பதில் கூறி முடித்ததும், ‘‘உங்க மனைவி தான் - ஆகாஷ் சொல்ற அன்பத்தை. சரியா?’’ என்றார்.



‘‘ஆமா, சார்’’ என்ற வெற்றியுடன் இணைந்துகொண்ட ஆனந்த், தன் கைகளிலிருந்த ஆகாஷின் மேனி நடுங்குவதை உணர்ந்து தன் மடியிலேயே பிள்ளையை அமர்த்திக்கொண்டு, அவனது தலையை தன் நெஞ்சில் சாய்த்துக்கொண்டான்.

பிள்ளையின் சிகையை மெல்ல வருடிக் கொடுத்த ஆனந்தின் கரங்கள், ஓர் பக்தனைப் போய் குவிந்து ‘‘ரொம்ப நன்றி சார்! எங்க வீட்டோட சந்தோஷத்தையே திருப்பிக் கொடுத்திருக்கீங்க’’ என்றான் தடைப்பட்ட குரலில்.

‘‘நன்றி சொல்றது இருக்கட்டும் மிஸ்டர். ஆனந்த். இனி மேலாவது பிள்ளைக்கு சில அடிப்படை விஷயங்களைச் சொல்லிக் கொடுங்க’’ என்றார் இன்ஸ்பெக்டர் கடினமான குரலில்.

‘‘என்ன சார் சொல்றீங்க?’’ என இரு ஆண்களும் துணுக்குற, ‘‘உங்க பையனுக்கு மூணு வயசு இருக்கும் இல்லையா? அம்மா - அப்பா பேர்... அப்பாவோட வேலையிடம்... அவன் படிக்கிற ஸ்கூலோட பேர்... இது தவிர அவனுக்கு வேறெந்த விவரமும் சரியா தெரியலை... உங்க உங்க வீட்டு அட்ரஸ்... வீட்டு போன் நம்பர்...உங்க மொபைல் நம்பர்...வீட்டுப் பக்கத்தில இருக்க லாண்ட்மார்க்...எதுவும் சரியாத் தெரியலை.’’

‘‘அவன் சொன்ன தகவலை வச்சு... அதாவது உங்க ஆபீசின் பெயரை வச்சு உங்க நம்பரை கண்டு பிடிக்க முயற்சி செய்தோம். ஆனா, நாங்க கண்டுபிடிச்ச நம்பர்ல யாருமே போனை எடுக்கலை.’’

‘‘அடுத்த முயற்சியா... அவன் போட்டிருந்த சீருடையை வச்சு ஸ்கூல்லுக்குத் தகவல் சொல்லி...அவங்க

மூலமா உங்களை காண்டாக்ட் பண்ணலாம் என்று நினைச்சிட்டு இருந்தோம்.''

''ஸ்கூல் திறக்க நேரமாகுமே என்ற எண்ணத்தில்... பையன்கிட்ட அவனுக்குப் பிடிச்சது பற்றி பேச்சு கொடுத்திட்டு இருந்தோம்... அப்போ தான் அன்பரசி, அவங்களோட பசங்க என்று பேச்சு போய்...வெற்றி ''அன்பு மருத்துவமனை'' வச்சிருக்க விவரம் கிடைச்சது.''

''ஏதோவொரு வழி கிடைச்ச சந்தோஷத்தில், அன்பு மருத்துவமனை நம்பரைக் கண்டுபிடிச்சு அவங்க கூப்பிட்டா அவங்க உங்களுக்கு விவரம் சொல்லி வரச்சொல்றதா சொன்னாங்க'' என மிக நீளமாய் பேசி முடித்தார், பொறுப்புள்ள அந்தக் கண்காணிப்பாளர்.

''ரொம்ப ரொம்ப நன்றி சார்! எனக்கு வேறென்ன சொல்றதுன்னே தெரியலை...இது மாதிரி ஒரு சம்பவம் நடக்கும்ன்னு நாங்க கனவில் கூட நினைக்கல... அதனால இந்த விவரமெல்லாம் ஆகாஷுக்குத் தெரியப்படுத்தாம விட்டுட்டோம்'' எனத் தங்கள் பக்கத்தின் நியாயத்தை எடுத்துரைக்க முற்பட்டான் ஆனந்த்.

''இல்லை மிஸ்டர். ஆனந்த்! நீங்க நான் சொல்றதை சரியா புரிஞ்சுக்கலை...நான் பசங்க மனசில ''தாங்கள் கடத்தப்பட்டு விடுவோம்'' என்ற பயத்தையோ, ''அட்ரஸ், போன் நம்பர் தெரிஞ்சுவச்சிருப்பது ஒரு கட்டாயம்'' என்ற எண்ணத்தையோ திணிக்கச் சொல்லலை...அப்பா - அம்மா பேர் அவங்களோட வேலை...இதில் தொடங்கி அவன் வளர ஆரம்பிக்கும் போது ஏ.பி.சி.டி, 123 என்று கத்துக்கொடுக்கிற மாதிரி இதெல்லாமும் ஒரு அடிப்படை விஷயம் என்று சொல்றேன். அவனுக்கு இந்த



விவரங்கள் தெரிந்திருக்கும் பட்சத்தில் - கிட்டத்தட்ட ஆறு மணி நேரத்தாமதத்தை தடுத்திருக்கலாம்'' என்றார் அந்த அதிகாரி.

அவர் சொல்வதிலிருந்த உண்மை புரிய, ''புரியுது சார்'' என்றான் ஆனந்த், தங்களது தவறை உணர்ந்து.

''ஆறு மணி நேரமாகவா? ஆகாஷ் எங்கே இருந்தான்... சார்? நீங்க எப்படி அவனைக் கண்டுபிடிச்சீங்க? அவனைக் கடத்தின ஆட்களைப் பிடிச்சாச்சா?'' என்றான் வெற்றி திகைப்பும், வியப்புமாக.

''ஆமா, ஆறு மணி நேரத்திற்கும் மேலாக'' எனத் திருத்திய காவல்துறைக் கண்காணிப்பாளர், ''எங்க ஸ்டேஷன்ல இருந்து மிட்நைட்ல அடிக்கடி ரௌண்ட்ஸ் போறதுண்டு, செம்பாக்கம் - நேரு நகர் இரண்டாவது குறுக்குத் தெருக்குள்ள நுழையும் போது, ஒரு குட்டி உருவம் ஓடி வரது நல்லாவே தெரிஞ்சது. பின்னாடியே குண்டா ஒருத்தன் வந்துட்டு இருந்தான்... எங்க ஜீப்பை பார்த்ததும் ஆகாஷ் அலற ஆரம்பிக்க, அந்த ஆள் அப்படியே ஓடிட்டான். பையன் பசில இருந்தானோ என்னவோ... அப்படியே மயங்கி விழுந்துவிட்டான்'' என்றதோடு ஓர் இடைவெளி விட்டார்.

மேலும் விவரம் கூறும் வேலையைத் தான் தொடராது ''ஆகாஷ்!'' என விளித்தவர், ''நீ அங்கிருந்து எப்படி வந்தே? அங்கிளுக்கும், அப்பாக்கும் சொல்லு... சீர் அப்...லிட்டில் பாய். அழாம விவரம் சொல்லணும்... குட்டி எவ்வளவு சாமர்த்தியமா தப்பிச்சு வந்தான்னு சொல்லுங்க பார்க்கலாம்'' என அவனுக்குத் தெம்பூட்டினார்.

பிள்ளை, தந்தையின் நெஞ்சில் மேலும் தன்னைப் புதைத்துக் கொள்ள, ''இப்போ... நீ பேசலைன்னா அங்கிள் உன்னை வீட்டுக்கு விடமாட்டேன்'' என அவர் மிரட்டவும், தந்தையின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் சிறுவன்.

''சொல்லு ராஜா'' என ஆனந்த் கொஞ்ச, ''அம்மா கிட்ட போன் பேசிட்டு வச்சதும் எனக்கு ஒரே அழையா வந்துச்சுப்பா அப்புறம் பசிச்சுச்சா... அவங்க வெறும் தண்ணி தான்பா தந்தா... நிறைய தண்ணி குடிச்சதும் மூச்சா வந்துச்சு. அந்த அங்கிள்கிட்ட கேட்டா...விட மாட்டேன் சொல்லி அடிச்சாங்கப்பா... மூச்சா அடக்க முடியாம வந்துச்சா... நா அங்கேவே போவேன் சொன்னேனா... அப்புறமா என்னைய வெளிய கூட்டிட்டு வந்தாங்க... அங்க நம்ம வீடு மாதிரி உள்ளேயே டாய்லெட் இல்லை... வெளியவும் இல்லை... சும்மா ரோட்ல போகச் சொன்னாங்க... கண் கட்டை அவுத்து விடாம போகச் சொன்னாங்களா... நா கத்தினதும் கலட்டினாங்க... அப்போ வண்டி வர மாதிரி இருந்துச்சா...அந்த அங்கிள் என் கையைப் பிடிச்சு இழுத்தாங்க... அவங்க கையை அப்படியே கடிச்சிட்டு வேகமா ஓடியே வந்தேனா... இந்த போலீஸ் அங்கிளைப் பார்த்துட்டேன்... ஆனா பார்த்ததும் பயந்தே போய்தேன்ப்பா...'' என்ற பிள்ளையின் முகத்தில் இப்போது பயம் சுத்தமாக இருக்கவில்லை', மாறாக குதூகலமே நிரம்பி வழிந்தது எனலாம் - தப்பிவிட்ட பெருமிதம்!

ஆனால், அதைக் கேட்டிருந்த ஆனந்திற்குக் குலையே நடுங்கிப் போனது! ஆகாஷின் நல்ல நேரம் - அது காவல் துறை வண்டியாக இருந்தது. ஒரு வேலை,



அவர்களின் வாகனமாகவோ, வேறொருவரின் வாகனமாகவோ இருந்திருந்தால் பிள்ளையின் கதி? அதற்கும் மேலாய் - அந்தக் கடத்தல்காரன் கையில் துப்பாக்கியோ கத்தியோ வைத்திருந்து அவனைத் தாக்கியிருந்தால்? நெஞ்சம் உதற, பிள்ளையுடனான அவனது அணைப்பு இறுகிப் போனது!

ஆனந்தையும் அவன் மகனையும் அவர்களது உலகத்தில் விட்டுவிட்டு ''கடத்தல்காரங்க என்ன ஆனாங்க சார்? பிடிச்சுட்டீங்களா?'' என்றான் வெற்றி.

''ஹ்ம்ம் பிடிச்சாச்சு'' என்ற அவரது சொல்லில் ஆனந்த் நிமிர்ந்து பார்க்க, அவனது கண்களில் மிகுந்த கோபம் நிறைந்திருந்தது. அவர் கை காட்டிய திசையில் பார்த்த வெற்றிக்கே, அங்கு நின்றிருந்த பரமுவைக் கண்டதும் உள்ளமும், உடலும் உலைக்கலமாய் கொதித்தது எனும் போது, ஆனந்தின் மனது அணு சக்தி இயந்திரமாய் சீற்றம் கொண்டதில் வியப்பேதும் இருக்கவில்லை.

பிள்ளையைக் கையில் ஏந்திக் கொண்டு, அவனிடம் விரைந்த ஆனந்த் ''பொறுக்கி நாயே! சம்பளம் வாங்கின இடத்திலேயே கை வைக்க உனக்கு எவ்வளவு தைரியம்? உன்னையெல்லாம் நிற்க வச்சு சுடணும்டா! எத்தனை நாள், தான் சாப்பிடும் போது உனக்கும் கொடுத்து சாப்பிட்டிருப்பான் என் பிள்ளை... அவனைப் போய் கடத்தி...கண்ணைக் கட்டி... அடைச்சு வச்சு...சாப்பாடு போடாம....உன்னை'' என ஆனந்த் குதிக்க, ஆகாஷ் மிரண்டு போவது வெற்றியின் கண்களில் பட்டது.

''ஆனந்த், கூல்டௌன். ஆகாஷ் பயப்படறான்... ஆனந்த்... ப்ளீஸ்... அமைதியா இரு!'' என்ற வெற்றி,

மற்றவன் ஏதோ மறுத்துப் பேசத் துவங்கவும் "அவங்
களை நாம அப்படியே விடப்போறதில்லை... ஆனந்த்.
போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுக்கலாம். சட்டம்
அவங்களுக்கு வேண்டிய தண்டனை கொடுக்கும்..."
என்றான் முடிவாய்.

"இப்போதைக்கு ஆகாஷும், அவனுக்காக அங்க
தவமிருக்க சுபாவும் தான் நமக்கு முக்கியம். ஆத்திரப்
படாம, ஆக வேண்டிய வேலையை வேகமாக முடிச்
சிட்டு வீட்டுக்குப் போகலாம்!" என்ற வெற்றியின் வார்த்
தைகளில் மனைவி என்ற சொல், ஆனந்தை உலுக்கிவிட
"ஆமா... சுபா எப்படி இருக்காளோ? சீக்கிரம் போக
லாம்... ஆகாஷைப் பார்த்தாத்தான் அவளுக்கு உயிரே
வரும்...என்னை விட அதிகமா தவிச்சுப்போனவள் அவ
தான்" என மனைவிக்காக உருகியவன், தன் தவிப்பைக்
குறைத்துக் கொண்டு அன்பு கணவனாய் பிள்ளையை
அழைத்துக் கொண்டு வீடு செல்ல முனைந்தான்.

காவல் துறை அதிகாரியின் யோசனைப்படி, கடத்தலுக்
கான புகாரை எழுதிக் கொடுத்துவிட்டு வீடு நோக்கி
விரைந்தான். போகும் வழியில் வீட்டிற்கு அழைத்து, சுருக்
கமாய் விவரம் கூறிய வெற்றிக்கு அவர்களது மகிழ்ச்
சியைக் காண வேண்டும் போல் நெஞ்சம் பரபரத்தது.

வீட்டை அவர்கள் அடையும் முன்னரே, அபார்ட்
மெண்ட் வாசலில் நின்றிருந்த சுபத்ராவை பார்க்கையில்,
ஓர் தாயின் தவிப்பை வெகு சீக்கிரம் முடித்துவைத்த
கடவுளுக்கு நன்றி சொல்லாது இருக்கமுடியவில்லை,
வெற்றியால்.

மனைவியைக் கணித்தவன் போல், அபார்ட்மெண்ட்
வாயிலேயே வண்டியை நிறுத்திய ஆனந்த், ஆகாஷை



வாரி எடுத்து மனைவியிடம் நீட்டினான். "அஷு
கண்ணா!" என்ற சுபத்ராவின் குரல் தழுதழுத்தது என்று
கூறுவது அவளது உணர்ச்சிகளுக்கு ஈடான சொல்லாகாது!

"அம்மா... அம்மா" எனப் பிள்ளையும் அவளிடம்
ஒண்ட, தாயும் மகனும் அவர்களது உலகத்தில் சஞ்
சரித்தவாறே வீடு நோக்கிச் சென்றனர்.

வீட்டிலிருந்த பெரியவர்களுக்கே ஆகாஷின் அரு
காமை கிடைப்பது மிக அரிதாய் போய்விட, அன்பர
சிக்கும் வெற்றிக்கும் அங்கே தாங்கள் அதிகப்படி என்று
தோன்றிவிட, ஆகாஷின் கன்னத்தில் ஓர் முத்தத்துடனும்,
சுபத்ராவிடம் "பையன் தான் வந்துட்டனே? இன்னும்
என்ன அழுகை? நீ அழ... அழு அவன் இன்னும்
மிரண்டு போவான்... அவனுக்கு நடந்ததை உன்னோட
அழுகை ஞாபகப்படுத்திட்டே இருக்கும். கொஞ்சம்
முயற்சிப் பண்ணி... கண்ட்ரோல் பண்ணிட்டு அவனைக்
கவனி" என்ற அறிவுரையுடனும், ஆனந்திடம் "சுபாவைப்
பார்த்துக்கோ!" என்ற பாசச்சொல்லுடனும், பெரியவர்
களிடம் "அது தான் பேரன் வந்துட்டானே? இனிமே
லாவது கொஞ்சம் தூங்கி... ரெஸ்ட் எடுக்கலாமே?"
என்ற அக்கறை வார்த்தைகளுடனும் விடை பெற்றனர்.

"உங்களோட உதவியை..." என ஆனந்த் தொடங்க,
'உயிருக்கும் வரை மறக்க மாட்டீங்க? அவ்வளவு
தானே? அது எங்களுக்கும் தெரியும்...நீங்க போய்...
மனைவியைப் பாருங்க சார்...ரெண்டு நாளா மயங்கி
விழுந்து, விழுந்து தரையை உடைச்சு வச்சிருக்காங்
களாம். கீழ் வீட்டிலிருந்து உத்திரம் ஆடுறதா கம்ப்
ளைண்ட் பண்றாங்க..." என்ற கிண்டலுடன் வீடு வந்து
சேர்ந்தனர் தம்பதியர் இருவரும்.

வீட்டிலிருந்த பெரியவர்கள் இருவரிடம் ஆகாஷ்
கிடைத்துவிட்ட விவரத்தைக் கூறி, ''சமயப்புரத்தம்மனை
நம்பினவங்களுக்குக் கெட்டது நடந்ததா சரித்திரமே
இல்லை! அவளோட கருணையே கருணை!'' என
வைதேகி கன்னத்தில் போட்டுக் கொண்டதை பக்தி
யுடன் பார்த்திருந்த தம்பதியரின் கவனத்தைக் கலைக்க
அவர்களது பிள்ளைச்செல்வங்கள் தயாராக இருந்தனர்.

ஆகாஷ் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் கழிந்த அந்த
தினத்தைத் தொடர்ந்து, தொடர்ச்சியாய் சில அதிர்ச்சிகள்
திருப்புமுனைகள் அணிவகுத்தன!

தூக்கத்தின் ஊடே "ஒரே இருட்டா இருக்கே... கண்
ணைத் திறந்து விடுங்க அங்கிள்... ப்ளீஸ்'', ''அடிக்கா
தீங்க அங்கிள்... வலிக்குதே!", "அம்மா... பசிக்குதுமா...
அம்மாகிட்ட போறணும்... அம்மா வேணும்...", "அப்பா வாங்
கப்பா... எனக்கு இங்க பயமா இருக்கே!'' எனப் பயத்தில்
தனக்கு நடந்த விபரீதத்தை எண்ணிக் கலங்கினான்!

தனியே என்றில்லாமல் பிறரின் துணையுடன் வெளியே
செல்வதை அறவே தவிர்த்தான்! "வேணாம்...என்னைத்
தூக்கிட்டுப் போய்டுவாங்க... வேணாம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்..."
என வீட்டினுள்ளே முடங்கினான்!

இவற்றுக்கு மகுடம் வைத்தார் போல், ஆகாஷ் காய்ச்
சலில் விழுந்தான்!

அவனை எப்படி மீட்பது என்று தெரியாமல், ஆனந்
தும் சுபத்ராவும் கலங்கிப்போயினர்!

சுபத்ராவின் வீட்டில் நடந்த அதிர்ச்சிகளிலிருந்து
க்குடும்பம் மீள வேண்டுமே என்றெண்ணிய வெற்



றிக்குத் தன் அன்பு மனைவியின் மனதில் தோன்றிய
மாற்றத்தைக் கணிக்க முடியாது போனது - அவள் தங்கள்
வீட்டில் நெடுநாளாய் வேலை செய்யும் கண்ணம்
மையை வேலையிலிருந்து நிறுத்தும் வரை!

# 8



ஆகாஷின் கடத்தல் நடந்து ஒரு வாரம் சென்
றிருந்தது. அந்த ஒரு வாரத்தின் தொடக்கத்தில் சிறு
நடுக்கமாய் தொடங்கிய காய்ச்சல், அந்த வாரத்தில்
முடிவில் தொடர் அனலாய் வீச ஆரம்பித்ததில் ஆகாஷ்
மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

ஆனந்த் தன் வேலைகள் அனைத்தையும் விட்டுவிட்டு
வீடே கதியென கிடந்தபோதும், கண்ணீரில் கரைந்த
மனைவியையோ, அனலில் துவண்ட மகனையோ
சற்றும் தேற்ற முடியவில்லை. அடுத்து வந்த இரு தினங்
களும், மருத்துவமனையில் கழிய ஆகாஷின் உடல்
நிலை ஓரளவு தேறியது. ஆனால் மனநிலை தான்
தேறுவதாய் இல்லை! பிள்ளையின் மனதில் அந்தத்
துயர சம்பவம் ஆழமாய் பதிந்து போனதில் பல விரும்
பத்தகாத சம்பவங்கள் நடந்தேறின.

முதலாவதாய் - வீட்டை விட்டு எங்கேயும் வர
மாட்டேன் என்று அழுத பிள்ளை, பள்ளிக்கூடத்திற்கே
போக மாட்டேன் என வீரிட்டு அழுதான். கூடவே
''திரும்ப வரும் போது, பரமு அங்கிள் கண்ணைக்

கட்டிடுவாங்க...என்னை அடிப்பாங்க'' எனப் பயந்து அழுகை வேறு.

அடுத்ததாய் - காரைக் கண்டாலே ''அப்பா... அப்பா...'' என ஆனந்தின் கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டு, அவனது துணையோடு தான் காரில் ஏறு வேன் என்று அடம் செய்தான்.

முக்கியமானதாய் - பிள்ளைக்கு இருட்டைக் கண் டாலே பயம் அப்பிக் கொண்டது! இரவில் அசந்து உறங் குபவன், நடுநிசியில் விழித்து அறையில் வெளிச்சம் குறைவாக இருப்பதை உணர்ந்தால் ''ஹய்யோ இருட்டு! பயமா இருக்கு...' எனத் தவிக்கத் தொடங்கினான்.

எதற்கெல்லாம் எப்படி தீர்வு காண்பது என்று புரியாது போக, சுபத்ராவும் வீட்டுப் பெரியவர்களும் பூஜை யறையை தஞ்சமடைய, ஆனந்தோ மருத்துவரின் ஆலோசனைக்குச் சென்றான். வெற்றியின் நெருங்கிய நண்பரான மனநிலை மருத்துவர் ஒருவரின் ஆலோ சனைப்படி, ஆகாஷிற்கு இடமாற்றம் தேவையென்றும், அதிகப் பாதுகாப்பு அவனைத் தேற்றுவதற்குப் பதிலாக கோழையாக்கிவிடும் என்றும், எப்போதும் போலவே அவனை நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அந்த முடிவின் முதற்படியாக, ஆனந்தின் குடும்பம் அவர்களது சொந்த ஊரான மதுரைக்குத் தற்காலிகமாக இடம் பெயர்ந்தது. ஆகாஷின் மனநிலை மாறும்வரை, ஆனந்த் சென்னைக்கு வந்து போய்க் கொண்டு, தொழி லைக் கவனிப்பது என்றும் முடிவாக, அன்பரசியின் குடும்பத்தினரிடம் மட்டும் விவரத்தை விரிவாகச் சொல்லிவிட்டு, ஊர் போய் சேர்ந்தனர் அனைவரும்.



''ஆகாஷ் சீக்கிரமே பழைய மாதிரி, சிரிப்போடும் சந்தோஷத்துடன் திரும்பி வரது உன்னோட கையில தான் இருக்கு சுபா. அவனை அதிகமாய் பயப்படுத் தாமல், அளவிற்கு அதிகமாய் பாதுக்காக்காமல், அவன் போக்கிலேயே விட்டு அவனை நேர் செய்ங்க. ரொம்ப ரொம்ப பொத்திப்பொத்தி வச்சா புண்ணு பெருசாகுமே ஒழிய குறையாது, சுபா! அதனால் அவனுக்கு நீங்க கொடுக்கும் பாதுகாப்பு இலைமறை காயாக இருக்கணும். கூடவே அவனுக்குக் கொடுக்கிற சுதந்திரம் தைரியம் கலந்ததா இருக்கணும். புரிஞ்சதா? என்னாட இவன்... அட்வைஸ் பண்றானேன்னு நினைக்காதே. நீங்க இங்க இருந்தா நடைமுறையிலேயே செய்து காட்டியிருப்பேன். ஆனா, இப்போ நீங்க ஊருக்குப் போறதால் வாய் வார்த் தையாக சொல்ல வேண்டியிருக்கு'' என சுபத்ராவிற்குத் தேவையான அறிவுரை வழங்கிய வெற்றி,

அஷு கண்ணன் பிக் பாய் தானே? பிக் பாய் எல்லாம் பயப்படலாமா? பிக் பாய்-யே பயப்பட்டா, ஆதி நிலா மாதிரி சோட்டுப் பசங்கெல்லாம் என்ன செய்வாங்க? அஷு தானே அவங்களோட ஹீரோ - ஹீரோ சார் பயந்து அழுறதைப் பார்த்து எல்லாரும் சிரிக்க மாட்டாங்களா? ஹம்ம்? இனிமேல் அழக்கூடாது ராஜா!'' என ஆகாஷின் மனதிலும் அழுவது நல்ல பழக்கமல்ல என்ற எண் ணத்தை விதைத்தான்.

வெற்றியைப் போல் வாய் வார்த்தைகளில் தைரியம் சொல்லாது, சுபத்ராவிடம் ''ஆகாஷைக் கவனமா பார்த் துக்கோ, சுபா! எனக்கு அடிக்கடி போன் பண்ணு!'' என்ற வார்த்தையோடு விடை கொடுத்தவள், ஆகாஷை இறுக அணைத்து, உச்சியில் முத்தமிட்டு, தழும்பிய

கண்களைக் கட்டுப்படுத்தியவாறே பிரியா விடை அளித்தாள்.

ஆகாஷின் குடும்பம் கிளம்புவதற்கு முன்னராகவே வைதேகியும், பார்வதியும் தத்தம் கணவர் மார்களின் வயிற்றைப் பார்க்கவென திருச்சி சென்றுவிட, அன்பரசியின் குடும்பம் மட்டும் தனித்திருந்தது.

அனைவரும் கிளம்பிச் சென்றதும், அசாத்தியமாய் தென்பட்ட அமைதியைக் கிழித்தெறியும் கூர்வாளென ஆதி மற்றும் வெண்ணிலாவின் பேச்சுக்கள் அமைந்தன. அதிலும், தாங்கள் புதிதாய் பழகியிருந்த ''அன்பச்சி'' மற்றும் ''வெட்டிவேந்தன்'' என்ற அழைப்புகளை அவர்கள் விடுவதாய் இல்லை.

காலையில் பிள்ளைகள் நடத்தும் மழலை நாடகத்தில் தன்னைத் தொலைத்திருந்த வெற்றிக்கு, வீட்டு வேலைக்கென காலை ஏழுரை மணிக்கே வீட்டிற்கு வரும் கண்ணம்மையை பற்றிய ஞாபகமே வரவில்லை. அதே போல், இரவு வெகு நேரம் சென்று வீடு திரும்புகையிலும் வீட்டு வேலையாள் பற்றியா எண்ணம் ஓடும்? அதனால், கண்ணம்மையை அன்பரசி வேலையிலிருந்து நீக்கியது வெற்றியின் கண்களில் பட கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆனது!

ஓர் நள்ளிரவு, கடிகாரம் பத்தரையைத் தொட்டப்போது தான் வெற்றியின் கைகள் வாசல் மணியை அழுத்தினான். நடுநிசி என்றாலும் அழைப்பு மணி அடித்த இரண்டாவது நிமிடத்திற்குள் அன்பரசி வீட்டுக் கதவைத் திறந்துவிடுவாள். ஆனால் அன்றோ, வெற்றி அழைப்பு மணியை மூன்று முறைக்கும் மேலாய் அடிக்க



வேண்டியிருந்தது. அப்போதும், அன்பரசி எழுந்துவரும் அரவம் கேளாது போகவே, வீட்டுத் தொலைபேசிக்கு அடித்தான்.

இணைப்பு நின்றுவிடும் தருவாயில் ''ஹ...ஹ... ஹலோ'' என்ற அன்பரசியின் குரல் தூக்கக் கலக்கத்தினூடே கேட்டதும் தான் வெற்றிக்கு மூச்சே வந்தது. ''அன்பு! வெற்றி பேசுறேன் கண்ணம்மா... மெதுவா எழுந்து வந்து கதவுத் திறக்கிறியா?'' என்றான் கனிவாக.

''சாரிப்பா! இதோ வந்துட்டேன்'' என சுதாரித்து எழுந்தவள், வெற்றிக்குக் கதவைத் திறந்துவிட்டக் கையோடு உணவு மேசையின் புறம் திரும்ப எத்தனித்தாள். அவளைத் தடுத்து, தன் கைக்குள் கொண்டு வந்த வெற்றி ''என்னம்மா? தூக்கத்திலிருந்து எழுப்பிட்டேனா? சாரிடா... இன்னைக்கு ஒரு ஆபரேஷன்.. அது முடிஞ்சு அவருக்கு நினைவு வர வரைக்கும் இருக்கவேண்டியதாய் போச்சு... அதான் லேட்!'' எனக் காரணக்காரியம் கூறிய கையோடு, ''நீ போய் தூங்கும்மா. நான் சாப்பாடு எடுத்துப் போட்டு சாப்பிட்டுக்கிறேன்'' என்றான் கனிவும், அக்கறையுமாக.

''ம்ஹ்ம்ம். வேலை பார்த்திட்டு, பசியோடு வந்திருப்பீங்க? அதை விட எனக்குத் தூக்கம் முக்கியமா என்ன? வாங்க சாப்பிடலாம்... உங்களுக்குப் பிடிச்ச மட்டன் குழம்பும், பரோட்டாவும் செய்திருக்கேன். கையை கழுவிட்டு வாங்க'' எனக் கணவனின் கன்னத்தை வருடியவாறே அவனது பிடியிலிருந்து நழுவியவள், இட்டு வைத்திருந்த பரோட்டாக்களை சுட்டெடுக்கப் போனாள்.

முகம் கழுவி, உடை மாற்றி வெளியே வந்த வெற்றி உறங்கிக்கொண்டிருந்த தன் மக்களை ஆசைதீர

கொஞ்சிவிட்டு வெளியே வந்த போது, அன்பரசி உணவு மேசையிலேயே தலை சாய்த்துப் படுத்திருந்தாள்.

“என்னடா உடம்பு சரியில்லையா? சோர்ந்து தெரியுறியே!” என மனைவியின் தலையை வெற்றி மெல்ல வருடவும், “உடம்புக்கு ஒண்ணுமில்லை வெற்றிப்பா. கொஞ்சம் வேலை ஜாஸ்தி... அவ்வளவு தான்!” என்றவள், “பசங்களைக் கொஞ்சி முடிச்சாச்சா? சாப்பிட உட்காருங்க!” என்றாள் கனிவாக.

“பசங்களோட விளையாடியே மூணு நாளாச்சு அன்பு! நாளைக்காவது சீக்கிரம் வீட்டிற்கு வரப் பார்க்கணும்... பசங்களுக்கு என்னை மறந்தே போய்டுமோன்னு பயமா இருக்கு” என அந்த ஆறடி மருத்துவன் இரண்டடி குழந்தைகளுக்காக ஏங்கவும், அன்பரசிக்குப் புன்னகை மலர்ந்தது.

“என்னை மறந்தாலும் மறப்பாங்களே ஒழிய.. உங்களை மறக்கவே மாட்டாங்க... வெட்டிவேந்தன்... வெட்டி வேந்தன்னு ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை உங்க புராணம் தான்! அதுவும் இந்த நிலா கழுதைக்கு உங்க பேரை அவ மட்டும் தான் சொல்லணுமாம்... ஆதி சொன்னா அவனை அடிக்கப் போகுது!” என்றவளுடன் சேர்ந்து சிரித்தவன், “என் பேரை ஒழுங்கா சொல்லிக் கொடுக்கிற ஐடியாவே இல்லை போல...” என மனைவியிடம் புருவம் உயர்த்தினான்.

“என்னால தான் சொல்ல முடியலை... அவங்களாவது சொல்லட்டுமே!” என வருத்தம் போல் அவள் சொல்லி முடிக்கவும், “அடிக்கழுதை!” என்ற வெற்றியின் அதட்டலுடன் இரவு உணவு தொடர்ந்தது.



வெற்றி, மனைவியின் கை மணத்தை ரசித்து ருசித்து உண்டு முடிக்க எடுத்துக்கொண்ட அரை மணி நேரத்திற்குள் அன்பரசி ஓர் பத்து - பதினைந்து கொட்டாவிகளை வெளியேற்றிவிட, “நீ போய் தூங்கு, அன்பு! பாத்திரத்தை ஒழிச்சுப் போட்டுட்டு நான் படுக்க வரேன்” என அவளைப் படுக்கையறைக்குள் அனுப்பி வைத்த வெற்றிக்கு, அப்போதும் வேலையாள் இல்லாததால் தான் மனைவி அதிக வேலை பார்த்துக் களைத்திருக்கிறாள் என்ற எண்ணம் வரவில்லை மாறாக, இன்று பிள்ளைகள் அதிகமாய் ஓடியாடி அவளைப் படுத்தியிருப்பார்கள்; கூடவே இரவு உணவிற்கென அசைவம் எடுத்ததில் வேலைப் பளு கூடியிருக்கும் என்ற எண்ணமே அவனுள் இருந்தது.

அயராது உழைத்த உழைப்புடன் அமிர்தமாய் இருந்த உணவும் சேர்ந்து கொள்ள, வெற்றிக்குக் கண்ணைச் சுழற்றிக் கொண்டு உறக்கம் வந்தது. ஐந்து நிமிட இடைவேளையில் அடித்துப் போட்டார் போல் உறங்கிவிட்ட மனைவியின் கன்னத்தில் இதழ் பதித்துவிட்டுப் படுத்தவன், அடுத்த நாள் காலை வெண்ணிலாவின் “அப்பூவா...” என்ற சுப்ரபாதத்தில் தான் கண் விழித்தான்.

“செல்லக்குட்டி” என அவளை அணைத்தவாறே வெளியே எழுந்து வந்தவனின் கால்களை ஆதி பற்றிக் கொள்ள, இருவரும் தத்தம் முன்னுரிமைகளை அழகாக நிறைவேற்றிக்கொண்டனர்.

தந்தை - மகள் - மகன் என்ற கூட்டணி செவ்வனே நடந்தேறியதன் விளைவாக, மூவருமாய் கட்டிட கட்டங்களுடன் வீடும், ரோடும், பாலமும், பள்ளமுமாய்

ஆனந்தமாய் விளையாடத் துவங்கினர். அவர்களை
கட்டுமானத்திற்குத் தடை விதிக்கும் பொருட்டு வே
நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பறந்து வந்தது!

"ஆதி... நிலா... யாரவது ஒருத்தர் இங்க வாங்க
இந்தப் பாலைக் கொண்டு போய் உம்மாச்சிக்கு வச்சுட்டு
வாங்க..." எனக் கூவினாள் அன்பரசி. காலையில் எழு
ந்தும் காய்ச்சப்படும் முதல் பாலிலிருந்து சிறிதளவை
சாமிக்கு வைத்தப்பின்னரே வீட்டினருக்குக் காபித்
தயாரிப்பது வழக்கம் என்பதால் தான் இந்த உத்தரவு!

ஆனால் தாயின் உத்தரவை கட்டிக்கொண்டிருந்த
கட்டிடங்களின் அஸ்திவாரத்தில் போட்டு மூடிய
சிறார்கள், அதன் மீது அதிவேகமாய் கட்டிடத்தை எழுப்பி
விட அன்பரசியின் கத்தல் அதிகமானது. முடிவில்,
பிள்ளைகளை மட்டுமல்லாது கணவனையும் அசைக்க
முடியாது போக, "அம்மா இவ்வளவு வேலை செய்றாளே...
ஒரு உதவி செய்வோம் என்று இருக்கா? எப்போ பார்த்
தாலும் விளையாட்டு?" என இருபது வயது குழந்தை
களை வைவது போல் அவள் வைத்து கூட, அங்கே
யாரவது காதிலும் விழாது போனது. பூஜையறையில்
கொண்டு போய் பால்சொம்பை வைத்துவிட்டு வந்
தவள், "ஆதிக்குட்டி... அது பிக் ப்ளாக் கண்ணா...குட்டி
ப்ளாக் மேல் வச்சா விழுந்திடும் இல்லையா? இதை
விட குட்டி ப்ளாக் எடுங்க பார்க்கலாம்... ஹான்... ஹான்...
அது தான்... குட் பாய்... நிலா கூட அழகா எடுத்துட்
டாளே! சூப்பர்டா ராஜாத்தி" எனக் கொஞ்சிக் கொண்
டிருந்த கணவனின் முதுகில் ஓரடி வைத்தாள்.

"அம்மா..." என வெற்றி வேண்டுமென்றே அலற,
"அன்பச்சி! அச்சக்கூதாது!" என அதட்டினாள் மகள்.



மகனும் அதையே பின்பற்றவும் "நான் பெத்த
ரெண்டும்... ரெண்டு அகப்பை... ரெண்டுமே கழண்ட
அகப்பை... எதுக்கும் உபயோகப்படாது. வெறும் அதட்
றதை தவிர!" எனப் பிள்ளைகளின் மீது அன்பரசியின்
கோபம் திரும்பியது.

"என்னடி இது? காமெடி பண்ணிட்டு இருக்கே?
ரெண்டு வயசுப் பிள்ளைங்க... உனக்கு என்ன வேலை
பார்க்கணும்ன்னு எதிர்பார்க்கிறே? காய் நறுக்கித் தந்து
சமைத்து இறக்கணுமா?" என வெற்றி கேலி பேச,
"அடேங்கப்பா! உங்க பிள்ளைங்க செஞ்சுட்டாலும்...
நான் என்ன அதையா செய்யச் சொல்றேன். குட்டி குட்டி
வேலை எனக்காக செய்யலாம் இல்லையா? பாத்திரம்
கழுவி... துணி துவைத்து... வீடு பெருக்கி... சமையல்
செய்து...இதுகளைப் பார்த்துகிட்டு...முக்கியமா உங்க
ளோட மல்லுக்கு நின்னு... எத்தனை வேலையிருக்கு...
இதுங்க ரெண்டும் கைக்கு உதவியா...அங்க இங்க
பொருட்களைக் கொண்டு வச்சா என்னவாம்?" என
அவள் கேலி போல் அங்கலாய்க்கவும், கூட சேர்ந்து
சிரித்த வெற்றிக்கு ஏதோ உறுத்தியது.

சில நிமிட யோசனைக்குப் பின்னர், "நீ ஏன் இந்த
வேலையெல்லாம் செய்றே? கண்ணம்மை எங்கே?"
என அவன் கொக்கிப் போட, "என்னங்க இது? தெரியாத
மாதிரி கேட்கிறீங்க? கண்ணம்மையை வேலையை
விட்டு நிறுத்திவிட்டேன்" என அசால்ட்டாய் ஒரு குண்
டைத் தூக்கிப்போட்டு, அவர்கள் கட்டிக் கொண்டிருந்த
கட்டிடத்தை மட்டுமல்லாது வெற்றியின் மூளையையும்
ஓர் நிமிடம் திகைப்பில் நிறுத்தி வைத்தாள்.

ஆரம்பத் திகைப்பிலிருந்து மீண்டவன் ''எப்போ? எதுக்கு நிறுத்தினாய்? என்கிட்டே எப்போ சொன்னே? அவங்களை வேலையை விட்டு நிறுத்தும் அளவுக்கு என்ன பிரச்சனை? என்ன அன்பரசி இது?'' என அடுக்கடுக்காய் கேள்விகளைத் தொடுத்த போது கோபம் துளிர் விடத் துவங்கியிருந்தது.

''ரெண்டு நாள் முன்னாடி...நீங்க கூட நைட் லேட்டா வந்தீங்களே... அடுத்த நாள் காலையில ஜி.ஹெட்ச்ல ஏதோ கேஸ் என்று உங்க பிரண்ட் கூட பேசினீங்களே... அன்னைக்கு சொன்னேனே...நீங்க கூட சரிச்ரின்னு மண்டையை ஆட்டினீங்களே?'' என அன்பரசி அவனிடம் கூறிய விவரத்தை விவரிக்க முற்பட, ''ஹோ...நான் அவங்களுக்கு உடம்பு சரியில்லை... வரமாட்டாங்கன்னு சொன்னதா நினைச்சேன். அன்னைக்கிருந்த டென்ஷன்ல நான் சரியாவே கவனிக்கலை!'' என சுதாரித்தான் வெற்றி.

தொடர்ந்து ''அவங்களை எதுக்கு அன்பு வேலையை விட்டு எடுத்தே? ஏதாவது தப்பு செய்துட்டாங்களா? அவங்க அப்படிப்பட்டவங்க இல்லையே? அப்புறம் என்னம்மா? அவங்க உடம்புக்கு எதுவும் முடியலையா? வேலை பார்க்க முடியாத அளவிற்கு ஏதும் வந்து விட்டதா? எதுக்காக அவங்களைப் போகச் சொன்னே? பசங்களை எப்படி பார்த்துக்கிட்டாங்க...ப்ச்'' என அவன் வருத்தப்பட,

''அவங்க எந்தத் தப்பும் செய்யலை...அவங்க உடம்பிற்கும் எதுவுமில்லை...நல்லாத்தான் இருக்காங்க'' என்றவள் வெற்றியின் முகத்தில் கோபக்கோடுகள் விழவும்,



''என்ன தான் நம்பகமானவங்க என்றாலும்... அவங்க நமக்கு வேண்டாம்! நானே எல்லா வேலையும் பார்த்துப்பேன்... முக்கியமா பசங்களை நான் தான் பார்த்துப்பேன்'' என அழுத்தம் திருத்தமாக மறுத்தாள் அன்பின் திருவுரு!

''அது தான்... ஏன்னு கேட்கிறேன்?'' என்ற வெற்றிக்கு மெலிதாய் இருந்த கோபம் பெரிதாய் மாறத் துவங்கியது!

அன்பரசி பேச வாய் திறப்பதற்குள், வாயில் மணி அடித்துவிட எரிச்சலுடன் சென்று கதவைத் திறந்த வெற்றி திகைத்தான் - ஏனென்றால் அங்கே நின்றிருந்தது கண்ணம்மை!

கலங்கிய கண்களுடன் நின்றிருந்த அப்பெண்மணி, ''அய்யா...பாப்பா என்னைய வேலைக்கு வராதேன்னு சொல்லிப்புடுச்சுங்கயா...ரெண்டு மாசச் சம்பளத்தையும் ஒண்ணா கொடுத்து போகச் சொல்லிப்புடுச்சு... பணத்துக்காகவாய்யா நா இங்க வேலை பார்த்தேன்... உம் முகத்துக்காகவும், பாப்பா முகத்துக்காகவும்...பொறவு இந்தப் பச்சப்புள்ளைங்களோட சிரிப்புக்காகவும் தானே அய்யா வாரேன்! இப்படி படார்ன்னு வேலையை விட்டுப் போகச் சொன்னா...என்னால ரெண்டு நாளா உண்ண முடியல... உறங்க முடியல... புள்ளைங்க நினைப்பா இருக்குது அய்யா... அதுங்க ''ஆயா... ஆயா''ன்னு கொஞ்சுறதைக் கேட்கமா சோறே இறங்குதில்லைங்க... பாப்பாகிட்ட என்னைய வேலைக்கு வச்சுக்கச் சொல்லுங்கய்யா... பணம் கூட வேணாமுங்க... என் ஒத்த மகனும் பொன்ஜாதியே கதின்னு போன பொறவு, எனக்கு ஆதரவுன்னு இருந்தது நீங்க தானுங்களே! நீங்களே வேணாம்ன்னு சொன்னா நா எங்க போவேன்?'' எனக்

கைகளை ஏந்திக்கொண்டு, வார்த்தைகளால் மட்டுமின்றி கண்ணீராலும் கதறிவிட்டாள்.

''என்னம்மா இது? கையைக் கீழ போடுங்க! நீங்க எங்கக்கா மாதிரிமா...உள்ள வாங்க... இனிமேல் நீங்க எப்பவும் போல வேலைக்கு வாங்க... நான் அன்பரசிக் கிட்ட சொல்றேன்'' என வழியை விட்டவன், மறுத்துக் கூறத் துவங்கிய அன்பரசியைக் கையமர்த்தி அடக்கினான்.

உள்ளே வந்த கண்ணம்மையைக் கண்டதும் ''ஆயா..'' ''ஆயா'' எனத் துல்லிய கன்றுகள், ''வா...இங்க வா... உக்கா..இதான் நிலா வீது... இது ஆதி வீது... உக்கு வேணுா? பிக்க்க்க் வீது வேணுமா? இல்ல குத்தி வீது வேணுமா?'' என அவளையும் தங்கள் விளையாட் டிற்குள் இணைத்துக் கொண்டனர்.

''ஆயாக்கு ஒண்ணும் வேணாம்டா கண்ணுங்களா! உங்களோட இருக்கிறது மட்டும் போதும்...'' என இரு வரையும் வாரிக்கொண்டு, உச்சி முகர்ந்த பெரியவள், சற்று நேரம் அவர்களுடன் இருந்துவிட்டு, ''காலையில என்ன செய்யட்டும் பாப்பா? இட்லிக்கு அரைச்ச மாவிருக்கா?'' எனக் கேட்டவாறே உள்ளே சென்றபோது, அவளுக்கு யார் மீதும் வருத்தமோ கோபமோ இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

''இட்லி வேண்டாம் அக்கா. கிச்சடி செய்துடுங்க... தேங்காய் துருவி வச்சிருக்கேன்... சட்னி போட்டுடுங்க'' எனத் தரையைப் பார்த்துக்கொண்டே காலை மெனுவைச் சொன்ன அன்பரசி, வேகமாய் அறைக்குள் நுழைந்து கட்டிலில் தொப்பென அமர்ந்தாள்.

அவளைத் தொடர்ந்து வந்த வெற்றிவேந்தன், கதவைத் தாழிடும் வரை பொறுத்திருந்தவன் ''நான்



அவங்களை வேலையை விட்டு நிறுத்தியிருக்கேன். நீங்க எப்படி என்னை ஒரு வார்த்தை கேட்காம அவங் களை வேலையில சேர்ப்பீங்க?'' என்ற அன்பரசியின் குரலில் கோபத்தை விட வருத்தமே ஓங்கியிருந்தது.

''நீ அவங்களை வேலையை விட்டு நீக்கினதுக்கு ஒரு நல்ல காரணம் சொல்லு!'' என்ற வெற்றிவேந்தனுக்கு அவளிடமிருந்து வரும் காரணங்கள் எதற்குமே வலு இருக்காது என்பது சர்வ நிச்சயமாய்ப்பட்டது.

ஆனால், அவனது மனைவியோ ''நல்ல காரணம் தான் வேணும்... இதோ கேட்டுக்கோங்க! சுபத்ராவும் ஆனந்தும் பட்ட மனவேதனை நமக்கோ, ஆகாஷுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி நம்ம பசங்களுக்கோ வரக்கூடாது என்பதற்காக தான் அவங்களை வேலையிலிருந்து நீக்கினேன்!'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

''அதுக்கும் கண்ணம்மைக்கும் என்ன சம்பந்தம்?'' என்ற கேள்வியைக் கேட்கும் போதே ''பரமு'' என்ற நபர் நினைவிற்கு வந்துவிட, அன்பரசியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை வெகு துல்லியமாய் விளங்கியது வெற்றிக்கு.

''பரமுவும்... கண்ணம்மை அக்காவும் ஒண்ணா? என்ன அன்பா இது? அவன் ஒரு விடலைப் பையன்மா... மன முதிர்ச்சி இல்லாதவன்... கேட்பார் பேச்சைக் கேட்டு கண்டதையும் செஞ்சுட்டான்... அவனைப் போய் கண் ணம்மையோட? தப்பு அன்பரசி!'' என்றான் வெற்றி கண்டிப்புடன்.

''அவனுக்கு ஆகாஷைக் கடத்த ஒரு காரணம் கிடைச்ச மாதிரி... இவங்களுக்கும் ஏதோ ஒரு காரணம் வரலாம் இல்லையா?'' என மடக்கிவிடுவது போல்

அன்பரசி புருவம் உயர்த்தவும், ''அவங்க முகத்தை பார்த்தா அப்படியா தெரியுது? கூடவே அவங்க புள்ளைங்க மேல வச்சிருக்க பாசம்...நம்ம அப்பா - அம்மாவோட பாசத்திற்குக் கொஞ்சமும் குறைச்சலில்லை...'' என்றான் வெற்றி, உறுதியான குரலில்.

''பாமு முகத்தைப் பார்த்தாக்கூடத் தான் குழந்தையைக் கடத்துறவன் மாதிரி இல்லை... ஆனா அவன் செஞ்சான் இல்லையா? நம்ம கண்ணம்மை அக்கா மேல வச்சிருக்க அதே நம்பிக்கையைத் தானே ஆனந்தும் சுபத்ராவும் அவன் மேல வச்சிருந்தாங்க? அவன் மட்டும் செய்யலையா?'' என வாதாடினாள் அன்பரசி.

''உன்கிட்ட பேசி ஜெயிக்க முடியாது ஆனா, அவங்க இங்க தான் வேலை செய்வாங்க... முன்னாடி எப்படியோ அப்படித் தான் பசங்களைப் பார்த்துப்பாங்க...நீ நடுவுல புகுந்து எதுவும் குழப்பாதே! இந்த விஷயத்தைப் பற்றிய பேச்சு நமக்குள்ள இனிமேல் வரக்கூடாது!'' என மென்குரலில் கூறியபோதும், இந்தப் பேச்சும், நீ நடந்து கொண்ட முறையும் எனக்குப் பிடிக்கவில்லை என்ற கண்டனம் அதில் தொனித்தது.

''பசங்களோட பாதுகாப்பு...'' என அவள் தொடங்க, ''ஷ்'' என வாய் மேல் விரல் வைத்துக் காட்டியவன் கதவைத் திறந்து கொண்டு பிள்ளைகளிடம் சென்றுவிட்டான்.

இவையெல்லாம் காலையில் நடந்து முடிந்திருக்க, மாலையில் வெற்றி வீடு திரும்பியபோது, அவனது சாம்ராஜ்யத்தின் வாரிசுகள் இருவரும் பெரிய சோபாவின் ஓரத்தில் ''உம்'' மென அமர்ந்திருந்தனர்.

சீக்கிரம் வீடு திரும்பிவிட்ட சந்தோஷத்தில் துள்ளிக்கொண்டு உள்ளே வந்த வெற்றி,



இருவரது கூம்பிய முகத்தையும் பார்த்துவிட்டு ''என்ன [illegible]?'' என்றான் அவர்கள் முன்னால் மண்டியிட்டு அமர்ந்து.

அடுப்படியின் பக்கம் ஒரு விரல் நீட்டி காட்டியவர்கள் ''ஹிட்லர்...'' என்றனர் மெதுகுரலில்.

ஒன்றும் புரியாமல் விழித்த வெற்றிவேந்தன் ''என்னது ஹிட்லரா? தோ அம்மா எதுவும் புது ஸ்வீட் செய்திருக் காளா? அது ரொம்ப கேவலமா இருந்ததா? அதான் இப் படி முகத்தை வச்சிருக்கீங்களா?'' என்றான் சிரிப்புடன்.

''இல்லை ப்ப்புவா! அன்பச்சி... ஹிட்லர்'' என்றான் ஆதி நீண்டும்.

''ஹிட்லரா?'' என ஐந்து நிமிடங்களுக்கும் மேலாக குழம்பிய வெற்றியின் நெற்றியில் லேசாய் தட்டிய அவனது மகளரசி, ''வெட்டி... அன்பச்சி ஹிட்லர் ஆயித்தா! நீல போவக் கூதாது சொல்லித்தா'' என்றதும் தான், அவர்கள் கூறியது ''ஹிட்லர்'' என்பதே வெற்றிக்குப் புரிந்தது!

# 9



பிள்ளைகளின் மழலையில் வெடித்துச் சிரித்தவன், அதே சந்தோஷத்துடன் ''குட்டீஸ், அம்மாவைப் பார்த்திட்டு வரேன் என்னடா? வந்ததும்... எல்லாரும்மா விளையாடப்போகலாம்! ஓகே?'' எனப் பிள்ளைகளிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, சமையலறையில் நின்றிருந்த அன்பரசியிடம் சென்றான்.

சமையலறையில் சாம்ராஜ்யத்தை செவிலிப்பெண்கள் யாருமின்றி ஆண்டு கொண்டிருந்த அரசியானைப் பின்னிருந்து அணைத்தவன், "என்ன ஹிட்லர் மேடம், பசங்களை விளையாட அனுப்ப மாட்டேன்னு சொல்றீங்களாமே? என்ன விஷயம்?" என்றான் அவளது தோள் வளைவில் உதட்டைப் புதைத்தவாறே.

பதிலேதும் பேசாத அன்பரசியிடமிருந்து மெல்லிதாய் விசும்பும் ஒலி கேட்கவும், "அன்பம்மா! என்னடா!?" என அவளைத் தன் புறம் திருப்பியவன், அவளது மெல்லிய விசும்பலுக்கு மாறாய் ஆறாய் பெருகியிருந்த கண்ணீரைக் கண்டதும் பதைத்தான்.

ஒன்றும் சொல்லாது அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டவன், மெல்ல அவளது முதுகு வருடி, அவளது அழுகையைக் குறைக்க முயன்றான். ஆனால் அவளோ அழுகையை சற்றும் குறைக்காது. தேம்பிக்கொண்டே அவனிடமிருந்து விலகி அடுப்பு மேடையின் புறம் திரும்பினாள் வலுக்கட்டாயமாக அவளைத் தனக்குள் கொண்டு வந்த வெற்றிவேந்தன் "அன்பரசிக்கு என் மேல தான் கோபம் போல? கோபமா இருந்தா சண்டை போடு, அடி, திட்டு, எதுக்கு இப்படி அழறே?" எனத் தன் மேல் தான் கோபமாய் இருக்கிறாள் மனைவி என்பதை உணர்ந்தே கேட்டான்.

"போதும் நான் சண்டை போட்டதெல்லாம்... சண்டை போட்டா... உடனே ஹிட்லர், ராட்சசி, மாரியம்மா அப்படி இப்படின்னு என்னைக் கேலி செய்ய வேண்டியது! பிள்ளைங்களும் உங்களைப் பார்த்து என்னைக் கேலி செய்யக் கத்துக்கிட்டாங்க..." என்ற அன்பரசியின் குரலிலிருந்து கண்டனம் பொய்யான நல்ல என்பதை வெற்றியால் உணர முடிந்தது! அதற்கு அவன் பதில் கூறும் முன்னர், "அவங்க ரெண்டு பேரும் என்னை ஹிட்லர்ன்னு சொல்லும்போது எனக்கு எவ்வளவு கஷ்டமா இருக்குத் தெரியுமா? என்னை ஒரு பெரிய சர்வாதிகாரி ரேஞ்சுக்கு அவங்ககிட்ட காட்டி வச்சிருக்கீங்க! நான் அவங்களை அடக்கியா வச்சிருக்கேன்? அவங்க நல்லதுக்குத் தானே செய்றேன்?" என்ற அன்பரசிக்கு முட்டிக்கொண்டு அழுகை வந்தது.



"ஹே, சும்மா விளையாட்டுக்குடா!" என அவன் அவளை அணைக்க முற்பட,

"எது விளையாட்டு? என்னைப் பத்தி அவங்ககிட்ட ஒரு பயத்தை உண்டு பண்றதா? அவங்க உங்ககிட்ட மட்டும் ஜாலியா இருக்கணும்... என்கிட்டே மட்டும் விலகி விலகிப் போகணுமா? வர வர பசங்க முன்னாடி என்னை ரொம்ப அவமானப்படுத்துறீங்க" என்ற அன்பரசிக்குக் குரல் நடுங்கியது.

"ஏய் சீ லூசு! அவமானம்... அது இதுன்னு லூசு மாதிரி பேசாதேடி! இப்போ என்கிட்டே வரப்போறியா இல்லையா? வான்னு சொல்றேனே?" என்றவனின் புறம் திரும்பாமலே இருந்தவளின் இடுப்பை வளைத்துத் தன் கையில் ஏந்திக் கொண்டவன், சமையலறையை விட்டு வெளியே வந்தான்.

தந்தையின் கைகளில் தாயைக் கண்டதும் "அச்ச்ச்ச்சோ, அம்மாக்கு ஆஅ...ஆவா?" எனப் பிள்ளைகள் பதறியதில், "விடுங்க.... ஹய்யோ விடுங்க வெற்றி! பசங்க இருக்காங்க!" எனத் தவித்த அன்பரசிக்கு அழுகை

குறைந்து, கூச்சமும், கூடவே பிள்ளைகளின் பாசத்தில் சிரிப்பும் வந்து சேர்ந்திருந்தது.

தந்தை தாயை சோபாவில் இறக்கி விட்டதும் அவளருகே வந்தவர்கள். அவளது நெற்றி, கண், மூக்கு, கன்னம், கை, கால் என உடம்பு முழுக்கத் தடவி ''வச்சா(வலிக்குதா)?'' என்றார்கள் கவலையாகவும், கோர்வையாகவும்.

''ஒண்ணுமில்லைடா'' என அன்பரசி பிள்ளைகளின் கன்னம் தடவ, ''நீங்க ஹிட்லர் சொன்னீங்க இல்லை... அதான் அம்மாக்கு ஆ வந்துடுச்சு...அதான் ஊ...ஊ அழுதுட்டா!'' எனப் பட்டென விஷயத்தைப் போட்டு உடைத்தான் வெற்றிவேந்தன்.

''அதெல்லாமில்லை...'' என அன்பரசி மறுக்க ஆரம்பிக்கும்போதே, ''அது பாட் வோர்ட்டா குட்டீஸ்! அது சொன்னா...அம்மா அழுவா!'' என்றான் வெற்றி கண்ணை விரித்து.

''ப்பா... சொன்னா?'' என அவர்கள் வெற்றியை குழப்பமாய் பார்க்க, ''எனக்கும் தான்...எங்கம்மா... அதான் வைதேகி பாட்டி இருக்காங்க இல்ல... அவங்களை ஹிட்லர் சொன்னா பாட்டி அப்பாவை அடிச்சுடுவாங்க! ஆனா, நம்ம அம்மா உங்களை அடிக்காம அவளே அடிச்சிட்டு அழறா? பாவமில்லையாடா? இனிமேல் ஹிட்லர் சொல்லக்கூடாது என்னடா? அது பாட் வோர்ட்! ஓகேவா!'' என்றான் அவன் தெளிவாக.

அப்போதும்...''ப்பா... ம்மாவ ஹிட்லா சொன்னா? (அப்பா அம்மாவை ஹிட்லர் சொன்னியே?) என்ற அர்த்தத்தில் அவர்கள் தந்தையையே குறை சொல்ல,



''அதுக்குத் தான் பாட்டி என்னைத் திட்டிட்டாங்க... அப்படிச் சொன்னா உனக்கு ரொம்ப ரொம்ப அடி கொடுப்பேன் என்று மிரட்டிட்டாங்க. அதனால் அப்பா குட் பாயா மாறி... ஹிட்லர் சொல்லாம விட்டுட்டேன்! அப்பா மாதிரியே குட்டீஸ் ரெண்டு பேரும் குட் குட்டீஸ் ஆகிடுறீங்களா? இல்லை... பாபாபாபாட் குட்டீஸ் - ஆகவே இருக்கீங்களா?'' என அவன் கண்ணை உருட்ட, அவனது சிறார்கள் இருவரும் ''நாவும் குட் ஆயிட்டோம்!'' என வேகவேகமாய் தலையாட்டினர்.

''சமத்துப் பசங்க! அம்மாகிட்ட சாரி கேளுங்க!'' என்றான் வெற்றி அன்பரசியிடம் கை காட்டி.

''பாத்தீ கித்த ப்பா சாரி சோயிச்சா'' என வெண்ணிலா, தலை சரித்து தகப்பனிடம் கொக்கி போட, ''சரியான அடாவடி!'' என்றான் வெற்றி வெளிப்படையாகவே.

''அச்சோ! மறந்துட்டேன்டா! இதோ போடறேன்...'' என அவர்களிடம் தன்மையாய் மன்னிப்பு கேட்டவன், வீட்டு எண்ணிலிருந்து தங்கள் திருச்சி வீட்டு எண்ணை அழுத்திவிட்டு ஸ்பீக்கர் போனில் போட்டான்.

தந்தையின் குரல் கேட்டதும், ''தத்தா...தத்தா'' எனக் கத்திய பிள்ளைகளின் குரலினூடே ''அப்பா, அம்மா கிட்ட போனைக் கொடுங்க! ஒரு முக்கியமான விஷயம்'' என வேகமாகச் சொன்னவனிடம் மறுத்துப் பேசாது, மனைவியிடம் போனைக் கொடுத்தார் வெங்கட்ராமன்.

''என்ன வெற்றி? என்ன முக்கியமான விஷயம்? அன்பு - பசங்க எல்லாரும் எப்படி இருக்காங்க? பசங்க குரல் பக்கத்தில கேட்குதே... போனை அவங்ககிட்ட கொடேன்!'' என வரிசையாய் பேசிக்கொண்டே அழைப்பை எடுத்து வைதேகியிடம்.

''அம்மா, சாரிமா! இனிமேல் நான் உங்களை ''ஹிட்லர்'' ன்னு சொல்லவே மாட்டேன்... ப்ளீஸ்மா, என்னை அடிக்காதீங்கம்மா! ப்ளீஸ்மா! எனக்கு ரொம்ப வலிக்கும்மா ப்ளீஸ்...'' என அவன் ஏகத்துக்கும் கெஞ்ச, வைதேகி தான் திணறிப் போனார்.

''என்னடா லூசு மாதிரி?'' என அவர் ஆரம்பிக்க, ''மன்னிச்சுட்டேன்னு சொல்லுங்க'' என அவன் அவசரப்படுத்த, ''சரி...சரி மன்னிச்சுட்டேன்...ஆனா...'' என அவரை முடிக்கவிடாமல், ''அப்புறம் பேசுறேன்'' என வேகமாய் போனை வைத்துவிட்டான் வெற்றி.

கண்ணை விரித்துப் பார்த்திருந்த பிள்ளைகளிடம் ஓர் வெற்றி பார்வையை செலுத்தி ''அப்பா-என்னோட அம்மாகிட்ட சாரி கேட்டேனே? குட்டீஸ் தான் கேட்கலை!'' என அவன் தன் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ள, பிள்ளைகள் இருவரும் தனித்தனியே ''சாயிமா...'' என்றனர் அன்பரசியின் கன்னத்தைத் தொட்டுத் தடவியவாறே!

கண்களிலிருந்த கண்ணீர் இதுவரை நடந்த உரையாடலிலேயே மறைந்து போயிருந்தமையால், பரவாயில்லையடா குட்டிங்களா!'' எனத் தன் மகவுகளை உச்சி முகர்ந்தாள் தாயார்.

தாயின் கண்களில் சிரிப்பு வந்துவிட்டதை உணர்ந்ததும் ''ம்மா...பீஸ்...கீல போவோமா?'' என்றனர் குழந்தைகள் ஆசையாக.

அதில் சட்டென முகம் மாறிவிட, ''கீழ வேண்டாம். இந்த பில்டிங் செட் வச்சு இங்கேயே விளையாடுங்க!



அம்மா போய்... பால் மம்மம் எடுத்திட்டு வரேன்'' என எழுந்தாள் அன்பரசி.

அரசியாரின் ஆணையில் இளவரசன் சற்றே சிணுங்க, இளவரசியோ ஓங்கி அழத் துவங்கிவிட்டாள். அரசியாரின் ஆணையை விட, இளவல்களின் அழுகையே பெரிதாய் பட்டது அந்த சாம்ராஜ்யத்தின் அரசனுக்கு! ஆதலினால் ''இருங்க வரேன்'' எனப்பிள்ளைகளிடம் சைகை காட்டிவிட்டு, அரசியின் பின்னே சென்றான் அவன்!

''அன்பு என்னடா? அவங்க தான் சாரி கேட்டுட்டாங்களே? இனிமேல் ஹிட்லர்ன்னு சொல்ல மாட்டாங்கடா... கீழ போய் விளையாடட்டும் அன்பா ப்ளீஸ்'' என அவன் கெஞ்ச,

''ம்ஹூம். கீழே போய் விளையாடும் வேலை சுத்தமா கூடாது. எத்தனை விளையாட்டுச் சாமான் இருக்கு... இங்கேயே விளையாடட்டும்!'' என அவள் மறுக்க ''நீயே அவங்க நாலு பேரைப் பார்த்துப் பழகணும்ன்னு சொல்லி... முன்னாடியெல்லாம் அனுப்பி வைப்பியே? இப்போ என்ன? சின்னக் குழந்தைங்க அன்பா... ஒரு விஷயத்தைப் பட்டுன்னு நிறுத்தினா அவங்க மனசு ரொம்பவே பாதிக்கப்படும் கண்ணம்மா!'' என்றான் வெற்றி - மெதுவாகத் தான்!

ஆனால், அன்பரசிக்கு கோபம் அளவிற்கு அதிகமாய் எகிறிவிட்டது! ''எதற்கு எடுத்தாலும் என்னை அடக்கிட்டே இருப்பீங்களே? இன்னைக்குக் காலையிலும்... அப்படித் தான்! இவ என்ன சொல்றது...நாம என்ன கேட்கிறதுன்னு அப்படித் தானே? பிள்ளைங்களோட

நல்லதுக்குன்னு நான் செய்ற எல்லாத்தையும் தப்பு சொல்லிட்டே இருக்கீங்க. இப்படி செய்றதால தான் பசங்களும் என்னை ''ஹிட்லர்''ன்னு சொல்றாங்க... மத்தவங்களும் என்னை மதிக்க மாட்டேங்கிறாங்க'' என்றாள் கோபத்துடன். கோபத்தின் முடிவில் ஆற்றாமை அதிகரித்துவிட, அழுகையில் முடிந்தது அன்பரசியின் குரல்.

அப்போது தான், தான் செய்த தவறு வெற்றிக்கு உரைத்தது! காலையில் கண்ணம்மை விஷயத்தில் சற்று கூடுதலாய் பொறுமையைக் கடைப்பிடித்திருக்கலாமோ? அன்பரசி வேலையை விட்டு நிறுத்திய பெண்மணியை அவளையே வேளையில் சேர்த்துக்கொள்ள வைப்பதை விட்டுவிட்டு, கணவன் என்ற அதிகாரத்தில் சில முடிவுகளை எடுத்துவிட்டோமே என நெஞ்சம் உறுத்தியது.

இதுநாள் வரையில் வீட்டு நிர்வாகத்தில் தலையிடாது அவளது பொறுப்பிலேயே விட்டிருந்தவன், சட்டென அதை தன் கையில் எடுத்துக் கொண்டதும் தான் அவளை அதிகமாய் பாதித்திருக்கிறது என்பது புரிந்தது!

அதை விடவும் மேலாய். அவளது இந்த பாதிப்பிற்கு அடித்தளமாய் அமையும் ''ஆகாஷின் கடத்தல்'' விவகாரத்தினால் உண்டான பயம் அவளை உருக்குலைக்க வைத்திருக்கிறது என்று புரிந்தது! ஏனென்றால், அன்பரசி பிள்ளைகளின் மழலை அழைப்பிற்கு வருத்தம் கொண்டு, அழும் ஆளில்லை என்பது கணவனாய் அவன் உணர்ந்த விஷயமே!



ஆகாஷ் காணாமல் போனதில் பாதிக்கப்பட்ட அவளது மனம் ஓர் கண்ணாடிப் பாத்திரத்திற்கு ஈடாய் மாறிப்போனதும், அதில் ஓர் சிறு கீறல் விழுந்தாலும் எங்கே முற்றிலுமாய் உடைந்துவிடுமோ என்ற பயம் அவளை ஆட்கொண்டு, ஆட்டிப்படைக்கிறது என்பதை வெற்றி உணர்ந்தான்.

இல்லத்தரசியின் அன்பில் இன்புற்ற வேளைகள் நினைவிலாட, அவள் துன்புறும் வேளைகளில் துன்பத்தைக் குறைக்காது, பன்மடங்காய் அதை பெருக விட்டிருக்கிறோமே என்ற குற்ற உணர்வும் சேர்ந்து கொள்ள, அந்த கணமே மனைவியை அமைதிப்படுத்த தன் முயற்சிகளை மேற்கொள்ளத் துவங்கினான்.

முதற்கட்ட வேலையா ''சாரிடா அன்பா! முதல... பசங்க முன்னாடி உன்னை ''ஹிட்லர்''ன்னு சொன்னதற்கு! பிறக்கும் குழந்தைகள் எல்லாருமே நல்லவர்கள் தான்... அவர்கள் நல்லவராவதும், கெட்டவராவதும் பெற்றோரின் வளர்ப்பிலேன்னு சும்மாவா சொன்னாங்க... சின்னப் பசங்க நம்மளைப் பார்த்துத் தான் வளர்வாங்க... அவங்களுக்கு நல்லதும், கெட்டதும் நம்ம நடத்தையில தான் இருக்குங்கிறதை உணராம... அவங்க முன்னாடி அப்படிப் பேசினது தப்பு தான் கண்ணம்மா! இனிமேல் ஜாக்கிரதையா நடந்துக்கிறேன்...'' என்றான் உண்மையான வருத்தத்துடன்.

தன் கோபத்திற்கு ஈடாய் கணவனும் கோபம் கொள்வான் என்று எதிர்பார்த்திருந்த அன்பரசிக்கு வெற்றி சட்டென தணிந்ததுமே மனம் லேசாகிவிட்டது. கூடவே அவன் மன்னிப்பும் கேட்கவே, ''ஹய்யோ!

நான் அப்படிச்சொல்லலை வெற்றிப்பா! நீங்க பார்த்துப் பேசினா வீட்டில ஒரு விலைவிலிருந்தே இருக்காது... நீங்க எப்பவும் போலவே இருங்க...பசங்க உங்களைப் பார்த்து வளர்ந்தாலே நல்ல மனுஷங்களா தான் வருவாங்க!'' என்றாள் அன்பரசி சட்டென இலகுவான குரலில்.

அவளது சமாதானத்தில் சிரித்துவிட்ட வெற்றி வேந்தன், ''இதென்னடி முன்ன போனா முட்டுறே? பின்னே வந்தா உதைக்கிறே? என்னதான் செய்யச் சொல்றே என்ன?'' என்றான் கேலியாக.

''இப்படியே இருங்கன்னு சொல்றன்!'' என அன்பரசியும் கூடச் சேர்ந்து சிரிக்க, ''சரிங்க அம்மணி! கூடவே, பேசுற வார்த்தைகளையும் கட்டுக்குள்ள வச்சுக்கிறேன்...ஓகேவா? இது என்னோட அன்பு பொண்டாட்டிக்காக!'' என மேலும் சிரித்தான் வெற்றிவேந்தன்.

மேலும் நிலைமையை இலகுவாக்க ''நாட் இன் யூஸ் (NOT IN USE) வார்த்தைகளில் ஹிட்லரை தவிர்த்து வேறென்ன வார்த்தைகள் மேடம்? ராட்சஷி? மாரியம்மா? இதெல்லாம் கூடவா?'' என அவன் பவ்யமாய் கேட்க, அவனது எண்ணம் போல் நிலைமை இலகுவாகியது என்பது அன்பரசி வைத்துச் செல்ல அடியில் தெரிந்தது.

''ஹப்பாடா'' என நிம்மதிப் பெருமூச்சு விட்ட வெற்றிவேந்தன் ''அப்போ...பசங்களைக் கூட்டிட்டு கீழே போகமாட்டா அன்பு?'' என்றான் நயமாக.

''ம்ஹூம், இங்கேயே விளையாடட்டும்'' என்ற அன்பரசியின் முகம் சட்டென மாறியதில், தான் செய்த



தவறுகளில் ஒன்றுக்கும் மட்டும் தான் மன்னிப்பு கேட்டிருக்கிறோம் என்பது வெற்றிக்குப் புரிந்தது.

''அன்பு! இங்க வாயேன்'' என அவளை மடியில் இருத்திக்கொண்டவன், ''என்ன?'' என்றவளிடம் ''இன்னொரு சாரி சொல்லணும்!'' என மென்மையாய் கூறியவன், உடனே மன்னிப்பும் கேட்டான்.

''எதுக்காம்?'' என அவனது அன்பிற்குப் பாத்திரமானவள் குழைய, ''கண்ணம்மை அக்கா விஷயம்! இதுநாள் வரை வீட்டு விஷயத்தில் ஒதுங்கியே இருந்த நான்... சட்டுன்னு இதில் உன்னை அடக்கி... அவங்களை வேலைக்குச் சேர்த்தது உனக்கு எவ்வளவு வருத்தமா இருந்திருக்கும்ன்னு எனக்குப் புரியுதுடா... அவங்க கையை யாசகம் கேட்கிற மாதிரி வச்சுட்டு அழுததும் கஷ்டமாகிடுச்சு அன்பா! அதான்!'' என்றான் விளக்கமும் சமாதானமுமாக.

''பரவாயில்லை வெற்றி! எனக்கும் அவங்களைப் பார்க்கப் பாவமா தான் இருந்தது... ஆனா... ஆனா... ஆகாஷை நினைச்சா... பயமா இருக்கு வெற்றிப்பா! சுபா...அந்த பரமுகிட்ட எவ்வளவு நம்பிக்கையா இருந்தா தெரியுமா? இப்படி செய்துட்டானே... நம்பிக்கை... நல்லவங்க... வயசானவங்கன்னு பார்த்தா... பசங்களோட பாதுகாப்புக்கு என்னாகுமோன்னு பயமா இருக்கு'' என்றபோது அன்பரசியின் குரலில் அப்பட்டமாய் பயமிருந்தது.

அதை மதிப்பவன் போல் - ''ஆகாஷ் கடத்தல் விஷயம் நமக்கு ஒரு பாடம் தான் அன்பா...அதை மனசில வச்சுட்டு கூடுதல் ஜாக்கிரதையா இருக்கணுமே

தவிர, தேவையில்லாமல் பயப்படக்கூடாது. இப்படி மனுஷங்க மேல நம்பிக்கை குறைஞ்சுட்டே இருந்தா... நம்ம நாலு பேரும் மட்டுமா ஒரு தனி தீவுல வசிக்க வேண்டியது தான்!'' என அவளுடனே ஒட்டிப் பேசியவன், அவளது செயலில் இருக்கும் தவறை சுட்டிக் காட்ட முயன்றான்.

மனைவியின் முகத்திலிருந்த பயம் லேசாய் குறைவதை உணர்ந்தவன் போல் ''அதுக்காக எல்லாரையும் கண்ணை மூடிக்கிட்டு நம்பவும் வேண்டாம்... அதே மாதிரி ஒரேடியா நம்பாமல் இருக்கவும் வேண்டாம். நம்ம பக்கத்து முயற்சியா பசங்களோட பாதுகாப்பில் கவனமா இருப்போம்'' என்றான் முடிவு போல். அவனது அந்த முடிவு, பல ஆரம்பங்களுக்கு வழி வகுக்கப் போகிறது என்பது அன்பரசியின் அடுத்த பதிலிலிருந்து புரிந்தது.

''அதான் நானும் சொல்றேன்! பசங்களோட பாதுகாப்பு தானே நமக்கு முக்கியம்... அதனால் அவங்க கீழ விளையாடப்போக வேண்டாம். பில்டிங் செட்-டை வச்சு மூணு பேருமா வீட்டுக்குள்ளேயே வீடு கட்டி விளையாடுங்க... எனக்கு கிட்சென்ல ஆயிரத்தெட்டு வேலையிருக்கு'' என்றவாறே அவனிடமிருந்து எழுந்து சென்றவளைப் பார்த்து தலையில் அடித்துக்கொள்வதா இல்லை, என் வார்த்தையிலிருந்தே என்னை மடக்குகிறாளே என்று சிலாகிப்பதா இல்லை, தனது குறி ஒன்றே கோளாய் இருக்கும் இவளைப் பார்த்து சிரிப்பதா என்பதை யோசித்துக் கொண்டிருந்தவனின் கவனத்தை

''ப்பா... ப்பா... கீல போவாம்...'' என்ற வெண்ணிலாவும் அழுகையும், ''அவாதே நிலா...ப்பா கூத்திப்



போவாங்க...நாம பால் வெளாடாம்...அவாதே!'' என ஆதியும் சமாதான முயற்சியும் ஈர்த்தன!

# 10



மருவிதழ் மேனி கொண்ட மகவுகள் இருவரது அழுகையும் நெஞ்சை உருக்க, கூடத்திற்கு வந்த வெற்றி வேந்தன் அவர்கள் இருவரையும் இரு கைகளிலும் தூக்கிக் கொண்டு, சமையலறைக்குச் சென்றான்.

தன் பின்னே அரவம் கேட்டுத் திரும்பிய அன்பரசி, ''செல்லங்களுக்கு என்ன வேணும்? பால் வேணுமா? இல்ல ஆப்பிள் வேணுமா?'' என்றாள் கொஞ்சலாக.

அவளது கொஞ்சலை மதிக்காமல் ''கீல போவாம்...மா'' என வெண்ணிலா அழுத் துவங்க, ஆதியும் ''கீல...கீல'' எனத் தங்கையுடன் சேர்ந்து கொண்டான்.

''எத்தனை தடவை...'' என்ற அன்பரசி மேலே தொடரும் முன்னர் ''ப்ளீஸ் அன்பு! அவங்க ரெண்டு பேரை மட்டும் தனியாவா அனுப்பச் சொல்லலைமா நாமளும் கூடப் போகலாம். நம்ம கையைப் பிடிச்சிட்டு பசங்க ரெண்டு பேரம் சமத்தா வருவாங்க'' என்றான் அவசரமாக.

''ஆமா... உங்க பசங்க ரெண்டு பேரும் அப்படியே என் கையைப் பிடிச்சுக்கிட்டு ஒழுங்கு மரியாதையா

நடந்திடுவாங்களாக்கும்? ரெண்டு மூணு நாளா நானும் தான் பார்க்கிறேன்... என் கையைப் பறிச்சுக்கிட்டு ஓடறதிலேயே குறியா இருக்குங்க ரெண்டும்.... சொல்ற 'பேச்சே கேட்கறதில்லை'' என மனைவி நொடித்தப் போது தான், அவள் ஒன்றும் மூர்க்கத்தனமாய் பிள்ளை களை வெளியே விடமாட்டேன் என்று அடம்பிடிக்க வில்லை என்பது வெற்றிக்குப் புரிந்தது. ஆகாஷின் கடத்தலுக்கு முன்னர் கண்ணம்மையுடன் அனுப்பிய பிள்ளைகளை, அந்த சம்பவத்திற்குப் பின்னர் தானே அழைத்துச் சென்றிருக்கிறாள் என்பதும், துருதுருவென இருக்கும் கன்றுகள் இருவரும் தாயின் கரத்தினுள் தங்காது எப்போதும் போல் துள்ளி விளையாடி இருக் கின்றனர் என்பதும், கட்டுக்குள் அடங்கா கன்றுகள் இருவரையும் தொலைத்துவிடுவோமோ என்ற பயத்தில் தான் அன்பரசி! பிள்ளைகளைக் கீழே அனுப்ப மறுக் கிறாள் என்பதும் புரிந்து போனது!

ஆனால், அன்பரசியின் மறுப்பு புரிந்த அதே அளவு பிள்ளைகளின் விருப்பும் புரிய, இரு பக்கத்தையும் இணைக்கும் பாலமாய் செயல்பட எண்ணி ஓர் திட்டம் தீட்டினான்.

தனது மருத்துவ மூளையைக் காவல் துறை மூளை யாக்கிய தன் செல்வங்களிடம் திரும்பியவன் ''இந்த வாலுங்க செய்ற வேலைக்கு நம்மளை இப்படிக் கெஞ்ச விடுதுங்களே!'' என அவர்களின் அழுத கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு நிமிர்ந்தவன், ''இன்னைக்குத் தான் உன்னோட ஒரு தைரியசாலி... மூணு பேருக்குச் சமமான பலசாலி... துரிதமாய் செயல்படக் கூடியே புத்திசாலி...



அப்புறம்... அப்புறம் ஹம்ம் இவ்வளவு 'சாலி'கள் போதும்... அப்படிப்பட்ட ஓர் பராக்கிரமசாலி இருக் கேனே? பசங்களை மட்டுமில்ல... உன்னையும் சேர்த்து நல்ல்ல்லா பார்த்துக்குவேன்! என்னை நம்பு அன்பா'' என அந்த ''நம்பு''வில் ஒரு அழுத்தம் கொடுத்து.

அவனது பாவனையில் அன்பரசி சிரித்துவிட, தந்தை யின் கண் உருட்டலைப் பார்த்தப் பொடுகள் இருவரும், வாய் கொள்ளாமல் சிரித்தனர்.

இரு தரப்பும் சிரித்ததில் மத்தியஸ்தர் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் வெற்றி ஓர் நிம்மதிப் பெரு மூச்சினை விட்டக் கையுடன், ''அம்மா'' ''எஸ் சொல் லிட்டா குட்டீஸ்! பால், ஃபிரிஸ்பி எல்லாம் எடுங்க ஓடுங்க'' என மூவரையும் அங்கிருந்து நகர்த்த முற்பட் டான்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை - என்ற சான் றோர்மொழிக்கு இணங்க அவனது தோளிலிருந்து அம்பெனா பாய்ந்து பிள்ளைகள் இருவரும் தங்களது அறைக்குள் சிட்டென பறந்திருந்தனர்.

''போலாமா அன்பா?'' என வெற்றி அன்பரசியின் கைப்பற்ற, ''நான் எங்க ''எஸ்'' சொன்னேன்?'' என்றாள் அன்பரசி புருவத்தை உயர்த்தி, சவால் குரலில்!

''ஆஹா... இன்னொரு தடவையா? என்னால முடிய லைடி ராஜாத்தி... தயவு செஞ்சு வந்திடுமா...'' - தொங்கிய முகத்துடனும், குவிந்த கைகளுடனும், சோர்ந்து விழுவது போல் நடித்தான் அவளது மண வாளன்.

"நைட் டின்னர் வேலையிருக்கு வெற்றி" என அவன் தயங்க, "இன்னைக்கு நைட் வெளிய சாப்பிடுக்கலாம். நீ கிளம்பு..." எனத் தூக்காத குறையாக அடுக்களையிலிருந்து அவனை அப்புறப்படுத்த முற்பட்டவனிடம் "வேலையிலிருந்து வந்த உங்களுக்குக் குடிக்க ஒண்ணுமே கொடுக்கலையே? இருங்க காபி போடறேன்... குடிச்சிட்டுப் போலாம்" என்றாள் கடமைமிக்க அவனது இல்லாள்.

"ஹய்யோ! உன்னோட பதி பக்தியில் என்னைக் குளிப்பாட்டினது போதும்... நீ வந்து சேர்ந்தாலே போதும்" எனக் கையெடுத்துக் கும்பிட்டே விட்டான் வெற்றிவேந்தன்.

"உங்களுக்கு வேண்டாம்ன்னா போங்க... நிலாக்குட்டிக்குப் பாலும், தம்பிக்கு கரெட் கூழும் எடுத்துக்கிட்டுத்தான் நான் வருவேன்..." - சடாரென பதி பக்திலிருந்து பிள்ளைப் பாசத்திற்குத் தாவினாள்.

"என்னே உனது பதி பக்தி? பசங்களைக் கண்டதும் பஞ்சென பறக்கும் உம் பக்தியை யாம் மெச்சினோம்" எனக் கேலிப் பேசினாலும், மனைவியுடன் சேர்ந்து பிள்ளைகளின் பானத்தைச் செய்து முடித்தான்.

அடுத்த பத்தாவது நிமிடம் குடும்பமாய் கீழே சென்றவர்கள், அபார்ட்மெண்ட் வளாகத்திலிருந்த ஊஞ்சல், சறுக்கு மரம், சீசா போன்றவற்றில் விளையாடி மகிழ்ந்தனர். குழந்தைகள் பகுதி அமைந்திருந்த இடத்தை விட்டுச் சற்றே பிள்ளைகள் நகர்ந்தாலோ, தங்களது கண் பார்வையிலிருந்து அவர்கள் விலகினாலோ "ஆதி... நிலா... அம்மாகிட்ட வாங்க" எனக் குரல் கொடுத்து



விடுவாள் அன்பரசி; என்னதான் அவர்களின் "ம்மா... இங்க...இங்க" என்ற குரல்கள் கேட்டாலும், இருவரும் அவளின் கண் முன்னே வரும்வரை அன்பரசியின் அலைபாயும் கண்களுக்கு ஓய்வே இருக்காது!

அதைக் கண்டும் காணாதது போலிருந்த வெற்றி, மக்களை விட்டு அங்கே இங்கே நகராது அவர்களுடனே சுற்றினான்.

ஆனால், அவனது பெண்டை நிமிர்த்தும் வகையில் நிலா ஊஞ்சலில் ஆடினால் ஆதி சீசாவிற்குத் தாவியிருந்தான். அவன் அங்கிருப்பதைப் பார்த்துவிட்டு சீசாவிற்கு வரும் நிலாவின் கவனம் சறுக்கு மரத்திற்குச் சென்று விட, அடுத்த வினாடி அவள் அங்கே இருப்பாள். சறுக்கு மரத்திலும், படி வழியே ஏறி சறுக்கு வழி வழியே இறங்காமல், சறுக்கு வழியே ஏறி, சறுக்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளுடன் மோதலில் ஈடுபட்டாள் அவர்களது பெண்ணரசி.

இருவரையும் ஒருவரால் சரிகட்ட முடியாது என்பது புரிய, மூச்சு வாங்கிக் கொண்டு நிமிர்ந்த வெற்றிக்கு, இரு தினங்களாய் மனைவி பட்டிருக்கும் பாடு பரிதாபத்தை உண்டு பண்ணியது எனில், அதற்கு முன்னால் இருவரையும் ஓர் முகச்சுளிப்பு கூட இல்லாமல் கையாண்ட கண்ணம்மையை நினைத்துப் பெருமிதமாய் இருந்தது.

அரை மணி நேரத்திற்கும் மேலானதும், ஆதவனுக்கும் வெண்ணிலாவிற்கு அவர்கள் உண்ட கோட்டும் பாலும் செரித்தனவோ என்னவோ, வெற்றிக்கு அவன் குடித்த அரைக் கப் டீ முழுதாய் ஜீரணமாகியிருந்தது.

“ஆதிக்கண்ணா... வா வீட்டுக்குப் போகலாம்” என அவன் அழைப்பை “கொஞ்சு... வெளாடுதேன்...பிளீஸ்” எனத் தள்ளிப்போட்டான் மைந்தன்.

அவனாவது கெஞ்சல் குரலில் அனுமதி கேட்டானே எனச் சந்தோஷப்படும் அளவிற்கு அமைந்தது நிலாவின் “வவ மாத்தேன்... போ” என்ற தலைச் சிலுப்பல்!

பிள்ளைகளிடம் கொஞ்சல் பேச்சு வார்த்தை நடத்திய வெற்றியை, உதட்டில் பொதிந்த சிரிப்புடன் பார்த்திருந்த அன்பரசிக்குப் பத்து நிமிடங்களுக்கும் பின்னர் தான் அவன் மீது பரிதாபம் தோன்றியது போலும். மெல்ல தொண்டையைக் கனைத்தவள் “ஆதி, நிலா... விளையாடினது போதும், இறங்கி வா...இப்போ நீங்க ரெண்டு பேரும் இறங்கி வரலை...”எனக் கூறிச் சிறு இடைவெளி விட்டு “நாளைக்கு விளையாட அனுப்ப மாட்டேன். வீட்டில தான் இருக்கணும். அதுக்கு ஓகேன்னு நல்லா விளையாடுங்க!” என்றாள் ஏற்ற இறக்கத்துடன்.

அவளது முதல் வார்த்தைகளை அலட்சியப்படுத்திய பிள்ளைகள் இருவரும், அவளது கடைசி வார்த்தையில் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பாதி சறுக்கு மரத்திலிருந்த வெண்ணிலாவும், கம்பிகளில் தொங்கிக் கொண்டிருந்த ஆதியும் அடுத்த விநாடி பெற்றோரின் முன்னர் நின்றிருந்தனர்.

“அடேங்கப்பா! என்னே ஓர் சாதனை!” எனப் பெருமூச்சு விட்ட வெற்றிவேந்தனுக்கு நிஜமாகவே பெரும் நிம்மதியாக இருந்தது எனலாம்!



“இப்படியே ஹோட்டலுக்குப் போலாமா?” என வெற்றி வினவியதற்கு, “இப்படியேவா? உங்க பிள்ளைங்க டிரஸைப் பார்த்தீங்களா? போட்டுவிட்ட பிங்க் கலர்லேயா இருக்கு...அப்படியே புழுதி மண்ணை அப்பிக்கிட்டு...அழகு வடியுது! வீட்டுக்குப் போய் டிரஸ் மாத்திட்டுப் போலாம்” எனப் பதிலளித்த அன்பரசி, தன்னை அண்ணாந்து பார்த்துக் கொண்டு நின்ற பிள்ளைகளிடம் குனிந்து “அப்பா டாட்டா கூட்டிப் போறாங்களாம்! புது டிரஸ் மாத்திக்கிட்டு... கார்ல டி போவோமா?” எனக் கைகளை வளைந்து நெளிந்து அபிநயம் பிடித்தாள்.

“ஹையா! டாட்டா!” என ஒரு சேர குதித்த சிறார்கள் இருவரும் அவர்களைத் தாண்டிக் கொண்டே முன்னே ஓடினர். ஆதி தன் வழி பார்த்துப் போய்க் கொண்டிருக்க, சற்று தூரத்தில் நின்ற நிலாவோ பின்புறம் திரும்பி “நாளைக்கு வெளாட விவ்வியா மா?” என்றாள் தலை சரித்து.

அவள் கேட்ட விதத்தில் சிரிப்பும் பீரிட்டுவிட, மனைவியாள் பதிலுரைப்பதற்குள் “அப்பா... நாளைக்கும் சீக்கிரமா வந்துடுறேன் கண்ணம்மா... அப்பா வந்ததும் எல்லாரும் விளையாடப் போகலாம்! ஓகே?” என்றான் வெற்றி அவரமாக.

அதற்கும் ஒரு “ஹையா ஜாலி” பரிசாய் வர, “ஆதி... நாளைக்கு ப்பா வதுவாங்க...நாம வெளாடாம்...” எனத் தன் தமையனும் பேசிக்கொண்டே மாடியேறினாள் அன்பு மகள்.

அரை மணி நேரத்தில், நிலா லாவெண்டர் வண்ண கவுனிலும், ஆதி வெள்ளை டி-ஷர்ட் மற்றும் ஜீன்ஸ்

பாண்ட்டிலும் ரெடியாகி வர, பெரியவர்களும் அவர்களுக்கு ஏற்ற மாதிரி உடையுடுத்தி வந்தனர்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்திருக்கும் ஓர் பிரபல உணவகத்திற்குள் நுழைந்த வெற்றியின் குடும்பத்தின் மீது பல கண்கள் பட்டு மீண்டதற்குக் காரணம் - குழந்தைகளின் அழகிய உடையும், துருதுரு பார்வையும், யாழினும் இனிய மழலைப் பேச்சுமல்லாமல் வேறேது!

உணவகத்தின் நடுநாயகமாய் இருந்த ஓர் மேசை அவர்களுக்கென ஒதுக்கப்பட, பிள்ளைகளுக்கான பிரத்யேக இருக்கை கொடுக்குமாறு கேட்டாள் அன்பரசி. ஆனால், இருவரும் அதில் இருக்காத போது இருக்கை இருந்து என்ன புண்ணியம்? இருவரையும் அந்த உணவகத்தின் மத்தியிலிருந்த பெரிய பூக்குவளையும், அதனுள் அடுக்கப்பட்டிருந்த வண்ணப் பூக்களும் சற்று நேரம் ஈர்த்தது என்றால் உணவகத்தின் ஓர் மூலையில் வைக்கப்பட்டிருந்த பெரிய மீன் தொட்டி பெரும் உற்சாகத்தைக் கொடுத்தது.

அதனருகே ஓடிச் சென்ற பிள்ளைகளின் பின்னே செல்லத் துடித்த மனைவியின் கைப்பிடித்து நிறுத்திய வெற்றிவேந்தன், கண்களாலேயே அவர்களைத் தொடர்ந்தான்.

கணவனது பிடியின் இறுக்கத்தில் செய்வதறியாது பிள்ளைகளைத் தன் கண்களுக்கு அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அன்பரசியை மேலும் சோதிக்கும் வண்ணம், அவளது குரலில் உதித்த சூர்யச் சந்திரனை, ஓர் இளம் கணவனும் - மனைவியும் அணுகினர்.



மேடிட்ட வயிறுடன் இருந்த அப்பெண், ஆதியின் கன்னம் தொட்டுக் கொஞ்ச. அந்த ஆடவனோ வெண்ணிலவைக் கையில் ஏந்திக்கொண்டான்.

''உன் பேர் என்ன?'' ''உன் பேர் என்ன?'' என இருவரையும் மாறி மாறிக் கேட்டவர்களிடம் ''ஆதி... ஆதவன்'' என ஆதவன் லேசான தயக்கத்துடனும், ''வெண்ணிலா'' என வெண்ணிலா அழுத்தம் திருத்தமாகவும் சொல்ல, ''கியூட்டா இருக்கீங்கடா குட்டீஸ்'' என இருவரின் கன்னத்திலும் முத்தம் வைத்தாள் அந்த கர்ப்பிணி.

அந்த செயலை வெற்றி ஒரு சிரிப்புடன் பார்த்திருக்க, அன்பரசிக்கோ பொறுமை பறந்து கொண்டே இருந்தது. ''விடுங்க வெற்றிப்பா...'' என அவளைப் பல்லைக் கடிக்க வைத்தப்போதும், வெற்றி தனது பிடியைத் தளர்த்துவதாகவும் இல்லை, வழியை விடுவதாகவும் இல்லை. இதற்குத் திட்டமிட்டுத் தான் தன்னை உள்ளே அமரச் செய்தானோ என்று அன்பரசிக்கு எரிச்சலாய் வந்தது.

அவளது எரிச்சலை எல்லை கடக்க வைப்பது போல், அப்பெண் தன் கைப்பையிலிருந்து இரு சாக்லேட் பார்களை எடுத்துப் பிள்ளைகளிடம் நீட்டவும் ''ஆதி... நிலா... இங்க வாங்க!'' எனக் கத்தினாள் அன்பரசி.

தாயின் குரல் கேட்டுத் திரும்பிய பிள்ளைகள், சாக்லேட் பாரை ஒரு முறையும் தாயின் முகத்தை ஒரு முறையும் பார்த்துவிட்டு, தாயின் முகம் நோக்கி ஓடி விட்டனர்.

''ஹே... ஹே... உங்கம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்கடா... குட்டீஸ். இதை வாங்கிக்கோங்கடா'' என

அவர்களின் பின்னாலேயே வந்த அந்த கன்னிகை அன்பரசியின் புறம் திரும்பி "உங்க பசங்க ரெண்டு பேரும் செம கியூட்! எனக்கும் அவங்களை மாதிரியே ஒரு பாப்பா பிறக்கணும்ன்னு ஆசையா இருக்கு" என்றாள் வெள்ளந்தியாக.

"கண்டிப்பா. கடவுள் உங்க ஆசையை நிறைவேத்த நான் வேண்டிக்கிறேன்" என மனதாரக் கூறிய அன்பரசி, "இந்த சாக்லேட்டை அவங்களுக்குக் கொடுக்கவா?" என அப்பெண் கேட்டதற்கு, "மறுக்கிறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. இப்ப உங்ககிட்ட வாங்கினா அவங்க வேற புது மனுஷங்ககிட்டயும் யோசிக்காம வாங்கி சாப்பிட்டு விடுவாங்க... அது அவங்களோட பாதுகாப்பிற்கு நல்லதில்லையே?" என நயமாக மறுத்து விட்டாள்.

அப்பெண்ணின் முகம் வாடிவிட, அருகே நின்றிருந்த அவளது கணவன் "அவங்க சொல்றதும் கரெக்ட் தானே ஜானெட்! தெரியாத ஆளுங்ககிட்ட தின்பண்டம் வாங்கிச் சாப்பிடக் கூடாதுங்கிற நல்ல பழக்கம் அவங்களுக்கு வராம போக... நாம காரணமா இருக்க வேண்டாம்டா" என்றான் சமாதானம் போல.

மனைவியின் கூற்றில் இருந்த உண்மை உரைத்தப் போதும், கர்ப்பிணிப் பெண்ணை வாட வைத்துவிட்டானே என லேசாய் இருந்த வருத்தம், அப்பெண்ணின் கணவன் கூறியதில் தெளிந்துவிட, "நீங்க கொடுக்கிற சாக்லேட்டை விட, உங்களோட விஷேஸ் அவங்களை ரொம்ப நாள் சந்தோஷமா வச்சிருக்கும்" என்றான் வெற்றி, புன்னகையுடன்.



அதில் வரைந்த நங்கை, இருவரின் தலை மீது வைத்து "சந்தோஷ ஆசி உங்களுக்கு நிறைவாக இருக்கும்" என்றதோடு நில்லாமல், கூட்டல் குறி ஒன்றை அவர்களது நெற்றியில் இட்டு நிமிர்ந்தாள்.

அந்த சிறு குடும்பம் உணவகத்தை விட்டு நகரவும், வெற்றியின் குடும்பத்தார் ஆர்டர் பண்ணியிருந்த சூப் வகைகள் வரவும் சரியாக இருந்தது. சூப் வந்ததைக் கூட கவனியாமல், நிலாவும் ஆசியும் ஒருவர் நெற்றியில் மற்றொருவர் எதையோ வரைந்து கொண்டிருந்தார் - அதுவும் மும்முரமாய்.

கூர்ந்து பார்த்ததில், அப்பெண் போட்டுச் சென்ற கூட்டல் குறியை மற்றவர் நெற்றியில் போட முயல்கின்றனர் என்பதை உணர்ந்த அன்பரசி "ஒருத்தர் ஒண்ணு செய்துவிடக் கூடாது... இதுங்களும் அதை செய்தே ஆகணும்" எனச் சலிப்பது போல் பெருமைப் பட்டவாறே, கணவனிடமும் அதைக் காட்டி மகிழ்ந்தாள்.

சில நிமிடங்கள் அதில் லயித்திருந்தவர்கள், சூப் ஆறுவதை உணர்ந்து, பிள்ளைகளுக்கும் கொடுத்து அவர்களும் உண்ண முற்பட்டனர். சூப்பை ஊதி ஊதி, அவர்களுக்குப் புகட்டிய அன்பரசி, "குட்டிக் கண்ணா... இனிமேல் யார் சாக்கி கொடுத்தாலும்... வாங்கக் கூடாது என்னடா? எது வேணும்னாலும் அப்பாவும் அம்மாவும் வாங்கித் தருவோம்" என்றாள் கவனமாக.

ஆதவன் சில நிமிட யோசனைக்குப் பின்னர் "வாங்க கூடாதா? அம்மாவே சாக்கி தவுலியா?"

என்றான் சந்தேகமாக. அன்பரசி வேகமாய் மண்டையை
ஆட்டவும் ''சயிம்மா! வாங்க மாத்தேன்!'' என்றுவிட்
டான். ஆனால் அவனது தங்கையால் தாய் சொல்வதை
அப்படியே ஒப்புக் கொள்ள முடியவில்லை. ''யேன்
வாங்க கூதாது?'' எனத் தலையை பின்னுக்குத் தள்ளிக்
கொண்டு கேள்வி கேட்டவளை அன்பரசி முறைக்க,
''அவங்ககிட்ட சாக்கி வாங்கிச் சாப்பிட்டா... அவங்க
வீட்டில குட்டீஸ் இல்லைன்னு சொல்லி... உன்னை
அவங்களோட கூட்டிட்டுப் போய்டுவாங்க... நிலாக்
குட்டி அப்பாவை விட்டு அவங்களோட போயிடுவியா?
அச்சோ... அப்பாக்கு அழ அழையா வருதே! போகா
தேடா நிலா பேபி! அப்பா பாவமில்லை... என்னோடவே
இருடா...'' என வெற்றிவேந்தன் பயந்தவன் போல்
நடித்தே, பிள்ளைக்கு உணர்த்த முயன்றான்.

அவனது முயற்சி வெற்றி பெற்றதன் அடையாளமாக,
அவனது கழுத்தைக் கட்டிக் கொண்ட பூக்கள் ''நிலா...
ப்புவாக கூதவே இயுப்பேன்! சாக்கி வ்வாங்கவே மாத்
தேன்! அவாதே ப்பா... என் பத்து (பட்டு)ப்பா... த்தங்க
ப்பா... பீஸ் அவாதே! அவாதே!'' எனக் கூறி, அவனது
வராத கண்ணீரை அழுந்த அழுந்த துடைத்ததோடு
நில்லாது, கண்ணில் வேறு முத்தம் வைத்தாள்.

# 11



தனது செல்வங்களின் விளையாட்டையும், தனது
வீட்டரசியின் பயத்தையும் முன்னிறுத்தி, தொடர்ந்த



நாட்களில் சரியாக நாலரை மணிக்கு வீட்டிற்கு வரும்
வெற்றிவேந்தன், ஒரு மணி நேரம் பிள்ளைகளுடன்
விளையாடிக் களைத்துவிட்டு, மீண்டும் தன் தொழிலைப்
பார்க்கச் சென்றான்.

தன் காரியதரிசியிடம் அந்த நேரத்திற்கு நோயாளிகள்
பார்க்க அனுமதியில்லை என்று அறிவித்தவன், நான்கு
மணிக்கெல்லாம் மருத்துவமனையிலிருந்து கிளம்பு
வதை வழக்கமாய் வைத்துக் கொண்டான். நான்கு நாட்
களுக்கும் மேலாய் தங்களது தந்தை சொன்ன நேரத்
திற்கு வந்து, தங்களை விளையாட அழைத்துச் செல்
லவும், பிள்ளைகள் இருவருக்கும் நான்கு மணி - இருபது
நிமிடங்கள் ஆவது எங்கணம் தெரியுமோ, வெற்றியின்
கார் அபார்ட்மென்ட் வளாகத்தினுள் நுழைவதை, தங்கள்
வீட்டு பால்கனி சுவரில் சாய்ந்து வேடிக்கை பார்த்தக்
கையோடு ''ப்பா வந்தாச்சு...ம்மா ப்பா வந்தா...'' எனக்
கை தட்டி மகிழ்ந்தனர்.

இன்றும் அதே போல் சரியாக நான்கு பதினைந்து
வீட்டு வளாகனத்தினுள் நுழைந்த வெற்றியை
''பப்புவா'' எனக் கைத் தட்ட ஆரவார ஒலி எழுப்பி
வரவேற்றனர் மக்கள். இருவரும் மூன்றாம் மாடியில்
குதித்தது கார் பார்க்கிங்கில் வண்டியை நிறுத்திய
வெற்றியை எட்டிய போது எட்டே அடி தூரத்திலிருந்த
வரவேற்பறையிலிருக்கும் அன்பரசிக்கும் எட்டாமலா
போகும்? முகத்தில் படர்ந்த சிரிப்புடன், சமையலறைக்
குள் சென்று கிட்டத்தட்ட ஒரு மாதமாய் நடந்தேறும்
வழக்கத்தின்படி, பிள்ளைகள் இருவருக்கும் அவர்
களுக்குப் பிடித்த பானத்தையும், கணவனுக்கும்
தனக்கும் தேநீரையும் தயாரிக்கத் தொடங்கினாள்.

பால் நன்றாக காய்ந்து நுரை ததும்பும் போது, வெற்றி வீட்டினுள் நுழைந்துவிட, ''தான் காய்ந்துவிட்டேன்' என அறிவுறுத்தும் வண்ணம் பொங்கி வழிந்த பாலைப் போல் பிள்ளைகளின் சந்தோசத்திற்கு ஓர் அளவில்லாது போக, வீட்டினுள் நுழைந்த வெற்றியிடம் தாவினர் பிள்ளைகள்.

காலை ஒன்பது மணிக்குக் கிளம்பிச் செல்லும் தந்தையை ஒன்பதாண்டுகள் காணாதது போல் சந்தோசம் கொண்டவர்கள். கடந்த ஆறு மணி நேரங்களில் தாங்கள் செய்த வேலைகளை (குறும்புகளை) ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு சொல்ல ஆரம்பித்தனர்.

''ப்பா... ஆதி... கார் கட்டினா...பிக்க்க்க் கார்...ம்மா சொல்லித் தந்தாவே'' என பில்டிங் பிளாக் மூலம் வீடு மட்டமல்லாது வாகனங்களையும் உருவாக்கிய தனது சாதனையை பறைசாற்றினான். அந்த வருங்கால பொறியாளன்.

தமையனிடம் திரும்பியிருந்த தந்தையின் முகத்தைப் பிடித்து, தன் புறம் திருப்பிய வெண்ணிலா ''பாத்தீ ஹலோ பேசினா...முத்தா கொத்தா...மாமா பேசினா சக்கி வாங்கித் தாவுவா...ஜாலி...ஜாலி'' எனத் தன் தாய் வழி பாட்டி மற்றும் மாமனிடம் பேசியதைப் பறைசாற்றினாள்.

இரு கைகளிலும் கொஞ்சி விளையாடிய கன்றுகளை மாறி, மாறி கொஞ்சிய வாறே சமையலறைக்குள் வந்து சேர்ந்த வெற்றிவேந்தன், தன் தலையால் அன்பரசியின் கழுத்தில் மோதி ''என்ன சொல்றாங்க... என் மாமி யாரும்... உன் மாமியாரும்?'' என்றான் சிரிப்புக் குரலில்.



''பசங்களோட இரண்டாவது பிறந்தநாள் வருதில்ல... அதுக்கு திருச்சி வரச்சொல்றாங்க...'' என்றாள் அன்பரசியும் அதே குரலில்.

''ஹோ! என் குட்டீஸ்க்குத் திருச்சியில் கேக் காத்திட்ட இருக்கா...சூப்பர்!'' என வெற்றி தன் சம்மதத்தைத் தெரிவிக்க, ''நீங்க தான்... வேலை அது இதுன்னு சொல்லி... திருச்சி போறதை வேண்டாம்ன்னு சொல்வீங்கன்னு நினைச்சேன்...'' என்றாள் அன்பரசி வியப்பாகவே.

''ரெண்டு நாள் திருச்சி போறதில் ஒண்ணும் பிரச்சனையில்லை... இங்க பார்த்தே கொண்டாடினாலும் அந்த ரெண்டு நாள் என் பெண்டை நிமிர்த்திட மாட்டே?'' எனக் கேலி பேசியவன், தான் கூறிய ''இரண்டு நாட்கள்'' சில பல பூகம்பங்களை வெடிக்கச் செய்யப் போகிறது என்பதை உணரவில்லை.

''அப்போ, அத்தைகிட்டையும் அம்மாகிட்டயும் நாம அங்க வரதா சொல்லிடுறேன்'' என்ற அன்பரசியும், தான் நகர்த்தப் போகும் காய்களைப் பற்றிய விபரீதத்தை அவனிடம் பகிரவில்லை!

நால்வரும் தத்தம் பானத்தை அருந்திய வேளையில், ஆதியின் முடியை கோதிவிட்ட அன்பரசி ''ரெண்டு பேருக்கும் முடி கொஞ்சம் வளர்ந்துடுச்சே! இந்த தடவை திருச்சி போகும் போது... காரைக்குடி முத்துமாரியம்மன் கோவில்ல மொட்டை அடிச்சு, தொட்டி கட்டிடலாமா?'' என்றாள் கேள்வியாக.

அதைக் கேட்டிருந்த மூவருள் பெரியவனான வெற்றி வேந்தன் ''காரைக்குடியா? திருச்சியில இருக்க இரண்டு இடுக்கு கோவில் எல்லாம் முடிஞ்சுடுச்சா என்ன?

இருந்தாலும்... எப்படிடி காரைக்குடியைப் பிடிச்சே?'' என்றான் மிகுந்த வியப்புடன். திருச்சிக்கும் சென்னைக்கும் சம்பந்தமே இல்லாத காரைக்குடியில் என்ன பிரார்த்தனை என்பது தான் அவனது வியப்பிற்குக் காரணம்.

''விஜய்க்கு ரெண்டு வயசிருக்கும் போது ஒரு முறை அம்மை போட்டிருக்கும் போது... பக்கத்து வீட்டு ஆச்சி சொல்லி, அத்தை முத்துமாரியம்மனுக்கு வேண்டிக்கிட்டாங்களாம். அது படி, அங்க போய் அவனுக்குத் தொட்டி கட்டிட்டு வந்தாங்களாம். என்கிட்டே ஒரு வாட்டி சொன்னாங்களா... அதான்!'' என விளக்கம் கூறிய அன்பரசி, ''அதெல்லாம் எதுக்கு உங்களுக்கு? காரைக்குடி போறோம்... அவ்வளவு தான்!'' என்றாள் தீர்மானமாய்.

அதற்கு வெற்றியின் சம்மதம் வரும் முன்னர் ''ரெண்டுக்கும்... மூணே மாசத்தில் காடு மாதிரி முடி வளர்ந்து போச்சு... சீக்கிரமே மொட்டை போடணும்'' என்றாள் வெண்ணிலாவின் முகத்தில் வழிந்து, அவளது பால் டம்பளருக்குள் விழக் காத்திருந்த முடிக் கற்றையை ஒதுக்கியவாறே.

''சரி சரி போகலாம்!'' என வெற்றி ஒப்புக்கொள் கையில், தங்கள் கையிலிருந்த பானத்தை ஒரே மடக்கில் குடித்து மடித்த கன்றுகள் இருவரும் தாயிடம் ஓடி வந்தனர்.

தாயின் இரு மருங்கிலும் நின்று கொண்டவர்கள். ஒரு கையைத் தங்கள் தலையிலும், மறு கையைத் தாயின் ஓர் பக்கக் கன்னத்திலும் வைத்து ''மொத்தையா? இந்நா... எதனை மொத்தை ம்மா?'' என்றனர் மிக மிகப் பரிதாபமாய்.



அவர்கள் கேட்ட தினுசில் தன் மனதைத் தொலைத்துவிட்ட அன்பரசி, அவர்கள் இருவரையும் ஒன்றாய் அணைத்துக் கொண்டு ''இன்னும் டென்-னே டென்...மொட்டை தான்டா குட்டீஸ்! மொட்டை போட்டா தான் என் பிள்ளைங்க ரெண்டு பேரும் அழகு சொட்டுவாங்க!'' எனப் பதிலும் சொல்லி, அவர்களைக் குளிர்விக்கவும் முயன்றாள்.

''தென்னா?'' என்ற இருவருக்கும் வியப்பு வராததற்கு காரணம் அவர்களுக்கு 'டென்'' எண் வரிசையில் எப்போது வரும் என்று தெரியாததால் எனும் போது, ''என்னது பத்தா?'' என்ற வெற்றியின் குரலில் வியப்பு 'டென்'' னைப் பற்றி அறிந்ததில் 'டன்', 'டன்'-ன்னாய் நிரம்பி வழிந்தது! வழியவில்லை என்றால் அவனுக்கு எண் வரிசை தெரியாது என்றாகி விடாதோ?

''தென்... எப்போ வதும்? தூ இக்கு அப்பமா?'' என இரண்டு விரல்களைக் காட்டி தாயிடம் சந்தேகம் கேட்ட வெண்ணிலாவை அப்போதைக்கு சரி கட்டும் எண்ணத்தில் ''ஆமாடா ராஜாத்தி...'' என்றாள் அன்பரசி.

ஆனால், வெற்றிக்குத் தான் மனைவியின் அந்த பொய் / மழுப்பல் நடவடிக்கை பிடிக்காமல் போனது! ''சின்ன விஷயம் தான் என்றாலும்...குழந்தைகளிடம் உண்மையைச் சொல்லி அவர்களை உண்மையை ஒப்பக் கொள்ள வைப்பதே அழகு'' என்ற அவனது சிந்தாந்தத்தின் படியால் ''டூக்கு அப்புறம் த்ரீ தான் ராஜாத்தி வரும்! டென் வந்து...'' எனக் கூறி, ஒன்பது விரல்களை விரித்து ''நைன்க்கு அப்புறம் தான் வரும்'' என்றான் வெற்றி தெளிவாக.

"இப்போ அவ ஆடப் போறா..." என அன்னை முணுமுணுக்க. அதற்கேற்ப அழாது "ம்மா... ஊக்க அப்தம் தானே சொன்னா? எப்பி...நின(அதான் நைந்) ஆவும்?" எனப் புருவத்தை உயர்த்திக் கேள்வி கேட்டு கன்று.

அவளுக்குப் பதில் சொல்ல ஆயத்தமாகும் முன்னை "அப்போவோ ம்மா தப்பா?" எனச் சந்தேகமாய் கேட்டான் பிள்ளை. என் அன்னை சொன்னதிலா தவறு என்பது போல் நெற்றிக்கண்ணைத் திறந்து அவன் கேட்க, அன்பரசிக்கு சிரிப்பு வந்தது.

"அது...டா... அது வந்து!" என ஒரு நிமிடம் குழம்பிய வேற்றிவேந்தன். மனைவியை நன்றாகவே முறைத்து விட்டு "அம்மா தினம் உங்களுக்கு ஒன்... டூ... த்ரீ சொல்லித் தரா இல்லையா?" எனக் கேட்டு இருவரும் கேள்வி நிலையிலிருந்து வெளிவராததை உணர்ந்து "சொல்லித் தாரா இல்லையா?" என்றான் லேசாக உயர்ந்த குரலில்.

அந்த குரலில் "தவாலே" என இருவரும் ஒரு சேர பதில் சொன்னதும், "ம்ம்ம். அவ சொல்லிக் கொடுக் கிறதை நீங்க ரெண்டு பேரும் ஒழுங்காவே படிக்காம... தப்பு... தப்பா சொல்றீங்களா! அதான் உங்களோட சேர்ந்து அவளும் மக்காப் போய்ட்டா!" என்றான் ஒரே போடாக.

மூவரும் ஒருவரை ஒருவர் பார்க்க, அன்பரசியின் முகத்தில் அப்பாவி போல் பரிதாபம் நிரம்பி வழிந்தது. அந்த நிலைமைக்குக் கூடுதல் அழகு சேர்த்தது என லாம்!



அழகிற்கு என்னை ஊற்றி மெருகூட்டுவது போல், "நீங்க ஒழுங்கா படிச்சிருந்தா... நீங்களும் அப்பா மாதிரி அறிவாளி ஆகியிருக்கலாம்... அம்மாவும் அறிவாளி ஆகியிருப்பா..." எனப் பாவம் போல் பரிதாபப்பட்டான் தந்தைக்காரன்.

அவனது வார்த்தையை நம்பாத இருவரும், தாயின் அப்பாவி முகத்தையும் நம்பாது "அப்பியா மா?ப்பா சொன்னா தான் கதெக்க?" என்றனர்.

தாய்க்கும் பிள்ளைகள் தவறாய் கத்துக்கொள்வதும், அதற்கும் மேலாய் "ஒன்...டூ...த்ரீ" என அவள் கத்தும் போது "ஏ...சி...எப்..." என வேண்டுமென்றே இருவரும் வேறு பேசுகையில் எழும் கோபமும் பிடித்தா இருக்கும்? அதனால், அவர்களை ஒழுங்காய் பயில வைப்பதற்குக் கணவன் எடுத்துக்கொண்ட வகையில் தானே எளியாய் மாட்டியிருப்பது புரிந்தாலும், பிள்ளைகளின் நன்மையை முன்னிறுத்தி "ஆமாடா... அம்மாக்கு எல்லாம் மறந்து போச்சு... அம்மா மக்காப் போயிட்டேன்" எனக் கண்ணைக் கசக்கினாள் அன்பரசி.

"ம்மா..." என அவளிடம் ஓடிச் சென்ற ஆண்பிள்ளை, அவளது தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு "அவா தேமா! ஆதி... ச்சமத்தா ஒன்... டூ... த்ரீ சொல்தேன்" எனக் கொஞ்சினான்.

ஆனால் தமையனைப் பின்பற்றாது. தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்த வெண்ணிலா ஒரு கேள் விக்கு ஆயத்தமாவது வெற்றிக்குப் புரிந்து. அதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு அவன் காத்திருக்க, "ப்ப்பா... ம்மா மக்கு ஆகித்தா... அதா 'ஒன்... டூ...த்ரீ...'"

நீ சொல்லித் தவுவியா? (அப்பா, அம்மா மக்கு ஆதி விட்டதால் நீ எங்களுக்குக் கற்று தருகிறாயா?)'' என்றாள் ஒற்றை விரல் நீட்டி.

''என்ன ஒரு அறிவு?'' என வாய் விட்டே வியந்த வெற்றிவேந்தன், பிள்ளையைத் தன்னிடம் இழுத்துக் கொண்டு, அழுந்த முத்தமிட்டான். ஆனால் அவளது பிள்ளைக்கு வேண்டியிருந்தது முத்தம் அல்லவே! அதனால் அவனிடமிருந்து திமிறிக் கொண்டு வெளி வந்த நிலாப்பெண், தன் முழு மதி முகத்தை இடது பக்கமாய் சாய்த்து ''ச்சொல்லுப்பா... சொல்லித் தவுவியா... எக்கு... ஆதிக்கு... அப்பும்... அம்மாக்கும்...'' என மூன்று மக்குகளுக்குமாய் பேசினாள்.

''சரிடா சொல்லித் தரேன்! அம்மா பெரிய பொண்ணு இல்லையாடா... பிக்... பிக்கா இருக்காளே? அதனால, நீங்க விளையாடும்போதே அப்பா அம்மாக்குச் சொல்லிக் கொடுத்துடறேன். அப்புறம் அம்மா உங்களுக்குச் சொல்லித் தருவா...ஓகேவா?'' என்றான் ஒரோர் வார்த்தைக்கும் அதிக இடைவெளி விட்டு, லேசான அழுத்தத்துடன்.

''ம்ம்'' என ஒரு விரலால் தன் தாடையைத் தட்டிக் கொண்ட பெண்ணரசியோ, அதையும் அப்படியே ஒப்புக் கொள்வதாய் இல்லை என்பது ''ம்மா... பச்சுவியா?'' எனத் தாயிடம் கேட்ட கேள்வியில் புரிந்தது.

''ரொம்பத் தான்!'' என மனதிற்குள் வைதாலும், ''சரிடா'' எனப் பவ்யமாய் தலையை ஆட்ட மறுக்கவில்லை அன்பரசியார்.



''அப்போ... சமி!'' எனப் பெரிய மனுஷியார் சரி சொல்வதற்கும், அவளது தமையன் விளையாட்டுச் சாமான்களை எடுத்து வருவதற்கும் சரியாக இருக்க, நால்வரும் கீழே விளையாடச் சென்றனர். பிள்ளைகள் இருவரும் விளையாடிய வேளையில் ''வாத்தியாருக்கு குரு தட்சணை எங்கே? ஒழுங்கா கேட்கிறதைக் கொடுத்திடு... இல்ல...'' என வெற்றி மிரட்ட ஆரம்பிக்க, ''என்ன செய்வீங்க?'' என அன்பரசி பதிலுக்கு முறைக்க, ''நீ இன்னும் மக்காவே இருக்கேன்னு பசங்கிட்ட சொல்லிக் கொடுத்துடுவேன்'' எனத் தன் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தான் கணவன்.

அந்த மிரட்டலை மறுக்க முடியாத வகையில், பிள்ளைகள் இருவரும் தந்தை சொல்வதை அப்படியே அல்லவா நம்பித் தொலைத்தனர்!! அந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே, கணவனை அடிக்காது வெறும் முறைப்போடு நிறுத்திக் கொண்டாள் அன்பரசி!

அன்பரசியின் முறைப்பை அலட்சியம் செய்த வெற்றி வேந்தன், கணிதப் பேராசிரியர் அவதாரம் எடுத்து, அன்பரசியைக் காளியாட்டம் ஆடவைத்தப் போது, இரட்டையர்கள் இருவரும் தங்கள் ஆட்டத்தை முடித்து வந்திருந்தனர்!

தொடர்ந்து பத்து நாட்களில் பிள்ளைகள் பிறந்த நாளுக்கான துணி எடுக்கும் படலம் இனிதே நடந்தேற, போன முறை ஆகாஷுக்குத் துணி எடுத்தது போல் இந்த முறையும் எடுத்தாள் அன்பரசி! மனைவியின் மனம் புரிந்தவன் போல் ''மதுரையிலிருந்து திருச்சி பக்கம் தானே? ஆனந்தை குடும்பத்தோட அங்க வரச்

சொல்லலாம்! ஆகாஷுக்கும் சந்தோஷமா இருக்கும்..'' என்றான் வாஞ்சையாக.

தன் எண்ணத்தைப் பிரதிப்பலித்த கணவனின் கன்னத்தில் தாமாய் முத்தம் வைத்து நிமிர்ந்த அன்பரசியின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது! ''பழைய... துறு-துறு ஆகாஷை எப்போ பார்ப்போம்ன்னு இருக்கு? அவனைப் பார்த்து மூணு மாசமாகப் போகுது வெற்றிப்பா? பிள்ளை எப்படி இருக்கானோ?'' என ஓர் நாளைக்கு ஒர் முறை என்ற கணக்கில் சொல்லும் அந்த வசனத்தை, அன்றைய தினத்தில் மூன்றாம் முறையாக கூறினாள் அன்பரசி!

''நேத்திக்குத்தான் பேசினோம்...குழந்தை நார்மல் ஆகிட்டான்... பயமில்லாம தாத்தா கூட வெளிய போறன்னு சுபா சொன்னா இல்லையா? அவனோட குரலே எவ்வளவு தூரம் தெளிஞ்சு இருந்தது? அப்புறம் என்ன அன்பா?'' என மனைவியைத் தேற்றிவிட்டு, மருத்துவமனை சென்ற வெற்றிவேந்தனை, பதினொரு மணி அளவில் வந்த அவனது மைத்துனனின் அழைப்பு திகைக்க வைத்தது!

''சொல்லு தமிழ்'' என அவன் ஆரம்பிப்பதற்கு முன்னரே ''இந்த அக்காக்க என்னாச்சு அத்தான்? பசங்களோட பர்த்டேக்கு முதல் நாள் ராத்திரி தானே வருவீங்களாமே? உங்களுக்கு அதுவரை வேலை இருக்காமே? உங்களுக்கு வேலை இருக்கிறதுக்கும் அவங்க வரதுக்கும் என்ன அத்தான் சம்பந்தம்? எப்பவும் போல ஜோசப்பை வண்டி ஓட்டச் சொல்லி, முன்னாடியே வரது தானே?



இங்க எல்லாரும் பசங்களைப் பார்க்க எவ்வளவு ஆவலா இருக்கோம் தெரியுமா? மூணு மாசமா இந்தப் பக்கம் எட்டியே பார்க்கலை... போன்ல பேசுறதோட சரி...என்னு கேட்டா சரியான பதிலும் சொல்ல மாட்டேங்கிறா!? உங்களுக்கு கிளினிக்ல வேலையிருக்கு... வேலை யிருக்குன்னு சொல்றா... முன்னாடியும் வேலை இருந்தது தானே? இப்போ மட்டும் என்ன புதுசா? உங்க வேலையைக் கை காட்டி வராம இருக்கிறது? இந்த இரண்டு வருஷமா... நீங்க இல்லாம அவ இங்க வந்ததே இல்லையா? என்னத்தான் இது? நாங்க ஏதாவது தப்பு செய்துட்டோமா? அக்கா ஏன் இப்படி செய்றா?'' எனப் பொரிந்து தள்ளிவிட்டான் தமிழரசன்.

''ஹே தமிழ்! என்னடா இது? இவ்வளவு கோபம்? கூல் மேன்... அன்பாகிட்ட நான் பேசுறேன். பேசிட்டு... நானே உன்னைக் கூப்பிடுறேன்'' எனக் கூறிய வெற்றி வேந்தன். பார்த்துக் கொண்டிருந்த நோயாளியை முடித்து விட்டு, வீட்டு எண்ணிற்கு அடித்தான்.

''ஹல்லோவ்...'' என ஆதியும். ''ஹல்லோ'' என வெண்ணிலாவும் ஆர்ப்பரிக்கையிலேயே ''குட்டீஸ், அம்மாக்கிட்ட போன் கொடுங்க'' என்றான் வெற்றி சத்தமாக, அதற்கு மேல் வம்பு செய்யாமல், தொலை பேசியை தாயிடம் மாற்றினார்கள் சிறியவர்கள். அன்பரசி தொடர்பிற்கு வந்ததும் ''அன்பா! நீங்க மூணு பேரும் பிறந்தநாளுக்கு ஒரு வாரம் முன்னாடியே ஊருக்குப் போறீங்க தானே? சரியான தேதி சொன்னின்னா... ஜோசப்கிட்ட சொல்லிடுறேன்'' என நூல் விட்டான் வெற்றிவேந்தன்.

''இல்லை வெற்றிப்பா, நாங்க உங்களோடவே வரோம்'' என அன்பரசி முடித்துவிட, ''ஏன்?'' என்றான் வெற்றி ஒற்றைக் கேள்வியாய்.

''என்ன ஏன்? உங்களோடவே திருச்சிக்கு வந்துட்டு... உங்களோடவே சென்னைக்குத் திரும்பிடுறோம்னு சொல்றேன். இதில என்ன இருக்கு?'' என்றாள் அன்பரசி தெளிவாக.

''அதான் ஏன்னு கேட்கிறேன். எப்பவும் ஜோசப் (அவனது மருத்துவமனையில் வேலை செய்யும் மூத்தப் பணியாளர்களுள் ஒருவர்) தானே உங்களைக் காரில் கொண்டு போய் விட்டுட்டு வருவார்? நான் வர லேட்டாகும்ன்னு நீயும் பசங்களும் அவரோட முதல்ல போய்டுவீங்க தானே? இப்போ என்ன புது பழக்கம்... என்னோட வாது?'' என்றான் வெற்றி கூர்மையுடன்.

''புது பழக்கமில்லை. புதுசா வந்த ஞானோதயம்! பாதுகாப்பு நடவடிக்கை! நானும் பசங்களும்.. முக்கியமா பசங்க...டிரைவரோட எங்கேயும் போக மாட்டோம்!'' என்ற அன்பரசியின் குரலில் கடுமை ஏறியிருந்தது என்றே சொல்லலாம். ஆகாஷின் கடத்தல் நடப்பதற்கு முக்கியக் காரணமாய் இருந்த பராமுவையும். அவன் வகித்த ஓட்டுனர் பதவியையும் கணவன் மறந்து போனதில் உண்டான கோபம் அது!

''ஜோசப் நல்லவர்மா'' எனத் தொடங்கிய வெற்றிக்கே, அன்பரசியை இந்த விஷயத்தில் சமாதானம் செய்ய முடியாது என்று தோன்றிவிட, மனைவிக்குப் பதிலாய் மைத்துனனை சமாதானம் செய்ய முடிவு செய்தான், அவன்!



அதன் பேரில் தமிழிடம் அவன் நடத்திய பேச்சு வார்த்தையின் முடிவில் ''அக்கா பயப்படறதிலும் ஒரு நியாயமிருக்கு. இப்போ என்ன...ஜோசப் கூடத்தானே வர மாட்டா? தமிழ் கூட வருவா தானே? நான் வந்து கூட்டிட்டுப் போறேன்'' என்றான் அந்த அன்புச் சகோதரன்!!



# 12

தன் மருமக்களைப் பார்க்கவும் ஆவலில் அடுத்த நாளே பறந்து வந்த மாமன்காரன், தமக்கையையும் அவளது மக்களையும் ஓர் ராஜ குடும்பத்தினரின் மரியாதையுடன் பிறந்த ஊர் அழைத்துச் சென்றான். தாத்தா-பாட்டியைப் பார்க்கப் போகும் குஷியிலிருந்த கன்றுகள் இருவரும், அங்கே போனதும் தாங்கள் வீட்டினுள்ளே சிறை இருக்கப் போவதை அறியவில்லை!

நல்ல மருமகளாய் முதலில் புகுந்த வீட்டிற்குச் சென்ற அன்பரசியை, சிறிது நேரம் சீராடிவிட்டு ''அண்ணியும், அண்ணனும் பசங்களைப் பார்க்கிறதுக்குத் துடிச்சிட்டு இருப்பாங்க. நீ அங்க போமா...ரெண்டு...மூணு நாள் இருந்துட்டு வா'' என வாஞ்சையாக கூறிய வைதேகியிடம் நன்றி கூறி, தன் தாய் வீடு சென்றாள் மருமகள்.

வாயிலிலேயே நின்றிருந்த பார்வதியும், வேலைக்கு விடுப்பு எடுத்துவிட்டு வீட்டிலிருந்த பரமேஸ்வரனும்

கார் நின்றதும் பறந்தோடி வந்து, ஆளுக்கு ஒருவரா பிள்ளைகளை ஏந்திக் கொண்டனர். "அம்மா..." என ஆசையாய் வந்த மகளிடம் முகம் திருப்பிக் கொண்ட பார்வதி "மூணு மாசமா இந்தப் பக்கம் வராதவளுக்கு அம்மா மேல அப்படியே பாசம் பொங்கி வழியுதே!" என நொடித்தார்.

தொடர்ந்த பத்து நிமிடங்களில் நடந்தேறிய சமா தானமும், ஆகாஷைப் பற்றிய பேசும் பார்வதியை ஓரளவு சமாதானம் செய்துவிட, அன்றைய தினத்தின் மீது பொழுது செவ்வனே கழிந்தது - மாலை வரை!

மாலையில் தமிழின் நண்பர்கள் சிலர் வீட்டிற்கு வர, பிறந்தது முதல் பார்த்த பிள்ளைகள் என்பதால் சட்டென தூக்கிக் கொஞ்சினார்கள் அவர்கள். பிள்ளைகளும் அவர்களிடம் தாவ, அங்கே மழலை போர் இனிதே நடந் தேறியது. அவர்கள் கொடுத்த இனிப்புக்களை உடனே வாங்காது தாயை ஒரு முறை திரும்பிப் பார்த்து அவள் அரைகுறையாய் தலை அசைத்ததுமே பிள்ளைகள் பெற்றுக் கொண்டபோதும், அந்த நடவடிக்கை (அதா வது வெளியாள் உடன் பழகும் நடவடிக்கை) வீட்டினர் அனைவரையும் மகிழ்விக்க, அன்பரசிக்கு மட்டும் மனதில் அலாரம் அடிக்கத் தொடங்கி, அவளது பாது காப்பு நடவடிக்கை செவ்வனே தலைத் தூக்கியது!

குடித்துக் கொண்டிருந்த பானத்தை அப்படியே உணவு மேசையின் மீது வைத்தவள், "ஆதி... நிலா.. ரெண்டு பேரும் அம்மாகிட்ட வாங்க!" என அழைத்த தோடு நில்லாமல், தன் அறைக்குள் வழி நடத்திச் சென்றாள். பிள்ளைகளை உள்ளே விட்டு, அறை



வாயிலிருந்தவாறே தலையைத் திருப்பியவள் "அவங் களுக்கு இந்த நோத்திற்கு ஒரு மருந்து கொடுக்கணும்" என அறிவிப்புப் போலச் சொல்லிவிட்டு, சட்டென உள்ளேயும் சென்றவளை விழி விரித்துப் பார்த்திருந்தனர் வீட்டினர். வந்திருந்த நண்பர்களின் முகத்தில் லேசான வருத்தம் படர்ந்ததையும், உடனே அன்பரசியின் கூற்றை நம்பியவர்கள் போல் இயல்பிற்கு வந்ததையும் கவனித்துக் கொண்டிருந்த தமிழிற்கு லேசாய் கோபம் வந்தது! ஆனால், நண்பர்கள் முன்னே கோபத்தைக் காட்டாது, சிரித்துப் பேசி அவர்களை வழியனுப்பி வைத் தவன், தமக்கையின் அறைக்கதவைத் தட்டி "அவங்க கிளம்பியாச்சு! இனியும் நீ உன்னோட பொய்யை காப்பாத்த வேண்டாம். வெளிய வாக்கா" என்றான் கடுமையுடன்.

பட்டென திறந்து கொண்ட கதவின் பின்னே ஆக் ரோஷமாய் நின்றிருந்த அன்பரசி, வேகமாய் வெளியே வந்து கதவை அடைத்தாள். பின்னர் நிதானமாய் வர வேற்பறைக்குள் வந்தவள், "எதுடா பொய்?" என்றாள் கடுமையாக.

"ஏதோ மருந்து கொடுக்கணும்ன்னு சொல்லி... பசங்களை உள்ளே கூட்டிட்டுப் போய்.. சும்மா உட்கார வச்சிருந்தியே! அது தான் பொய்! இல்லைன்னு சொல்லுப் பார்க்கலாம்!" என்றான் அவனும் சவாலாக.

அதற்குப் பதில் கூற முடியாமல் போனதில் விளைந்த கோபத்தை வார்த்தைகளாக்கி "உனக்கு அப்படித் தெரிஞ்சா நான் ஒண்ணும் செய்ய முடியாது!?" என்றாள் அன்பரசி மேலும் கடுமையாய்.

பிள்ளைகள் இருவரையும் நடுவே வந்த பார்வதியிடம் திரும்பி "அம்மா... எனக்கு இதுக்கு மட்டும் பதில் சொல்லச் சொல்லுங்க! அக்கா எதுக்கு பசங்களை உள்ளே கூட்டிப் போனா? என் பிரண்ட்ஸ் அவங்களை ஏதும் செய்துடு வாங்கன்னு பயந்துட்டாளா?" என்று தமக்கையிடம் பார்வையைப் பதித்து, தாயிடம் கேள்வி கேட்டான். அவனுக்குத் தன் நண்பர்கள் முன்னே, தன்னை நிலை தடுமாற வைத்துவிட்டாளே என்று கோபம்!

"அப்படியெல்லாம் இல்லை கண்ணா! நிஜமாவே ஏதாவது மருந்து கொடுக்க வேண்டியதா இருந்திருக்கும்..." எனப் பார்வதி அவசரமாய் இடைப்புகுந்ததற்கு மாறாய் "ஆமா. பயம் தான்! உன் பிரண்ட்ஸ் மேல பயம் தான்!" என்றாள் அன்பரசி அழுத்தம் திருத்தமாய்.

"அன்பா" எனப் பரமேஸ்வரன் கண்டிக்க, "நான் தவமிருந்து பெத்த பிள்ளைங்கப்பா! அவங்களை எப்படி வளர்க்கணும்ன்னு எனக்குத் தெரியும்!" என அன்பரசியின் வார்த்தைகள் துடித்தன.

"நம்ம கண் முன்னாடியே அவங்க உன் பசங்களை என்ன செய்துட முடியும்ன்னு நினைக்கிறே?" என அவளது சகோதரன் எகிற, "இப்ப நம்ம முன்னாடி அவங்ககிட்ட நல்லா பழகும் பசங்க, நாம இல்லாத நேரத்திலும் அவங்ககிட்ட போற வாய்ப்பிருக்கு" எனத் தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டாள் அன்பரசி!

அவளது பேச்சில் மேலும் கோபமுற்று "ப்ச் நடக்கவே முடியா ஒன்னை... நீயாவே கற்பனை செய்துகிட்டு... ப்ச்" எனக் கால்களை உதைத்துத் தன் கோபத்தை வெளிக்காட்டினான் தமிழரசன்.

"உன் கோபம் என்னை ஒன்றும் செய்யாது! நான் இப்படித் தான் இருப்பேன்!" என்பது போல் அன்பரசியும் முறைத்தவாறே நின்றாள். அவளது முகத்தை ஒரு முறை கூர்ந்து நோக்கியத் தமையன் "இப்படியே போயிட்டு இருந்தா... ஒரு பாயிண்ட்ல என் மேலேயே சந்தேகப்பட்டாலும் படுவே! அப்புறம் அம்மா-அப்பா மேல! நாங்களும் உன் பிள்ளைகளைக் கடத்திட்டுப் போய்... காசு கேட்போம்ன்னு சொல்லுவ இல்லையா?" எனத் தமிழ் கோபத்தில் கத்திவிட, "தமிழ்ழ்ழ்ழ்ழ்ழ்ழ்" என மூன்று குரல்கள் ஓங்கி அதட்டின.

அன்று வெளிப்பாட்டில் அறைக்குள் விளையாடிக் கொண்டிருந்த கன்றுகள் இருவரும், வெளியே ஓடி வந்துவிட, பேச்சுவார்த்தை அப்போதைக்கு முற்றுப் பெற்றது!

அன்பரசி பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் செய்த செயலை அவளது தம்பியால் ஜீரணிக்க முடியாது போக, "அவங்க என்னோட பிரண்ட்ஸ்ம்மா! பசங்க பிறந்ததிலிருந்து... ஏன் அதுக்கு முன்னாடியிருந்து இங்க வந்து போறாங்க.... அவங்க முன்னாடி என்னை அவமானப் படுத்திட்டாம்மா! நாளைக்கு அவங்க முன்னாடி எப்படிம்மா போய் நிக்கிறது? அக்கா...ஏன்மா இப்படிச் செய்றா?" எனக் குமுறி முடித்துவிட்டான்.

பெண்ணின் பயத்திற்கும், பிள்ளையின் கோபத்திற்கும் இடையே மாட்டிக் கொண்டு விழித்துக்கொண்டிருந்த பெற்றோருக்கு உதவுவது போல், அன்பரசி

அடுத்த நாளே தன் புகுந்த வீடு செல்ல ஆயத்த
மானாள். அதில் அதிர்ந்து போன தமிழரசன், "அக்கா...
என் மேல கோபமா? சாரிக்கா! ப்ளீஸ் போகாதே!" எனக்
கெஞ்சவே ஆரம்பித்துவிட்டான்.

"உன் மேல கோபமா? அதெல்லாம் இல்லை.
போதும் "என்னைப் புரிந்து கொள்ளவில்லை!" என்ற
ஆற்றாமையே அன்பரசியின் குரலில் நிரம்பி வழிந்தது!
அந்த ஆற்றாமையின் விளைவாக கண்ணீர் சட்டென
நிரம்பிவிட, தம்பிக்கு உருகிவிட்டது. "சாரி!" என அவள்
மேலும் துவங்க, "எனக்கு...ஆகாஷ்...அந்த சம்பவத்
திலிருந்து... எதுக்கு எடுத்தாலும் பயமா இருக்குடா
தமிழ்! நான் வேணும்னே செய்யல... ஆனா... ஆனா...
என்னை மீறி... பசங்களுக்கு எதுவும் ஆகிடுமோன்னு
எனக்கு ரொம்பப் பயமா இருக்கு ப்ளீஸ் புரிஞ்சுக்கோ
தமிழ்!" எனத் திக்கித் திணறிய தமக்கையிடம் கோபம்
கொள்ள, அந்த அன்புச் சகோதரனால் முடியவில்லை.

"அன்பா... மனசளவில் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கா,
தமிழ்! ஆகாஷோட கடத்தல் சம்பவத்திற்கு அப்புறம்
மனிதர்கள் மேலிருக்கும் அவளோட நம்பிக்கை
குறைந்துவிட்டதுன்னு சொல்லமாட்டேன்...சுத்தமா
அழிந்து போச்சு!" என்ற வெற்றியின் முன்தின வார்த்தை
களும் நினைவிலாட, ஒரு தம்பியாக அவளைத் தோள்
கொடுத்துத் தாங்க முயற்சி செய்தான், தமிழரசன்!
அவளது பயத்தைப் போக்கத் தமிழரசன் பாடுபட்டான்
என்றால், மகள் பயப்படும் படி பேரப்பிள்ளைகளுக்கு
வேறெந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது எனக் கடவுளை
வேண்டிக் கொண்டனர் பெரியவர்கள்!



ஆனால், அவர்களின் முயற்சிக்குப் பலனில்லாது
போகும் வண்ணம், அன்பரசி தன் பிள்ளைகளைப் பக்
கத்து வீட்டிற்குக் கூட விளையாட அனுப்ப மறுத்தாள்!
பாட்டி வீட்டிற்கு வரும் வேளைகள் யாவிலும், சுற்றி
யிருக்கும் சிறார்களுடன் சிட்டுக்களாய் சுற்றி வந்தவர்
களை, வார்த்தைகளால் அடக்கி வீட்டினுள்ளே இருக்கச்
செய்தாள். மீறி அவர்கள் அழுதால், தன் தந்தை மற்றும்
தம்பி என ஆண்கள் புடை சூழ மட்டுமே வெளியே
அனுப்பினாள்!

வேலைக்குச் செல்லும் ஆண்கள் எந்நேரமும் வீட்
டிலா இருக்க முடியும்? அதன் விளைவாக, பிள்ளைகள்
இருவரும் தங்களுக்கு வைக்கப்பட்ட சிறையில், பாதி
நேரம் அழுதே ஓய்ந்தனர்!

சென்னையில் ஆகாஷ் வீட்டுடன் மட்டுமே
தொடர்பிலிருந்த பிள்ளைகளுக்கு, ஆகாஷ் இல்லாத
நிலையில் தாய் அங்கே விளையாட அனுப்பாதது
புதிதாக தெரியவில்லை. கூடுதலாக, தந்தைக்காரன் தன்
பிள்ளைகளின் சந்தோஷத்திற்காக வீடு வரை வந்து,
விளையாட அழைத்துச் சென்றதில், பிள்ளைகளுக்குச்
சென்னையில் அந்த சந்தோசம் பறிபோகவில்லை!
ஆனால் இங்கோ, தாயின் கட்டுப்பாட்டில் கன்றுகள்
களையிழந்து போயினர்!

பாதுகாப்பு என்ற பெயரில் நடந்த சிறை வாசம்,
புகுந்த வீட்டிலும் தொடர, பிறந்தநாளும், முன்தினம்
வந்த வெற்றிக்கு, அங்க நிலவிக்கொண்டிருக்கும்
சங்கடமான சூழ்நிலை, நடந்ததை வார்த்தையின்றி
பறைசாற்றியது!

அன்பரசியிடம் கோபம் கொள்வதினால் காரியம் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்த வெற்றிவேந்தன், சென்னை சென்றதும் மனைவியிடம் மெல்லப் பேசி சரிகட்ட வேண்டுமென முடிவு செய்தான்! ஆனால், அவனது அந்த முடிவை ஆட்டம் காண வைப்பது போல், பிறந்தநாளன்றும் பிள்ளைகளை வெளியாள் யாரிடமும் செல்ல விடவில்லை.

தன் புகுந்த வீட்டு ஆட்களோ, பிறந்த வீட்டு ஆட்களோ வைத்திருந்தால் மட்டுமே அமைதியாய் இருந்தவள், பிள்ளைகளின் குறும்பில் மயங்கி யாராவது பிள்ளையைத் தூக்கக் கை நீட்டினால், இங்கே உடல் விரைத்துப்போனாள், தாயாக!

மனைவியைத் தேற்றும் வகை தெரியாது போக, அவளது இறுகிய கைகளைப் பிடித்து நீவிவிட மட்டுமே முடிந்தது வெற்றிவேந்தனால்! புரிந்து கொண்ட உறவுகளும் அவளுக்குத் தோள் கொடுத்ததால், அங்கே பெரும் பிரச்சனை ஏதும் வராது போனது! இதுவே, வைதேகியைத் தவிர்த்து வேறொருவராய் இருந்தால் அன்பரசி நடந்து கொண்ட முறைக்கு ''என் சொந்தங்களை மதிக்க மாட்டாயா?'' என ஒரு மாமியார் ஆட்டம் ஆடியிருப்பார்கள் என்றே எண்ணினார் பார்வதி! அவருக்குமே, மகள் செய்யும் வேலைகளில் பரிதாபத்தையும் மீறி கோபமே இழுத்தது! பின்னே, யாராவது புதியவரிடம் பிள்ளைகள் சென்றுவிட்டால் அவர்களை உடனே தன்னிடம் அழைத்துக் கொள்ள ஏதானும் ஓர் பொய்யைச் சொல்பவளைக் காணக் கோபம் வராதா? நீ செய்வது தப்பு என்றும் சொல்ல முடியாத அளவில்,



அவளது வெளுத்த முகம் தாயின் மனதை உருக்கவும் செய்தது தான், அங்கே பரிதாபம்!

அவரது தவிப்பைப் பார்த்துவிட்டு, அருகே வந்த வைதேகி ''என்ன அண்ணி? முகம் வாடிப் போயிருக்கே?'' என்றார் அக்கறையாக. அந்த வார்த்தையில் உடைந்த பார்வதி ''இந்த அன்புப் பொண்ணு பண்றதைப் பார்த்தா ஆதங்கமா இருக்கு அண்ணி! அவளுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்'' என்றார் தவிப்புடன்.

''ஹய்யோ என்ன அண்ணி? ஒரு அம்மாவா அவளோட பயத்தை என்னால் புரிஞ்சுக்க முடியுது! நான் அவ இடத்தில இருந்தா... இந்த பிறந்தநாளையே கொண்டாட விட்டிருக்க மாட்டேன்! அதனால் நான் தப்பாவே எடுத்துக்கலை... இன்னும் கொஞ்ச நாளில் பசங்க வளர்ந்து... விவரம் தெரிஞ்சதும் மாறிடுவா... கவலைப்படாதீங்க!'' எனத் தாயாய் தன் மருமகளைத் தாங்கினார், அப்பெண்மணி!

இரு தாய்மாரின் தவிப்பையும் புரிந்து கொள்ளாமல், தாய் என்ற தன் தவிப்பை மட்டுமே முன்னிறுத்தி, பிள்ளைகளுக்கு ஓர் அரண் போல் நின்றவள் மேல் வெற்றிக்குப் பரிதாபம் தான் வந்தது! அவள் மனம் படும் பாட்டைப் புரிந்து கொண்டவனால் எப்படி அவளைத் தவறாக நினைக்க முடியும்? பிள்ளைகள், வெளியாளிடம் செல்லும் ஒவ்வோர் வினாடியும் மனைவியின் மனம் எகிறிக் குதிப்பதை வெற்றியால் நன்றாக உணர முடிந்தது! கடந்த மூன்று மாதங்களாய், ஓர் கூட்டத்தின் நடுவே பிள்ளைகள் இருந்திராத படியால்... அதுவும்

அந்தக் கூட்டத்தின் கதாநாயகர்களாக அவர்க
இருந்திராத படியால்... அன்பரசியின் இந்தத் தவிப்புக்
முன்னர் வெளிவரவில்லை! ஆனால் இப்போதோ
எல்லாவற்றுக்கும் சேர்த்து வைத்து பூகம்பமாய்
வெடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த வெற்றிக்கு
அந்த நிமிடம் மனைவியை அமைதிப் படுத்தும் வழி
தெரியவில்லை!

அவளது மனப்போராட்டத்தையும், அதன் விளை
வாக எழுந்த பிள்ளைகளின் சிணுங்கலையும் கையைக்
கட்டிக் கொண்டு பார்த்திருந்த வெற்றிவேந்தனின்
துயரை, மெலிதாய் துடைக்கவென, ஆனந்தின்
குடும்பம் பிறந்தநாள் விழாவிற்கு வருகை தந்தது!

''அன்பத்தே!'' என்ற கூவலுடன் ஓடி வந்த ஆகாஷை
வாரி அணைத்துக் கொண்ட அன்பரசி, நடத்திய பாச
மழையில அனைவருமே திகைத்துத் தான் போயினர்!
ஆகாஷ் மேல் அவள் கொண்டிருந்த பாசத்தை அறிந்
திருந்த போதும், மூன்று மாதங்களாய் அவனைப்
பாராதிருந்த துக்கத்தைத் தன் முத்தத்தாலேயே கழுவி
விடுபவள் போல், அவனை அணைத்திருந்த அன்
பரசியின் கண்களில் வழிந்த கண்ணீர், அவனது பிரிவு
அவளை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பதை
அனைவருமே உணர்ந்தனர்! அதே நேரம், அவனுக்கு
ஏற்பட்டத் துன்பம் அவள் மனதில் ஆழப் பதிந்திருக்
கிறது என்பது அவளது நெருங்கிய உறவிற்கு மேலும்
அழுத்தமாய் புரிந்தது!

''டேய் குட்டீஸ், ஆகாஷ் அண்ணா வந்திருக்கான்...
பாருங்க'' எனப் பிள்ளைகளை அழைத்தவள்,



ஆகாஷைத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டே
இருந்தாள்.

அவனது சாப்பாடு, தூக்கம், விளையாட்டு ஆகியவை
பற்றி அவனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டவள், சற்று
நேரத்திற்கெல்லாம் சுபத்ராவிடம் அவனது காய்ச்சல்
பற்றியும் பயம் பற்றியும் பேசித் தெரிந்து கொண்டாள்!

''இப்போ ஒண்ணும் பிரச்சனையில்லை. அன்பு!
அடுத்த வாரம் சென்னை வந்திடலாம்ன்னு இருக்கோம்!
விட்டுப் போன பாடமெல்லாம் படிக்கணுமே?''
என்றவள், ''வெற்றி அண்ணாவோட அட்வைஸ் படி
நடந்ததில், ஆகாஷ்...கொஞ்சமில்லை நல்லாவே
தெளிஞ்சுட்டான்! நாங்களும் அவனைப் பொத்திப்
பொத்தி வச்சா அவனோட பயம் தான் அதிகமாகுன்னு
ஓரளவு பாதுகாப்போட வெளிய விட்றதால, நார்
மலுக்குத் திரும்பிட்டு இருக்கான்'' என்றாள் சிறு
நிம்மதியுடன்.

அன்பரசியின் பதிலுக்குக் காத்திராமல், தன் பிள்ளை
கற்றுக் கொண்டிருக்கும் புது விஷயங்கள் பற்றி எடுத்
துரைக்க ஆரம்பித்தாள், ஆகாஷின் அன்னை! ''அவ
னுக்கு வீட்டு அட்ரஸ், போன் நம்பர்... ஆனந்தோட
வேலையிடம்... ஊர்ல இருக்க அட்ரஸ் எல்லாம்
சொல்லிக் கொடுத்தாச்சு! ஆகாஷ் குட்டி... அன்பத்
தேக்கு சொல்லிக் காட்டுப் பார்க்கலாம்'' என அன்பு
விடம் விவரம் கூறிய கையோடு, பிள்ளையையும் பேச
வைத்தாள்.

பையன் திருப்பிக் கொண்டு ''அன்பத்தே - கிட்ட
சொல்லலாமா அம்மா?'' என அவன் கேட்கவும்,

அன்பரசிக்கு வியப்பாக இருந்தது! "ரொம்ப ஸ்ட்ரேஞ் சரஸ்கிட்ட தான் கண்ணா சொல்லக்கூடாது! தம்புக்குத் தெரிஞ்சவங்ககிட்ட போலீஸ் அங்கிள்-கிட்ட, டாக்டர் அங்கிள்-கிட்ட எல்லாம் சொல்லலாம்" என சுபத்ரா கூறவும், அழகாய் விவரம் கூறினான் ஆகாஷ்.

அடுத்து சுபத்ரா கூறிய விவரங்கள் யாவும் அன்பரசியைப் பெரும் வியப்பிற்கு ஆளாக்கின! ஆகாஷ் நீச்சல் வகுப்பு மற்றும் கராத்தே வகுப்பிற்குச் செல்வதால் அவனது தன்னம்பிக்கை வளர்ந்திருக்கிறது என்றும், கடத்தலுக்குப் பின்னர் அவனுள் முளைத்தப் பயம் முழுதாய் மறைந்திருக்கிது என்ற விவரமே அன்பரசியின் வியப்பிற்குக் காரணம்!

ஆகாஷின் முன்னேற்றங்களையும், மன மாற்றத்தையும் கண்ட அன்பரசிக்குள்ளும் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று நம்பினான் வெற்றி. அவனது நம்பிக்கையில் பெரிதாய் ஓர் கல்லை விழச் செய்வது போல், அடுத்த நாள் நடந்த மொட்டை மற்றும் தொட்டில் கட்டும் நிகழ்வு நடந்தேறியது!

பிறந்த நாளை நல்லபடியா முடித்துக் கொண்டு, குடும்பத்தினர் அனைவருமாய் காரைக்குடி சென்று இறங்கும் வரை, அன்பரசியிடமிருந்து வித்தியாசமான செய்கைகள் ஏதும் வெளிப்படவில்லை! ஆனால், அங்கே போய் முடி இறக்கி, இரட்டையர்கள் இருவருக்கும் தலைக்குத் தண்ணீர் ஊற்றி, புத்தாடை அணிவிக்கும் போது "பிள்ளைங்களை இப்படி மொட்டையாவா தூக்கிட்டு வராது? நம்மகிட்ட இல்லாத நகையா? கழுத்தில காதில போட்டுத் தூக்கிட்டு வரதில்லையா... அன்பா?"



எனப் பார்வதி கடிந்து கொண்டதில், அங்கே சிறிது அமைதி நிலவி, அங்கிருந்த அனைவரும் பார்வதியை ஆமோதிப்பதை உணர்த்தியது.

ஆனால், அவர்களின் மௌனத்தை ஒதுக்கி "வெளிய வரும் போது... பசங்களுக்கு நிறைய நகை போடக்கூடாதுமா! நாமளே... ஏன் மித்தவங்களுக்கு வழி காட்டிக் கொடுக்கணும்!" என அன்பரசி தத்துவம் பேச, "எங்கிருந்து அண்ணி... இப்படியெல்லாம் பிடிக்கிறீங்க?" எனச் சலித்துக் கொள்வது போல், சிரித்தான் விஜயமாரன். அவனுக்கு நேற்றிலிருந்த தன் அண்ணியார் செய்யும் வேலைகளைக் காண்கையில் கோபத்திற்குப் பதிலாக சிரிப்பாய் தான் வந்தது! என்ன ஒரு பயம்? என்ன ஒரு சிந்தனை? கடிவாளம் ஏதுமின்றி தறிகெட்டு ஓடும் கற்பனை? என வியக்கவே செய்தான் அவன்!

"விளையாட்டில்ல, விஜய்! நீங்களும் பிரணவ்வை வெளிய தூக்கிட்டுப் போகும் போது... அதிக நகை போடாதீங்க! நம்மகிட்ட நகை இருக்குன்னு ஊருக்குக் காண்பிப்பதை விட, அவங்களோட பாதுகாப்பு தான் நமக்கு முக்கியம்!" எனக் கண்ணை விரித்து, மைத்துனனுக்கும் அறிவுரை கூறினாள் அண்ணி.

அதற்கு மேலும் அங்கே நின்றால் விஜய் துடுக்குத்தனமாய் ஏதும் சொல்லி, அது அன்பரசியை பாதித்து விடுமோ என்று பயந்த வெற்றி, அனைவரையும் விரட்டி தொட்டில் கட்டுவதற்கு அழைத்துச் சென்றான்!

இரண்டு கரும்புகளை ஒன்றாய் கட்டி, அதில் அன்பரசியின் பட்டுச் சேலை ஒன்றை கட்டியவர்கள்

தொட்டில் தூக்கவென அங்கிருந்த ஆட்களை அழைத்து விட்டு கண்டுபிடித்தாள் அன்பரசி! ''நீங்களே தூக்குங்க வெற்றிப்பா. வீட்டு ஆளுங்க தூக்கினா தான் நல்லது'' எனப் புது வழி தான் தாமதம்.

''நீ என்கிட்ட அடி வாங்கப் போறே? நான் ஓராளா... ரெண்டு தொட்டியையும் எப்படிடி தூக்க முடியும்?'' என வெற்றி சுள்ளென எரிந்து விழ, ''நீங்களும் தமிழும் ஒரு தொட்டியைத் தூக்குங்க. விஜயும்...'' -வேகமாய் ஆரம்பித்தப் போதும், அன்பரசியால் வாக்கியத்தை முடிக்கமுடியவில்லை. வயதானவர்களான தந்தையும், மாமனாரையும் தொட்டில் தூக்கச் சொல்வது தப்பாய் பட விழித்திக் கொண்டு நின்றாள் வெற்றியின் அன்பு துணைவி!

அவளது அகன்ற விழிகளைப் பார்த்ததும் சிரிப்புப் பீறிட்டு விட, ''எல்லாரும் தொட்டில் கூட நடந்துப் போகப் போறோம்... அப்புறம் என்ன பயம்? பேசாம வா!'' என அவளது கன்னத்தைத் தட்டிவிட்டு, முன்னே சென்றான் கணவன்.

தொட்டிலைக் கட்டி, அதில் பிள்ளைகளைப் படுக்கச் சொல்லியபோது, சிறார்கள் இருவரும் அதை சுற்றி ஓடி வந்தனரே தவிர, உள்ளே படுப்பேனா என்று விட்டனர்! ஒருவழியாக கெஞ்சிக் கொஞ்சி, மிஞ்சி மிரட்டி, முடிவில் ''சித்தப்பாக்குக் கூட இங்க தொட்டில் கட்டியிருக்குடா... உங்களை மாதிரி அடம் செய்யாம சித்தப்பா சமத்தா படுத்திருந்தான் தெரியுமா? நீங்க தான் பாட்டி பேச்சைக் கேட்கவே மாட்டேங்கிறீங்க'' என வைதேகி மிதமிஞ்சிய வருத்தத்தில் நடிக்கவும்,



பிள்ளைகள் இருவரும் தங்கள் சித்தப்பனைப் பார்த்தனர்.

அவனும் ஏதோ வீர தீரச் செயல் செய்துவிட்டது போல், காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ள ''ச்சீ...த்தப்பா'' எனத் தங்கள் தந்தை சொல்லிக் கொடுத்த முறையில் அவனை அழைக்கவும், அங்கே பக்கென ஓர் சிரிப்பு சத்தம் கேட்டது! அதற்கு சொந்தக்காரனான தன் தமையனை எப்போதும் போல் முறைத்தவன், ''வெட்டி வேந்தனுக்குப் பழிக்குப் பழி வாங்கிட்ட இல்ல? நல்லா இரு!'' என நூறாவது முறையாகக் கருவினான், வெற்றியுடன் பிறந்த குலக்கொழுந்து!

ஆனால், அண்ணன் - தம்பியின் முறைப்பை அலட்சியம் செய்த பிள்ளைகள் ''நீயும் இதில தாச்சு செய்தா?'' என்றனர் கேள்வியாக, விஜய், அதற்குத் தலையாட்டியதும் ''அப்போ... நீயும் தாச்சுப் பண்ணு... நாங்கவும் தாச்சு பண்றோம்'' என்றனரே பார்க்கலாம்! விஜய் அலறுவதற்கு முன்னர், தொட்டில் தூக்க வந்தவர்கள் அலறிவிட்டனர்!

ஒரு வழியாக, சாக்லேட், ஐஸ்கிரீம், புது பொம்மை, கார் ரைட் எனப் பல தரப்பட்ட ஆயுதங்களால் சரிகட்டி, தொட்டிலில் படுக்க வைத்தனர். முத்துமாரியம்மனின் சந்நிதியை மூன்று முறை தொட்டிலில் வலம் வந்த கன்றுகளைத் தூக்கிக் கொண்டு, உள்ளே சந்நிதிக்குள் சென்றனர் குடும்பத்தினர்.

சிறு குழந்தையாய் வீற்றிருந்த அம்மனின் முன்னே கை கூப்பி நின்ற அன்பரசியின் மனம் முழுதும் பக்தியில் மூழ்கியிருந்த நிலையில், தன் கணவன் கையிலிருந்து

நழுவி கீழே குதித்தோடிவிட்ட மகளை அவள் கவனிக்கவில்லை! ஆனால், பக்தி நிலையிலிருந்து மீண்டவளின் தாய் மனம், ஐந்து நிமிடங்களாய் இவ் கண்ணை விட்டு அகன்றிருந்த பிள்ளைகளின் நலனைக் காண முற்பட, அவர்களது பெண்ணரசி அங்கில்லாமல் போனது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியதோடு அல்லாமல், அங்கே ஓர் பெரும் களேபரத்தை உண்டு பண்ணவும் ஆயத்தமானாள், பெண்ணைப் பெற்ற மகராசி!

# 13



கண் மூடி, அம்மனின் திரு உருவை மனதில் ஏற்றி, அவளது ஸ்துதி பாடிய அன்பரசி, தன் விழிகளை மலர்த்திய வினாடியில் தன் இரு செல்வங்களையும் தான் தேடினாள். அதில் ஒருவன், தமிழரசனின் கைகளில் வீற்றிருக்க, தன் கணவனின் கைகளிலிருந்த வெண்ணிலவைக் காணாமல் ஒரு கணம் அரண்டு போனவள், "நிலா... நிலா எங்கே?" என்ற வினாடி அவளது குரலில் பெரும் நடுக்கம் இருந்தது.

அப்போது தான் பிள்ளை அங்கில்லை என்பதை உணர்ந்த வீட்டினரும், சுற்றும் முற்றும் தேடினர், "இங்க தான் இருந்தா..." என வெற்றி இழுக்க, "பிள்ளையைத் தொலைச்சிட்டு இருக்கீங்களே!" என அவனிடம் பாய்ந்தவள், அதி வேகமாய் வெளியேறினாள்.



"உளறாதே அன்பரசி!" என அதட்டிய வெற்றி வேந்தனும், "கோவில்ல எங்க போய்டப் போறா? இங்க தான் இருப்பா" எனக் கூறியவாறே வைதேகியும் வெளியவர, மற்றவர்களும் சமாதானம் செய்தவாறே வெளியே வந்தனர்.

"நான் பயந்த மாதிரியே ஆகிடுச்சு... பிள்ளையைக் காணோம்" எனப் பதறிய அன்பரசி, "பிள்ளைங்களைப் பொத்திப் பொத்தி வச்சுக்கிறேன்னு என்னையே குத்தம் சொன்னீங்களே? இப்போ என்ன நடந்துச்சு பார்த்தீங்களா? உங்களோட அஜாக்கிரதையால அவளைக் காணலையே!" எனப் பிதற்றத் துவங்க, "பதறாதேமா" எனத் தோளோடு அணைத்துக் கொண்டார் மாமியார்.

அவளைத் தாயிடம் விட்டுவிட்டு, "நிலா...நிலா பேபி!" எனக் கூவியவாறே கோவில் பிரகாரத்தில் சுற்றி வந்தான், நிலாவின் அன்புத் தந்தை!

ஆனால், தாயை அதிகம் தவிக்க விடாது, அம்மனைத் தரிசிப்பதற்காக போடப்பட்டிருந்த இரு வரிசைகளினூடே அமைந்திருந்த பூசாரிகளுக்கான நடைபாதையில் வைக்கப்பட்டிருந்த பெரிய உண்டியல் மற்றும் அதன் பக்கத்திலிருந்த பெரிய பால் பாத்திரத்தின் பின்னே நின்றிருந்தாள் பெண்ணரசி! வெற்றியின் குடும்பம் நின்றிருந்த இடம் அதற்கு சற்று முன்னே மற்றும் மேலே என்பதால், சிறு குழந்தையான அவள் அங்கு நின்றிருந்தது யாருக்கும் தெரிய வாய்ப்பில்லாது போய் விட்டது!

தன் பிள்ளையைக் கையில் ஏந்தியவாறே கடைசியாக வெளியேறிய விஜய், மற்றவர்களைப் போல்

உண்டியலுக்கு முன்னிருந்து வெறியேறும் வழி வழியாக சற்று பிரகாரத்திற்குள் செல்லாமல், தரிசன வரிசையிலேயே நடந்து வந்ததினால், நிலாப்பெண் அவன் கண்ணில் பட்டுவிட, "அண்ணி! பாப்பா இங்க இருக்கா" என ஓங்கிய குரல் கொடுத்தான்.

கோவிலின் நுழைவு வாயில் வரைச் சென்றிருந்த அன்பரசி, அந்தக் குரலில் பதறிக் கொண்டு திரும்பியதில், அம்மனுக்கு நேரெதிரே வீற்றிருந்த சிம்மரூபத்தின் மீது மோதி, நிலை தடுமாறி சட்டென விழுந்தாள். "பாத்துக்கா! அவ இங்க தான் இருக்கா... பதறாத போங்க!" என அருகிலிருந்த வைஷ்ணவி, அவளைத் தூக்கி விடவும், சற்றே நிதானித்தவளை மேலும் வாட வைக்காது பெண்ணரசியே அங்கே வந்து சேர்ந்தாள்.

பிள்ளையை வாரி அணைத்துக் கொஞ்சுவாள் என அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அவளோ பெண்ணை அடி வெளுத்து விட்டாள்.

"என்ன பழக்கம் பழகியிருக்கே?"

"எல்லாரும் சாமி கும்பிட்டுட்டு இருக்கும் போது... அங்கேயே நின்னு சாமி கும்பிட வேண்டியது தானே?"

"என்ன ஓட்டம் வேண்டிக்கிடக்கு?"

"வர வர, அடமும் திமிரும் ரொம்ப ஜாஸ்தியாகிப் போச்சு..."

"அம்மா சொல்ற பேச்ச கேட்க முடியாதா... உன்னாலா?"

"ஆதி சமத்துப் பையனா மாமாகிட்ட இருந்தான் தானே? உனக்கு மட்டும் என்ன புது சட்டமா?"



"ராஸ்கல்! இன்னொரு தடவை இப்படி செய்தே? தூ போட்டிருவேன்..." என மாறி மாறி அடி விழவும் பிள்ளை வீறிட ஆரம்பித்தது.

இரண்டே எட்டில் மனைவியை அடைந்த வெற்றி வேந்தன் "அன்பரசி!" எனப் போட்ட அதட்டலில் அன்பரசியின் செய்கை குறைவதற்குப் பதிலாக கூடியது தான் அங்கே மேலும் சில பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது!

"சும்மா... என்னையே அதட்ட வந்திடுங்க! சொல்ற பேச்சக் கேட்காம அவ பாட்டுக்கு எங்கயாவது ஓடிப் போகட்டும்... அதை கேட்காதீங்க!" எனக் கணவனைச் சாடியவள், மீண்டும் பிள்ளையை அடிக்கக் கை ஓங்கினாள்.

"இப்போ நீ நிறுத்தலை... கோவில்னு கூடப் பார்க்காம இழுத்து அறைஞ்சுடுவேன்" என்றபோது வெற்றிவேந்தனின் குரல், அவளுக்கு மட்டும் கேட்கும்படி இருந்தாலும் மிக தெளிவாய், தீர்க்கமாய் இருந்தது! முந்தைய அதட்டலைவிட, தற்போதைய அழுத்தம் அன்பரசியைத் திகைக்கச் செய்து, சிலையென உறையச் செய்தது!

களேபரத்திற்குக் காரணமான அன்பரசியே அடங்கி விட்டதால், அப்போதைய சிறு சல சலப்பிற்குப் பின்னர் உறவினர்களிடையே ஆழ்ந்த அமைதி நிலவியது! அந்த அமைதி, மூன்று பிரகாரங்கள் முடிந்து கோவிலின் சுற்று பிரகாரத்தில் அமரும் வரை நீடிக்க, அதைக் கலைத்துப் பெருமை வைதேகியையே சாரும். பிள்ளைகள் மூவரையும் தமிழ், விஜய் மற்றும் வைஷ்ணவியிடம்

கொடுத்து, வெளியே வைத்திருக்கச் சொன்னவர், "அன்பரசி!" என மெல்ல அழைத்தார்.

பின்னர் "இனி என்ன காரணம் கொண்டும் பிள்ளைகளை அடிக்காதே! அதுவும் என் கண்ண முன்னாடி... தயவு செய்து வேணாம்மா" என்றார் தெளிவான குரலில், கணவனின் அதட்டலிலேயே அதிர்ந்திருந்த அன்பரசிக்கு மாமியாரின் முகம் பாரா கோரிக்கை, ஏதோ செய்ய, அவள் பேச வாய் திறப்பதற்குள், "பிள்ளைங்க மேலிருக்க பாசத்தில நீ அவங்களை அளவுக்கு அதிகமா பாதுகாக்கிறதை என்னால புரிஞ்சுக்க முடியுதும்மா. ஆனா, அந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எல்லை மீறிப் போய்... பசங்களை அடிக்கிற அளவுக்கு வருதுன்னா என்னால அதைப் பார்த்திட்டு இருக்க முடியல. தயவு செய்து, அவங்க என்ன தப்பு செய்தாலும் அவங்களை அடிக்காதேமா. என் மனசு தாங்க மாட்டேங்குது!! இந்த பிள்ளைங்க பிறக்கிறதுக்காக நீ கும்பிட்ட சாமியும், ஏறின கோவிலும், இருந்த விரதமும் எனக்குத் தெரியும்! அதனாலேயே என்னால உன்னோட பயத்தைப் புரிஞ்சுக்க முடிஞ்சது... ஆனா இப்போ... அதே பிள்ளைங்க உன்னோட இந்த பயத்தால அழறதை என்னால பார்க்க முடியல! வலிக்குது... வலிக்குதுன்னு என் பேத்தி என்னமா துடிச்சிட்டா தெரியுமா?" என்றவரின் கண்களில் பாசமும், கண்ணீரும் அதை விடவும் மேலாய் கண்டிப்பும் நிரம்பி வழிந்தது!

"அத்தே!" என அவள் பதில் சொல்லத்துவங்கும் போதே, வைதேகி "எனக்கு உன் மேல கோபமில்லைம்மா. வருத்தம்!" என்றதோடு எழுந்துவிட, அவருடன் எழுந்த



வெங்கட்ராமன் "வெண்ணிலா அழுததில் கொஞ்சம் அப்செட் ஆகிட்டாம்மா. சீக்கிரமே சரியாகிவிடும்" எனத் தேற்றியதோடு விட்டிருக்கலாமோ? வார்த்தைகளின் போக்கில், மருமகளைச் சமாதானப்படுத்தும் எண்ணத்தில் மேலும் சிலவற்றை அவர் பேச, அன்பரசிக்குப் பலத்த அதிர்ச்சி ஏற்பட்டது!

அவளது அதிர்ச்சிக்குக் காரணம் - "நேத்து... நீ குழந்தைகளை யார்கிட்டயும் விடாம நம்மகிட்டேயே நிறுத்திக் கிட்டதில் எனக்குக் கூட கொஞ்சம் வருத்தம் தான்மா. ஆனா, வைதேகி தான்..." அவளுக்கு ஏற்பட்டிருக்க அதிர்ச்சில... பிறந்த நாளே வேணாம்கிற அளவுக்குப் போவான்னு நினைச்சேன். ஆனா, அந்த அளவுக்குப் போகாம... பிள்ளைங்களோட பாதுகாப்புக்குத் மட்டும் போகாம... பிள்ளைங்களோட பாதுகாப்புக்குத்

மட்டும் போகாம... பிள்ளைங்களோட பாதுகாப்புக்குத் தான் செய்றா! விடுங்க!"ன்னு சொல்லி, என்னைச் சமாதானம் செய்தா. அதனால அவளுக்கு உன் மேல கோபமெல்லாம் இல்லைம்மா... சீக்கிரமே சரியாகிடுவா" என்ற வெங்கட்ராமனின் வார்த்தைகள்!

புகுந்த வீட்டு உறவுகள் எழுந்து சென்றுவிட "அம்மா..." எனத் தாயின் முகம் பார்த்த அன்பரசியிடம், கடுமையாகவே விழுந்தன பார்வதியின் வார்த்தைகள்.

"உன் இஷ்டத்திற்குக் கண்டதையும் கற்பனை செய்துகிட்டு எல்லாரையும் படுத்தி வைக்கிற அன்பரசி!" என்றவர், "சம்மந்தியம்மா சொன்னது மாதிரி... எனக்கு வருத்தம்ன்னு எல்லாம் சொல்ல மாட்டேன்! எனக்கு... நீ செய்றது சுத்தமா பிடிக்கலை! உலகத்தில நீ... ஒருத்தி தான் பிள்ளை பெத்து வளக்கிற மாதிரி நீ பண்றது எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கலை! உனக்குச்

சின்னவ தானே... வைஷ்ணவி... என்ன பாந்தமா பிள்ளை வளர்க்கிறா? ஏழு வருஷம் தவமிருந்த பெத்ததால் உனக்கு மட்டும் என்ன கொம்பா முளைச்சிருக்கு? சரி... நான் ஒண்ணு கேட்கிறேன்...நேத்து வந்த சொந்தக் காரங்ககிட்ட பிள்ளையை விட மாட்டேன்னு அவங் களைப் பிடிச்சு வச்சிருந்தியே... அதே மாதிரி வைஷ்ண வியோ, சுபத்ராவோ அவங்க பிள்ளைங்களை உன்கிட்ட விட பயப்பட்டா என்னடியம்மா செய்வே? வைஷ்ண வியை விடு... சுபத்ரா.... ஆகாஷோட அம்மா தானே அவ? மூணாம் மனுஷியா அவனோட வேதனையைப் பார்த்த உனக்கே உன் பிள்ளைங்களோட பாதுகாப்பு உசத்தின்னா... நேரடியா அனுபவிச்ச அவளுக்கு எப்படி யிருக்கும்? சொல்லப் போனா... அடுத்தவர்களிடம் நீ பிள்ளைங்களை விடாத மாதிரி... அவ தான் உன்கிட்ட பிள்ளையை விடத் தயங்கி இருக்கணும்'' என விடாது பொரிந்து விட்டார்.

''ப்ளீஸ்! விடுங்க அத்தே!'' என வெற்றியும்... ''பார்வதி... அமைதியா பேசு! இவளே அரண்டு போயி ருக்கா... நீயும் திட்டினா எப்படி'' எனப் பரமேஸ்வரனும் இடைப்புகுந்ததை அவர் கவனிக்கவே இல்லை எனலாம்!

அவருக்கு, நேற்று தன் பெண்ணைத் தாங்கிப் பேசிய சம்மந்தியம்மா. இன்று வருத்தப்பட்டுப் பேசியதே மனதிலாடியது! கூடவே ''வலிக்குதும்மா...'' என்ற பேத்தியின் அழுகை வேறு, கோபத்தைக் கிளறி விட் டிருந்தது!

எப்போதுமே, ஒரு தாயாருக்குத் தன் பெண் தன் னிடமிருப்பதை விட புகுந்த வீட்டில் பாந்தமாய்



பொருந்துவதும், மாமியாரிடம் நற்பெயர் வாங்குவதும் தானே பெருமை? நேற்று, மருமகளைப் புரிந்து கொண்டு அவளுக்காய் பரிந்து பேசிய அதே சம்மந்தியம் மாள், இப்போது மன வருத்தத்தோடு எழுந்து செல்வதை பார்வதியால் தாங்க முடியவில்லை!!

கோபத்தில் இரைந்துவிட்டு அவர் எழுந்து கொள்ள, ''அம்மா...நா...பசங்களுக்கு...என்ன...'' என அன்பரசி துவங்க, ''இப்படியே பயந்துட்டே இரு! எந்த மனுஷங் களையும் நம்பாம...நீயே உன் பிள்ளைங்களை ஒத்தாளா வளர்த்திடுவியா என்ன? கொஞ்சி மகிழ குழந்தை வேணும்கிற மாதிரி கூடி வாழ சுற்றமும் வேணும் அன்பரசி! உன்னோட அனாவசிய பயத்தால்... நிறைய பேரோட பாசத்தை நீ இழக்கிறே!'' என எச்சரித்து விட்டு, விடுவிடுவென வெளியே நடந்துவிட்டார்.

''அம்மா... நீ பசங்களை அடிச்சதில் அதிர்ந்து போய்ட்டாடா! அவ பேசினதை மனசில வச்சுக்காதே கண்ணம்மா! கண்ணைத் துடைச்சுக்கோ...'' என மகளின் தலை வருடிய பரமேஸ்வரனுக்குத், தனது சமா தனத்தை விட வெற்றியின் சமாதானமே அன்பரசியை நேர் செய்யும் என்ற எண்ணம் பிறக்க, அவரும் அங் கிருந்து நகர்ந்தார்.

தற்போது நடந்து முடிந்த விஷயங்களை, மிக மெது வாக, அன்பரசியின் மனம் நோகாதபடி, ஓர் மனோத் தத்துவ மருத்துவரின் அணுகுமுறையுடன் மெல்ல மெல்ல எடுத்துரைக்க வேண்டும் என்றெண்ணியிருந்த வெற்றிக்கு, ஒரே மணி நேரத்தில் மனைவியின் உணர்ச்சிகள் வேகவேகமாய் பந்தாடப்பட்டதில் மிக்க

பரிதாபமே எழுந்தது! கண்களை அகல விரிந்து கண்ணீரை அடக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த மனைவியைத் தோளோடு அணைத்து, நெற்றியில் முத்தமிட வேண்டுமென துடித்த கரங்களை, கோவில் வளாகம் தடுத்துவிட, அவளது கைப்பற்றி மெல்ல எழுப்பினான்.

"வெற்றிப்பா... நான்... நான்" என அவள் தடுமாற, அதற்குப் போட்டியாய் கண்ணீர் வேறு ஆறாய் ஓடிக் கொண்டிருந்தது! "ஷ்" என வாய் மீது விரல் வைத்துக் காட்டியவன், மெல்ல அவளை வழிநடத்தி, பிள்ளைகள் இருந்த இடத்திற்குப் பின்னே அழைத்துச் சென்றான்.

முன்னர் போல், பிள்ளைகளிடம் ஓடாது (ஓட முடியாத வகையில் அவளைச் சிற்சில பேச்சு வார்த்தைகள் சிலையாக்கியிருந்தனவே) தம் பெற்றோருடன் அவர்கள் உரையாடி மகிழ்வதைக் கண்டிருந்த அன்பரசிக்கு மேலும் அதிர்ச்சியைக் கொடுப்பது போல், அவளது பிள்ளைகள் மேலும் பேசினர்!

"பாத்தீ... நானும் ஆதியும் பாக்-ல *சீசா* வெளாடுவோம்... அப்பா வருவா... நா... ஆதி...ம்மா..ப்பா எல்லா வெளாடுவோம்..." என ஏதோவொரு கேள்விக்குப் பதில் கூறிய வெண்ணிலா, "அப்பித்தானே ஆதி?" எனத் தன் தமையனையும் கூட்டுச் சேர்க்க முற்பட்டாள்!

தங்கையின் சொற்களை ஒப்புக் கொண்ட தமையன், அதோடு நிறுத்திக் கொள்ளாமல் கூடுதலாய் சிலவற்றையும் கூறினான்! "அம்மா...எல்லாம் வெளாடுவோம்! இங்க தான் வெளாடவே இல்ல...ம்மா கொன்னு சொல்லித்தா.." என ஒற்றை விரல் நீட்டி, அன்பரசி



அவர்களைத் திட்டுவது போல் பாவனை செய்யவும், இங்கே அன்பரசிக்கு அவர்களைப் பார்க்கப் பாவமாய் இருந்தது!

"ஆம்மா...ம்மா என்ன அச்சுத்தா மாம்மா... தொம் தொம்... அச்சுத்தா... பாப்பாக்கு வச்சு (வலித்தது)..." என உதட்டைப் பிதுக்கிய பெண்ணரசி, தன் முதுகை வருடிக் கொள்ள முயல, தமிழ் அவளைத் தேற்றினான்!

தொடர்ந்து "ம்மா...தொம்...தொம் அச்சுவாளா? நா ம்மா கிதக்க போவ மாத்தேன்... பாத் அம்மா..." என்று வெண்ணிலாவும், "பாத்தீ கூதவே இக்கலாமா?" என்று அவளுக்குச் சமாதானமாய் அவளது தமையனும், பேசவும் அன்பரசிக்கு அடக்கமாட்டாது அழுகை பீறிட்டது!

அதற்கு மேலும் உரம் சேர்ப்பது போல், "ச்சே! ச்சே! அப்படிச் சொல்லக் கூடாதுடா குட்டீஸ்! நீங்க ரெண்டு பேரும்...அம்மா சொல்ற பேச்சைக் கேட்டு நடந்தா அம்மா அடிக்கவே மாட்டாளே! இன்னைக்கு நீங்க அம்மா சொல்றதைக் கேட்காம, வெளிய ஓடி வந்துட்டீங்க இல்லையா... அதான் அம்மாக்குக் கோபம்! நீங்க சமத்தா... அம்மா சொல்ற பேச்சுக் கேட்டா... அம்மா அடிக்கவே மாட்டா!" என்ற மாமனாரும், "நீங்க அடம் செய்தா... சொல்ற பேச்சுக் கேட்காம இருந்தா அம்மா மாதிரி பாட்டியும் தான் அடிப்பேன்! என்ன ஓகேவா?" என்ற மாமியாரும் உயர்ந்து நின்று அவளை வதைத்தனர்!

ஏற்கனவே பலமாக உடைந்திருக்கும் மனைவியை மேலும் வதைக்க விரும்பாது. அவளது தவறை மட்டுமே

மிதமான வார்த்தைகளால் சுட்டிக்காட்ட விரும்பிய வெற்றிவேந்தன், ''அளவிற்கு மீறினால் அமுதமும் நஞ்சுன்னு இப்போ புரியுதா?'' எனக் கேட்டதில், அன்பரசிக்குத் தன் அணுகுமுறை தவறென்று உரைத்தது!

# 14



தான் நடத்தி வைத்த களேபரத்தின் விளைவாக, அன்பரசியைத் தன்னுள் புதைத்துக் கொண்ட அன்பரசியாள், ''அம்பாளை... ஒரு முறை பார்த்திட்டு வரட்டுமா?'' எனக் கணவனிடம் அனுமதி கேட்டு, பத்து நிமிடங்களுக்கும் மேலாய் முத்துமாரியின் முன்னே நின்று மனதார வேண்டிக் கொண்டாள்.

அம்பாள் சன்னதியை விட்டு வெளியே வந்ததும், வெற்றியின் முகம் பார்த்துக் கொண்டு, சிறு பெண் போல் நின்றவளைக் காணப் பாவமாய் இருக்க, ''எல்லாரும் காருக்குப் போயாச்சு அன்பு! நாமளும் போகலாமா... பசங்க உன்னைத் தேடப் போறாங்க...'' என்றான் வாகனம் நின்ற திசையைக் காட்டியவாறே.

''தேடுவாங்களா?'' எனப் பரிதாபமா கேட்டவளுக்கு ''அவங்களுக்குத் தான் என்னைப் பிடிக்கலை... அம்மா வேணாம்ன்னு சொல்லிட்டாங்களே!'' எனக் கூறுகையில் அழுகை வேறு பொங்கிவிட்டது! ''லூசு மாதிரி ஏதாவது பேசாம வா... சின்னக் குழந்தைங்க தானே?



சீக்கிரம் மறந்துடுவாங்க!'' என்றவாறே அவன் கைப் பிடித்துக் கூட்டிச் செல்ல, ''பசங்க மறந்திடுவாங்க... ஆனா... அத்தே... மாமா... அப்புறம் அம்மா...தமிழைக் கூடத் திட்டிட்டேனே'' என அதில் ஒன்றைப் பிடித்து மறுகிப் போனாள் அன்பரசி.

''அவங்க எல்லாருக்கும்...என்னை விட உன்னைத் தான் ரொம்பப் பிடிக்கும்...அதனால் சீக்கிரம் சரியாகி விடும்!'' என அவன் அதற்கும் ஓர் சமாதானம் கூற, ''அம்மாக்கு...என்னை விட உங்களைத் தான் பிடிக்கும்'' என அதனுள்ளும் ஒன்றைத் தேடி, முகம் வாடிப் போனாள், தாயை உணர்ந்த பெண்ணாக.

''சும்மா... சும்மா... எல்லாத்துக்கும் கவலைப்படக் கூடாது, அன்பு!'' என அவள் வேறு அர்த்தம் எடுத்துக் கொள்ளாத வண்ணம் வார்த்தைகளைக் கோர்த்தவன், குரலிலும் லேசான அழுத்தத்தைக் கொண்டு வரவே, அவனது அரசியார் பணிவுடனே நடந்து வந்தாள்.

பயணம் துவங்கியதும் ''பிரணவ்வை நான் வச்சுக்கட்டுமா, வைஷு?'' என ஒரு வித குற்ற உணர்வோட கேட்ட அன்பரசியிடம் ''என்ன கேள்விக்கா? தாராளமா வச்சுக்கோங்க!'' என ஆசையோடு தூக்கிக் கொடுத்தாள் விஜயின் மனைவி, தாயார் கூறிய வார்த்தைகளில் இருந்த உண்மை உரைக்க, இப்போது வைஷ்ணவி பிள்ளையைத் தர மறுத்திருந்தால், மனதிற்கு எவ்வளவு சங்கடமாக இருந்திருக்கும் என்பதையும் மாறி மாறி யோசித்தவாறே வந்த அன்பரசி, தொடர்ந்த இரண்டு மணி நேரப் பயணத்திலும் பிரணவ்வைத் தன்னிடமிருந்து இறக்கவே இல்லை!

திருச்சியை நெருங்குகையில், அன்பரசியும் பிரணையும் ஒரு சேர உறக்கத்திற்குச் சென்றிருக்க, பிரணவ்வைத் தூக்கிக் கொண்ட வெற்றிவேந்தன் மனைவியை மெல்ல தட்டியபோது தான், அவன் உடம்பில் மெலிதாய் சூடேறியிருப்பது புரிந்தது!

வீட்டினுள் வந்து மாத்திரை, மருந்து என உட் கொண்ட போதும் காய்ச்சல் குறையாதிருக்க, சோர்ந்து படுத்திருந்த அன்பரசியின் கன்னம் தொட்டு "ஆ.. ஆவா?" எனச் சுத்திச் சுத்தி வந்த பிள்ளைகளைப் பார்க்கையில் அன்பரசிக்கு மீண்டும் கண்ணீர் பெருகியது! இவர்களைப் போய் அடித்தோமே என்ற கழிவிரக்கத்தில் மேலும் கண்ணீர் பெருக, அதனுடன் சேர்ந்து காய்ச்சலும் பெருகியது.

காய்ச்சலில் படுத்திருந்த அன்பரசியை ஒரு முறைக்கு இருமுறையாய் திரும்பிப் பார்த்த வெற்றிவேந்தன் "அம்மா, பசங்க ரெண்டு பேரும்...ஒரு வாரத்திற்கு இங்கே இருக்கட்டும். நானும் அன்பரசியும்...இப்போ சென்னை கிளம்புறோம்!" என்றான் அறிவிப்புப் போல.

"என்னை விட்டுட்டுப் பசங்க இருந்ததே இல் லையே?" என அன்பசியும், "நீயும் இல்லாம... அன்பும் இல்லாம பசங்க இருப்பாங்களா, வெற்றி?" என வைதேகியும் ஒரு சேரத் திகைக்க "எல்லாத்துக்கும் ஒரு முதல் தடவை வேணுமில்லையா? ஒரு வாரம் தானே... சீக்கிரம் போய்டும்!" என இருவருக்குமாய் பதில் சொன் னவன், "மூணு பேருமா, இங்க இருக்கட்டும், மாப் பிள்ளை! ஒரு வாரம் கழிச்சு நாங்களே கொண்டு வந்து விடுறோம்" என்ற பார்வதியிடம் "அன்புக்குக் காய்ச்சலாக



இருக்கே, அத்தே! இங்கிருந்தா, பசங்க மூணு பேருக் குமே ஒட்டிக்கும்...நாங்க கிளம்புறோம்" என முடித்து விட்டான்.

அவனது அந்த அழுத்தமான குரலை மீறும் எண்ணம் அங்கிருக்கும் யாருக்குமே வராதபடியால் அன்பரசியும் வெற்றியும் மட்டுமாய் சென்னைக்குப் பயணப்பட்டனர்.

வீட்டை விட்டுக் கிளம்பும் முன்னர், ஓர் சங்கடத் துடன் தன் மாமியாரிடம் சென்றவள் "என்னை மன்னிச் சுடுங்க, அத்தே! இனிமேல் பசங்களை... என்ன காரணம் தொட்டும் அடிக்க மாட்டேன்! இது பத்து மாசம் சுமந்து பெத்த என் பசங்க மேல சத்தியம்! என்னை நம்புங்க, அத்தே!" என்றாள் நடுங்கும் குரலில்.

வருவதற்குத் தயாராய் இருந்த அவளது அழு கையைத் துடைத்த வைதேகி, மருமகளின் முகவாயைத் தொட்டு அவளின் முகம் நிமிர்த்தி, "எதுக்கு எடுத் தாலும்... பயப்படறதையும், அழறதையும் நீ நிறுத்தினா தான். அத்தை உன்னை மன்னிப்பேன்! என்ன நிறுத் திடுறேன்னு சொல்லு... நானும் மன்னிச்சுடுறேன்!" என்றார் அவரும் சாதுர்யத்துடன்.

"வெற்றி, இதை எங்கேயோ கேட்ட மாதிரி இல்ல... அவனை நிறுத்தச் சொல்லு... நான் நிறுத்துறேன்... அப்படி! அம்மா... வரவர அநியாயத்திற்குத் தமிழ் சினிமா பார்க்கிறாங்கடா!" என விஜய் யோசிப்பது போல், பாவனை செய்ய, சில மணி நேரங்களாய் நிலவிய இறுக்கமான சூழ்நிலை சட்டென வடிந்தது.

தாயையும், தந்தையும் முதன் முதலாக பிரிந்திருக்கப் போகும் கன்றுகள் அவர்கள் கிளம்புவதைப் பார்த்தால்

அழுது அடம் செய்வார்களோ என்ற எண்ணத்தில் தமிழுடன் அவர்களைப் பின்பக்கம் அனுப்பி வைத்திருந்தனர் பெரியவர்கள். பிள்ளைகள் இருந்த பக்கம், ஒரு முறை கண்ணால் துழாவிவிட்டு, வெற்றியை மீண்டும் ஒரு முறை கெஞ்சலாகப் பார்த்தாள் அன்பரசி. ஆனால், அவனோ கல் போல் அசையாது நிற்க, மெல்ல முன்புறம் சென்றவளின் முகம் காய்ச்சலையும் மீறி சோர்ந்திருந்தது!

தாய் அறியாத சூலுண்டா என்பதற்கிணங்க, பெண்ணின் வாடிய முகத்தினுள் மேலும் தோன்றிய வாட்டத்தை உணர்ந்த பார்வதி ''பசங்களை நாங்க பத்திரமா பார்த்துக்கிறோம்! கண்டதையும் நினைச்சு மனசைக் குழப்பிக்காம உடம்பை நல்லபடியா பார்த்துக்கோ'' என்றார் கன்னம் தடவி.

''தேங்க்ஸ்மா... சாரிமா'' என நன்றியும், மன்னிப்புமாய் விடை பெற்று, காரினுள் ஏறிய அன்பரசியை, சென்னை வரையிலும், ஏன் அன்றைய நாள் கழிந்து, அடுத்த நாள் காலை வரும் வரையிலும் கூட பேசவிடவில்லை, அவளது அன்புணர்ந்த கணவன்!

அவள் பேசத் துவங்கும் போதெல்லாம், வாய் மேல் விரல் வைத்து சைகை செய்தவன், மேலும் அவள் பேசாத வண்ணம் ஓர் தூக்க மாத்திரையைக் கொடுத்து அவளை உறங்க வைத்து விட்டான்.

காலையில் எழுந்ததும், ''ஆதிக்கண்ணா...எங்க போயிட்டீங்க...கட்டில் விளிம்பிற்குப் போகக்கூடாதுடா ராஜா... விழுந்திடுவே! அம்மாகிட்ட வந்து...இன்னும் கொஞ்ச நேரம் தாச்சு... பண்ணு... வா ராஜா! வா! வா!''



எனக் கொஞ்சியவாறே, கண்ணைத் திறக்காமல் மகனை அழைத்த மனைவியைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது!

அவளது அதிகப்படியான பாதுகாப்பைக் குறைக்கும் எண்ணத்தில், பெரிய தண்டனையைக் கொடுத்துவிட்டோமோ என வருத்தமாய் இருந்தபோதும், இதுவும் ஓர் நன்மைக்குத் தான் என்ற எண்ணத்தில், மனைவியின் திறக்காத இமைகளை வருடிவிட்டு, அவளை உறங்க வைக்க முயன்றான்.

அவளோ, உறக்கத்திற்குப் பதிலாக விழிப்பிற்கு அழைப்பு விடுத்தது எழுந்து அமர்ந்து கொண்டாள். கூடவே ''ச்சே! பசங்க ரெண்டு பெரும்... ஊர்ல இருக்காங்க...இல்ல! நான் மறந்தே போய்ட்டேன்...'' என ஒரு கையால் தலையிலும் அடித்துக் கொண்டவள், மறு கையால் திருச்சி வீட்டு எண்ணை அழுத்தினாள்.

''மாமா... நான் அன்பரசி பேசுறேன்.''

''.....''

''நாங்க...நேத்து நைட் பதினோரு மணி இருக்கும்... வந்துட்டோம் மாமா.''

''.....''

''பசங்க என்ன பண்றாங்க மாமா? தூங்குறாங்களா?''

''ரொம்ப அடம் பண்றாங்களா...

''எங்க ரெண்டு பேரையும்... கேட்டு அழுதாங்களா... மாமா?'' எனக் கேள்விகளை அடுக்கித் திருப்தியான பதிலைப் பெற்றுக் கொண்ட பின்னரே, அழைப்பை வைத்தாள்.

''ரெண்டு பேரும்... தூங்குறாங்களாம்! நைட் தூங்கும்போது... என்னைத் தேடினாங்க... போல!'' என்றவளிடம் படுக்கையை விட்டு எழுந்தவள், ''எழுந்ததும் பேசச் சொல்றேன்னு... மாமா சொன்னாங்க!'' என்றாள் கூடுதல் தகவலாய்.

தனக்கும், அவனுக்குமாய் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தவள் ''ஆதிக்குட்டி, என் பின்னாலேயே வர மாதிரி இருக்கு வெற்றிப்பா'' என ஒரு முறையும், ''நிலாக்குட்டி.... பால்... பால்ன்னு நாக்கைச் சுழட்டிக் குட்டிக்குமே... அதுவுமே கண்ணில நிக்குது'' என ஒரு முறையும் சொல்லிவிட்டு, ஏக்கமாய் தொலைப் பேசியைப் பார்த்தாள்.

''அன்பு! ஏன்... பசங்களை அங்க விட்டு வந்தேன் தெரியுமா?'' என்றான் அவள் முகத்தைப் பார்த்தவாறே.

''ஹ்ம்ம். ஒரு வாரமா பசங்களை.. யார்கிட்டயும் விடாம நானே வச்சிருந்தேன் இல்ல. அதில அவங்களுக்கு ஏற்பட்ட சங்கடத்தைத் தீர்க்கிறதுக்காக! நானும் அதனால் தான் சரின்னு வந்தேன்...'' என்றவள், ''அம்மா... கூட என்னை நிறைய தடவித் திட்டியிருக்காங்க! ஆனா, அத்தே...கல்யாணமாகி வந்ததிலிருந்து என்னை ஒரு வார்த்தைக் குறைவா சொன்னதில... பெண்ணில்லாத குறைக்கு என்னை அவங்க சொந்தப் பொண்ணு மாதிரி தான் நடத்தினாங்க! அவங்க மனசைச் சங்கடப்படுத்திட்டோமே... அதுக்குப் பிராயச்சித்தமா பசங்களை அங்க விட்டு வரலாமேன்னு தோணுச்சு!'' என்றாள் அன்பரசி. பெரும் பிரச்னை ஏதும் செய்யாமல், பிள்ளைகளை அங்கு விட்டு வந்ததற்குக் காரணமாய்.



''இல்லை! நான் அம்மாவுக்காக குழந்தைகளை அங்க விட்டுவரலை!'' என மறுப்பாய் தலையசைத்தவன், தன் தர்மபத்தினி திகைக்கவும் ''உனக்காக'' என்றான் கூர்மையுடன்.

''ஆமா! உனக்காக தான்! அது...ஏன்னு உனக்கே புரியும்! நான் சொல்லமாட்டேன்!'' எனப் புதிர் போட்டான்!

திகைத்த முகத்தில், விழிகள் தாமரையாய் விரிந்திருக்க, கணவனையே பார்த்திருந்த அன்பரசியின் கையைத் தன் இரு கைகளுக்கும் இடையே வைத்துக் கொண்டவன், ''நான் சொல்றதைக்... கொஞ்சம் பொறுமையா கேட்கிறியா. அன்பா! ஒரு...பத்து...ம்ம்ம் அஞ்சே நிமிஷம் தான்!'' என அனுமதி கேட்டான். அவள் தலையசைத்ததும்.

முதலில் ''நான் சொல்லணும்ன்னு நினைச்ச நிறைய விஷயங்களை... அத்தையும், அம்மாவுமே சொல்லிட்டாங்க! அது உன் மனசில... ஆழவும் பதிஞ்சுப் போச்சு! முக்கியமா...அது தப்புன்னு உணர்ந்து நீயும் திருத்திக்கிட்டே! சோ. நான் அதைப் பேசப் போறதில்லை!'' என்றான் தெளிவாகவே.

சிறு இடைவெளி விட்டவன், ''அன்பம்மா! நான் சொல்றதை சரியான வித்ததில் புரிஞ்சுப்பேன்னு நம்புறேன்...'' எனப் பீடிகை போட்டுவிட்டு ''இதைச் சொல்றதால, உன் மேல குறை கண்டுபிடிக்கிறேன்னு நினைக்காதே! நீ அளவுக்கு அதிகமா வச்சிருக்க சில விஷயங்களைக் குறைக்க முயற்சிப் பண்றேன்னு நினைச்சுக்கோ!'' என்றான் உண்மையாக.

மேலும் ஓர் சிறு இடைவேளைக்குப் பின்னர், "பசங்களோட பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ... அவ்வளவுக்கு அவங்களோட வளர்ச்சியும் நமக்க முக்கியம் கண்ணம்மா!" "நாம அவங்களை அடக்கி, அடக்கி வைக்க... அவங்க ஓரளவுக்குத் தான்மா அடங்கியிருப்பாங்க... அதுக்கு மேல், அந்த பாதுகாப்பை உடைச்சிட்டுப் போகத்தான் வழி பார்ப்பாங்க! அது பசங்களுக்கு மட்டுமில்ல... எல்லாருக்குமே பொருந்தும்டா..."

"நீயே ஒரு தடவை சொல்லியிருக்கே இல்லையா? உங்கம்மா... சினிமாக்குப் போகக் கூடாதுன்னு சொன்னதுக்காக, பிரண்ட்ஸ்-சோட நைட் ஷோ சினிமாக்குப் போனதா? அது மாதிரி தான்டா..."

"நாம செய்யாதே...செய்யாதேன்னு சொல்லச் சொல்ல...பசங்களுக்கு அதை செய்துப் பார்த்தால் தான் என்னன்னு தோணிடும்!"

"இந்த ஓவர் பாதுகாப்பு... சில சமயத்தில இப்படி எதிர்க்க வைக்கிறதோடு... சில சமயம் பசங்களை ஒரு மாதிரி முடமாக்கிடும்... முடம்ன்னா- கை, கால் முடம் இல்லை... தன்னம்பிக்கையை, தைரியத்தை அப்படியே முடக்கிப் போட்டுடும்! அவங்க பிற்காலத்தில் நல்ல மனுஷங்களா... சுயமா சிந்தித்து... ஆழமா யோசிக்கிற தன்மையை இழந்திடுவாங்க...எல்லாத்துக்கும் அம்மா - அப்பா கையை எதிர்பார்க்கிற அளவுக்குப் போய்டும்மா" எனக் கூறி முடித்தவன், மனைவியின் முகத்தில் சிந்தனைக் கோடுகள் ஓடுவதை உணர்ந்து.

"பாதுகாப்பு என்ற பெயரில் அவங்களோட தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் நாமளே அழிக்க



வேண்டாம்! தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் கூடவே தற்காப்பையும் சேர்த்தே வளர்ப்போம்!" என்றாள் உறுதிமொழி கேட்பது போல்.

"நீங்க சொல்றது... எனக்குப் புரியுது, வெற்றிப்பா! நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படியே நடந்துக்கிறேன்..." என உணர்ந்து கூறியவள், "என்னையும் மீறி... என்னையும் மீறி... நான் ஏதாவது தப்பு செய்தா... திருத்துவீங்க தானே?" எனக் கூறவும், கணவனுக்கு உருகிவிட்டது.

"கண்டிப்பா கண்ணம்மா!" என உறுதிக் கொடுத்த வனின் கடமை, அத்தோடு முடிந்து விடவில்லை.

திருச்சிக்குப் பேசி, அரை மணி நேரமான நிலையிலும், குழந்தைகளின் தொலைப்பேசி வராது போக, அன்பரசியின் பொறுமை முடியாது போனது!

தொலைப்பேசியை எடுத்து, திருச்சி நம்பரை அவள் அழுத்தியபோது, வெற்றியின் கரங்கள் இணைப்பைத் துண்டித்தன. அவனை நிமிர்ந்து பார்த்தவள், "பசங்க எழுந்தாங்களான்னு தெரியல, வெற்றிப்பா? கேட்டுட்டு வச்சுடுறேன்" என்றாள் கெஞ்சுதலாக. அவனது பதிலை எதிர்பார்க்காமல், அவள் மீண்டும் எண்களை அழுத்தவே "அன்பா! பசங்க...எழுந்ததும் அப்பவே கூப்பிடுவாங்க! நீ...போய் சமையல் வேலையைப் பாரு" எனக் கைப்பிடித்து எழுப்பிவிட்டான், கணவன்.

"ப்ளீஸ்" என அவள் மீண்டும் கெஞ்ச, "நான் சொல்றதைக் கேட்டு நடக்கிறேன்னு சொல்லியிருக்கே! இப்போ...நான் சொல்றேன்... போன் பண்ணக் கூடாது!" என்றான் கண்டிப்புடன்.

அவள் தயங்கி நிற்கவும், ''இது தான், அன்பா...நான் சொன்ன கூடுதல் பாசம்... கூடுதல் பாதுகாப்பு... அளவுக்கு மிஞ்சிய பயம்! அவங்க... நம்ம வீட்டில...நம்ம அப்பா - அம்மாகிட்ட... அதாவது ஒரு பாதுகாப்பான இடத்தில இருக்காங்கன்னு தெரிஞ்சிருந்தும். எதுக்கு இவ்வளவு பதட்டப்படறே? அமைதியா இரு, அன்பா! பசங்க எழுந்ததும் பேசுவாங்க! அது வரையில், நீ போனைத் தொடக்கூடாது'' என்று விட்டு, குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

குளிக்கும் பாவனையில் உள்ளே வந்துவிட்ட போதும். அன்பரசியின் நடமாட்டங்களை உள்ளிருந்தே கவனித்தான் அந்தக் கல்லூரி மங்கன்!

தான் சொன்னது போல், சமையல் செய்யச் சொல்லவில்லை என்றபோதிலும், தொலைப்பேசி அருகிலேயே அமர்ந்திருந்த அன்பரசியின் கரங்கள் தொலைப்பேசியின் புறமும் செல்லவில்லை என்பதைத் திருப்தியோடு கண்டவன், மனைவிக்கு வந்திருக்கும் obsessive compulsive disorder (கட்டுக்கடங்காத சிந்தனையும், அதன் விளைவாக தன்னையும் மீறிய செயல்களும் தான் இந்நோய்) என்ற மனநோய்க்கு, Exposure and response prevention (அவர்களையும் மீறிய செயல்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அக்காரணங்களை அடிக்கடி நிகழ வைத்து, அதே சமயம் இம்மனநோய்க்கு உள்ளானவர்களைச் சொல்லால் கட்டிப் போட்டு, அவர்களை அச்செயலைச் செய்யாது வைக்கும் சிகிச்சை முறை) என்ற அணுகுமுறை தான் சிறந்தது என்ற முடிவிற்கு வந்தான்!



மனைவியை அதிகம் சோதிக்க விடாமல், திருச்சியிலிருந்து அழைப்பு வந்துவிட வேண்டுமே என்ற வேண்டுதலை அவன் முன்வைத்த வினாடி, அது நிறைவேற்றப்பட்டது!

உற்சாகத்துடன் பேசிய குழந்தைகளிடம் அரை மணிக்கு மேலாய் பேசிய அன்பரசியிடமிருந்து, வலுக்கட்டாயமாய் தொலைப்பேசியைப் பிடுங்கி, கீழே வைத்தான்!

மேலும், வேலைக்குச் செல்லும் முன்னர் ''என் தலை... இந்தப் பக்கம் மறைஞ்சதும், நீ பாட்டுக்கு இந்தப் பக்கம்... திருச்சிக்கு போனைச் சுத்தக் கூடாது! மதியம் பன்னிரண்டு மணிக்கு ஒரு போன்... சாயங்காலம் நாலு மணிக்கு ஒரு போன் அவ்வளவு தான்! அதுவும், பத்து நிமிஷம் தான்...கணக்கு! அதுக்கு மீறி... பேசினது தெரிஞ்சது?'' என ஒற்றை விரல் நீட்டி, அவன் மிரட்ட.

''ரொம்ப ஓவரா மிரட்டாதீங்க? என்ன செய்வீங்க? நான் கணக்கு ஒழுங்கா கத்துக்கலைன்னு... பசங்ககிட்ட சொல்வீங்களா? சொல்லுங்களேன்!'' எனத் தலை சரித்த மனைவியின், தலையில் வலிக்காது குட்டி விட்டு, ''எல்லா நேரமும், ஒரே மிரட்டலை முன்வைக்கிறதுக்கு நான் என்ன...உன்னை மாதிரி முட்டாளா? நிலாவோட அப்பாடி!'' எனக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டவன்.

''வேற என்னவாம்?'' என முறுக்கிக் கொண்ட மனைவியின் மூக்கைப் பிடித்து ஆட்டியவாறே ''பசங்களை... ஒரு வாரமில்ல.. ஒரு மாசத்திற்கு சென்னைக்குக் கூட்டிட்டு வர மாட்டேன்!'' என ஒவ்வோர் வார்த்தையையும், அழுத்தி, நிறுத்தி, நிதானமாய் பேசினான், வெற்றியின் வேந்தன்!

''ஹான்!'' எனத் திறந்த வாய் மூடாது. அவனைப்
பார்த்திருந்தவளின் வாயை, ஒரே தட்டில் மூடியவன்
''சமத்துப் பெண்ணா...அடம் ஏதும் செய்யாம இரு!'' என
வெளியே சென்று மறைந்தான்.

குழந்தைகளைப் பார்க்காமல் அவனாலும் இருக்க
முடியாது என்ற எண்ணத்தில், அவன் கூறிய இரண்டு
அழைப்புகளையும் தாண்டி மூன்று அழைப்புகள்
செய்திருந்தவளின் குட்டு, விஜயால் செவ்வனே
வெளிப்பட, பாரபட்சமின்றி, அழைப்பிற்கு ஒரு நாள்
எனப் பிள்ளைகளின் திருச்சி வாசத்தை, ஒரு வாரத்
திலிருந்து பத்து நாள் ஆக்கியே விட்டான். அன்பரசியின்
அன்புக் கணவன்!

அந்த அதிர்ச்சி வயித்தியம், நன்றாக வேலை
செய்தது என்பதை உணர்த்தும் வகையில் அன்பரசியார்
அடுத்த இரு நாட்களும் ஒரே முறை மட்டுமே பிள்ளை
களிடம் பேசினாள். கூடுதலாய் ''இன்னைக்கு... ஒரே
ஒரு தடவை தான்... பசங்களோட பேசினேன்! அத
னால... ஒரு நாளைக் குறைச்சுக்கோங்களேன்... ப்ளீஸ்''
என மன்றாட வேறு செய்தாள். ஆனால், அந்த மருத்
துவத்திலகமோ ''நான் கொடுத்த சலுகையை... எடுத்
துக்கிறதும் / எடுத்துக்காம விடுறதும் உன்னோட இஷ்
டம்! அதுக்காக, நீ செய்த தப்புக்கான தண்டனையைக்
குறைக்கவெல்லாம் முடியாது!'' எனக் கறாராய் பேசியது!

''ப்ச்'' எனக் காலை உடைத்துக் கொண்டவளை, அமர
வைத்து பதிவு செய்யப்பட்டது ஓர் படக்காட்சியை ஓட
விட்டான் - அதில் மூன்று வயது மதிக்கத்தக்க ஓர்
குழந்தை, வளைந்து நெளிந்து அற்புதமாய்



ஜிம்னாஸ்டிக்ஸ் செய்து கொண்டிருந்தது! அது முடிந்தது,
ஒரு இரண்டு வயது மிதிக்கத்தக்கக் குழந்தை தண்ணீரில்
எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருந்தது! அடுத்ததாய்,
மூன்றரை வயதுச் சிறுவன் ஒருவன் - திருக்குறளை
மனப்பாடமாய் ஒப்பித்தான்!

''ஹய்யோ! என்ன அறிவு.. . பாருங்க... வெற்றிப்பா!
எல்லா குட்டீஸ்ஸும் எவ்வளவு ஸ்மார்ட்டா இருக்
காங்க... பாருங்களே! நம்ம... ஆதியும் நிலாவும் கூட
எந்தவொரு விஷயம்னாலும் சட்டுன்னு புரிஞ்சுப்
பாங்க... அங்களையும் இது மாதிரி ட்ரைன் பண்ணலாமா
வெற்றி!?'' எனத் தாயாய், அவள் பெருமைகொள்ளத்
துடிக்கவும்,

''கண்டிப்பா, அனுப்பலாம்... ஆனா...'' எனச் சந்தேக
மாய் இழுத்த வெற்றிவேந்தன், ''ஏன் வெற்றி? ஒரு
மாதிரி சந்தேகமாய் சொல்றீங்க?'' என மனைவியாளின்
குரல் கூர்மை பெறவும், ''சில பயிற்சிகளை...நாம வீட்டி
லேயே கொடுக்கலாம்னாலும்... சிலவற்றுக்கும் அவங்
களை வெளிய அனுப்பித் தான் ஆகணும்! நீ...தான் அவங்
களைக் கீழேயே விட மாட்டேங்கிறியா? அப்புறம்...
எங்க.. வெளியிடத்திற்கு... அதான் யோசனையா இருக்கு''
என்றான் வருத்தம் போல்.

அவனது வார்த்தைகளில் சிலையென நின்ற அன்
பரசி, சில நிமிடங்களில் சுதாரித்து,

''அவங்களை... என் கைக்குள்ளேயே வைச்சு முடக்க
மாட்டேன், வெற்றிப்பா! அவங்களுக்குப் பிடிச்சதை...
அவங்க செய்யட்டும்'' என்றாள் தெளிவாக. ஆனால்,
உடனேயே அவள் பேசத் துவங்கவும் ''அவங்களைத்

தனியா எங்கேயும் அனுப்பப் போறதில்ல... தகுந்த பாதுகாப்போட தான் போவாங்க! போதுமா!'' என மனைவியின் வார்த்தைகளைப் பூர்த்தி செய்தான்.

சிரிப்புடன், சமையலறைக்குள் திரும்பிய அன்பரசியின் நடவடிக்கைகளை மேலும் ஒரு வாரம் கண்காணித்து விட்டு, விதித்த பத்து நாள் பிரிவை எட்டு நாட்களாய் சுருக்கியவன், மனைவியை அழைத்துக் கொண்டு, சொந்த ஊர் நோக்கிப் பறந்தான்.

வீட்டினுள் நுழைந்ததும் ''ம்மா'' என ஒரு சேரத் தாவிய பிள்ளைகளை இருவரையும் அன்பரசியால், கீழே இறக்கவே முடியவில்லை!

''ம்மா...பலூன் வாங்கினோம்...''

''ம்மா...ம்மா...சாமி கும்ப்தோம்...''

''பெய்யா ஆணை பாத்தோம்...'' என முதலில் தாங்கள் கண்ட புதியவைகளைப் பட்டியல் இட்டவர்கள்.

''ம்மா தேடினோமே... ம்மா தான் வவ்வே இல்லை... ஆ-ஆ வந்துச்சா...ஊச்சி போதாவா...பாத்தீ சொன்னா... ம்மாக்கு ஊச்சி... வவிக்கும்...ஆ போனதும் ம்மா வந்துவா சொன்னா'' எனத் தாயைத் தேடியதைப் பற்றியும், தங்கள் பாட்டி செய்த சமாதானத்தைப் பற்றியும் கூறினர்.

தொடர்ந்து...''ச்சீ...த்தப்பா...சாக்கி வாங்கித் தந்தா...பாத்தீகித கேத்து தான் சாப்தோம்...'' என மிளற்றியபோது, ''பிறரிடம் இனிப்பு வாங்கக்கூடாது'' என்ற அன்பரசியின் சொல்லை மனதில் வைத்திருக்கின்றனர் என்பதை எண்ணி மகிழ்ந்து தான் போனாள், அன்பரசி!



அவளுக்கு உச்சக்கட்ட மகிழ்வைக் கொடுக்கும் வண்ணம், ''ஏய், பசங்களா! பாட்டி சொல்லிக் கொடுத்ததை அம்மாக்குச் சொல்லிக் காம்பிங்க... பார்க்கலாம்'' எனக் கை தட்டி அழைத்த வைதேகி, பிள்ளைகளை அழகாய் பேசவும் வைத்தார்.

''ஆதி... உன் அம்மா பேர் என்ன?'' என அவர் கேட்க,

''அன்பச்சி...'' என முந்திக் கொண்டு பதில் கூறினாள் நிலா.

''ம்ஹ்ம்ம். இது தப்பு! நான் யாரைக் கேட்கிறேனோ அவங்க தான்...பதில் சொல்லணும்!'' என வைதேகி மிரட்டியதும், ''ஆதி... தான் சொல்வான்...'' என மார் தட்டினான் மைந்தன்.

''ம்ம்.. ஆதி... சொல்லு.''

''அன்பச்சி'' என கூறியவன், தாத்தாவின் எச்சரிக் கையைப் பார்த்துவிட்டு ''அன்பரசி'' எனத் திருத்தினான்.

''குட் பாய்!'' ''இப்போ நிலா! உங்க அப்பா பேர் என்ன?''

''வெட்டி... த்தப்பு... த்தப்பு...ம்ம்...வெற்ற்றி வேந்தன்'' எனத் தனக்கு வராத ''ற்'' -இல் அதிக கவனமும், அழுத்தமும் கொடுத்தாள் பெண்ணரசி.

''குட் கேர்ள்!'', ''ஆதிக்கண்ணா, உங்க அப்பா என்ன வேலை செய்றான்? வேலை...வேலை... வொர்க்... வொர்க்...'' எனக் சைகை காண்பித்தார் வெங்கட்ராமன்.

இருவரையும் மாறி மாறிப்பார்த்த ஆதவன், தன் தந்தையையும் ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு ''ஊச்சிப் போதது...'' என வாய்ப் பொத்திச் சிரித்தான்.

''கம்ப்பவுண்டர்... மாதிரி சொல்றான்... போங்கம்மா!'' என வெற்றிவேந்தன் சிணுங்க, ''ஒழுங்கா சொல்லு ராஜா! அப்பா... அழறான் பாரு! அவனைச் சமாதானப் படுத்துறதுக்கு... பாட்டிகிட்ட குச்சி மிட்டாய் கூட இல்ல'' என வேதேகி, கண்டித்தும், ''டாக்குட்டர்... கரெக்டா?'' என்றது கன்று.

''குட்... குட்... வெரி குட்!'' என்ற வைதேகி, ''நிலா கண்ணம்மா! உங்க வீடு எங்கடா இருக்கு? பாட்டிக்குச் சொல்லித் தாங்கடா... பாட்டிக்கு மறந்து போச்சு...''
என்றார் பரிதாபமாக.

''ச்சீயன்னை-ல!'' என நிலா கூற, ''ச்சீயன்னைல கிதையாது... தப்பா சொல்தா, நிலா! எங்க வீது...பசந்த் (பெசன்ட்) நகர்ல இக்கு...கரெக்டா பாட்டி?'' எனத் தங்கையைத் திருத்தினான் தமையன்.

''இரண்டு பேரும் கரெக்ட்!'' என ஓர் உலக யுத்தத்தை, ஆரம்பிக்கும் முன்னரே முடிவிற்குக் கொண்டு வந்த வெங்கட்ராமன். ''உங்க வீட்டு அட்ரசை, முழுசா சொல்றவங்களுக்கு...தாத்தா ஒரு சாக்கி தருவேன்'' எனப் பேரம் பேசினார்.

''நா...'' ''நா...'' எனப் போட்டிப் போட்டப் பிள்ளைகள் இருவரும்.

''தூ(2), பஸ்ட் ரோடுடு... த்தப்பு... பஸ்ட் மெயின் ரோடு, பசந்த் (பெசன்ட்) நகர், ச்சியன்னை'' என்றனர் ஒரே குரலில்!



# 15



அழகு தமிழில், செல்லமாய் மிழற்றிய கன்றுகளைக் காணப் பெற்றோர் இருவருக்குமே பெரும் சந்தோஷமாய் இருந்தது! அவர்களின் அறிவாற்றலுக்குப் பரிசாய், வெற்றிவேந்தன் ரிமோட் கார் ஒன்றைக் கொடுக்க, இருவருக்கும் உற்சாகம் கரைப்புரண்டது!

இருவருமாய், தங்களது விளையாட்டுச் சாமானில் மூழ்கிவிட, அவர்களையே வைத்துக் கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த மருமகளின் தலையை வருடிக் கொடுத்த வைதேகி ''ஒரு வாரமும் ரொம்பக் கஷ்டமா இருந்ததாம்மா?'' என்றார் வாஞ்சையாக.

''ஹ்ம்ம்'' எனப் பெருமூச்சு விட்டவள், ''கொஞ்சம்..'' என்றாள் மெல்ல, உடனேயே ''குட்டிங்க ரெண்டு பேரும் என்னைத் தேடினாங்களா அத்தை?'' என்றாள் ஏக்கம் பொங்க!

''தேடினாங்களாவா? அன்னைக்கு நீ அடிச்சதில், ரெண்டு பேரும் என்கிட்டே சமத்தா இருப்பாங்கன்னு நான் மனப்பால் குடிச்சிட்டு இருந்தா...குடிச்சப் பாலைக் கக்க வைக்கிறமாதிரி, உன்னைக் காணலை என்றதும் நிலா அழுத அழுகை இருக்கே? அடேங்கப்பா!?'' என மோவாயில் கை வைத்து வியந்து வைதேகியைப் பார்த்து அன்பரசிக்குச் சிரிப்புப் பீறிட்டது!

ஆனாலும், பெண் அழுதாள் என்ற செய்தி நெஞ்சைக் கசக்க ''ஹய்யோ! குட்டி அழுதாளா? அப்புறம் எப்படி சமாதானம் செய்தீங்க?'' என்றாள் ஆர்வமும், வருத்தமு மாக.

''அவ செஞ்ச குறும்பை வச்சுத் தான்!'' என்ற வைதேகி, ''கோவில, அவ பாட்டுக்கு ஓடி ஒளிஞ்சுட்டா இல்லையா? ரெண்டு நிமிஷம் என்றாலும்... எல் லாரையும் பதற வச்சுட்டாளே! அதனால, அவ செய்த தப்பக்காக சாமி உனக்கு ''ஆ'' கொடுத்திடுச்சு... அந்த ''ஆ'' சரியாகிறதுக்காக... நீ சென்னை போயிருக்கேன்னு சொல்லி வச்சோம்! வெற்றியும்...அப்பப்போ போன் பண்ணி...உனக்கு உடம்பு சரியாகவே இல்லைன்னு சொன்னதில், ஒரு மாதிரி சமாதானம் ஆகிட்டாங்க!'' என மாமியார் முடித்தப்போது, பத்து நாட்களாய் நடந்த தொலைப்பேசி உரையாடல்களில் பிரதானமாய் இடம் பெற்ற ''அம்மா... ஆ சயியாப் போச்சா?'', ''நிலாவும்... ஆதியும் ஓதவே மாத்தோம்!'', ''சாமிகிட்ட சொல்லித் தோம்...இனிமே அம்மாக்கு ஆவே தவாதேன்னு சொல்லியாசுத்து'' போன்ற பிள்ளைகளின் வார்த்தை களுக்கு அர்த்தம் புரிந்தது!

''புரிந்த விஷயம், இன்னொன்றையும் நினைவுப் படுத்த, விளையாடிக் கொண்டிருந்த மக்களிடம் சென்ற அன்பரசி, இருவரையும் கட்டியணைத்துக் கொண்டு ''சாரிடா குட்டீஸ்'' என்றாள் உணர்ச்சிப் பொங்க!

ரிமோட் காரின் பாகங்களை ஓர் பொறியாளனின் நோக்குடன் அலசி ஆராய்ந்து கொண்டிருந்த ஆதவ னுக்கு, காரை விட கண்ணீர் பெரிதாய் போனதில்



''எக்குமா.. சாரிரிரி?'' என்றான் கவலையும், யோசனையு மாக.

''அம்மா.... உங்களை அடிச்சுட்டேன் இல்லையா? அதுக்குத்தான்... எனப் பையனின் கன்னத்தில் அழுந்த முத்தம் வைத்தவள், காரிலேயே கவனமாய் இருந்த மகளைத் தன் புறம் திரும்பி ''இனிமேல், உங்களை அம்மா அடிக்கவே மாட்டேன்!'' என்றாள் கூடுதல் அழுத்தத்துடன்.

தாயின் குரலில், அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்ட இருவரும், பெரிய மனிதர்களின் தோர ணையை முகத்தில் பூசிக்கொண்டு ''பரவாயில்ல மா'' என்றனர். கூடவே, அவளது கண்ணை வேறு துடைத்து விட்டு ''ச்சும்மா... சும்மா அலக் கூதாது! அப்தம்... அப்பாகித்தச் சொல்லி ஊச்சிப் போத்துடுவோம்!'' என்ற மிரட்டல் வேறு வைக்கவும், ''சரியப்பா, பெரிய மனு ஷங்களா!'' என் உச்சி முகர்ந்தாள் தாய்!

நிறைந்த நெஞ்சத்துடன் நால்வருமாய் சென்னை கிளம்பியபோது ''பத்து நாளாய்...வீடே ஜேஜேன்னு ஒரே கோலாகலமா இருந்தது! ப்ச்...இன்னும் இரண்டு நாள் இருந்துட்டுப் போங்களேன் வெற்றி'' என அவரை மீறி, பத்து முறைக்கும் மேலாய் புலம்பி முடித்தார் வைதேகி.

அதற்கு ''இல்லம்மா! வேலையிருக்கும்மா... போயா கணும்'' என வெற்றி முடித்துக் கொண்டே வர, ''பாத்தீ! ச்சும்மா... சும்மா அலக் கூதாது! ப்பா...தா வேலை இக்குச் சொல்தாங்க இல்ல... ஊச்சிப் போத வேலை நெய்ய இக்காம்... போவ வேனாவா?'' என நிலா

அதட்டியதும் "அப்பா... வெற்றிவேந்ததா!" என விளித்து, "உன்னோட கம்பவுண்டர் வேலையை நல்லபடியா பாரப்பா...பாரு! இந்த கம்பவுண்டருக்கு, ரெண்டு பி.ஏ. கம்பவுண்டருங்க வேற... என்ன கொடுமைடாப்பா" என வைதேகி, சலித்துக் கொள்வது போல் பெருமை கொண்டதுடன் வெற்றியின் சென்னைப் பயணம் இனிதே ஆரம்பமானது!

திருச்சியிலிருந்து கிளம்பும் போது நெஞ்சில் நிறைந்திருந்த சந்தோசம், தொடர்ந்த ஒரு வாரும் குறைவின்றி வளர்ந்து கொண்டே சென்றது!

நல்ல மருத்துவனுக்கே உரிய அடையாளமாய், மனைவிக்குத் தான் அளித்துக் கொண்டிருந்த மனோத்தத்துவ சிகிச்சையை செவ்வனே தொடர்ந்தான், வெற்றிவேந்தன். பிள்ளைகளைத் தூர நிறுத்தி (அதாவது, அவளுக்குப் பயத்தை உண்டு செய்யும் காரண கர்த்தாக்களை விளக்கி நிறுத்தி), அவளது தேவையற்ற பயத்தைப் பத்து நாட்களாய் குறைத்து வைத்திருந்தவன், மேலும் அது தலை தூக்காது இருக்கத் தன்னாலான முயற்சிகளை எடுத்துக் கொண்டே இருந்தான்.

அவளது மறைமுக சிகிச்சைகளுக்கு உதவும் பொருட்டு, ஆகாஷும் சென்னை வந்து சேர, அவனது பயம் தெளிந்த முகமே அன்பரசிக்குப் பெரிய வைத்தியமாய் இருந்தது!

"ஆகாஷை... பழைய துள்ளலோடு பார்க்க எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா!" என வியந்தவள், அவன் பள்ளி செல்வதைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லாது போயிற்று!



அந்த மகிழ்ச்சியை மென்மேலும் கூட்டும் வண்ணம், ஆகாஷ் கராத்தே கிளாஸ் சென்றதும் சென்னை தாண்டி திருச்சி வரை முரசு கொட்டி அறிவிக்கப்பட்டது.

அத்தோடு நில்லாமல், அவன் கராத்தே வகுப்பில் பயின்றதை வீட்டில் செய்து காட்ட, அன்பரசியின் வாண்டுகள் இருவரும் அவனது சிஷ்யமார்களாய் மாறிப் போனது, குடும்பத்தினரிடையே பெரும் உற்சாகத்தை உண்டு பண்ணியது என்பதை கூறியே ஆகவேண்டும்!

"ம்மா... டிஷ்யூம்...ஆ...ஊ..." என இருவரும் கையையும், காலையும் தூக்கிக் கொண்டு அன்னையை ஒரு வழி ஆக்கியது. பல வழிகளில் தாத்தா-பாட்டியிடம் பறைசாற்றப்பட்டது!

அவர்களுக்குப் பிடிக்காத எதையும் அன்பரசி செய்யத் தூண்டினால், முழங்கையை மடக்கி, உள்ளங்கையை நேராய் வைத்து, அவள் முகத்திற்கு நேரே வெட்டுவது போல் கொண்டு வந்தவர்களை, "என்னடா கொழுப்பா? அடி பிச்சுடுவேன் ராஸ்கல்ஸ்!" என அன்பரசி ஓங்கி ஒரு அதட்டல் போட்டால் "ச்சும்மா... வெளாட்டுக்குமா..." என அசடு வழிய, அவளைக் கொஞ்சித் தீர்த்தனர்.

அன்பரசியின் ஓர் அதட்டலுக்கு அங்கே அநேக வரவேற்பிருக்க, வேலை முடித்து வந்த வெற்றியின் ஆயிரம் அதட்டல்களும், இரண்டாயிரம் கெஞ்சல்களும் காற்றோடு காற்றாய் கரைந்து மறைந்து போனது குறிப்பிடத்தக்கது!

தேன் கொண்ட மலராய் தந்தையைப் பாவித்து, வேலை முடிந்து வீடு வந்தவனை, வண்டாய் மொய்த்து

எடுத்தனர் அவனின் உயிரினும் மேலான, வட்ட விழிவாண்டுகள்.

வண்டை மறுக்காத பூவாய் அவனும் அவர்களைக் கொஞ்ச, தங்கள் குருவிடம் பயின்ற அன்றைய குத்துச் சண்டைகளைத் தந்தையிடம் அரங்கேற்றினர். இது சில நாட்களே தொடர, ஓர் இனிய மாலைப் பொழுதில் ''ப்பா...வா...வா...என் கூத சந்தை போத வா! நா தான் விஜய்ய்ய்! என் கூத டிஷ்யூம் பொது பாக்கலாம்!?'' என ஆதவன் சாவல் விட,

வெண்ணிலாவோ ''ப்பா...நா அசித்! என் கூதவும் சண்டை போடு'' எனச் சண்டைக்குச் சிலிர்த்துக் கொண்டு நின்றாள்.

''அடேங்கப்பா, அஜித்தும் விஜயும் எம்மாம் உயரமா இருக்காங்க! எனக்கு ரொம்ப பயமா இருக்கே! அன்பரசி... உன் கண்ணுக்குக் கண்ணான ஒத்தை புருஷனைக் காப்பாத்து!'' என வேண்டுமென்றே, மனைவியின் பின்னே சென்று ஒளிந்து கொண்ட கணவனை இழுத்து முன்னே விட்டாரே அந்த அன்பு மனைவி.

''அச்சோ! பயப்படாதேப்பா! நாங்க ச்சும்மா தா அடிப்போம்!'' எனப் பெரிய மனிதனாய் சமாதனம் செய்த ஆதவனிடம் ''நிஜமா?'' என மேலும் ஓர் போலிப் பணிவுடன் கேட்டவன், பயம் பூசிய முகத்துடனே வெளியே வருவது போல் பாவனை செய்தான்.

அவனது பாவனையில் சிரித்த வெண்ணிலா, ''சண்டைக்கு வாப்பா'' என வெத்திலைப் பாக்கு வைத்து அழைக்க, ''அன்பரசி!'' எனப் பெத்தப் பயத்துடன் மனைவியையும் துணைக்கு அழைத்தான்.



''ரொம்ப நடிக்காதீங்க! நீங்க...வீணா சீன் போடறதைக் கண்டு பிடிச்சாங்க. அதுக்கு சேர்த்து அடி பின்னிடுவாங்க.'' என அவள் ஒற்றை விரல் நீட்டி, மிரட்டவும், ''பெரிய இது...போடி! நானே ஒத்த ஆளா இருந்து... இந்த வாண்டுகளை ஜெயிக்கிறேன் பாரு! என முரசு கொட்டியவன், ''நீங்க விஜய்? நீங்க அஜீத்? இந்த இரு ஹீரோவோடவும் சண்டை போடப் போற... நான் யாரு?'' எனத் தன் குழந்தைகளைப் பார்த்துக் கொஞ்சினான்.

''ஹ்ம்ம், கில்லி பிரகாஷ்ராஜ்!'' என அன்பரசி பழிப்புக்காட்ட, ''ச்செல்லம்! ஐ லவ் யு டா!'' என உதட்டைக் குவித்து, பிரகாஷ்ராஜின் குரலிலேயே சொல்லிக் காட்டினான், அவனது உயிர்க் காதலன்.

''ஹுக்கும்ம்'' என மனையாள் கழுத்தை வெட்டிய போதும், அங்கே கண்கள் வழி காதல் வழிந்து கொண்டே தான் இருந்தது.

பெற்றோரின் கண் ஜாடைகளைக் கவனியாக கன்றுகளோ, பலத்த யோசனைக்குப் பின்னர் ''ப்பா...நீங்க ரஜனி!'' என ஒரே குரலில் அறிவித்தனர்.

''ஹஹா! நான் ரஜினியா!? சூப்பர்! அப்பா...சூப்பர் ஸ்டார் ஆகிட்டேனா? பேஷ்! பேஷ்! ரொம்ப நல்லா இருக்கே... இந்த அவதாரம்'' எனக்கூறி, வெடிச் சிரிப்புச் சிரித்தவன். இடது காலை மடக்கி, இடது தொடையில் இடது கையினால் ஓர் வைக்கவும், ''பிள்ளைங்க மிரண்டுட போறாங்க'' எனச் செல்லமாய் வைதாள் மனைவி.

''இதற்கெல்லாம் அசந்து விட்டால் நாங்கள் வெற்றி யின் மக்களா?'' எனக் கேட்காமல் கேட்பது போல ''அப்போ வாங்க!'' என இரு கரம் கூப்பி, சண்டையை வரவேற்றனர் மக்கள்.

இரு தளிர் கரங்களின் திடீர் தாக்குதல், மறைமுகத் தாக்குதல் கழுத்து வெட்டு, முதுகு குத்து ஆகியவை ''சதக், சதக்'', ''யாஹூ'', ''ஆ'', ''ஊ'', ''டிஷ்யூம்'' போன்ற குரல் மாற்றங்களுடன் அரங்கேற்றப்பட்டதில், மருத்துவனனான வெற்றிவேந்தன் குஸ்தி பயில்வான் அளவிற்கு குஸ்தி பயில வில்லையே என எண்ணம் கொள்ளும் அளவிற்குத் தள்ளப்பட்டான்!

தன் படைத் தளபதிகளின் தாக்குதலில், எதிரி நாட்டு மன்னன் தலை தெறித்து ஓடுவான் என ஒவ்வொரு மன்னனும் எண்ணுவான் என்ற உலக நியதிக்கு மாறாக, தன் படையின் தாக்குதலால் அந்நாட்டு மன்னனே புறமுதுகு காட்டி ஓடினான். அதாவது, அரை மணி நேரத்தின் முடிவில் ''முடியலைடா ராஜா! அப்பாக்கு மூச்சு, வாங்குதுடா...போதும்...போதும்'' என எனக் கீழே விழுந்தான் வெற்றிவேந்தன். அடுத்த நொடி, ''ம்மா...வைது பாத்திக்கு போன் போடு!'' எனத் தாயை நச்சு பணணியவர்கள், தந்தையைப் பெற்றவள் அந்தப் பக்கம் வந்ததும் ''பாத்தீதீ!! ப்பா தோத்து போய்தாங்க! நாங்க அச்சுட்டோம்... நாங்க தா ஜெயிச்சோம்!'' என டமாரம் இல்லாது, தந்தையின் மானத்தை ஊருக்குப் பறைசாற்றி முடித்தனர்.

''கம்பவுண்டர் தோத்துப்போயிட்டானா? ஹாஹா! அவன் ஒரு சோப்ளாங்கிடா....'' எனப் பாட்டியும்



அவர்களுடன் சேர்ந்து கொண்டு கோட்டம் அடித்தது.

வெற்றிவேந்தனை வேறு வகையில் யோசிக்க வைத்து, அடுத்த மாதத்திலிருந்து தன் செல்வங்களையும் ஆகாஷ்-டன் கராத்தே வகுப்பிற்கு அனுப்பச் செய்தது.

''இப்பவேவா?'' என லேசாய் கணக்கம் காட்டிய அன்பரசியிடம், ''அவங்களுக்கு இரண்டரை வயசாகிடுச் சுடி!'' என ஒரு அறிவிப்பை முன்வைத்தக் கையோடு, ''நீ மட்டும் அவங்களைப் ப்ளே ஸ்கூல்ல சேர்க் கிறேன்னு குதிக்கலாம்... நான் மட்டும் கராத்தே கிளாஸ்ல சேர்த்துவிடக் கூடாதா? இது என்னடி நியாயம்?'' எனக் கேலியாகவும்,

''சின்ன வயசிலேயே, அவங்களுக்கு ஒரு பாதுகாப்பு கலையைப் புகுட்டறது நல்லது!'' என அறிவுரை யாகவும்.

''கராத்தே கிளாஸ்க்குப் போனாலாவது என்னை அடிக்காம இருக்காங்களான்னு பார்க்கலாம்! ரெண்டு பேருக்கும் செர்லாக்கும், காம்ப்ளானுமா அடைச்சு, ஒரொரு அடியும் இடி மாதிரி இறங்க வைக்கிற?'' எனப் பயம் பாதியாகவும், குழந்தைகளின் உணவு விஷயத்தில் மனைவி காட்டும் கூடுதல் கவனிப்புக்கான கிண்டல் மீதியாகவும் சொல்லி முடித்தான், அவளது மனதின் போக்கறிந்த கணவன்.

தன் சிஷ்யர்கள் இருவரையும் தன் குருவிடம் காட்டும் சந்தோஷத்தில், இடைப்பட்ட குருவான ஆகாஷ், பெரும் துள்ளலுடனும், பெரிய மனிதனின் தோரணையோடும் அவர்களை இட்டுச் சென்றான்.

கராத்தே வகுப்பிற்குச் சென்றால், தன்னிடம் சண்டைக்கு வர மாட்டார்கள் என்ற மிதப்பிலிருந்த வெற்றியை விழத் தட்டுவது போல், அன்றைக்கு வகுப்பில் கற்றுக் கொண்டதை தந்தைக்குச் செய்து காட்டுகிறோம் பேர் வழி என்று அவனது பெண்டை நிமிர்த்தி எடுத்தனர்.

“அன்பரசி! என்னைக் காப்பாத்தக் கூடாதா?” என வெற்றி, கை ஏந்திக் கெஞ்சியதும் “ச்சும்மா ச்சும்மா என்ன அப்பாவை அடிச்சிட்டு இருக்கீங்க? கராத்தே சார் என்ன சொல்லியிருக்கார்...பாட் பீப்பில்லைத் தானே அடிக்கணும்ன்னு சொல்லியிருக்கார். அப்பா...பாட் அப்பாவா? ஹ்ம்ம்?” என ஓர் அதட்டல் போட்டாள் அன்பு.

தாயின் அதட்டலில் அடங்குவார்கள் என வெற்றி எண்ணியிருக்க, அந்த எண்ணத்தில் மண் விழும் வண்ணம், இருவரும் ஒருவரை ஒருவர் ஒரு நிமிடத்திற்கும் மேலாய் பார்த்திருந்துவிட்டு, “பின்கி போன்கி போதாம்” என ஒருசேர ஒரு முடிவிற்கு வந்தனர். “நா குட்...நீ பாட்” என ஆதியும், வெண்ணிலாவும் ஓர் உடன்படிக்கைக்கு வரவே ஐந்து நிமிடங்கள் பிடித்ததில் திகைத்த பெற்றோர் இருவரும் “அப்படின்னா?” என யோசிக்கையிலேயே, “இன்கி பின்கி போன்கி... ஃபாதர் ஹாட் அ டொன்கி” என ஆதி, தன்னையும் தங்கையும் வைத்து விளையாடினான். விளையாட்டின் முடிவில் தங்கை அவுட் ஆனதும் “நா தா ஜெயிச்சேன்! அப்போ... குட் தான் ஜெயிச்சான்... அப்போ அப்பா குட் தான்!” என அறிவிக்கவும், அன்பரசியால் சிரிப்பை அடக்க முடியாது போனது!



“அடக் கழுதைகளா!” என வெற்றி இருவரையும் விரட்டிக் கொண்டு செல்ல, அங்கே குதூகலம் நிரம்பி வழிந்தது!

இந்தக் குதூகலத்தின் ஊடே, இதுவரை கார் ஓட்டுவதை ஓர் தீண்டத்தகாத செயல் போல் எண்ணியிருந்த அன்பரசியார் கார் ஓட்டக் கற்றுக் கொண்டாள்!

அன்பரசியின் கையில் ஓட்டுனர் உரிமம் வந்து சேர்வதற்கும், ஆகாஷ் கராத்தே கிளாஸ் மட்டுமல்லாது நீச்சல் வகுப்பிற்கும் செல்லப் போகிறான் எனக் கூறிய சுபத்ரா, “அன்பு! பசங்க சின்ன வயசிலேயே நீச்சல் கத்துக்கிறது நல்லதாம். அதுவும் ரெண்டிலிருந்து மூணு வயசு குழந்தைகள், சீக்கிரமே நீச்சல் படிச்சுப்பாங்களாம்... நெட்ல போட்டிருக்கு! ஆகாஷோட ஆதியும், நிலாவும் ஸ்விம்மிங் கிளாஸ் போகட்டுமா? மூணு பேருமா போறதுன்னா... குஷியா போவாங்க... ஓராளான்னா ஆகாஷ்கிட்ட மல்லுக்கட்டணும்” எனப் பொதுநலத்தில் சுயநலம் கண்டான். அன்பரசியும், அதிலிருந்த பொது நலத்தில் தனக்கான சுயநலத்தைக் கண்டறிந்து, பிள்ளைகளை நீச்சல் வகுப்பிற்கு அழைத்துச் சென்று வந்தாள்.

அதன் விளைவாக, வீட்டில் எங்கே இரண்டடி காலி இடம் தெரிந்தாலும், மக்கள் இருவரும் நீச்சல் வீரன் குற்றாலீஸ்வரனைத் தோற்கடிக்கும் வண்ணம் நீந்தியே ஓய்ந்தனர்!

நீச்சல், கராத்தே, இதனூடே தாயின் படிப்பினை - ஏ, பி, சி, டியில் தொடங்கி 1, 2, 3 யில் பயணித்து, வீட்டுத்

தொலைப்பேசி எண்ணிற்கு மெல்ல வந்து, வீட்டு அருகிலிருக்கும் முக்கிய இடங்களைப் பட்டியலிட்டு வீட்டு முகவரியை அச்சர சுத்தமாய் சொல்லவைத்து எனத் தொடர்ந்த ஆதி, வெண்ணிலாவின் குழந்தைப் பருவம், பள்ளிப் பருவமாய் இனிதே மலர்ந்தது.

அருகிலிருக்கும் ஓர் பெரிய பள்ளியின் ஆயிரத் தெட்டு விதிமுறைகளுள் அதி முக்கியமான இரண்டு விதிமுறைகளை (கீழ்க்கண்ட விதிமுறைகள்) ஆதியும், வெண்ணிலாவும் பூர்த்தி செய்யவே, அவர்கள் பள்ளி செல்வதில் பெரிதாய் பிரச்சனை ஏதும் இருக்கவில்லை.

1. பிள்ளைகளின் பெற்றோர் இருவரும் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும்.

2. பிள்ளைகளின் வீடு, பள்ளி வளாகத்தில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்க வேண்டும்.

புத்தம்புது சீருடை அணிந்து, கண்களில் புது இடத்திற்குச் செல்லப் போகும் உற்சாகத்துடன் வெளியே வந்தவர்களைப் பெரியவர்கள் உச்சி முகர, அன்பரசி அவர்களைத் தன் முன்னே நிற்க வைத்து, ஓர் கேள்வி பதிலுக்குத் தயாரானாள்.

“சீக்கிரம் அன்பு!” என வெற்றி அவசரப்படுத்த, அவனைக் கண்ணாலேயே அடக்கியவள், “ரெண்டு பேரும்... அம்மா கேட்கிற கேள்விக்குப் பதில் சொல் லணும், முதல ஆதி சொல்லட்டும்... அப்புறம் நிலா” என ஆணையிட்டாள்.

அந்தக் கேள்வி - பதில் உரையாடல் இதோ





“உன் பெயர் என்ன?”

“வி.ஆதவன்” / “வி.வெண்ணிலா.”

“உங்க அப்பா பெயர் என்ன?”

“வி.வெற்றிவேந்தன்.”

“அம்மா பெயர்?”

“வி.அன்பரசி.”

“உங்கப்பா என்னவாக இருக்கிறார்?”

“டாக்டர்.”

“உங்கப்பாவோட கிளினிக் பேர் என்ன?”

“அன்பு நியூரோ கிளினிக்.”

“உங்கம்மா என்ன பண்றாங்க?”

“ஹவுஸ் ஃவைப்.”

“உங்க வீடு எங்க இருக்கு?”

“நம்பர் ௫, ஃபிரஸ்ட் மெயின் ரோடு, பெசன்ட் நகர், சென்னை.”

“உங்க வீட்டு போன் நம்பர் என்ன?”

“24769250.”

“உங்களை யார் ஸ்கூல்ல இருந்து கூட்டிப் போக வருவாங்க.”

“அம்மா வந்தா தான் போவோம். யார் கூடவும் போகக் கூடாது.”

இதைக் கேட்ட அனைவருக்குமே பிள்ளைகளின் பாதுகாப்பின் மீது ஓர் நம்பிக்கை வந்திருக்க, அவர்களின்

மனக்கோட்டை அனைத்தையும் தான் தாளாக்கும் வண்ணம் அவர்கள் வீட்டின் முதல் வாரிசுகள், கடத்தப் படப் போகின்றனர் என்பதை அவர்கள் அறியவில்லை!

# 16



பிள்ளைகள் பள்ளி செல்லத் துவங்கிய நாள் முதல் அவர்கள் உற்சாகமாய் இருந்தனரோ இல்லையோ, அன்பரசிக்கு உற்சாகம் கரை புரண்டோடியது! எல்.கே.ஜி படிக்கும் பிள்ளைகளை ஐ.ஏ.எஸ் படிப்பு படிக்கும் அளவிற்கு எண்ணி, மகிழ்ந்து தான் போனாள், அவர் களின் தாய்!

மகிழ்ச்சி ஒரு புறம் இருந்தபோதும், தன் சூலில் உதித்த வடிவான சிற்பங்களை, மூன்று மணி நேரம் பிரிந்திருப்பது அவளுக்குக் கஷ்டமான காரியமாகத் தான் இருந்தது! இரண்டாவது பிறந்தநாளில் தொடங்கில சிற் சில நாட்களாய் அவர்கள் பாட்டிமார் வீட்டில் கழித்து விட்டு வருவது வழக்கம் தான் என்றாலும், அந்த நாள்களில் குழந்தைகளைத் தன்னை விடவும் மேலாய் பார்த்துக் கொள்ள, மாமியாரோ அம்மாவோ இருக் கிறார்கள் என்ற எண்ணம் அடளை ஆசுவாசப்படுத்தி விடும்! ஆனால், இப்போதே முற்றிலும் புதிதான சூழ்நிலை, வெவ்வேறு ரக மனிதர்கள் என அன்பரசி கவலை கொண்டிருக்க, அவளது பிள்ளைகளோ அச்சூழ்நிலையை மகிழ்வுடனே ஏற்றனர்.



அன்னைக்கு மாறாய், புது சூழ்நிலை, முற்றிலும் வேறான மனிதர்கள், ஒத்த வயது பிள்ளைகள், அனை வருக்கும் ஒன்று போலிருந்த சீருடை, அம்மா செய்து கொடுத்த சிற்றுண்டி, அழகான மிக்கி மௌஸ் தண்ணீர் பாட்டில், புத்தகமே இல்லாத படிப்பிற்கென வாங்கிய ஸ்கூபி புத்தகப் பை. மாமன்காரன் வாங்கிக் கொடுத்த டோரா பென்சில் பாக்ஸ், சித்தப்பா பரிசளித்த கார் வடிவிலான பென்சில் துருவி மற்றும் பைக் வடிவிலான அழிப்பான் என அவர்கள் இருவரும் ஓர் புது உலகத்தில் சஞ்சரித்து மகிழ்ந்தனர்.

அவர்களது இந்த உற்சாகம், அன்பரசியின் சிறு கவலையையும் துடைக்க, அவளும் முற்று முதலாய் அவர்களது சந்தோஷத்தில் பங்கு கொள்ள ஆரம்பித்தாள்.

பள்ளி செல்வதற்கு அடம் செய்யாமல் சமத்தாய் அவர்கள் கிளம்பியதும், பிற பிள்ளைகளிடம் பழகியதில், ''எனக்கு இன்னைக்கு ஒரு புது பிரண்ட் கிடைச் சானே!'' என இந்தியா - பாகிஸ்தான் உடன்படிக்கை போல் அவர்கள் சந்தோஷப்பட்டதும், ''சப்பாத்தி ரோல் சூப்பர்ரா இந்துச்சும்மா... நாளைக்கும் இதையே வைக் கிறியா?'' எனத் தான் சமைத்த உணவிற்கான ஐ.எஸ்.ஐ முத்திரையை அவர்கள் அளித்ததும், ''நாளைக்கு கலர் டிரஸ் போதலாம்... சொன்னாங்க மிஸ்! எனக்கு பார்பி டிரஸ் போத்து விடுமா...பீஸ்'' எனக் கெஞ்சியதும் அன்பரசியை இன்பக் கடலில் மூழ்க வைக்கப் போது மானதாய் இருந்தது எனலாம்!

வீட்டிற்கு வந்ததும், ''ம்மா, இன்னைக்கு எங்க மிஸ் என்னை குட் சொன்னாளே!'' எனப் பிள்ளைகள்

ஆர்ப்பரிக்கும் போது, தானே தங்கப் பதக்கம் வாங்கிவிட்ட உணர்வு வந்து சேரும் அன்பரசிக்கு!

அதற்கும் மேலாய், பிள்ளைகள் இருவரும் வளர்கின்றனர் என்பதற்கு அடையாளமாய், பள்ளியில் சொல்லிக் கொடுக்கும் இயைபுத் தொடைகளை (அதாரங் ரைம்ஸ்) அவர்கள் அபிநயத்துடன் சொல்லிக் காட்டவும். அன்பரசிக்குப் பெருமையாக கூட இருந்தது எனலாம்! கணவன் வீடு வந்ததும், ''அப்பாக்குப் புது ரைம்ஸ் சொல்லிக் காட்டுங்க! ஒழுங்கா சொன்னா... அப்பா சாக்கித் தருவாங்க!'' எனத் தன் கணவனின் சார்பாக அவளாகவே வாக்களித்தாள்.

''நீ வேணும்னா கொடுக்கிறது தானே? என்னை எதுக்குக் கோர்த்துவிட்டு வேடிக்கைப் பார்க்கிறே?'' எனக் கேலி செய்த போதும், பிள்ளைகள் இருவரும் நடன இயக்குனரின் வல்லமையுடன் அபிநயம் பிடித்து, இசை அமைப்பாளரின் திறமையுடன் பாட்டப் பாடியதும், அதைக் கண்டு கழித்த தயாரிப்பாளன் தன் மனத்தைக் குளிர்வித்தமைக்காக மாந்தர் இருவரது வயிற்றையும் இனிப்புகளால் செவ்வனே குளிர வைத்தான்!

அந்த நிகழ்விற்குப் பின்னர், ஓரோர் நாள் மாலையும் தாங்கள் படித்த புதிய / பழைய இயைபுத் தொடைகளைப் பாடிக் காட்டி , தந்தை பரிசு தரும் போது ''செல்ல ப்பா!'' எனக் கொஞ்சலாகவும், தந்தை பரிசின்றி கையை விரிக்கும் போதும் ''பாட் அப்பா! பாத்தீ கிட்ட சொல்லித் தாரோம்!'' என மிரட்டலாகவும் அவனை அலைக்கழித்தனர்.



அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், வைதேகியும் வெங்கட்ராமனும் அவர்களின் பள்ளிப் பருவப் பிரதாபங்கள் பற்றி அறிந்து கொள்வதற்காக, நாள் தவறாது செய்யும் தொலைப்பேசி அழைப்புகளில் தந்தையைப் பெற்றவளிடம் போட்டுக் கொடுக்கவும் செய்தனர்.

அதன் விளைவாக ''என்னடா வெற்றி இது? பசங்களுக்கு எதுக்கு ஆசை காட்டி மோசம் பண்றே? ரெண்டு நாளா சாக்லேட்டே வாங்கித் தரலையாமே? இன்னைக்காவது மறக்காம வாங்கிட்டுப் போ...பிள்ளைங்க ஏமாந்து போய்டும்'' என மகனது மருத்துவப்பணி நேரத்தில் அவனைத் தொந்தரவு செய்ததோடு நில்லாமல் அவனை அதட்டவும் செய்தார், வைதேகி!

''எல்லாம் உன்னால தான்!' என்று கடுப்பையெல்லாம் மனைவியின் மேல் வெற்றிவேந்தன் திருப்பிய போதும், தயாரிப்பாளனான அவனது கல்லா காலியனாது தான் மிச்ச சுச்சமாய் நடந்தேறியது! பாசமெனும் அமுத சுரபி இருக்கையில், அவனது கல்லா மீண்டும் நிறைவதற்குக் குறையேது?

அவர்களது ஓரோர் திறமை வெளிப்பாட்டிற்கும், ஓர் பரிசு என்ற நிர்ணயம் வந்துவிட, சாக்லேட்டுக்குப் பதிலாய் புது பென்சில், அவர்களுக்குப் பிடித்த உணவு, கூடுதலாய் விளையாட்டு நேரம், பிடித்த விளையாட்டுச் சாமான் என்ற வரையறையை மெல்ல மெல்ல கொண்டு வந்தான் வெற்றிவேந்தன்!

அந்த வரையறையின்படி, இரண்டு வண்ணம் தீட்டும் புத்தகங்களுடன் அவன் வீடு வந்து சேர, வீட்டு

வாசலைத் தாண்டி நெய் வாசனை ஊரைத் திரட்டிக் கொண்டிருந்தது!

''என்ன விசேஷம்?'' என யோசித்தபடியே வெற்றி அழைப்பு மணியை அழுத்தியதும், ''நா....நா'' எனப் பிள்ளைகள் இருவரும் கதவைத் திறப்பதற்கு முந்துவது அவனுக்குக் கேட்டது.

''நேத்தைக்கு யாரு கதவு திறந்தீங்க?'' என நாட்டமையின் ஆளுமையோடு கேள்வி கேட்டு, ''ஆதி'' என்ற பதில் வந்ததும், ''அப்போ... இன்னைக்கு நிலா! நிலா... நீ போய், அப்பாக்குக் கதவைத் திற. ஸ்டூல்ல ஓட்டுல நிக்கக் கூடாது. நல்லா நடுல நின்னுட்டு திறக்கணும்... ஆதி. நீ அம்மாகூட கிட்செனுக்கு வா... அப்பா அங்க வருவாங்க'' எனத் தீர்ப்பைச் சொல்லி முடித்தாள். அந்த வீட்டின் சேலை கட்டிய நாட்டாமை!

''நாட்டாமை... தீர்ப்பை மாத்திச் சொல்லு!'' என வெளியிலிருந்து வெற்றி கத்தியதைப் பொருட்படுத்தாது, வீட்டினுள் வேலை ஜரூராய் நடந்தது.

''ப்பா... கதவு திறந்தாசுது! நா ஸ்டூல் புஷ் பண்ணதும் தா கதவு திறக்கணும்...'' எனத் தந்தையை எச்சரித்த வெண்ணிலா, தான் ஏறி நின்ற மர முக்காலியை தள்ள முடியாமல் தள்ளிப் போட்டுவிட்டே, வீட்டுக் கதவைத் திறந்தாள்.

உள்ளே நுழைந்ததும், ''சரியான முன் ஜாக்கிரதை முத்தம்மா'' என மகளின் உச்சி முகர்ந்த தந்தை, அவளை ஏந்தியவாறே சமையலறைக்குள் சென்றான்.

போகும் வழியிலேயே ''என்னடா ஸ்பெஷல்? அம்மா என்ன செய்றா?'' என அவன் கேட்டற்கு ''குலாப்



ஜாமூன்'' என ரசித்துக் கூறினாள் வெண்ணிலா. சந்தோஷமெனும் சர்க்கரை நீரில் மூக்கியதால் கூப்பியிருந்த குலாப் ஜாமூன் கண்களும், மூன்றடக்குக் குலாப் ஜாமூன்களின் அணிவகுப்பாய் இருந்த கன்னங்களுமென விரிந்திருந்த வெண்ணிலவை, முழு குலாப் ஜாமூனாய் பாவித்து ஓர் கடி கடித்தவன் ''ஹய்யோ! இந்த குலாப் ஜாமூன்...அம்மா செய்றதை விட செம ஸ்வீட்டா இருக்கே?'' எனக் கண்ணை உருட்டிய வெற்றிவேந்தனின் முதுகில் ஓர் அடி விழுந்தது!

அந்த அடிக்கு சொந்தக்காரியான அன்பரசி ''அது என்ன குலாப் ஜாமுன்.... நான் செய்ததை விட சூப்பர்ரா இருக்குதாமே? எந்தக் கடையில வாங்கிட்டு வந்தீங்க?'' எனப் புருவம் உயர்த்தவும், ''ஹ்ம்ம்! என் சொந்தச் சரக்குடி! இரவல் சரக்குன்னு சொன்னே...அடி பிச்சுடு வேன்'' எனத் தன் பங்கிற்குப் புருவம் உயர்த்தினான், கணவனாகப் பட்டவன்.

''உங்க ஹாஸ்பிடல்ல ஆபரேஷனுக்குப் பதிலா, குலாப் ஜாமூன் செய்றீங்களா? அட, எனக்குத் தெரியாம போச்சே?''

''உனக்கு என்ன தான் தெரிஞ்சிருக்கு?'' எனத் தலையை அடித்துக் கொண்டவன், ''என்ன தெரியும் உங்கம்மாவுக்கு?'' என ஓர் பிரபல விளம்பரத்தை மிமிக் செய்தான். ஆனால், அவனின் வாண்டுகளோ அவனது மாறுதலைக் கவனிக்காமல் ''என்ன தெரியும் உங்கப் பாவுக்கு?'' என அந்த விளம்பரத்தை அப்படியே செய்து காட்டவும், அன்பரசியின் சிரிப்பு வெற்றியின் காதில் நாராசமாய் விழந்தது!

''வெவ்வெவ்வே'' என அவளுக்கு அழகு காண்பித்தவனைப் பின்பற்றி, பிள்ளைகளும் ஒழுங்கு காண்பிக்க.

''சும்மா வார்த்தையாடாம, அவங்க என்ன செய்தாங்கன்னு கேளுங்க'' என்றுவிட்டு,

''இன்னைக்கு ஸ்கூல்ல எக்ஸ்ட்ரா கரிக்குலர் அக்ட்டிவிடீஸ்க்குப் பேர் கேட்டாங்களாம்! ஃபிரஸ்ட் ஸ்விம்மிங் கேட்டிருப்பாங்க போல... நம்ம குட்டீஸ் ரெண்டு பேரும், எங்களுக்குத் தெரியுமேன்னு சொல்லியிருக்காங்க... அடுத்ததா டான்ஸ் கேட்டுட்டு, கராத்தே கிளாஸ்க்குக் கேட்டாங்களாம்...அதுவும் தான் ஆதிக்கும் நிலாக்கும் தெரியுமே? ரெண்டும் எங்களுக்கு ஏற்கனவே தெரியும்ன்னு சொன்னதும், அவங்க கிளாஸ் மிஸ் கிளாஸ் நடுல நிக்கச் சொல்லி, எல்லாத்தையும் ரெண்டு பேருக்காகவும் கிளாப் பண்ணிச் சொன்னாங்களாம்!''

''அப்புறம், அவங்க ஹெட் மிஸ்ஸும் 'வெரி குட்! ஸ்மார்ட் கிட்ஸ்''ன்னு சொன்னாங்களாம்'' எனக் கண்ணை விரித்துக் கைகளால் காற்றை வளைத்தாள்.

''வாவ்! ரியல்லி! அதுக்குத் தான் இந்த ஸ்வீட் செய்யும் படலாமா?'' என ஆர்ப்பரித்தப் பெற்றவனின் சந்தோஷத்தை மேலும் கூட்டும் வண்ணம் ''பிரவீன் சொன்னா...உங்கக்கு கராத்தே தேய்யும்மா...எங்களை அடிச்சுடாதே சொன்னா'' என வாயைப் பொத்திக் கொண்டு பெண்மகள் பெருமை கொண்டாள்!

அவர்கள் கொண்ட பெருமையின் விளைவாக ''வாவ்! சூப்பர் கிளாப் வாங்கின சூப்பர் குட்டீஸ்-க்கு,



அப்பா...சூப்பர் கலர் புக் வாங்கிட்ட வந்திருக்கேனே?'' என்ற தந்தையிடமிருந்து புத்தகத்தையும், ''குட்டீஸ்க்கு... அம்மா ஜாமூன் தரேன்!'' என்ற தாயிடம் இனிப்பையும் பெற்றுக் கொண்டு, சிட்டென வரவேற்பறைக்குப் பறந்தனர் சிறார்கள் இருவரும். டோரா போடும் நேரமாகிவிட்டதே, அதற்குத் தான் இந்த ஓட்டம்!!

துள்ளி ஓடும் கன்றுகளைக் கணவனின் தோளில் சாய்ந்தவாறே பார்த்திருந்த அன்பரசி, ''எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா?'' என மனதாரக் கூறியதோடு, அதற்கான காரணத்தையும் பகிர்ந்தாள்.

''ரெண்டு பேருக்கும்...என்ன அறிவு பாருங்க, வெற்றிப்பா! அவங்க சொன்ன, கராத்தே, நீச்சல், டான்ஸ், பாட்டு இது நாலுல... இவங்களுக்கு ஏற்கனவே தெரிஞ்ச நீச்சல், கராத்தே ரெண்டையும் விட்டுட்டு அழகா.... டான்ஸ், பாட்டு ரெண்டுக்கும் பேர் கொடுத்திட்டு வந்திருக்குங்க! என்கிட்டே வந்து...சரி தானேமான்னு கேள்வி வேற? எனக்கு ஒரே பெருமையா இருந்தது தெரியுமா?'' என்றவளை அணைத்துக் கொண்ட கணவனிடம் மேலும் பேசினாள் மனையாள்.

''நிலா - ஆதி படிக்கிற பசங்களோட அம்மாக்கள்... ரெண்டு மூணு பேர்...என்கிட்டே வந்து, உங்க பசங்களுக்குச் சின்ன வயசிலேயே கராத்தே நீச்சல் எல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கீங்களா? ரொம்ப நல்ல முயற்சின்னு சொன்னாங்க தெரியுமா?'' என்றாள் நிறைந்த மனதுடன்.

வெற்றிவேந்தன் பேசத் துவங்கும் முன்னர், அவளா கவே ''நீங்க சொல்றதைக் கேட்காம, அவங்களை

வீட்டுக்குள்ளேயே முடங்கியிருந்தா...இந்தப் பெருமை யெல்லாம் பட்டிருக்கவே முடியாது! என்னோட தப்பு என்னனு முழுசா எனக்குப் புரியுது...வெற்றிப்பா ரொம்ப தேங்க்ஸ்! கோபப்படாம, திட்டாம, அதே சமயம் எனக்கு உரைக்கிற மாதிரி... என்னை மாத்தினதுக்கு ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்!'' என உளமாரக் கூறி, அவனின் நெஞ்சில் புதைந்து கொண்டாள்.

''கண்ணுக்குத் தெரியாத ஆபத்தை மனசில நினைச்சிட்டு, கண்ணுக்கு நிறைவான பசங்களோட வளர்ச்சியை அப்படியே முடக்கிப் போட்டிருப்பேன்! அந்த முட்டாள்தனத்தைப் பண்ணாமல என்னைக் காப்பாத்தினதுக்கு ரொம்ப தேங்க்ஸ்!'' என மீண்டும் ஒரு முறை நன்றி கூறிய மனைவியை வாஞ்சையுடன் முத்தமிட்ட கணவன், அவளது நன்றியைத் தனக்கு வேண்டிய வகையில் பெற்றுக் கொண்டான்!

ஆனால், அன்னையின் பெருமிதம் அவளது பாதுகாப்பு பற்றிய கவலையைச் சிறிதும் குறைத்திருக்கவில்லை என்பது சில நாட்களிலேயே தெரியவந்த போது, அவனால் முன்னர் போல் அவளைக் கடிந்து கொள்ளவோ, திருத்தவோ முன்வரவில்லை. மாறாக, அவளது பயத்தில் ஓர் நியாயத்தையே கண்டான், கணவன்!

அப்படியொரு எண்ணத்தை அவனிடம் புகட்டிய சம்பவத்தின் துவக்கம் - அவர்களது காரின் பிரேக் டௌனில் தொடங்கியது! சரியாக பன்னிரெண்டரை மணிக்கு முடியும் பள்ளிக்கு, பதினொண்ணே முக்காலுக்கே கிளம்பிச் செல்லும் அன்பரசிக்கு, அன்றைய



சாதம் வைக்கும் படலம் சில பல நிமிடங்கள் தாமதத்தை உண்டு பண்ணவே, பன்னிரெண்டே காலுக்கு வண்டியை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு விரைந்தாள்.

அவளது அவசரத்தை மதிக்காத வண்டியோ, வீட்டை அடுத்திருந்த சிக்னலைக் கடக்கும் போது பெரும் சப்தத்துடன் நின்றே போனது! மனசும் உடம்பும் தூக்கிப் போட, நடு சிக்னலில் நின்றிருந்த வண்டியில் ஸ்தம்பித்து அமர்ந்திருந்தவளை ''என்னம்மா, நடு ரோட்டில் நிப்பாட்டிட்டு... கனவு காணறியா? எடு வண்டியை!!'' எனத் துரத்தினார் போக்குவரத்துக் காவலர். பாவம், ஐந்து நிமிடத்திற்கும் மேலாய், சிக்னலை மறித்துக் கொண்டு அவளது வண்டி நின்றிருந்தால், அவரும் தான் என்ன செய்வார்?

என்ன பிரச்னை என இனம் காணும் அளவிற்கு அவள் நெடு நாளைய வண்டி ஓட்டுனர் இல்லை என்பதாலும், நடு ரோட்டில் அனைவரது கவனத்தையும் தன் மீது வாரி இறைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறோம் என்ற குற்ற உணர்வாலும், என்ன செய்கிறோம் என்பதை உணராமல் அன்பரசி வண்டியை எடுத்துவிட, வெடித்திருந்த வண்டிச் சக்கரங்களின் காரணமாக, வண்டி தாறுமாறாக ஓட ஆரம்பித்தது.

என்ன நடக்கிறது என்பதை அறிந்து அவள் சுதாரிக்கும் முன்னர், ரோட்டைக் கடந்து கொண்டிருந்த ஓர் மீன் பாடி வண்டியின் மீது கார் மோதிவிட, அங்கே சூழ்நிலை மிக மோசமாய் போனது!

கார் மோதிய வேகத்தில், அந்த வண்டியிலிருந்த பொருட்கள் சிதறியிருக்க, அதற்கும் மேலாய் வண்டியை

ஓட்டிக்கொண்டிருந்த வாலிபன் கீழே விழுந்திருந் தான்.

அந்த உயிருக்கு என்னவாகிற்றோ என்ற பதைப்பில், வண்டியை வேகமாய் அணைத்துவிட்டு கீழே இறங்கிய அன்பரசியைத் 'தன்னார்வ' கும்பல் ஒன்று சூழ்ந்து கொண்டது. அடிபட்டுக் கிடந்த சிறுவனைப் பார்க் காது.

''கார்ல வந்துட்டா. பெரிய மகாராணின்னு நினைப்பு... இப்ப அந்தப் புள்ளைக்கு அடிப்பட்டுடுச்சே! இந்தப் பொம்பளையா கொடுக்கும்?''

''கார் ஓட்டத் தெரியலைன்னா, டிரைவர் வச்சு ஓட்ட வேண்டியது தானே? எதுக்கு இப்படி பெருமை பீத்திக் கணும்?''

''அந்தப் பையனுக்கு ஆகுற வைத்தியச் செலவை இந்தம்மா கொடுக்கச் சொல்லுங்கப்பா...'' என ஆளா ளுக்கு ஒவ்வொன்று பேசினர்.

அவர்கள் பேசியதில் உடலும் மனமும் கூனி குறுகிய போதும். அவற்றைப் பொருட்படுத்தாது அப்பைய னிடம் ஓடினாள் அன்பரசி. ஆனால், அவளைச் சட்டை செய்யாது எழுந்த அந்த வாலிபன், ரத்தம் வடிந்து தனது கைகளைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், ''ஹய்யோ, எல்லா பொருளும் வீணாப் போச்சே?'' என இறைந் திருந்த தனது சாமான்களை எண்ணி மறுகிப் போனான்.

''ரத்தம் வடியுது...தம்பி! வா...பக்கத்தில இருக்க ஆஸ்பத்திரிக்குப் போவோம்'' என அவள் பறந்ததற்குப் பதிலாய் ''அடப் போம்மா! எங்க மொதலாளி



இன்னைக்கு என்னைக் கூறுபோடப் போறார்... அதை விட இந்த காயமா முக்கியம்? கண்ணை என்ன பொற திலயா வச்சுட்டு வந்தே?'' எனக் கண்ட மேனிக்குத் திட்டத் துவங்க, அங்கே ஓர் போர்க்களம் உருவானது.

அங்கிருந்த ''பெரிய' மனிதர்கள் யாவருக்குமே, அடிப்பட்டவனை விட அடியை உண்டு பண்ணிய அன்பரசியிடமிருந்து எப்படி பணம் பிடுங்கலாம் என்ற எண்ணமே பிரதானமாய் இருக்க, போக்குவரத்துக் காவலருமே ''அவன் கேட்கிற, பணத்தைக் கொடுத் துட்ட போய்ட்டே இரும்மா. இல்லன்னா கோர்ட், கேஸ்னு அலைய வேண்டியவரும்'' எனத் தனக்கான ''அன்பளிப்பிற்கும்' வழி வகுத்துக் கொண்டார்.

அவன் கேட்ட பணத்தை ரெண்டு மடங்காக்கிக், கூடியிருந்தவர்கள் கேட்கவும் அன்பரசியால் சமாளிக்க முடியாது போயிற்று கணவனை அழைக்கலாம் என்ற எண்ணத்தில், கைப்பேசியைத் துழாவினால் அதுவும் கைக்கு அகப்படாது போனது! அப்போது தான் வரும் அவசரத்தில் சார்ஜ்ஜில் இருந்த போனை எடுக்காமல் வந்த தனது மடத்தனத்தை நொந்து கொண்டு, ''என்னிடம் அவ்வளவு பணமில்லை'' என்றாள். அவள் அவ்வாக்கியத்தை முடிக்கும் முன்னரே, ''என்னம்மா? அஞ்சு லட்சத்துக்கு காரை வச்சிக்கிட்டு... ரெண்டாயிரம் ரூபா இல்லைங்கிற? என்ன டாபாயக்கிரியா?'' என்ற அர்த்தத்தில் பல குரல்கள் கிளம்பவே, அயர்ந்து போனாள் அன்பரசி.

''வீடு அருகில் தான் உள்ளது'' என்ற விஷயத்தை அவர்கள் மண்டைகளுக்குள் ஏற்ற முயன்று, அதில்

ஒருவாறு வெற்றி கண்டு, அப்பையன் கேட்ட பணத் திற்கு மேலாய் இரு நூறு ரூபாய் கொடுத்து அனுப்பி வைத்தப் போது, மணி ரெண்டை நெருங்கி விட் டிருந்தது!

கடந்த ஒன்னரை மணி நேரம் முழுதும், அன்பரசி யின் எண்ணங்கள் யாவும் பிள்ளைகளையே சுற்றி வந்தது என்பதைக் குறிப்பிட்டுத் தான், ஓர் தாயின் கவலையை அறிய வேண்டும் என்பதில்லை! நெஞ்சம் முழுதும் பயமும் திகிலுமாய், அப்பையனுக்குப் பணம் கொடுக்கும் போதே, கணவனை அழைத்திருந்தாள் அவள். அவனிடம் அழுது கரைந்து கொண்டிருந்த நிலையில், சாலை ஓரமாய் நின்றிருந்த வண்டி கண் ணில் பட, வாட்ச்மேன்னிடம் சொல்லி அதைப் பழுது பார்க்கச் சொல்லிவிட்டு, பள்ளிக்குக் கிட்டத்தட்ட ஓடினாள்.

பள்ளி முடிந்து ஒன்றரை மணி நேமாகிவிட்ட நிலை யில், அன்பரசியின் நெஞ்சம் பதறித் துடித்துவிட்டது!

''என் செல்வங்களுக்கு என்னவாகிற்றோ?'' என்ற பதைப்புடன் பள்ளிக்கு விரைந்தவள், போகும் வழி யாவும் வெற்றியையும் கண்ணீராலும், பரபரப்பாலும் குளுப்பாட்டி எடுத்துவிட்டாள்.

''ஒண்ணும் ஆகியிருக்காது! நீ வராம... பசங்களை வெளிய அனுப்ப மாட்டாங்க! பத்து பசங்களுக்கு ஒரு ஆயாம்மான்னு எதுக்கு நியமிச்சிருக்காங்க. இந்த மாதிரி சமயத்தில பசங்களைப் பாதுகாப்பா வச்சுக்கிரதுக்குத் தான்! அதோட, நம்ம பசங்களும் யார் கூப்பிட்டாலும் சட்டுன்னு போற பசங்க இல்ல...



கொடுத்தது மனசில பதிஞ்சிருக்கும்! அதனால், கவலைப்படாம போ!'' எனத் தைரியம் சொன்ன வனுக்கும், பள்ளியை அடைந்து ''வெயிட்டிங் ஏரியால பிள்ளைங்களைக் காணோம்!!'' என அன்பரசி உடைந்த போது, நெஞ்சின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

# 17



பள்ளி முடிந்து எவ்வளவு காலம் ஆனாலும், பிள்ளைகளை உரிய நபர் வராமல் அழைத்துச் செல்ல முடியாது என்பதை உறுதியாய் அறிந்திருந்த போதும், வெற்றிவேந்தனின் பெற்ற மனது கலங்கித் தவித்துப் போனது.

எதையுமே பதட்டத்தோடு பார்க்காத வெற்றிக்கே, நெஞ்சம் சதாப்தி விரைவு ரயிலை ஓடிக் கொண்டிருந்தது என்றால் அன்பரசியின் நிலையைப் பற்றி கேட்கவே வேண்டாம்!

ஆதி மற்றும் நிலாவின் பள்ளியில், வகுப்பு முடிந்து வீட்டிற்குச் செல்லும் வரையிலான நேரத்தைக் கழிப் பதற்கென ஓர் கூடமிருக்கும், பிள்ளைகள் யாவரும், அவர்களின் மெய்க்காப்பாளர்கள் வரும்வரையிலும் அக்கூடத்தில் தான் இருக்க வேண்டும் என்பது அங்கே போதிக்கப்பட்ட ஓர் சட்டம். அந்த சட்டத்தின் படி,

ஆதியும் நிலாவும் கடந்த ஆறு மாதங்களாக அங்கே தங்க இருந்தனர். இன்று வரையிலும் அன்பரசி ஐந்து பத்து நிமிடங்கள் முன்னே சென்றிருக்கிறாளே ஒழிய பள்ளி நேரத்திற்குப் பிந்தியதே இல்லை என்பதால் தம் பிள்ளைகளை அங்கிருக்கும் இருக்கைகளில் இருத்திப் பார்க்கும் கொடுப்பினை அன்பரசிக்கு வாய்க்காது போனது!

அக்கொடுப்பினை இப்போது கிட்ட வேண்டுமே என்ற பிரார்த்தனையுடன் பள்ளிக்குள் நுழைந்தால், அங்கே தங்களின் இருப்பைப் பறைசாற்றாது பிள்ளைகள் இருவரும் மாயமாய் மறைந்திருந்தனர். தன் செல்வங் களைக் காணவில்லை என்ற செய்தியே அன்பரசியின் தலைமைச் சுற்ற வைக்க, அழுகை வெடித்துக் கிளம் பியது!

அவளது அழுகையும், கூடவே பிள்ளைகளுக்கு என்ன ஆனதோ என்ற பதட்டமும் நெஞ்சை உறைய வைக்க, ''அன்பரசி'' என ஓங்கி ஓர் அதட்டல் போட் டான் வெற்றிவேந்தன். அதில் திகைத்த அவள், சட்டென மௌனிக்கவும், ''அங்கிருக்க வாட்ச் மேன் கிட்ட கேளு'' என அவன் ஆணையிடும்போதே ''ஆதவன், வெண்ணிலா...ரெண்டு பேரோட அம்மா வாம்மா நீங்க? உங்க பசங்க ரெண்டு பேரும்...பின்னாடி கிரௌண்ட்ல விளையாடுறாங்க! போய், கூட்டிட்டுப் போங்க'' எனப் பாலை வார்த்தார் ஓர் வயதான காவலாளி.

அவரிடம் நன்றி கூறிவிட்டு, பின்பக்கம் விரைந்தால் அவளது செல்வங்கள் இருவரும் போட்டிருந்த ஊதா



நிறச் சீருடையை அடர் மண் வண்ணத்திற்கு உரு மாற்றும் வேளையில் வெவ்வனே ஈடுபட்டிருந்தது. அவளின் நெஞ்சில், மேலும் இரு குடம் நிறைய பாலை வார்த்தனர்.

''செம உஷார் பசங்கம்மா...உன் பசங்க! எங்கம்மா வராம, இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்ன ஜுடுச்சுங்க! சரியாச் சொல்லிக் கொடுத்திருக்கேம்மா... அதுங்களும் சரியா படிச்சிருக்குங்க! பொழைச்சுக்குங்க'' என்ற ஆயாம்மாவின் நற்சான்றிதலைப் பெற்ற அன்னை யில் நெஞ்சில் பால் மட்டுமல்லாது தேனும், தேவா மிர்தமும் சேர்த்தே வடிந்தது எனலாம்!

''இங்க தான் இருக்காங்க'' எனும்போதே அன்பரசிக்கு அழுகையை மீறி சிரிப்பு வந்து சேர்ந்துவிட்டது. அழுகையும் சிரிப்புமாய் பிள்ளைகளை நெருங்கியவளை ''ம்மா'' என ஓடி வந்து கட்டிக் கொண்டனர் பிள்ளைகள் இருவரும்!

''ஏன்மா லேட்? தாச்சுப் போய்தியா?'' என அவளைக் கேள்வி கேட்டவாறு வந்த ஆதவனும், ''ம்மா, பசிக்குதுமா! கட்லெட் காலியாப் போச்சுது! தண்ணியும் காலி...'' என வயிற்றைத் தடவிய வெண்ணிலாவும் அன்பரசியின் கண்ணீரை முழுதாய் நிறுத்தி வைத்து, ''ஹ்ம்ம் வீட்டிற்குப் போனதும் மம்மம் சாப்பிடலாம்!'' எனப் பொறுப்பைப் பிரதானமாய் கொண்டு வந்தனர்.

''என்னடா கோலம் இது? இவ்வளவு அழுக்கு பண்ணி வச்சிருக்கீங்களே? என்ன துவைச்சாலும்... இந்தக் கறை போகாது போலவே'' என அன்பரசி, தாயாய்

கவலைப் பட்டதும் ''கறை நல்லதுமா!!'' என அப்பாவி யாய் கை விரித்தாள் வெண்ணிலா.

அவளது பதிலைப் புரிந்து கொள்ள முடியாத தாய் ''என்னது?'' எனக் குழம்ப, அவர்களது சம்பாஷணையைப் பெருத்த நிம்மதியுடன் கேட்டிருந்த வெற்றி வேந்தன் உரக்க நகைத்தான்! ''சமத்துச் சக்கரைக்கட்டி! என்ன அறிவு, பாரேன்!?'' எனத் தனக்குள்ளேயே வியந்தவன், பிரபல விளம்பரத்தின் பெயரைச் சொல்லி ''அதைப் பார்த்து சொல்றாடி'' என மனைவிக்கு விளக்கினான்.

கணவனின் விளக்கத்தில் ''அடிக்கழுதை! கண்ணம்மை அக்காவை மாங்குமாங்குன்னு துவைக்க வைக்கிற இந்தக் கறை எப்படி நல்லதாம்? சும்மா வாயடி அடிக்க வேண்டியது!'' எனச் செல்லமாய் வைது விட்டுக் கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தாள்.

''இப்போ முத்தா கொடுத்தியே! அது தான் நல்லது!'' என அதற்கும் வெண்ணிலா பேச, அன்பரசியின் நெஞ்சில் வடிந்த பால், தேன், தேவாமிர்தம் ஆகியவையுடன் சவர்க்காரக் குமிழியும்(சோப்பு நுரை) சேர்ந்து கொண்டது.

ஆனால், நெஞ்சில் வார்க்கப்பட்ட பால், தேன், அமிர்தம், சவர்க்காரக் குமிழி ஆகியவையை மட்டுமல்லாது அதிலிருந்த ஈரத்தையும் சேர்த்து உலரவைக்கும் வண்ணம், அடுத்த மாதம் நடந்த பள்ளிச் சுற்றுலாவின் போது, ஆதவன் - வெண்ணிலாவின் வகுப்பைச் சேர்ந்த அனைவரும் சுற்றுலாப் பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் மற்றும் நடத்துனரால் கடத்தப்படப் போகின்றனர்



என்பதை அறியாமல், அவர்களின் சுற்றுலாவிற்கான ஏற்பாடு வெகு விமர்சையாய் நடந்தேறியது!

நான்கு வாரங்கள் பின்னர், சென்னையை அடுத்திருக்கும் வண்டலூர் விலங்கத்திற்கு இட்டுச் செல்வதாய் கூறி, பெற்றோரின் சம்மதம் கேட்டிருந்தது பள்ளி நிர்வாகம்.

தங்களது பள்ளிப் பதிவேட்டில் வகுப்பு ஆசிரியர் குறித்துக் கொடுத்திருந்த தகவலைக் காரில் வரும் போதே தாயிடம் எடுத்துக் காட்டியவர்கள் ''ம்மா... நாங்கவும் போறோம்மா...' என்றனர் ஒரே குரலில்.

அன்பரசி பதிலேதும் சொல்லாது வண்டியைச் செலுத்தவதிலேயே கவனமாய் இருக்க ''சிங்கம்... புலி... யானை எல்லாம் இருக்குமாம்...முயல் கூட ஓடுமாம்... பிரவீன் போயுக்கானாம். அம்மா...பீஸ்...நாங்கவும் போறோம்'' எனப் பேசியது, வெண்ணிலா இல்லை... ஆதவன்! அவனால் பிரவீன் பேசிய பெருமையைத் தாங்கமுடியவில்லை! நண்பன் கண்ட இடங்களைத் தானும் கண்டு விட வேண்டும் என்ற ஆசையில், தாயிற்கு ஆசை காட்டினான் தங்க மகன்.

''அப்பாக்கிட்ட கேட்கலாம்! அப்பா...சரின்னு சொன்னா... அம்மா அனுப்புறேன்'' எனக் கணவன் சொல்லைத் தட்டாத மனைவியாய் அன்பரசி உருமாற்றம் பெற, பிள்ளைகள் இருவருக்கும் சிரிப்பு ஊற்றாய் பெருகியது! ஆனானப்பட்டத் தாயைச் சமாளிப்பது தானே கடினம், தந்தை... என்ன ஜுஜுபி...ஊதி விடலாம் என்ற எண்ணம் போலும்!

அவர்களின் எண்ணத்தைப் பொய்யாக்கும் வண்
ணம், மாலை வீடு வந்து சேர்ந்த வெற்றிவேந்தன்
''வண்டலூர் ஜூக்கா? ஹ்ம்ம்...காலையிலிருந்து
சாயங்காலம் வரையா? இந்த வெயிலேயா? இவங்
களுக்கு வேற இடமே கிடைக்கலையா? இண்டோர்-ல
எங்காவது போகலாமே?'' எனக் கேள்விகளை அடுக்
கினான்.

''சிங்கம்... புலி...'' என ஆதவன் ஆரம்பிக்க, ''அதெல்
லாம் உங்களுக்கு காட்ட மாட்டாங்க! சின்னப் பசங்
களுக்கு முயல்... கிளி... ஆமை... இதெல்லாம் காட்டிட்டுக்
கூட்டிட்டு வந்திருவாங்க! இன்னொரு நாள்...அப்பா
கூட்டிட்டுப் போறேன் கண்ணா! இப்போ வேணாம்''
என்றான் வெற்றிவேந்தன்.

பிள்ளைகளின் பயண விவரம் கேள்விப்பட்டதும்,
கணவன் அவர்களை விடவும் உற்சாகமாய் குதிப்பான்
என அன்பரசி எண்ணியிருக்க, அவனது தற்போதைய
மறுப்பு அவளை ஆச்சரியப்படுத்தியது!

அதை வெளிப்படையாய் காட்டி ''ஏன் வெற்றிப்பா?''
என அவள் யோசிக்க, ''இல்லைம்மா, நிலாக்குட்டிக்கு...
வெயில அதிக நேரமிருந்தா உடம்பு முழுசும் பொரி
பொரியாக வந்திடும். அதான் யோசனையா இருக்கு?''
எனத் தன் மருத்துவ மற்றும் பெற்ற மனதை வெளி
யிட்டான், கவலையுடன்.

''ஹோ! அதுக்காகவா? நான் கூட, பசங்களை
வெளிய அனுப்பத் தயங்கிறீங்களோன்னு நினைச்சேன்''
என்றவளை இடைமறித்து, ''ச்சே, ச்சே! குழந்தைகள்
வெளிய போய்... புது விஷயங்களைக் கத்துக்கிறதில்



எனக்கு என்ன கஷ்டமிருக்கப் போவது? சந்தோசம்
தான்... ஆனா, அவளோட உடல்நிலையை நினைச்சால்
தான்...'' என அவன் இழுக்க, சிறார்கள் இருவரும் அழத்
துவங்கி விட்டனர்.

''ஷ். அம்மா இருங்க!'' எனப் பிள்ளைகளை அதட்
டியவள், ''ஒரேடியா வெயிலே நிற்க விடமாட்டாங்
கப்பா! வண்டிலேயே தான் கூட்டிப் போவாங்க...'' என
அவர்களுக்காக, கணவனிடம் பேசினாள்.

''ஹ்ம்ம். ஒரு தடவை அவங்க மிஸ்கிட்ட கேட்டு...
கன்ஃபார்ம் பண்ணிக்கோ! ஒரேடியா, நடக்க வச்சே ஜூ
முழுக்கக் கூட்டிடிப் போவாங்கன்னா, அனுப்ப வேண்
டாம்! ராமேஸ்வரம் போன போது, குழந்தை பட்டக்
கஷ்டமே போதும்! வேர்வையோட...அதை சொரிஞ்சு
சொரிஞ்சு புண்ணாக்கிட்டாளே! சிவப்ப...சிவப்பா உடல்
பூரா தடித்துப் போச்சு!'' என இரண்டு மாதங்கள் முன்னர்
நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தவன் தன் முடி
வையும் உறுதியாய் கூறி முடித்தான்.

தந்தையின் சம்மதம் எளிதாய் கிடைத்துவிடும்
என்றெண்ணியதற்கு மாறாய், அவன் மறுத்துவிடவே
பிள்ளைகள் இருவரும் அழுதே கரைந்தனர். ''போணும்...
போணும்...'' என விடாது தொணத்தி எடுத்தான்
ஆதவன். பிள்ளையின் புலம்பல் நிற்காது போகவும்,
''ஆதிக் கண்ணா! அப்பாக்கு அழுதா பிடிக்காதுன்னு
கண்ணனுக்குத் தெரியுமா தெரியாதா? தெரியும்
தானே? அப்புறம் எதுக்கு அழுறே? அப்பாக்குப் பிடிச்ச
மாதிரி நடந்தா தான்... ஜூக்கு அனுப்புவாங்க...சும்மா
அழுதா, வீட்டிலேயே இருன்னு சொல்லிடுவாங்க''

எனக் குரலில் ஏற்ற இறக்கம் இல்லமால், உறுதியாய் முடித்தாள், அன்பரசி.

அந்த மிரட்டல் நல்லபடியா வேலை செய்தது என்பதற்கு அடையாளமாய், ஆதவனின் கண்ணீர் மெல்ல நின்றது. அதற்கும் ஒரு படி மேலாய், தந்தையின் அருகே சென்று நின்று கொண்ட பிள்ளை அவனது இரு தொடைக்கும் ஊடே முகத்தைப் புதைத்துக் கொண்டு ''ஆதி... சமத்துப் பையன் தானே? அப்பா... ஆதி அழவே மாட்டான்... குட் பாய் இருப்பான்! பீஸ்பா... ஜூக்குப் போவாம்... பிரவீன் போயுக்கான்...'' எனக் கூறித் தந்தையின் முகத்ததை அண்ணார்ந்து பார்த்தான்.

பிள்ளைகளின் அழுகையையே தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாய் இருக்க, மகனின் ஏக்கப் பார்வையை எந்த தந்தையால் தான் தாங்கமுடியும்? சட்டென அவனை அள்ளி அணைத்துக் கொண்ட பெற்றவன், ''சரிம்மா, போயிட்டு வாங்க!'' என்றுவிட்டான்.

முகத்தில் ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் மின்ன, மிகுந்த சந்தோஷத்துடன் பிள்ளைகள் படுக்கச் சென்றதும், வெற்றியின் அறிவுரைப் பட்டியல் மனைவியிடம் நீண்டது!

''அவங்க கிளாஸ் மிஸ்கிட்ட, எல்லா விவரமும் கேட்டுட்டு வா! எத்தனை டீச்சர்ஸ் போறாங்க, எத்தனை சப்போர்ட்டிங் ஸ்டாஃப் போறாங்க... எத்தனை மணிக்குக் கிளம்புவாங்க... எத்தனை மணிக்குத் திரும்பி வருவாங்க... எல்லா பசங்களும் வராங்களா... இதெல்லாம் கேளு.''



''இதெல்லாம்... டைரிலேயே எழுதிக் கொடுத்திருக்காங்க வெற்றிப்பா'' என அன்பரசி கூறவும் (பாதுகாப்பு பராசக்தி இதையெல்லாம் ஒன்றுக்கு நூறு முறையாய் படித்துக் கரைந்திருந்தாளே! பிள்ளைகளின் பாதுகாப்புப் பற்றிய கவலை அனைத்துப் பெற்றோருக்குமே இருக்கும் என்பதால், பள்ளி நிர்வாகம் மிக விரிவாகவே எழுதி அனுப்பியிருந்தது. அதையும் தூசித், தும்பு நீக்கிக் கரைத்துக் குடித்திருந்தாள். இரட்டையரின் தாய்), ''இன்னொரு தடவை கேளேன்மா...'' என ஆயாசப் பட்டான் கணவன்.

''சரி, கேட்கிறேன்!''

''ஹ்ம்ம். அப்புறம் ரெண்டு பேருக்குமே... அன்னைக்கு வேப்பிலை ஊற வச்சத் தண்ணில குளிப்பாட்டி விடு! ரெண்டு பாட்டில்ல தண்ணி கொடுத்துவிடு! கொஞ்சமா தர்பூசணி ஜூஸ் கொடுத்துவிடு!'' என அடுக்கிக் கொண்டே போனவன்.

''யூனிஃபார்ம்ன்னா ஓகே...கலர் டிரஸ்-ஸா இருந்தா ரொம்ப இறுக்கமான டிரஸ் போடாதே...காட்டன் மாதிரி போட்டுவிடு...குழந்தை கேட்டான்னு நீ பாட்டுக்கு பார்பி டிரஸ், பட்டுப்பாவாடைன்னு எதையும் போட்டுடப் போறே!?'' எனப் பதறவும்.

''என்னாச்சு வெற்றிப்பா... உங்களுக்கு? எப்பவும், நான் தான் இந்த மாதிரி பதறுவேன்! இன்னைக்கு என்னாடன்னா...நீங்க இவ்வளவு டென்ஷன் ஆகுறீங்க? ஸ்கூல்லிருந்து கூட்டிப்போகும் போது எல்லா பசங்களை அடையாளம் காணறதுக்கு யூனிஃபார்ம் தானே போடச் சொல்வாங்க?'' என அவள் திருப்பிக் கேட்கவும்

தான் வெற்றிக்கே தனது நடவடிக்கை குறித்து வியப்பு வந்தது!

''இல்லடா... என்னன்னு தெரியல... நிலா பேபி, வேர்க்குருல ரெண்டு நாள் பட்டக் கஷ்டத்தை மறக்க முடியல போல...அப்பா, அப்பான்னு என்னை விட்டு நகரேவ இல்லையே குட்டி! அதான்!'' என அவன் அசடு வழிய, அந்த அசடில் கணவனின் பாசமே தெரிந்தது அன்பரசிக்கு.

''எனக்கும் யோசனையா தான் இருந்தது வெற்றி! ஆனா... நான் வேண்டாம்ன்னு சொன்னா. நீங்க திட்டு வீங்களோ... அதுக்கும் மேலா பசங்க அழுவாங்களோன்னு தயக்கமா இருந்தது? ரொம்ப மனசுக்கு சங்கடமா இருந்ததுன்னா... அனுப்ப வேண்டாம் வெற்றிப்பா'' என அவர் ஓர் குண்டைப் போடவும் தான், வெற்றி சுதாரித் தான்.

''ஹய்யோ... நீ திரும்ப ஆரம்பிக்காதேடி, இப்போ தான் நான் ஒரு வழியா சமாதானம் ஆகியிருக்கேன்... திரும்ப நீயா? என்னையாவது குச்சி மிட்டாய் கொடுத்து சரி பண்ணிடலாம்...உனக்கு குச்சி அடி தான் கொடுக் கணும்!'' என வெற்றிவேந்தன், தன் கேலி பாணிக்குத் திரும்பியதும் தான் அங்கே நிம்மதி சூழப்பெற்றது!

அந்த நிம்மதியை பெருக்கும் வண்ணம், அடுத்த நாள் காலையில் திருச்சிக்கு போன் போடப்பட, பாட்டி மார்கள் இருவரும் தங்கள் பேரன்-பேத்தியர் நிலாவுக்கே செல்லப் போவது போல், பூரித்து மகிழ்ந்தனர்.

''ஹையா, டூர்ரா?'' என வைதேகி ஆர்ப்பரிக்கவும், ''அவங்க தான்மா டூர் போறாங்க... உங்களை வேணும்ன்னா



இன்னொரு வாட்டி நான் கூட்டிப் போறேன்! சமத்தா, என்னோட கையைப் பிடிச்சுக்கிட்டு, அங்க இங்க ஓடாம வரணும் என்ன?'' எனத் தாயைக் கிண்டல் செய்து தள்ளினான் விஜயமாரன்.

''போடா லூசு'' என அவனை ஒதுக்கிவிட்டுப் பேரன்-பேத்திகளுடன் பலத்தப் பேச்சு வார்த்தை நடத்தினார், வைதேகி. முடிவில் வெற்றியிடம் தொலைப்பேசி கைமாற ''உனக்கென்ன அன்பரசியோட காத்து கீத்து அடிச்சிடுச்சா? லூசு மாதிரி... அவங்களை டூருக்கு அனுப்ப முடியாதுன்னு சொன்னியாமே? நியோ உன் அருமைப் பெண்டாட்டியோ ஏதாவது திருகுதாளம் பண்ணி. என் செல்வங்கள் டூருக்குப் போறதைக் கெடுத்தீங்க... நடக்கிறதே வேற!'' என்ற மிரட்டலைப் போட்டுவிட்டே அழைப்பை வைத்தார்.

என்னதான் பிள்ளைகளின் சந்தோசம், வளர்ச்சி என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாலும், அன்பர சிக்கு வெற்றியின் முதல் எதிர்ப்பு சின்னதாய் மனச் சஞ்சலத்தை உண்டு பண்ணியது என்றே சொல்ல வேண்டும்! அதே சஞ்சலம், கணவனுக்கும் இருந்திருக் கிறது என்பதை, பிள்ளைகள் விலங்ககம் செல்லும் நாளில் அவன் முகத்தில் காணப் பட்டக் கவலை ரேகை கள் எடுத்துரைத்தன.

மனைவி அறியா வண்ணம் முகத்தைச் சீராய் வைத்துக் கொண்டபோதும், அவனது ''நிலாக்குட்டி, தண்ணீர் பாட்டில் கையிலேயே வச்சுக்கணும்... என்னடா? அடிக்கடி தண்ணி குடிச்சுட்டே இரு...முதுகுல குத்துற மாதிரி இருந்தா, கையால சொரியக் கூடாது...

என்ன? மிஸ்கிட்ட சொல்லிட்டு பஸ்-க்கு வந்துடணும்... ஓகேவா?'' என அவன் பத்து முறைக்கும் மேலாக கூறியதில், அன்பரசிக்கு லேசாய் பதட்டம் பற்றிக் கொண்டது!

''என்ன வெற்றிப்பா? ஆதி மட்டும் வேணும்னா போகட்டும்... நிலாவை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடலாமா?'' எனக் கேட்கவும், ''அய்யகோ!'' என்றானது வெற்றிக்கு.

அதை விடவும், ''சரிப்பா! சரிப்பா!'' எனச் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருந்த பெண்ணைக் காண்பதற்குப் பாவமாய் இருக்க, ''நீ வா...'' என மனைவியை இழுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். அப்போதும் ''பிள்ளைகளைக் கவனமாய் பார்த்துக் கோங்க'' என இரட்டையர்களின் வகுப்பு ஆசிரியரிடம் எச்சரிக்க மறக்கவில்லை, அவன்!

சுற்றுலா ஆரம்பித்து, வண்டலூர் விலங்ககம் சென்று, அங்கிருக்கும் சிறு சிறு விலங்குகளைச் சுற்றிப் பார்த்து, மதிய உணவு உண்டு, மீண்டும் சுற்றிப் பார்த்து, மாலையில் பள்ளிப் பேருந்திற்கு வரும் வரை எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை.

நெடுங்கணக்கு வரிசை (alphabetical order) முறைப்படி பிள்ளைகளை அணிவகுத்திருந்தனர், ஆசிரியர்கள். வண்டியை விட்டு இறங்கும் போது, நெடுங்கணக்கு வரிசையின் ஏறு நிலைப்படி இறங்க வைத்தார்கள். வண்டியில் ஏறும் போது நெடுங்கணக்கு வரிசையின் இறங்கு நிலைப்படி ஏறச் சொன்னனர்!

அந்த முறையில், வெண்ணிலா முன்னதாக ஏறுவதாகவும், ஆதவன் முடிவில் ஏறுவதாகவும் அமைந்தது!



அங்கே விதியின் விளையாட்டா இல்லை, ஆங்கில எழுத்துக்களின் குளறுபடியா இல்லை பேர் வைத்த பெற்றோர்களின் குற்றமா? எதுவாகினும், வெண்ணிலா வண்டியினுள் ஏறியிருந்தாள்!

வண்டியில் ஓர் ஆசிரியர் ஏறி அமர்ந்து கொண்டு, பிள்ளைகளை ஏற்றி விடுவது என்றும், அனைத்துப் பிள்ளைகளும் ஏறியபின்னர் மற்ற ஆசிரியர்களும், செவிலியர்களும் ஏறுவது என்றும் முடிவு என்பதால், வண்டியில் ஓட்டுனர் மற்றும் நடத்துனரைத் தவிர ஒரே ஒரு ஆசிரியர் மட்டுமே இருந்தார்.

வரிசையாக பத்து பிள்ளைகள் ஏறியதும், வண்டி சற்று நகரவே ''என்ன ரத்தினம்? பசங்க இன்னும் ஏற வேண்டியிருக்கு!'' என வகுப்பு ஆசிரியை ஷோபா எச்சரித்தார்.

''அது... அது மேடம்! அந்த டூரிஸ்ட் பஸ் நின்னுட்டு இருந்த இடம் கொஞ்சம் நிழலா இருக்கே? அங்க நிறுத்துறேன் மேடம்... பசங்க வெயில் நிற்க வேண்டாமே?'' என ஏதேதோ காரணம் சொன்னவன், ஏறிய பிள்ளைகளுடன் வண்டியை மெல்ல நகர்த்தினான்.

லேசான முகச் சுளிப்புடன் அமர்ந்து இருந்த ஆசிரியரின் கவனம் அவனை விட்டு நகர்ந்ததும் ஏற்கனவே வாயிலின் அருகே நின்றிருந்த வண்டி, மெது மெதுவாய் வேகமெடுத்து,

சட்டென கேளம்பாக்கம் செல்லும் பாதையில் திரும்பியே விட்டது!

''ஹேய் ஹேய்! என்ன பண்றே?'' என உள்ளிருந்த ஆசிரியரும், வெளியிருந்த மற்றவர்களும் கூவிக் கொண்டே

இருக்க, சட்டென பூஜியத்திலிருந்து நூறிற்கு வேகமெடுத்த வண்டி, மின்னல் வேகத்தில் கிரேசென்ட் பொறியியல் கல்லூரியைத் தாண்டி பறந்தது!

''ஏய் ரத்தினம்? என்ன பண்றே? பசங்கெல்லாம் அங்க நிக்கிறாங்க... மரியாதையா வண்டியைத் திருப்பு...'' என ஷோபா கத்தும்போதே, வரிசையில் முதலில் ஏறியிருந்த வெண்ணிலா வண்டியின் முன் இருக்கையிலும் அமர்ந்திருந்த படியால், அவளைத் தன்னிடம் இழுத்துக் கொண்ட நடத்துனன், அவளது கழுத்தில் ஓர் கத்தியை வைத்தவாறே ''தேவையில்லாம கத்தினே, பிள்ளை கழுத்தில் ஒரே வெட்டு!'' என்றான் கண்களில் ருத்ரத்துடன்!

# 18



தன் கழுத்திலிருந்த கத்தியை உணரவே, மூன்று வயதான வெண்ணிலாவிற்குச் சில வினாடிகள் பிடித்தன.

''குழந்தையை எதுவும் செய்துடாதே'' என இருபத்தைந்து குழந்தைகளின் தாயான (ஆசிரியரும் பெற்றவருக்கு நிகர் தானே) வகுப்பு ஆசிரியைக் கூவ, கத்தியைப் பிடித்திருந்தவன் என்ன நினைத்தனோ, வெண்ணிலாவிற்கு ''எதுக்கு மிஸ் கத்துறாங்க?'' என்று தான் தோன்றியது!



பிடித்திருந்தவனின் பிடி உடும்பாய் இருக்க, இமைகளைத் தாழ்த்திப்பார்த்தக் கன்றின் பார்வையைக், கத்தியின் கூர்முனை நிறைத்தது. உடனே, தன் முன்னே பதட்டத்துடன் நின்றிருந்த ஷோபாவிடம் ''இவங்க பாட் பீப்பிலா...மிஸ்?'' என்றாள் வெண்ணிலா, கேள்வியாக.

எதற்குக் கேட்கிறாள் என்று புரியாத போதும் ''ஆமாடா'' என ஷோபா தலையசைக்க, அந்த வினாடி ''நம்மளை... பாட் பீப்பில் யாராவது பின்னாடியிருந்து அட்டாக் பண்ணின்னா, என்ன தெரியுமா செய்யணும்?''

''அவங்களை விட்டு ஓடக் கூடாது. நம்ம சட்டுன்னு ஓடும் போது, அவங்க அடிச்சிடுவாங்க இல்லையா... அதனால... ஓடக் கூடாது ஓகேவா?''

''அப்புறம், முக்கியமா... அழக்கூடாது! அழுதா... உங்களுக்கு அவங்களைப் பார்த்துப் பயம்ன்னு அவங்களுக்குத் தெரிஞ்சிடும்... அப்புறம் ரொம்ப அடிச்சுடுவாங்க!''

''அடுத்ததா, அவங்களைத் திரும்பியே பார்க்கக் கூடாது!''

''நெக்ஸ்ட், என்ன தெரியுமா செய்யணும்...அவங்க கத்தியைப் பிடிச்சிருக்க கையோட எல்போ இருக்கில்லையா... எல்போ தெரியுமா...கை முட்டி...இதான் எல்போ... அதுகிட்ட மெதுவா ரைட் ஹாண்ட்டைக் கொண்டு போய், வேகமா தள்ளிவிடணும். உடனேயே அவங்க கையை ரெண்டு கையாளும் பிடிச்சுக்கிட்டு, பல்லால கடிச்சிடணும்!'' என்று நெஞ்சில் ஓடி மறைந்த கராத்தே மாஸ்டரின் அறிவுரையை, மின்னல் வேகத்தில் செய்து முடித்திருந்தது, அந்த இளம் கன்று!

"ஆ...ஆ" என அவன் அலற, வெண்ணிலா ஷோபாவின் அணைப்பிற்குள் வந்து சேர்ந்திருந்தாள். "என்னயா கடிச்சே? குட்டிப் பிசாசே?" என அந்த நடத்துனன், மீண்டும் பாய முயல "டேய், நம்மளோட குறி பசங்க கிடையாது... பள்ளிக்கூடம் தான்! அவங் களை எதுவும் செய்யாதே!" என்றான் ஓட்டுனன்.

அதிலிருந்து அவர்களது நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், பிள்ளைகளுக்கு ஆபத்து நேராது என்று ஷோபா எண்ணிக் கொண்டிருக்கும் போதே "அந்த ஸ்கூல்காரப் பன்னாடைங்க மசிய லைன்னா, நமக்கு ஒரு துருப்புச் சீட்டு வேண்டாம். அப்போ... இதுன்களைப் பார்த்துக்கலாம்" என ஓர் குண்டைப் போட்டான், வண்டியைப் பேய் வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்த சாத்தான்.

கத்தியைப் பார்த்தப் பயத்தில், உள்ளிருந்த பிள்ளைகள் யாவரும் அழத் துவங்கினர். தனக்குள்ளும் முனைந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு "அழக் கூடாது, பசங்களா" என அவர்களைச் சமாதானப் படுத்த முயன்றாள், ஷோபா. ஆனால், இருபத்திமூன்று வயதே ஆன அப்பாவைக்கும் முன்னிருக்கும் இரு பாவிகளைக் கண்டு பயமே என்று போது, அப்பாவியான குழந்தைகளை எங்கணம் சமாளிப்பாள்?

வெண்ணிலாவின் பாதுகாப்பை உணர்ந்த சில நிமிடங்களில், ஷோபாவிற்கு மெல்ல மெல்ல நடப்பப் புரிய ஆரம்பித்தது! மூலையில் மணியடிக்க, தன் கைப்பையைப் பாய்ந்து எடுத்தவள், கைப்பேசியை எடுக்க முயலவும், கத்தி வைத்திருந்தவன் கூவினான்.



"ஏய்! ஹீரோயின் மாதிரி ஏதாவது செய்யாதே? போனை முதல்ல என்கிட்டே கொடு! இல்ல..." எனக் கூறி, இன்னொரு பிள்ளையை இழுக்கப் பார்த்தான். வெண்ணிலாவைப் போலல்லாமல் அவன் இழுக்கப் போன உதயா பயத்தில் உறைந்திருப்பதைப் பார்த்த ஷோபாவிற்குத், தன் கைப்பேசியைக் கொடுப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை!

தனக்கு வந்த ஆபத்திலிருந்து சாமர்த்தியமாய் வெளிவந்த வெண்ணிலாவிற்கும் தனக்கு நேர்ந் திருக்கும் ஆபத்த தற்காலிகமானது அல்ல. தொடரும் அபாயம் என்பது புரிய ஒரு மணி நேரத்திற்கும் மேலா னது ஏனெனில் கத்தியை வைத்திருந்த நடத்துனன். அதை இறக்காததோடு, அவர்களை நோக்கி அதை நீட்டியவாறே இருந்தான்! கூடவே "யாராவது சத்தம் போட்டு அழுதீங்க... தொலைச்சுடுவேன்... தொலைச்சு" என்ற மிரட்டல் வேறு, அடிக்கொரு முறை வந்து கொண்டே இருந்தது!

"நம்மளை... எங்க மிஸ் கூட்டிப் போறாங்க?" "ஆதி ஏறவே இல்லையே?", "பிரபா மிஸ் கீழே நின்னாங் களே" என மாற்றி மாற்றி, கேள்விக் கேட்டப் பிள்ளை களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவித்த ஷோபாவிற்கு, அவர்களை எங்கு அழைத்துச் செல்கின்றனர் என்று கூடப் புரியவில்லை.

"உங்களுக்கு என்ன வேணும்?"

"இப்போ எங்க போயிட்டு இருக்கோம்?"

"இப்போ எங்க கடத்திட்டு வந்திருக்கீங்க?"

"உங்களுக்கு ஸ்கூல் நிர்வாகத்தோட பிரச்சனை என்றால்... இந்தச் சின்னப் பிள்ளைங்க என்ன செய்வாங்க?"

"அவங்களை எதுக்குத் துன்பப் படுத்துறீங்க?" என அவளது எந்த ஒரு கேள்விக்கும் பதில்லாமல் போகவே, தன் வகுப்புத் தோழியின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த வெண்ணிலா, இருக்கையை விட்டு எழுந்தாள். அவளைப் பிடித்து இழுத்த உதயா விடம் "ஒன் நிமிசம் இரு...உதி" என்று விட்டு, முன்னே நடந்தாள்.

வெண்ணிலா செல்வதைப் பார்த்துவிட்டு, வேகமா பதறி எழும்போதே "எங்க மிஸ்...கேட்கிறாங்க இல்ல? ஆன்சர் சொல்லுங்க? பெரியவங்க... கொஸ்டின் கேட்டா ஆன்சர் சொல்லணும்! இல்லன்னா ராத்திரி தூங்கறதுக்கு முன்னாடி அம்மா கதை சொல்லவே மாட்டாங்க...நம்ம உங்களுக்கு கதை வேணுமா வேணாவா? ம்ம் சொல்லுங்க" என ஒரு விரல் நீட்டி, அந்தமுரடர்களை மிரட்டத் துவங்கிவிட்டாள், சின்னவள்.

அவளது மிரட்டல் கண்டு அந்த நேரத்திலும், அவளது ஆசிரியருக்குச் சிரிப்பு வந்தது. மனம் லேசான போதும், சிறு பெண்ணான அவள், முரடர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாளே என்ற பதைப்பில் "வெண்ணிலா" என விளித்து, "அவங்கெல்லாம் ஆன்சர் செய்ய மாட்டாங்கடா குட்டி. நீ...உதயாகிட்டக்கப் போய் உட்காருடா" என்றாள், நயமாக.

"என் ஆன்சர் செய்ய மாட்டாங்க?" என ஆசிரியரிடம் கேட்ட வெண்ணிலா, அவரது பதிலை



எதிர்பார்க்காது "என் அங்கிள்...ஆன்சர் செய்ய மாட்டீங்க? உங்களுக்குக் காது கேட்காதா?" எனத் தானாய் ஓர் காரணம் கற்பித்து, அவர்களைத் தலை சரித்துக் கேட்டாள்.

அப்போதும் அங்கே பதிலின்றி, வெறும் முறைப்பு மட்டுமே வர, சரிந்தத் தலையை மெல்ல நிமிர்த்தி, "காதில் ஒரு கை வைத்து, மறு கையால் "கேட்காதா?" என்பது போல் செய்கை வேறு செய்தாள்.

அவள் கேட்ட அழகைக் கண்ணாடி வழியாக பார்த்திருந்த ஓட்டுனரின் உதட்டில் சிரிப்பு மெல்லப் பூத்த போதும், வெண்ணிலாவின் முன்னே கத்தியை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்த வாலிபனுக்குச் சிரிப்புக்குப் பதிலாய் கோபம் வந்தது.

"மரியாதையா...உன் இடத்தில போய் உட்காரு!" என அவன் கத்தியால் காற்றில் கோடு போடவும், "பிள்ளைகளை மிரட்டாதே, ரமேஷ்! மெல்ல சொல்லு" எனத் தன் மைத்துனனை அடக்கினான், ரத்தினம் என்ற ஓட்டுனன்.

தன் தமக்கை கணவனின் ஆணைக்கு ஏற்ப வாயை மூடியபோதும், "மெல்ல சொல்லு" என்ற அவனது ஆணையை நிறைவேற்றவில்லை. அந்த ரமேஷ். அவனையே முறைத்துக் கொண்டு வெண்ணிலாவும், வெண்ணிலாவையே முறைத்துக் கொண்டு அவனும், ஓர் யுத்தக்கள சூழலை உண்டு செய்யவும் "வெண்ணிலா கண்ணு! உன் இடத்தில போய் உட்காரு பாப்பா. வண்டியை நிறுத்திட்டு... அங்கிள் வந்து பதில்

சொல்லுறேன்'' என அவளை அனுப்பி வைத்தான், ரத்தினம்.

தன் இடுப்பில் இரு கைகளையும் வைத்து, அவளை ஓர் முறை முறைத்தப் பெரிய மனுஷி, மெல்ல தன் இருக்கைக்கு நடையைக் கட்டினாள். போகும் வழியில் ''மிஸ், பஸ் நின்னதும்...கொஸ்டீன் கேளுங்க மிஸ்'' என்றுவிட்டு வேறு போனாள்.

தன்னருகே வந்தமர்ந்த தோழியிடம் ''அங்கெல்லாம் போவாதே வெண்ணி...அவங்கெல்லாம் நைஃப் வச்சிருக்காங்க...போனா அச்சுடுவாங்க'' என்றாள் உதயா எனும் சிறுமி, ரகசியமாக.

''அவங்க அடிச்சா... நானும் திம்பி அச்சுடுவேன்'' எனக் கையை மடக்கிக் கொண்டு, சண்டைக்குத் தயாரானது நமது வீராங்கனை.

மேலும் அரை மணி நேரம் நடந்தேறிய பயணம் மேலும் தொடர்ந்து கொண்டே இருக்க, ஷோபாவின் பொறுமை பறந்து கொண்டிருந்த அதே சமயம், பிள்ளைகளின் பயமும் பறந்து அழுகை துவங்க ஆரம்பித்தது. முதலில் அழத் துவங்கிய ஷாராவைப் பார்த்த மற்ற சிறுவர்களும் அழுகையைக் குத்தகைக்கு எடுத்தனர்.

''ஷ் அழக் கூடாது?'' என்ற ஷோபாவுடன் சேர்ந்து வெண்ணிலாவும் ''ஷ் அலக் கூடாது! அழுதா... அப்பாக்குப் பிக்காது! அலுவாம இருந்தா தான்... இந்த அங்கிள் நம்ம.... நம்ம வீட்டுக்கு அனுப்புவாங்க'' எனத் தன் தாயின் வார்த்தைகளை (சுற்றுலா அனுப்பும் போது



அன்பரசி ஆதவனிடம் கூறிய வார்த்தைகள்) நினைவு கூர்ந்து, தன் தோழர்களைத் தேற்றினாள்.

''அனுப்புவாங்களா?'' என ஊர்மிளா கேட்டால், ''நம்ம கத்தியால குத்திடுவாங்க... நாம செத்துப் போவப் போறோம்... பில்லால கூத அப்பித் தான் சாவாங்க!'' எனத் தன் திரைப்பட அனுபவத்தை எடுத்துவிட்டான் விஜூத். அவனது அந்தப் பேச்சு, ஷோபாவின் மனதில் திரைப்படங்கள் மேல் ஓர் வெறுப்பை உண்டுபண்ணியது. அத்துடன் சேர்ந்து அப்படங்களை பார்க்க அனுமதிக்கும் பெற்றோரின் மீதும் எரிச்சல் வந்தது!

ஷோபாவின் கோபத்தைப் பெருமளவு குறைக்கும் வண்ணம் ''ம்ஹூம், பாட்பீப்பிள்ளுக்குத் தா காட்...அடி கொடுத்து அவர்கிட்ட கூட்டுப்பார். குட் பீப்பிள் எல்லாம் கூப்பவே மாத்தார்'' என சாவிற்கு ஓர் நல்ல விதமான பூச்சுக் கொடுத்தாள் வெண்ணிலா.

அவளது கூற்றை ஒத்துக்கொள்வது போல், ''ஆமா... ஆமா... நாம குட் பீப்பிள்... அவங்க தர் பாட்.. அவங்க தான் அடி வாங்குவாங்க... காட் நல்ல அடிச்சுடுவார்!'' என்றனர் இரு சிறார்கள். ஒரு நல்ல கூற்றிற்குப் பல ஆமோதிப்புகள் இருந்தாலும். ஒரு மறுதலிப்பாவது இருக்கும் என்ற கூட்டிற்கு இணங்க, ''கடவுள்...குட் பீப்பிள் தான் சீக்கிரம் கூப்பிட்டுப்பார். எங்க தாத்தா சொல்லியிருக்காங்க... எங்க பாட்டி ரொம்ப குட் தேயுமா... அவங்களையும் கடவுள் கூட்டிட்டார்'' என்றான், தன் பாட்டியை இழந்திருந்த ஒரு சிறுவன்.

அதற்கும் வெண்ணிலாவிடம் ஓர் பதிலிருந்தது ''உங்க பாட்டி... குட் பீப்பிள் தான்! ஆனா, அவங்க

பெய்யவங்க தானே? காட்... என்ன செய்யுமா செய்வார்? நெய்ய பீப்பிளை கீழே போவச் ச்சொல்லு வார்... அவரால மேலிருந்து வர முடியாது இல்ல...அதான் நெய்ய பேரைக் கீழ போவச் சொல்லிட்டே இயுப்பார்... அவர் சொல்லிக் கொடுத்த வேலையெல்லாம் நாம செய்துற வயைக்கும் நம்ம கூப்பிதவே மாட்டார்... நடுல ஏதாவது தப்பு செஞ்சா மட்டு தா கூப்புவார்...உங்க பாட்டி, அவர் ச்சொன்னது எல்லா செஞ்சுப்பாங்க...அதா கூப்பிதார்.... நம்ம தா இன்னும் செய்யலையே... அதனால கூப்பமாத்தார்'' என்றாள் நிதர்சனமாய்.

''வாழ்க்கையின் தத்துவத்தை என்ன அழகாய் சொல்லிவிட்டாள்?'' என ஷோபா வியந்து கொண் டிருக்கும் போதே, தருண் என்ற சுட்டி ''காட், எம்பி நமக்கு வேலை கொடுப்பார்? நம்ம கூத பேசுவாரா?'' என்றான். என்ன பதில் சொல்லப் போகிறாள் என ஷோபா யோசித்துக் கொண்டிருக்கும் போதே ''நம்ம அப்பா - அம்மாகித்த தீம்-ல(ட்ரீம்-ல) வந்துச் சொல்லுவார். ஏன்னா, அவங்கெல்லாம் பெய்யவங்க இல்ல...அதான்! நாமாவும் பெதுசு ஆனதும், நம்ம கித்தையும் சொல் லுவா! எங்க பாரு பாத்தீ சொல்லியிருக்காங்க!'' எனத் தீர்மானமாய் பதிலுரைத்தாள். அந்தச் சுட்டிப் பெண்.

வெண்ணிலாவின் இந்த சமாதானத்தில் பிள்ளை களின் அழுகை ஓரளவு அடங்கிவிட, அந்தப் பயணமும் ஓர் முடிவிற்கு வந்தது.

வண்டி நின்றதும் மிஸ் பஸ் நின்னுடுச்சு! கொஸ்டீன் கேளுங்க...'' என ஒரு மணி நேரத்திற்கு முன்னர் நடந்த



கேள்வி - பதில் விசாரணையை மீண்டும் தொடங்க வைத்தாள் வெண்ணிலா.

சிறுமி கூறுவதற்கு முன்னரே, வண்டியின் முன் பக்கம் வந்திருந்த ஷோபா ''ரத்தினம், தயவு செய்து என்ன பிரச்சனை என்று சொல்லுங்க? பசங்கெல்லாம் ரொம்ப சின்னப் பசங்க...ரொம்ப நேரம் அவங்களை அடக்கி வைக்க முடியாது! அங்க அவங்களோட அப்பா - அம்மா எல்லாம் தவிச்சிட்டு இருப்பாங்க'' என்றாள் கெஞ்சுதலாக.

''உன்கிட்ட சொல்றதை விட, உம் பிரின்சிபால்கிட்ட சொல்றது நல்லா இருக்கும்ல'' என எகத்தாளமாய் கூறிய ரத்தினம், ''ஏலே ரமேஷு, அந்த போனை எடுத் திட்டு வா'' என்றான் ஏவல் பாணியில்.

கைக்குக் கைப்பேசி வந்ததும், பள்ளி நிர்வாக அலுவலக எண்ணை அழுத்தியவன், பள்ளி ஊழியரின் குரல் கேட்கவும் ''உங்க பிரின்சிபாலைக் கூப்பிடு!'' என்றான் உரக்க.

★ அங்கே ★

பள்ளிப்பேருந்து மின்னலென மறைந்த வினாடி, வண்டலூர் விலங்கக வளாகத்தில் நின்றிருந்த ஆசிரி யர்கள் அனைவருக்கும் பதற்றம் தொற்றிக் கொண்டது!

''நில்லு, நில்லு'' என்ற கூவலுடன் அவர்கள் ஓடியபோதும், போட்டிருந்த சிகப்பு சுட்டுக்குறியைக் கூட மதிக்காமல், பருந்தென பாய்ந்திருந்த பேருந்து, சூழ வந்த சிற்சிறு ஊர்திகளை முந்திக் கொண்டு கண்ணை விட்டே மறைந்து போயிருந்தது!

மறையும் பேருந்தைப் பார்த்து ''கடவுளே!'' எனத் தலையை அடித்துக் கொள்ளத் தான் முடிந்தது, அங்கிருந்த ஆசிரியர்களால்.

கடந்து சென்று விட்டப் பேருந்தும், அதில் ஏறியிருந்த தனது தங்கையும், பதட்டத்துடன் காணப்பட்ட ஆசிரியப் பெருமக்களும், ஆதவனுக்கு ஏதோ ஓர் செய்தியைப் பறைசாற்ற ''மிஸ்... மிஸ்... நிலா அதில இக்காளே? அந்த அங்கிள் ஏன் மிஸ்... வண்டி எடுத்துட்டாங்க? நாங்க ஏற வேணுமே?'' எனத் தன் சந்தேகத்தைக் கேட்டான்.

அச்சிறுவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ''அது... அது... இப்போ வந்துடுவார்'' என உளறி கொட்டிய ஆசிரியர்களால், பள்ளித் தலைமையிடம் அதை மறைக்க முடியவில்லை. மறைப்பதும் உசிதமாய் படாததால். ஏன் முட்டாள்தனமாய் கூட தோன்றியதால். அடுத்த கணமே பள்ளியின் தலைமைக்கு அழைப்புப் பறந்தது!

வண்டலூர் சிக்னலில் நின்றிருந்த போக்குவரத்துக் காவலாளியிடம், விஷயத்தைக் கூறி, பள்ளிப் பேருந்தைப் பின்பற்றிப் போகச் சொல்லலாம் என்றெண்ணிய ஓர் ஆசிரியரை மற்றவர்கள் கைப்பற்றி நிறுத்தி, வாய் மேல் விரல் வைத்துக் காட்டினர்.

பள்ளியின் முனைவரிடம், ஓட்டுனர் மற்றும் நடத் னர் வண்டியை எடுத்துக் கொண்டு மாயமாய் றைந்து விட்ட விஷயத்தையும், அதில் ஓர் ஆசிரியர் ற்றும் பத்து பிள்ளைகள் இருப்பதைக் கூறி, இது ஒரு



கடத்தலாக இருக்கலாம் என முடிக்கையில் தங்களைச் சுற்றியிருக்கும் சிறார்களை, அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை!

கைப்பேசியில் பாதிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, ''அச்சோ! நம்ம பஸ்-சை கிட்னாப் செய்துட்டாங்களாம்'' என ஒரு வாண்டு எடுத்துக் கொடுக்க, அடுத்தடுத்து அங்கிருந்த வாண்டுகள் அனைத்தும் அழத் தொடங்கிவிட்டனர்.

தங்களது தவறை, ஆசிரியர்கள் உணரும் முன்பே அங்கே ஓர் பதட்டமான சூழல் உருவாகிவிட, ஒருவர் மட்டும் பள்ளி நிர்வாகத்துடன் பேசவது என்றும், மற்ற ஊழியர்கள் இருக்கும் குழந்தைகளைக் கவனமாய் பார்த்துக் கொள்ளுமாறும் பள்ளி நிர்வாகம் கட்டளையிட்டது! அதன்படி, நடந்த விஷயத்தை மீண்டும் கூறிய ஆசிரியர், ''போலீஸ்'' என்ற ஒரு வார்த்தையை உதிர்த்தப் போது ''பைத்தியக்காரத் தனமா எதையும் செய்து வைக்காதீங்க!'' எனக் கடுமையாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

''பத்து பிள்ளைகளைத் தொலைச்சிட்டு நிற்கிறது போதும்! மீதியிருக்கும் பிள்ளைகளைப் பாதுகாப்பா ஸ்கூல்ல வந்து சேர்க்கிற வழியைப் பாருங்க'' என்றவர், மாற்றுப் பேருந்து ஒன்றை அனுப்பி வைப்பதாய் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தார். பள்ளி முனைவர், அடுத்ததாய், அவர் அழைத்துப் பேசியது, தனக்குத் தெரிந்த ஓர் காவல்துறை உயர் ஆணையருக்கு!

மறையும் பேருந்தைப் பார்த்து ''கடவுளே!'' எனத் தலையை அடித்துக் கொள்ளத் தான் முடிந்தது, அங்கிருந்த ஆசிரியர்களால்.

கடந்து சென்று விட்டப் பேருந்தும், அதில் ஏறியிருந்த தனது தங்கையும், பதட்டத்துடன் காணப்பட்ட ஆசிரியப் பெருமக்களும், ஆதவனுக்கு ஏதோ ஓர் செய்தியைப் பறைசாற்ற ''மிஸ்... மிஸ்... நிலா அதில இக்காளே? அந்த அங்கிள் ஏன் மிஸ்... வண்டி எடுத்துட்டாங்க? நாங்க ஏற வேணுமே?'' எனத் தன் சந்தேகத்தைக் கேட்டான்.

அச்சிறுவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ''அது... அது... இப்போ வந்துடுவார்'' என உளறி கொட்டிய ஆசிரியர்களால், பள்ளித் தலைமையிடம் அதை மறைக்க முடியவில்லை. மறைப்பதும் உசிதமாய் படாததால். ஏன் முட்டாள்தனமாய் கூட தோன்றியதால். அடுத்த கணமே பள்ளியின் தலைமைக்கு அழைப்புப் பறந்தது!

வண்டலூர் சிக்னலில் நின்றிருந்த போக்குவரத்துக் காவலாளியிடம், விஷயத்தைக் கூறி, பள்ளிப் பேருந்தைப் பின்பற்றிப் போகச் சொல்லலாம் என்றெண்ணிய ஓர் ஆசிரியரை மற்றவர்கள் கைப்பற்றி நிறுத்தி, வாய் மேல் விரல் வைத்துக் காட்டினர்.

பள்ளியின் முனைவரிடம், ஓட்டுனர் மற்றும் நடத்துனர் வண்டியை எடுத்துக் கொண்டு மாயமாய் மறைந்து விட்ட விஷயத்தையும், அதில் ஓர் ஆசிரியர் மற்றும் பத்து பிள்ளைகள் இருப்பதைக் கூறி, இது ஒரு



கடத்தலாக இருக்கலாம் என முடிக்கையில் தங்களைச் சுற்றியிருக்கும் சிறார்களை, அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை!

கைப்பேசியில் பாதிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, ''அச்சோ! நம்ம பஸ்-சை கிட்னாப் செய்துட்டாங்களாம்'' என ஒரு வாண்டு எடுத்துக் கொடுக்க, அடுத்தடுத்து அங்கிருந்த வாண்டுகள் அனைத்தும் அழத் தொடங்கிவிட்டனர்.

தங்களது தவறை, ஆசிரியர்கள் உணரும் முன்பே அங்கே ஓர் பதட்டமான சூழல் உருவாகிவிட, ஒருவர் மட்டும் பள்ளி நிர்வாகத்துடன் பேசவது என்றும், மற்ற ஊழியர்கள் இருக்கும் குழந்தைகளைக் கவனமாய் பார்த்துக் கொள்ளுமாறும் பள்ளி நிர்வாகம் கட்டளையிட்டது! அதன்படி, நடந்த விஷயத்தை மீண்டும் கூறிய ஆசிரியர், ''போலீஸ்'' என்ற ஒரு வார்த்தையை உதிர்த்தப் போது ''பைத்தியக்காரத் தனமா எதையும் செய்து வைக்காதீங்க!'' எனக் கடுமையாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

''பத்து பிள்ளைகளைத் தொலைச்சிட்டு நிற்கிறது போதும்! மீதியிருக்கும் பிள்ளைகளைப் பாதுகாப்பா ஸ்கூல்ல வந்து சேர்க்கிற வழியைப் பாருங்க'' என்றவர், மாற்றுப் பேருந்து ஒன்றை அனுப்பி வைப்பதாய் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தார். பள்ளி முனைவர், அடுத்ததாய், அவர் அழைத்துப் பேசியது, தனக்குத் தெரிந்த ஓர் காவல்துறை உயர் ஆணையருக்கு!

அவர் அனுப்பி வைத்த மாற்றுப் பேருந்து அரை மணிநேரத்தில் வந்து சேர்ந்தபோதும், தங்களது நண்பர்கள் இல்லாமல் வண்டியில் ஏற மாட்டோம் என்று அடம் பிடித்தப் பிள்ளைகளைச் சமாளிப்பது தான் பெரும் கஷ்டமாய் இருந்தது! அவர்கள் வேறு வழியில் வருகிறார்கள். நாம் பள்ளிக்குப் போவதற்கு முன்பே அவர்கள் அங்கே வந்து சேர்ந்துவிடுவார்கள் எனக்கூறி வண்டியில் ஏற்ற முற்பட்டனர்.

எஞ்சியிருந்த பிள்ளைகள் யாவரும் வண்டியல் ஏறிவிட, ஆதவன் மட்டும் வெண்ணிலா வந்தால் தான் ஏறுவேன் எனப் பிடிவாதம் பிடித்துக் கொண்டு, நடு ரோட்டில் மூணு மணி வெயிலில் அமர்ந்துவிட்டான் ''வவ மாட்டேன்! நிலா...வந்தா தா வருவேன்!'' என்றவனின் குரலில் பிடிவாதத்தை விட, அழுகையே ஓங்கியிருந்தது! பத்து நிமிடங்களுக்கும் மேலாய் அவனிடம் பேசிப் பார்த்த ஊழியர்கள், பள்ளியிலிருந்து வந்த தொடர் அழைப்புகளால் அவனை வலுக்கட்டயமாக வண்டியினுள் ஏற்றி, பள்ளி நோக்கிப் பறந்தனர்.

பிள்ளைகள் தங்களது சுற்றுலா முடிந்து, தோராயமாய் நான்கு மணிக்குத் திரும்புவர் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால், பெற்றோர் அனைவரும் மூன்றரை மணிக்கே பள்ளி வளாகத்தில் குவிய ஆரம்பித்து விட்டனர். அதிலும் வெற்றியும் அன்பரசியும் மூன்று மணிக்கே பள்ளியில் ஆஜர்!

தனது இரட்டைச் செல்வங்கள் சுற்றுலாவிற்குச் செல்கின்றனர் எனத் தெரிந்த நாள் தொட்டு, மனதில் நிலவிய சஞ்சலத்தை இன்னதென்று வரையறுக்க



முடியாது போனதால், அவர்கள் சுற்றுலா முடிந்து திரும்பும் வரையிலும் வீட்டில் இருப்பது என்று முடிவு செய்திருந்தான் வெற்றிவேந்தன். முன்னரே சொல்லியிருந்ததால், அன்றைய தினம் அவனுக்கு அறுவை சிகிச்சைகளோ, நோயாளிகளின் வருகையோ இல்லாது போனதால், காலை ஒன்பது மணிக்குப் பிள்ளைகள் அனுப்பியது முதல் வீட்டிலேயே தவமிருந்தவனைக் காண அன்பரசிக்கே ஆச்சரியமாய் இருந்தது!

மனைவியின் வியந்தப் பார்வைக்குப் பதிலாய் ஓர் சிரிப்பையே உதிர்த்தவன், ''இன்னைக்கு கேஸ் எதுவுமில்லை. அதான் வீட்டில இருக்கலாம்ன்னு'' என்றான் உண்மை போல். அவன் வாய்மொழியாய் சொல்லிய பதிலை விட, மனமொழியாய் அவன் சொல்லாத பாசம், அன்பரசியின் தாய் மனதிற்குப் புரியவே செய்தது! தந்தைக்கும் தாயுள்ளம் உள்ளது என்பதை உணர்ந்த அந்த தாயும், தன் பிள்ளைகளின் தந்தையைத் தன் பிள்ளையாய் பாவித்து தாயன்பூட்டித் தாலாட்டினாள்!

ஒன்றரை மணிக்குத் துவங்கிய அவனது உறக்கதைச் சரியாக இரண்டு ஐம்பதுக்குக் களைத்துப் பிள்ளைகளைக் காண அவர்கள் விரைய, அங்கே வெற்றிவேந்தனின் உள்ளுணர்வை மெய்ப்பிக்கும் வண்ணம் ஓர் பேரிடி காத்திருந்தது!

நான்கு மணிக்கு வரும் என்று எதிர்பார்த்த வண்டியைக் காணாது பெற்றோர்கள் அனைவரும் மனவுலைவுடைய மனநிலைக்குத் தள்ளப்பட, அவர்கள் நெஞ்சில் பாலை வார்ப்பது போல் ஓர் பேருந்து பள்ளிக்குள் நுழைந்தது.

‘‘இது காலையில் போன பேருந்தில்லையே?’’ எனச் சில குரல்கள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, வண்டி நின்றுவிட அதிலிருந்து அழு குரல்கள் ஓங்கி ஒலிக்கத் துவங்கின.

‘‘என்ன? என்ன?’’ எனப் பெற்றோர் அனைவரும் முன்னே செல்ல முயல, அதிலிருந்து முதலில் வெளிப் பட்ட ஆசிரியரின் கையிலிருந்த ஆதவனின் குரலில் பதறிப்போயினர். அன்பு - வெற்றி தம்பதியர்.

‘‘ஆதிக் கண்ணா!’’ என்ற கூவலுடன் அன்பரசி முன்னே விரைய, கூடியிருந்த சிலரைத் தள்ளிக் கொண்டு மகனைக் கையில் வாங்கினான் வெற்றி வேந்தன்.

தந்தையைக் கண்டதும் அவனிடம் தாவிய ஆதவன் ‘‘ப்பா... நிலா... அந்த பஸ்ல போய்த்தா. பஸ் வேகமா போய்ச்சு... மிஸ் கிட்னாப் செய்துட்டாங்க சொன் னாங்க... நிலா காணோம்!’’ எனத் தனக்குத் தெரிந்த விவரங்களைத் தன்னாலான மட்டும் விரைவாக தந்தையிடம் பகிர்ந்தான்.

‘‘என்னடா சொல்றே? நிலா கண்ணம்மா...’’ என மகளைக் கூவி அழைத்துக் கொண்டே, அங்கிருந்த மனிதக் கூட்டத்தினுள் புகுந்தாள் அன்பரசி.

அங்கிருந்த பெற்றோர் அனைவரும், தத்தம் பிள்ளை களின் பெயரை உரக்க அழைத்துக் கொண்டு, தங்கள் மகவுகளை இனம் கண்டு. தங்களுடன் இறுக்கிக் கொள் வதில் மும்முரமாய் இருக்க, பத்து நிமிடக் களேபரத் திற்குப் பின்னர் ‘‘விஜூத்’’, ‘‘உதயா’’, ‘‘ஊர்மிளா’’,



‘‘ஷாரா’’, ‘‘சர்வேஷ்’’, ‘சாஷந்த்’’, ‘தேஜஸ்வினி’’, ‘‘தருண்’’, ‘‘சரண்யா’’ போன்ற அழைப்புகளுக்குப் பதி லேதும் வராது போக ‘‘வெண்ணிலா’’, என்ற அன்பரசி யின் கதரளுக்கும் ‘‘நிலா பேபி’’ என்ற வெற்றியின் பரிதவிப்பிற்கும் கூட பதிலின்றி போனது!

‘‘என்ன நடக்குது இங்கே?’’ என அங்கிருந்த ஓர் ஆசிரியரை, தொலைந்து போன ஓர் பிள்ளையின் தாய் உலுக்கவும், பள்ளி முனைவர் அங்க வந்து சேரவும் சரியாக இருந்தது. நெற்றியில் ஆறாய் ஓடிய வேர் வையைத் துடைத்தவாறே வெளியே வந்தவர், ‘‘எல்லாரும் கொஞ்சம் பொறுமையா இருங்க!’’ எனத் துவங்கி, அங்கே ஓர் ஆக்ரோஷ எதிர்ப்புக் கிளம்புவதை உணர்ந்து ‘‘உங்க எல்லாரோட தவிப்பும் எனக்குப் புரியுது! முதல்ல, என்ன நடந்தது என்று நீங்க எல்லாரும் தெரிஞ்சுக்கணும்’’ எனக் கூறி, நடந்தேறிய கடத்தலை யும், நடந்து கொண்டிருக்கும் காவல் துறை மீட்வுப் பணியையும் எடுத்துரைத்தார்.

‘‘இந்தக் கடத்தலுக்கு... ஹ்ம்ம் இது கடத்தல் என்று தான் நினைக்கிறோம்... வேற மாதிரி அமைய இது விளையாட்டு விஷயமில்லை’’ எனக் கடத்தல் என்பதை உறுதி செய்தவர், மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார் ‘‘இந்தக் கடத்தலுக்கு என்ன காரணம் என்று தெரியல... அதுவும் ஓர் பத்து பிள்ளைகளை மட்டும் கடத்தியிருக்காங்க என்றால்... காரணத்தை சுத்தமா யூகிக்க முடியல. அந்தப் பத்து பேரினுள் யாரையாவது குறி வைத்து நடத்தப் பட்டதா... இல்லை ஒட்டுமொத்தப் பிள்ளைகளையும் குறி வைத்திருக்

கின்றனரா என்று தெரியவில்லை...'' என அவர் ஓர்
பழுத்த யோசனையாளர் போல் அவர் பேசவும் ''ஷட்
அப்'' என்று கத்தினான் வெற்றிவேந்தன்.

''உங்களோட சொற்பொழிவைக் கேட்கிறதுக்கு நாங்க
இங்க வரல. உங்களை நம்பித் தானே அவங்களை ஊர்
ருக்கு அனுப்பினோம்? அவங்களோட பாதுகாப்பு உங்க
பொறுப்பில்லையா உங்களோட ஸ்டாஃப் பத்தின
ஒழுங்கான விவரங்கள் சேகரிச்சுட்டு அவங்களை
வேலைக்கு வைக்க மாட்டீங்களா? உங்களோட அஜாக்
கிரதை நடவடிக்கைக்கு... எங்க பசங்களைக் காவு கொடுப்
பீங்களோ? என்ன மேடம் பேசுறீங்க? போலீஸ்ல
கம்ப்ளைன்ட் கொடுத்திருக்குன்னு சொல்றீங்க? ஆனா,
இங்க ஒரு போலீஸ் காரனையும் காணோம்...சம்பவ
இடத்திலிருந்த இவங்களை விசாரிக்கிறதை விட்டுட்டு
அவங்க என்ன பண்ணிட்டு இருக்காங்க? எந்த போலீஸ்
ஸ்டேஷன்ல கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கீங்க? கம்ப்
ளைண்ட் நம்பர். கம்ப்ளைன்ட் கொடுத்த ஆளோட
பேர்... போஸ்ட் எல்லாம் சொல்லுங்க...'' எனத் தன
கோபம் முழுதையும் வார்த்தைகளாய் கொட்டி முடித்தான்.

அன்பரசிக்கு சகலமும் ஒடுங்கிப் போனது!

எது நடக்கக் கூடாது என அவள் நினைத்தாளோ, அது
நடந்தே விட்டது!

அவளது உயிர்நாடியை ஒருவன் பிடுங்கிக் கொண்டு
சென்று விட்டான்!

ரத்தம் முழுதும் வடிந்தது போல், கால்கள் தோய்ந்தன!
கணவன் என்ற ஆலமரம் மட்டும் இல்லையெனில்,
அவள் வேரறுந்து போயிருப்பாள்!



அவனுமே, அவளது பயம் புரிந்தவனாய் ''அன்பும்மா,
ஒண்ணுமில்லைடா. நிலா நல்லபடியா வந்துடுவா!''
என்ற மேல் பூச்சு வார்த்தைகளால் தேற்றினாளே, ஒழிய,
உயிர் கொடுத்த அந்த தகப்பனுக்கும், அந்த பெற்ற
வயிற்றின் பரிதவிப்பைத் தீர்க்க முடியவில்லை! அவ
னுமே பதறி அல்லவோ போயிருந்தான்!

ஊரில் உள்ள ஒரு தெய்வம் விடாமல், அன்பரசியின்
பிரார்த்தனை நீண்டு கொண்டே சென்றது.

''என் பிள்ளை... என் பிள்ளை'' என்பதற்கு மேலாய்
அவளால் எதையும் சிந்திக்க முடியவில்லை.

பௌர்ணமியாய் ஜொலித்த வாழ்வு அமாவாசை
யாய் இருண்டதில், பூமி தன் இயக்கத்தை நிறுத்தியது!

தந்தை இங்கே ஆத்திரத்தில் கத்த, தாயோ அதிர்ச்சி
யில் கரைந்திருந்தாள்! மகளைக் காணாததில் பாதியாய்
உறைந்து போயிருந்த அன்பரசியின் உயிர், ''கடத்தல்''
என்ற வார்த்தையைக் கேட்டதும், முழு பலத்தையும்
இழந்து நிற்க, மூச்சு விடுவதே சிரமமாய் இருந்த நிலை
யில், கணவனின் கோபம் உணரப்படாத ஒன்றாகவே
இருந்தது!

வெற்றிவேந்தனின் கேள்விகளில் அடங்கியிருந்த
நியாயத்தை மனையாள் உணராத போதும், பிள்ளை
களைத் தொலைத்தப் பெற்றோர் மட்டுமல்லாதது
தத்தம் பிள்ளைகளைக் கையில் பிடித்திருந்த பெற்
றோரும் செவ்வனே உணர்ந்து, துணிந்து நியாயம்
கேட்க, அங்கே ஓர் பெரும் யுத்தம் உருவானது! அந்த
யுத்தம், கடத்திச் சென்றவனிடமிருந்து அழைப்பு வரும்
வரையிலும் நிற்கவில்லை!

பெற்றவர்களிடம் பேசிக் கொண்டிருந்த (சிக்கிக் கொண்டிருந்த முனைவரிடம், ''டிரைவர் ரத்தினம் பேசுறான் மேடம். உங்ககிட்ட பேசணுமாம்'' என்ற செய்தி வந்து சேர்ந்தது. மெதுவாய் சொல்லப்பட்டப் போதும், முனைவரின் பதட்டத்திலிருந்து யாராக இருக்கும் என்று கணித்துவிட்ட வெற்றிவேந்தன் ''யாரு...உங்க நம்பகமான டிரைவரா?'' என்றான் நக்கலும், ஆத்திரமுமாக.

''ரெண்டு பேர் மட்டும் என்கூட வாங்க...'' எனக்கூறி விட்டு முன்னே நடந்தவரின் பின்னே வெற்றியையும், இன்னுமொரு பெற்றவரையும் அனுப்பிவைத்தனர் மற்றவர்கள்.

உள்ளே நுழைந்து அழைப்பை அவர் எடுத்தும், உரக்க ஒலிக்கும் கருவியை இயக்கத்திற்குக் கொண்டு வந்தான் வெற்றிவேந்தன்.

''என்னாம்மா பத்மாவதி? எப்டி கிறே? உன் டப்பா டான்ஸ் ஆடிக்குனு இருக்கும்ன்னு தெரிஞ்சு தான் போனைப் போட்டேன்'' எனக் கேலியாய் தொடங்கியவன், ''இப்ப...நீ பண்ணியிருக்கிற காரியத்தால உன்னோட வாழ்க்கையே சீரழியப் போறது தெரியாம விளையாடிட்டு இருக்காத...'' என முனைவர் கர்ஜிக்கவும்.

''பஜாரி மாதிரி கத்தாதே! ஒழுங்கு மரியாதையா நான் சொல்றதைக் கேளு'' என அவனும் பதிலுக்குக் கர்ஜித்தான்.

''அவன்கிட்ட எங்களோட பசங்க இருக்காங்க. அதை மனசில வச்சுட்டுப் பேசுங்க'' என வெற்றி. மெதுகுரலில்



என்றாலும் அழுத்தமும், ஆத்திரமுமாய் கூறவும், மெல்ல ''உனக்கு என்ன வேணும்?'' என்றார் முனைவர்.

''எனக்கு எதுவுமே வேண்டாம். சத்தியமா எனக்கு எதுவுமே வேண்டாம்... அப்புறம் எதுக்கு இதை செய்தேன்னு கேட்கிறியா? பெத்தப் பெரிய ஸ்கூல்னு பீத்திக்கிற இல்லயா? அந்தப் பெருமையில தானே... ஏழைப்பட்டவங்க புள்ளைகளுக்கு சீட் கொடுக்க மாட்டேங்கிற? பெத்தவங்க படிச்சிருந்தாதான் உங்க ஸ்கூல்ல படிச்சு பெரியாளா வரக்கூடாதா? நா... எம் புள்ளைக்கு சீட் கேட்டு வந்தப்பா... ஏன்னா கிண்டல் செய்த? நான் பட்ட அசிங்கமெல்லாம்... நீபட வேண்டாம்? படு... இனி... உன் ஸ்கூல்லைத் தேடி ஒரு பணக்காரன் கூட வரக்கூடாது.... அங்க படிச்சா புள்ளை உசிருக்கு உத்திரவாதமில்லைன்னு அவனவன் அலறணும்... அது தான் எனக்கு வேணும்!'' என்றான் ஆத்திரம் முழுதாய் விரவிய குரலில்.

## 19

அவனது விளக்கத்தில் அங்கிருந்த அனைவருமே அதிர்ந்து போயிருந்தனர்! ''இதென்ன பைத்தியக்காரத்தனமா இருக்கு? ஸ்கூல்லோட விதிமுறைப்படி தானே பிள்ளைகளைச் சேர்க்க முடியும்? நீ வந்து கேட்டே என்பதற்காக... சும்மா சீட்டைத் தூக்கிக் கொடுத்துட முடியுமா? அப்படியே கொடுத்தாலும்...உன்னால பணம் கட்ட முடியுமா என்ன?'' என முனைவர் சீற,

''ஏன் முடியாது? இல்லை ஏன் முடியாதுன்னு கேட்கிறேன்? நான் பத்து வேலை பார்த்துக் கூட பீஸ் கட்டுவேன்... அதைப் பத்தி உனக்கென்ன? அதுவுமில்லாமல், பள்ளிக் கூடத்தில் வேலை பார்க்கிறவங்க பசங்களுக்கு பீஸ்ல தள்ளுபடி ஏதோ இருக்குன்னு... எனக்குத் தெரியும்! அதனால, மழுப்பாம பேசு!'' என்றான் ரத்தினமும், முனைவரின் அதே கோபத்துடன்.

''தள்ளுபடி இருக்குத் தான்! அதுக்காக, வேலை பார்க்கிறவங்க பசங்க எல்லாரையும் சேர்த்துக்க முடியுமா என்ன?'' என எதிர் தரப்பு, குதர்க்கமாய் பேசவும்.

''எனக்கு எதுவுமே தெரியாதுன்னு பேசுறியா? உன்னோட பிள்ளை அங்க தானே படிக்குது... அந்தக் கணக்கு டீச்சர் பிள்ளைங்க ரெண்டும் கூட நம்ம ஸ்கூல்ல தான் படிக்குதுங்க! உங்க பிள்ளைங்க எல்லாம்... அங்கு படிக்கலாம்...என் பையன் படிக்கக் கூடாதா?'' என்ற போது ரத்தினத்தின் குரலில் சிறு நடுக்கம் கூட தென்பட்டது எனலாம்!

அதற்கும் ஆத்திரமாய் பதில் சொல்லப் போன முனைவரைத் தடுத்த வெற்றிவேந்தன். ''ஹலோ மிஸ்டர்.ரத்தினம்! நான்... நீங்க கடத்திட்டுப் போயிருக்கும் வெண்ணிலாவோட அப்பா பேசுறேன்! உங்களுக்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் நடக்கிற சண்டையில எதுக்கு எங்க பசங்களைக் கடத்திட்டுப் போயிருக்கீங்க? அவங்கெல்லாம் ரொம்பச் சின்னப் பிள்ளைங்க... மிஸ்டர்.ரத்தினம்! உங்க பையன் மேல நீங்க வச்சிருக்க அதே பாசம் தானே நாங்களும் எங்க பசங்க மேல வச்சிருப்போம்? அவங்களைக் காணாம இங்க எல்லோருமே



இடிஞ்சு போயிருக்கோம்...ரத்தினம்! தயவு செய்து, ஒரு சக மனுஷனா, ஒரு சகக் குழந்தையோட தகப்பனா... யோசிச்சுப் பாருங்க! ப்ளீஸ்'' என்றான் கெஞ்சுதலாக.

ரத்தினத்தின் மேல் கோபம் எழுந்த போதும், அவனது கேள்வியிலிருந்த நியாயம் வெற்றியை அசைக்கவே செய்தது! அவன் கேட்கும் நியாயம் சரி தான் என்ற போதும், அவன் அதைக் கேட்ட வழியைத் தான், வெற்றியால் ஒத்துக் கொள்ள முடியவில்லை! மற்றபடி அவனது கோபத்தை மதிக்கவே செய்தான். அந்த மருத்துவன்!

அதே சமயம், அவனது பிடியிலிருக்கும் மகளின் உருவம் கண்ணையும் நெஞ்சையும் நிறைக்க, குழந்தையை வைத்தே குழந்தையின் படிப்பிற்காக, புரட்சி செய்யத் துணிந்த அந்தப் பாசக்காரத் தகப்பனை அசைக்க முயன்றான், அவன்!

வெற்றியின் வார்த்தைகளில் சற்றே மனம் தடுமாறிய போதும், ரத்தினம் தனது நிலையிலிருந்து இறங்குவதாய் இல்லை!

''பிள்ளைங்க தான் சார்...என்னோட துருப்புச் சீட்டே? அவங்க இல்லாம, இந்தம்மா கிட்ட எதையாவது சாதிக்க முடியுமா? சரியான திருகுதாளம் பிடிச்சப் பொம்பளை... சார் அது? வேற எப்படி செய்திருந்தாலும்... என்னோட வெறியை உலகத்துக்குப் படம் பிடிச்சுக் காட்டியிருக்க முடியாது!'' என்றான் மிக மிக தெளிவாக.

அவனது அந்தத் தெளிவில், புருவங்கள் சுருங்க, ''நீங்க எதிர்பார்க்கிறது பணமில்லைன்னு நீங்களே

சொல்லிட்டீங்க? அப்புறம் வேறென்ன, ரத்தினம்? என்ன ஒரு காரணத்திற்காகவும்...பசங்க...பசங்களை எதுவும் செய்துடாதீங்க!'' என்றான் வெற்றி, பெற்ற மனதின் தவிப்புடன்.

''அது...நீங்க நடத்துக்கிறதைப் பொருத்து!'' என அமர்த்தலாய் கூறியவன், வெற்றிவேந்தன் மேலும் பேசத் தொடங்கும் முன்னர் ''சும்மா வள வளன்னு பேசாதே சார்! நான் சொல்றதை நீங்க செய்துட்டா... உன் பசங்க நாளைக்கே வீடு திரும்பிடும்! இல்லைன்னா... அதை என் வாயால சொல்ல வைக்காதே'' என்றவனுக்கும் பிள்ளைகளைக் கொல்லும் நோக்கமில்லை என்பது வெற்றிக்குப் புரிந்தது! மனம் சற்றே நிம்மியுற்ற போதும், மகளைக் காணாத மனம் மறுகத் தான் செய்தது! மறுகிய மனதை மறைக்கும் வழி தெரியாது, ''நாங்க என்ன பண்ணனும்? சொல்லுங்க! உங்க பையனுக்கு... இந்த ஸ்கூல்ல சீட் வேணுமா? நான் ஏற்பாடு பண்றேன்? அவனோட படிப்பு செலவைக் கூட நானே ஏத்துக்கிறேன்!'' என்றான் வெற்றி, பரபரப்புடன்.

''நீ ... ஏன் சார் நான் பெத்தப் புள்ளைக்குப் பணம் கட்டணும்? பெத்த அப்பன் நான் கட்டுவேன் சார்!'' என நெஞ்சை நிமிர்த்துப் பதில் சொன்ன ரத்தினம், ''என்னை அவமானப்படுத்தின பள்ளிக்கூடத்தில எம்புள்ளைக்கு இடம் வேணாம் சார்! அவனை... எங்க... எப்படி படிக்க வைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்'' என்ற ரத்தினத்தின் குரல், இகழ்ச்சியில் துவங்கி பெருமிதத்தில் முடிந்தது!

ஆயாசமாய் உணர்ந்த வெற்றி பேசும் முன்னர், அவனுடமிருந்த மற்றவர் ''வேற என்ன தான் வேணும்?''



என்றார் சோர்வுடன், அதற்கு அவன் கூறிய பதலைக் கேட்டதும், அங்கிருந்த அனைவருமே ஸ்தம்பித்து நின்றனர்!!

''இந்த விஷயம் பத்திரிகைல வரணும்! ஏன், எதுக்
காக, யாரால, என்ன காரணம், முக்கியமா பள்ளிக்கூடத்
தோட பேர், அவங்களோட ரூல்ஸ், ஏழைப்பட்டப் பசங்க
படிக்க முடியாதது, அவங்க பிடுங்கற பீஸ் பணம் - இது
எல்லாமே வரணும்! தமிழ் நாடு முழுசும் போற பத்
திரிகைல இந்த செய்தி வந்ததும், உங்க பசங்க எல்
லாரும் பத்திரமா வீடு வந்து சேர்ந்திடுவாங்க! பண
மில்லாத நாங்க... பத்திரிகை பத்திரிகையா ஏறி இறங்கி
னாலும், மனுவுக்கு மேல மனு போட்டாலும் ஒண்ணும்
நடக்காது! அதனால தான், உங்க பசங்களைப் பணயமாக
வச்சு உங்களை இதைச் செய்ய வச்சேன்! பணம் வச்
சிருக்க மகராசனுங்க...பணத்தை வச்சு என்ன காரியம்
னாலும் செய்வீங்க இல்ல... அதுவும் புள்ளை உசுருங்கும்
போது...கண்டிப்பா செய்வீங்க! என் மகனைச் சேர்த்துக்க
மாட்டேன்னு சொன்ன பள்ளிக்கூடத்தை ஒண்ணும்
செய்ய முடியலையேங்கிற கோபம்... அது இப்போ
வெறியா மாறியிருக்கு... அவங்களுக்கு இது ஒரு பாடமா
இருக்கணும்!'' என்றவன்.

''பத்திரிகையிலேயா? என்ன விளையாடுறியா? அதெல்லாம் முடியாது? உன்னை...எப்படி கண்டுபிடிக்கணும்ன்னு எனக்குத் தெரியும்?'' என முனைவர் பதில் கூறும்போதே, ''முடியாதா? அப்போ, உம் பசங்களை மறந்துடு சார்! நான் போனை வச்சுடுறேன்'' என்றான் ரத்தினம், அலட்சியமாய்.

''மேடம்! வயசில் பெரியவங்க என்பதற்காக பொறுமையா பேசிட்டு இருக்கேன்? ஒரு பள்ளி முதல்வர் மாதிரி நடந்துக்கோங்க மேடம்! எதுவே உங்க பையன்... அங்க மாட்டிட்டு இருந்தா இப்படிப் பேசுவீங்களா?'' என வார்த்தையைக் கடித்துத் துப்பிய வெற்றிவேந்தன்.

''ரத்தினம்! நீங்க சொல்றதை செய்றது அவ்வளவு சுலபமான காரியமில்லை...'' எனக் கூறி முடிக்கவில்லை. அதற்குள் ஓர் இடைவெட்டல் வேகமாய் வந்து சேர்ந்தது ''ஏன் முடியாது? எல்லாம்...ரொம்பவே சுலபமா முடியும்!'' என அடித்துப் பேசிய ரத்தினம், ''நான் கூட்டியாந்து இருக்கிற பிள்ளைங்களா...சாரா(ஷாரா)ங்கிற பொண்ணோட அப்பா, (பிரபலப் பத்திரிகையின் பெயரைச் சொல்லி) அந்தப் பத்திரிகையோட முதலாளி தானே? முதலாளியால் முடியாத காரியமா என்ன?! நான் போனை வைக்கிறேன்'' என்று விட்டு, அழைப்பைத் துண்டித்தே விட்டான்!

அவனது கோரிக்கையிலும், அவன் கூறிய தகவல்களை வைத்தும் அவன் இதைப் பல நாட்கள் திட்டமிட்டு நடத்தியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்தனர் அங்கிருந்தவர்கள்!

பள்ளித் தலைமையுடன் ரத்தினம் நடத்திய பேச்சு வார்த்தையைக் கேட்டிருந்த ஷோபாவிற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை! பள்ளியில் சேர முடியாத பிள்ளையை எண்ணி வருத்தப்படுவதா? அல்லது இப்பள்ளியில் சேர்ந்துவிட்டக் காரணத்தினால் கடத்தப்பட்டிருக்கும் இச்சிறுப் பிஞ்சுகளை எண்ணி வருத்தப்படுவதா? என அவளுக்குள் ஓர் பெரும் பட்டி மன்றமே நடந்தேறியது!



''ரத்தினம்...'' என அவள் தொடங்க, ''பேசிய நேரத்தை வீணாக்காம, அந்த வண்டியில ஏறும்மா'' என்ற ரத்தினம், அவனது வாயையே பார்த்துக் கொண்டிருந்த சிறார்களின் பக்கம் திரும்பி ''பிள்ளைங்களா, அந்த வண்டில இருங்க'' என அருகே நின்றிருந்த ஓர் சிற்றுந்தைக் கைகாட்டினான்.

பயத்திலிருந்த மற்ற பிள்ளைகள் மறு பேச்சின்றி எழுந்துவிட, வெண்ணிலவோ ''ஏன்... அந்த பஸ்க்குப் போவணும்?'' எனக் கேள்வி கேட்டாள்! கேள்வி கேட்டே பழக்கப்பட்டவள் அல்லவே? ''ஏறுன்னா ஏறு'' என ரமேஷ் எரிச்சல் பட, ''இந்த பஸ் ரிப்பேர் ஆகிடுச்சு, அதான் வேற பஸ் கொண்டு வந்திருக்கு'' என்றான் ரத்தினம்.

''ம்ம்'' என ஆட்காட்டி விரலைத் தாடையில் வைத்து யோசித்தவள், ''இங்க ரிப்பேர் பார்க்க ஆள் வரமாட்டாங்க வா? எங்கம்மாவோது கார் ரிப்பேர் ஆனப்போ... எங்க வாட்ச் மேன் தாத்தா தான் ரிப்பேர் செய்தாங்க!'' எனத் தன் நினைவுகளைத் தட்டி எழுப்பி, அடுத்தக் கேள்வியைக் கேட்டாள்!

''இங்க வாட்ச்மேன்... யாருமில்லை! அதனால வேற பஸ் வந்திருக்கு'' எனப் பொறுமையாய் பதில் சொன்ன ரத்தினத்தைப் பார்க்க, ரமேஷிற்கு ஆத்திரமாய் வந்தது!

தன் தமக்கை கணவன் சொல்லிச் சேர்த்துவிட்ட வேலை என்றபோதிலும், தன்னைப் பள்ளியில் நடத்திய முறையை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை! நடத்துனன் வேலைக்கு அமர்த்தப்பட்டப் போதும், பள்ளித் தோட்டத்தைச் சுத்தம் செய்வது, நிர்வாக

அலுவலகத்திலிருக்கும் பணியாளர்களுக்குப் பானம் வாங்கி வருவது, பள்ளி வெளி வரந்தைகளைப் பெருக்குவது எனப் பல வேலைகள் அவன் தலையில் விழுந்தது ஒரு புறமும், அவ்வேலைகளை எரிச்சலுடன் என்றாலும் மறுப்பேச்சின்றி செய்த போதும் அவனைக் குட்டிக் கொண்டே இருந்தது மறு புறமுமென, மேலிடத்தின் மீது அவனது கோபத்தைப் பெருக்கியே வைத்திருந்தது! அதை மென்மேலும் பெருக்கும் வண்ணம், தன் தாயின் மருத்துவச் செலவிற்காக அவன் பத்தாயிரம் ரூபாய் பணம் கேட்டபோது, தர முடியாது என முகத்தில் அடித்தது போல் பதில் கூறியது நிர்வாகம்! அதனாலேயே, இந்தக் கோபத்திற்கு வடிகால் அமைத்துக் கொடுப்பது போல் அமைந்த, தமக்கை கணவனின் திட்டத்தில் வெகு ஆர்வமாய் இணைந்திருந்தான் ரமேஷ்!

தன் மனதில் கோபத்தீ, சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்க, ரத்தினமோ பொறுமையாய் பேசிக் கொண்டிருப்பது அவனுக்குக் கடும் எரிச்சலை உண்டு பண்ணியது! அதற்கு எண்ணை ஊற்றுவது போல், வெண்ணிலாவின் பேச்சு வேறு!

அந்த எரிச்சலை மறைக்காது காட்டி ''என்ன மாமா? அந்தப் புள்ளையை தாங்கிட்டுத் திரியுறீங்க? நம்மளோட நோக்கத்தையே மறந்துடுவீங்க போலவே?'' என அவன் உரைக்கவும், ''அதெல்லாம் மறக்கல! ரொம்பவே நல்லா ஞாபகமிருக்கு'' என்ற ரத்தினம், பிள்ளைகள் வண்டியில் ஏற உதவி செய்தான்.

அனைவரும் ஏறி முடிந்ததும், ரமேஷ் கதவை அடைக்க ''அங்கிள்... அங்கிள்! என்னோட லஞ்ச் பாக் எடுத்துட்டு வந்துடுறேன் அங்கிள் பீஸ்! அதில அம்மா கொடுத்துவிட்ட ஜூஸ், தண்ணி எல்லாம் இக்கு... அப்பா தண்ணி குடிச்சிட்டே இருக்கணும் சொல்லியுக்காங்க... இல்லைன்னா முதுகுல அரிக்கும்...தெட் தெட்டா வந்துடும்... வாவிக்கும்... பீஸ்... அங்கிள்!'' எனக் கையைக் குவித்துக் கொண்டு கெஞ்சினாள் வெண்ணிலா.

ரமேஷ் மறுக்கும் முன்னர் ''சரி, திறந்து விடு'' என ரத்தினம் சொல்லிவிட, வெண்ணிலா எனும் உற்சகப் பந்து துள்ளிக் கொண்டு இறங்கியது! அவளைப் பின் தொடர்ந்து, தருண் மற்றும் விஜூத் இருவரும் இறங்க முற்பட, எரிச்சல் என்ற உணர்விலிருந்து கோபம் என்ற உணவிற்கச் சென்றுவிட்ட ரமேஷ், இருவரையும் முதுகில் ஓர் அடி வைத்து ''நீங்க ரெண்டு பேரும் எங்க போறீங்க? உள்ள உட்காருங்க'' எனக் கர்ஜனை செய்தான்.

இதுவரையில் நடந்த நிகழ்வுகளில் அடி, உதை என்பது நடவாத ஒன்றாக இருந்தமையால் சற்றே மெத்தனமாய் இருந்த பிள்ளைகள், இப்போது விழுந்த அடியில் மிரண்டு போயினர்! பிள்ளைகளின் மேல் அடி விழுந்ததுமே ''பசங்களை அடிக்கிற வேலை வேண்டாம்! வாயால சொல்ல வேண்டியது தானே? நீங்க சொன்னதால தானே... இறங்கினாங்க... வேணாம்ன்னா வேணாம்ன்னு வாயால சொல்லுங்க'' என எச்சரித்த ஷோபா, இரு சிறார்களின் பயந்த அழுகையையும் சரி செய்ய முயன்றாள். வெண்ணிலாவும் ஷோபாவிடம் ''நீ போய்... லஞ்ச் பாக் எடுத்துட்டு வந்துவிட,

வாடா...குட்டி'' என அவளை அனுப்பிவைத்தாள் ஷோபா. ஓரக்கண்ணால் ரமேஷைப் பார்த்துக் கொண்டே, தங்களது பள்ளிப் பேருந்திற்குச் சென்ற வெண்ணிலா, தன் சிறு கால்களால் அந்தப் பெரிய படியை ஆயாசத்துடன் ஏறி, பேருந்தைச் சுற்றி வந்தாள். அந்தச் சின்னப் பெண்ணால், அதிசய சாகசங்கள் எதும் செய்துவிட முடியாது என்று நம்பிக்கையில் ரமேஷ் கீழே நின்றிருக்க, வெண்ணிலா உள்ளே ஒரு வேட்டையை நடத்திக் கொண்டிருந்தாள்.

தான் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றவள், தனது உணவுக் கூடையை மட்டுமல்லாது, அங்கிருந்து எல்லாரது கூடையையும் இன்னதென்று அடையாளம் கண்டு, ஒவ்வொன்றாய் எடுத்துக் கொண்டே வந்தாள். அப்படி வருகையில், விஜூத்தின் கூடை முதல் இருக்கையின் அடியிலிருக்க, அதைக் குனிந்து எடுக்கும் போது, ஓட்டுனர் இருக்கையின் கீழே தள்ளப்பட்டிருந்த ஷோபாவின் கைப்பேசி கண்ணில் பட்டது!

அச்சமயத்தில், அதை எடுத்து உபயோகப்படுத்தலாம் என்ற எண்ணமெல்லாம் தோன்றாது. அது தனது ஆசிரியரின் பொருள் என்பதும், அதை அவர் உபயோகப் படுத்த முயன்றபோது ரமேஷ் அதைத் தூக்கி எறிந்தான் என்பது மட்டுமே, அச்சிறுமியின் மனதில் ஓடிக் கொண் டிருந்தது! அந்த ஓட்டத்தின் விளைவாக, தன் நண்பர்கள் எல்லாருக்கும் உணவுக் கூடையை எடுத்துகிட் டோம்... ஆசிரியருக்குத் தான் உணவுக்கூடை இல்லையே... இதையாவது எடுத்துச் செல்வோம் என்ற எண்ணத்தில், சிதறியிருந்த அதன் பாகங்களைச் சேகரிக்கத் துவங்கி னாள்.



தனக்குத் தெரிந்த வகையில், அனைத்தையும் எடுத் தவன் ''இதை எடுத்ததற்காக தானே, ரமேஷ் மிஸ்ஸை திட்டினான்! அவனுக்குத் தெரியாமல் மிஸ்ஸிடம் கொடுத்துவிட வேண்டும்'' என்ற முடிவுடன், தன் பின்னோஃபார்ம் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு கீழே இறங்கினாள்.

தனது உணவுக் கூடையுடன் தன் நண்பர்களது உணவுக் கூடையையும் சேர்த்துத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு, கீழே இறங்கியவளைப் பார்த்து முகம் சுளித்த ரமேஷ் ''எதுக்கு எல்லாப் பையையும் தூக்கி யாற?'' என்றான்.

''எல்லாக்கும் தண்ணி தவிக்கும் தானே? பாவம்... அங்கிள்...அவங்க! பீஸ்'' என்றவளை முறைத்தவனுக்கு மறுக்கத் தோன்றவில்லை. அனைவரது உணவுக் கூடையையும் எடுத்துக் கொண்டு வண்டியினுள் ஏறிய வெண்ணிலாவைக் கண்ட சிறுவர்கள் அனைவரும் குதித்தனர் ''எங்களோதும் எடுத்திட்டு வந்தியா? தேங்க் யூ!'' எனக் கூறிய ஒன்பது பேருக்கும் தனித் தனியாய் ''யூ ஆர் வெல்கம்'' சொன்னாள் அன்பரசியின் வழிகாட் டலில் வளர்ந்த செல்வ மகள்.

அனைவரும், தத்தம் கூடையிலிருந்த உணவுகளை உண்ணத் துவங்க (காலியான மதிய உணவை விடுத்து, சிறு தீனிக்கென தத்தம் தாய்மார் கொடுத்தனுப்பிய உணவுகளை உண்டனர்), தன் சிறு டப்பாவிலிருந்த சான்ட்விச்சை இரண்டு வாய் உண்ட வெண்ணிலா ''மிஸ், இந்தாங்க'' என ஷோபாவிடம் நீட்டினாள்.

''எனக்கு வேண்டாம்டா. நீங்க சாப்பிடுங்க'' என அவள் மறுத்துவிட, அவர்களையே பார்த்தவாறு நின்றிருந்த ரமேஷிடம் ''வேணுமா''? என்றாள், சிறு தயக்கத்துடன்.

''அவங்கெல்லாம் பாட் பீப்பிள்...வெண்ணி! அவங்கக்கு கொடுக்காதே!'' என உதயா எச்சரிக்க, ''ம்ம் அம்மா!'' என ஒத்து ஊதினான் விஜூத்.

''யாரையாவது பாக்க வச்சுத்து சாப்பித்தா வயிறு வலிக்கும், உதி! எங்க தாத்தா சொல்லியுக்காங்க.. .எல்லார்க்கும் ஷேர் பண்ணிச் சாப்பித்தா தான், நமக்கு அடுத்த மம்மம் சாப்பித முதியும்'' என்றவள், மீண்டும் தன் ஆசிரியரிடம் ''பீஸ் மிஸ், ஒரு வாய் சாப்பிதங்க!'' என்றாள். ஆசிரியரிடம் அவள் மட்டும் நல்ல பேர் வாங்குவதா என்ற தோரணையில், நீ தான் என்று போட்டிப் போட்டுக் கொண்டு, ஷோபாவிற்கு உணவு கொடுத்தனர் பிள்ளைகள். அத்துடன் சேர்த்து. வெண்ணிலாவைப் பின்பற்றி ''இந்தாங்க அங்கிள்'' என்ரற ரமேஷிடமும், ரத்தினத்திடமும் நீட்டினர்.

ஒருவாறாய் உணவு முடிந்து மேலும் இரண்டு மணி நேரங்கள் ஓடியபோது, வண்டியும் ஓர் இடத்தில் நின்றிருந்தது! என்ன இடம் என ஷோபா தேடும்போதே, அவளை வண்டியிலிருந்து தள்ளிய ரமேஷ் ''எப்படியாவது வீடு போய்ச் சேரு!'' என்றுவிட்டுக் கதவை இழுத்துச் சாத்தினான்.

''ஹே ஹே! என்ன பண்றே? என்ன எதுக்கு தள்ளி விடுற? பசங்களை விட்டுட்டு நான் இறங்க மாட்டேன்... திற திற...ஏய் திற... ரத்தினம்... திறக்கச் சொல்லு



ரத்தினம்!'' என ஷோபா இரைஞ்சியது. காற்றோடு கரையும் வண்ணம், பேருந்து வேகமெடுத்துப் பறந்திருந்தது!

''மிஸ்...'', ''ஷோபா மிஸ்...'' என அலறிய சிறு குரல்களும், அவற்றின் ஊடே வெளிவந்த அழுகையும் காற்றோடு பயணிக்க, அந்த ஒலி அலைகள் காற்றில் பறந்து, பல நூறு கிலோமீட்டர்கள் தொலைவிலிருந்த அன்பரசியின் காதுகளை எட்டியதோ? சென்னையில், மக்களின் பள்ளியில் ஓய்ந்து போய் அமர்ந்திருந்த அன்பரசியின் உடல் ஒரு முறை தூக்கிப்போட, நிமிர்ந்து அமர்ந்தாள், அவள்!

அவளது அசைவில் பதறிய வெற்றி ''அன்பம்மா'' என மெல்ல அழைக்க, அதை உணரும் நிலையில் கூட அவள் இருக்கவில்லை. தன் மகவைத் தொலைத்து விட்டத் துக்கத்தில் இருந்த அன்பரசிக்கு உலகமே இருட்டிவிட்டிருந்தது! அவளைத் தொட்டுத் தடவி, ''ம்மா'' ''ம்மா'' என்று அழைத்தும், ''நிலா வந்துவாமா'' என ஆறுதல் கூறியும், அவளது உணர்வுகளைத் தூண்டிவிட ஆதி இல்லாவிட்டால், அவளது நிலைமை என்னவாகி இருக்குமோ?

''எப்போதும் உற்சாகமாய் இருக்கும் கணவன்... அன்றைய சுற்றுலாவிற்கு வேண்டாம் என்றபோதே சுற்றுலா பயணத்தைத் தவிர்த்திருக்க வேண்டுமோ?'' என்ற கேள்வியே மனதினுள் ஓட, இடிந்து போய் அமர்ந்திருந்தவளைத் தேற்ற, சுபத்ராவின் குடும்பம் பறந்து வந்தது! மூன்று மணிக்குப் பள்ளிக்குச் சென்ற அன்பரசியின் குடும்பம் வீடு வரவில்லை என்றதும்,

கைப்பேசிக்கு அழைத்து, வெற்றியிடமிருந்து விஷயம் அறிந்தவர்கள் வேகமாய் பள்ளி வந்து சேர்ந்தனர்.

மற்றவர்களின் ஆறுதல் வார்த்தைகளை விட, ''அன்பத்தே! பரமு அங்கிள் என்னைத் தூக்கிட்டுப் போனபோது எனக்கு எதுவுமே தெரியாது... ஆனாலும், நா அவங்கிட்ட இருந்து தப்பிச்சு வந்துட்டேன் தானே? நம்ம நிலா குட்டிக்குத் தான்... எல்லாம் தெரியுமே? அவ என்னை விட ஸ்மார்ட் அன்பத்தே! சீக்கிரமே வந்துடுவா'' என்ற ஆகாஷின் வார்த்தைகள், அன்பரசியின் கண்ணில் கொஞ்சம் உயிரை மீட்டுக் கொண்டு வந்தது!

''உன் வாக்குப் பலிக்கட்டும்'' என அவனது தாடையைத் தடவிய அன்பரசியின் கைகளைப் பிடித்துக் கொண்ட வெற்றி, ''ரத்தினம்...அதான் பசங்களைக் கடத்தியிருக்கவன்... அவனோட பேசினதை வச்சுப் பார்த்தா...பசங்களுக்கு எந்த ஆபத்தும் வராது என்று தான் தோணுது! அவன் கேட்டதை செஞ்சு கொடுத்துட்டா...பசங்க திரும்ப கிடைச்சுடுவாங்க'' என்றான் ஆறுதலாக!

தவமிருந்து பெற்ற தங்கத்தைத் தொலைத்திருந்த தாயும் சரிய, பெற்ற பிள்ளையை ஒரு முறை தொலைத்து மீட்டத் தாயும் சரி, விஷயம் கேள்விப்பட்டு ''என் நாக்குல சனி தான் இருந்திருக்கு? பையன்... அனுப்பமாட்டேன்னு சொன்ன ரோருக்கு நான் தானே அனுப்ப வச்சேன்! இப்போ என் செல்வத்தைத் தொலைச்சிட்டு நிற்கிறேனே!'' என்று கதறித் துடித்த வைதேகியும் சரி ''அவன் கேட்டதைச் செய்து கொடுக்க வேண்டியது



தானே? என்ன செய்துட்டு இருக்கீங்க?'' எனத் தவித்துத் தான் போயினர்!

''அவன் கேட்டதைச் செய்யச் சொல்லியாச்சு'' என வெற்றி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''ஷாரா'' என்ற குழந்தையின் தந்தை, ''நியூஸ் போடறதுக்கு எல்லா ஏற்படும் செய்தாச்சு. இன்னும் சில பத்திரிகையிலும் போடற மாதிரி ஏற்பாடு செய்திருக்கேன்'' என்ற தகவலுடன் அங்கே வந்து சேர்ந்தார்!

ஆம், ரத்தினத்தின் முதல் அழைப்பை வைத்ததுமே வெளியே வந்த விஷயத்தைக் கூறிய வெற்றிவேந்தன் ''நியூஸ் போட வேண்டியது தானே?'' என்றபோது, அங்கிருந்த பெற்றோரின் தலை அனைத்தும் ஆட, ''ஷாரா''வின் தந்தையும் பிரபல பத்திரிகை அதிபரான அந்த நபர், தன் கைப்பேசியை எடுத்து வேலைகளைச் செய்யவே துவங்கியிருந்தார்.

ஆனால், தங்களின் நற்பெயருக்குக் களங்கம் வரும் செயலைத் துளியும் விரும்பாத பள்ளி நிர்வாகம் ''போலீஸ் ஹை கமிஷனர்கிட்ட சொல்லியிருக்கு. அவங்க உரிய நடவடிக்கை எடுப்பாங்க... இவன் ஒரு சாதாரண டிரைவர்... அதிக தூரம் போயிருக்க முடியாது... கண்டிப்பா நைட்குள்ள பிடிச்சுடுவாங்க... அதனால வேற எந்த முயற்சியும் வேண்டாம்'' எனக் கூறித், தங்கள் மறுப்பைத் தீர்க்கமாய் வைத்தனர்.

''இந்த சாதாரண டிரைவர் தான்... இவ்வளவு தூரம் திட்டம் போட்டு, எங்க பசங்களைக் கூட்டிட்டுப் போயிருக்கான். தேவையில்லாமல் எந்த ஒரு முயற்சியும்

செய்து, எங்க பசங்களோட உயிரைப் பணயம் வைக்கா
தீங்க?'' என்ற வெற்றியுடன், பெற்றோர் பலரும் சேர்ந்து
கொள்ள, நிர்வாகத்தின் மறுப்பு இப்போது மிரட்டலாய்
மாறியது!

''எங்களுக்கு ஆட்சியிலிருக்கும் பல பேரைத்
தெரியும்'', ''போலீஸ் உயர் அதிகாரிகள் பலர்...பள்ளி
நிர்வாகத்திற்குத் தெரிந்தவர்கள்'', ''பத்திரிகையாளர்
பலரது தொடர்பும் எங்களுக்கு உள்ளது'' என்ற அவ
களது மிரட்டல்கள் ''உங்களுக்குத் தெரிந்த அதே பல
பேரை...எனக்கும் தெரியும்'' (தேஜச்வினியின் தொழி
லதிபத் தந்தை), ''எனக்குத் தெரிந்த சட்ட நுணுக்
கங்களும், போலீஸ் அதிகாரிகளையும் கேட்டா அரண்டு
போய்டுவீங்க'' (விஜூத்தின் தந்தையான அரசு தரப்பு
வழக்கறிஞர்), ''ஒரு பத்திரிகைக் காரன்கிட்டேயே
இதைச் சொல்ல உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்க
வேணும்? யாரது பத்திரிகையில் வந்தாலும் வரவா
விட்டாலும் கண்டிப்பாக இந்த நியூஸ் என் பத்திரிக்
கையில் வந்து சேரும்'' (ஷாராவின் தந்தை) போன்ற
எதிர் மிரட்டல்களால் அடங்கிப் போனது!!

கடைசி முயற்சியாக, ''எங்களை மீறிச் செய்தால்,
உங்களது பிள்ளைகளின் சீட் பறிக்கப்படும்'' என
அவர்கள் மிரட்ட, ''சீ!'' என்றானது பெற்றோர் அனை
வருக்கும், ''பிள்ளையையே காணோமாம்... சீட் பத்திப்
பேசுறான்! போய்யா... நீயும் உன் சீட்டும்! ஊரில வேற
ஸ்கூல்லே இல்லையா என்ன?'' எனப் பிள்ளையைத்
தொலைத்தவர்கள் மட்டுமல்லாது, பிள்ளையைக்
கையில் வைத்திருந்தவர் காரி உமிழ, ரத்தினம் கேட்ட
செய்தியைப் பிரசுரம் செய்ய முடிவு செய்யப்பட்டது!



அந்த முடிவை அவர்கள் அமல்படுத்த முன்னர் வந்த
ரத்தினத்தின் அடுத்த அழைப்பு ''என்ன முடிவு
செய்திருக்கீங்க? ஷாரா பொண்ணோட அப்பனுக்கு
அவன் பொண்ணு மேல அக்கறை இல்லையா?'' என்று
ஒரு கூர் வாளை வீசவும், வேலைகள் படு ஜரூராய் நடந்
தேறியது!

வேலைகள் ஒரு உந்துதலுடன் நடந்தேறியதால்,
அடுத்த நாளுக்கான பதிப்பில் வரவிருந்த தலைப்புச்
செய்திகளை எடுத்துவிட்டு, இது இடம் பெற்றது!

இரண்டாவது அழைப்பு வந்து என்றதும், ''கால்
ட்ரேஸ் செய்தீங்களா, வெற்றி?'' என்றனன் ஆனந்த்,
முந்தைய கடத்தலின் நினைவாக. ''ஹ்ம்ம் செய்தாச்சு!!
முதல் கால் பாண்டிச்சேரி பக்கத்திலிருந்து வந்திருக்கு...
ஆனா அடுத்த கால் அதுக்கு முன்னாடியிருக்க
கல்பாக்கம் பக்கத்திலிருந்து வந்திருக்கு. ரெண்டும் வேற
வேற நம்பர்...'' எனப் பதில் கூறிய வெற்றிக்கு, மேலும்
எப்படி முயற்சி செய்வது என்று தெரியவில்லை.

இந்தப் பத்திரிகைச் செய்தி கிடைத்ததுமாவது
பிள்ளைகளை விட்டுவிட வேண்டுமே என்ற வேண்டு
தளைத் தவிர வேறு நினைவின்றி, பள்ளி வளாகத்தி
லேயே அன்றைய இரவுப் பொழுதை அவர்கள் கழிக்
கையில், ''போலீஸ்க்குப் போனதா... பொய்யான நியூஸ்
ஒண்ணு வந்தாக்கூட, இங்கிருக்கும் பசங்களில் ஒருவருக்
காவது சேதாரம் நடந்துவிடும்'' என்ற அவனது மிரட்
டலே மனதில் ஓடிக்கொண்டிருந்தது! என்னதான் ஒர்
பிள்ளையின் தகப்பன் என்ற போதும், தனக்கொரு
ஆபத்து என்றால் அங்கிருக்கும் சிறு உயிர்களை எதும்

செய்துவிடுவானோ என்ற எண்ணம் நெஞ்சை உலுக்கித் தான் போட்டது!

உருகலும், உறக்கமற்ற மருகலுமாய் இரவு கழிய, விடி காலை மூன்றிற்கெல்லாம் பத்திரிகையில் செய்தி வந்துவிட்டது! ஆனால், அதை ரத்தினத்திடம் தெரியப் படுத்தலாம் என்றால் அவன் அழைத்திருந்த இரண்டு எண்களும் உபயோகத்தில் இல்லை என்ற வாசகத் தையே படித்தன!

''என்ன செய்வது?'' என அனைவரும் கையைப் பிசைந்து கொண்டு அமர்ந்திருக்கும் போதே, ''எனக்குத் தெரிந்த சில பேரை விட்டு...கல்பாக்கம், பாண்டிச்சேரி... இந்தப் பக்கம் முழுசும் தேடிச் சொல்லிட்டேன்!! ஆனா, எந்த ஒரு தகவலும் இல்லை'' என்று ஒருவரும், ''அங்கிருக்க போலீஸ் ஸ்டேஷன்ல மறைமுகமா தேடச் சொன்னதற்கும் ஒரு பலனுமில்லை'' என்று ஒருவரும் சொல்ல, பதட்டம் கூடியது!

அவர்களது பதட்டத்தை மட்டுப்படுத்த, சரியாக ஆறு மணிக்கு ''ரொம்ப நன்றி! இந்த செய்தியைத் தலைப்பச் செய்தியாய் போட்டதற்கு! இனிமேலாவது, இவைங்க திருந்தட்டும்'' என்ற வார்த்தையுடன் தொடங்கிய ரத்தினம், ''உங்க பசங்க... சீக்கிரமே உங்க வீட்டிற்கு வந்து சேருவாங்க'' என்ற சொல்லோடு அழைப்பை வைத்தான்! பெற்றோர் அனைவரும் இங்கே நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த இச்சமயம், அவர் களது செல்வங்களை நடுக்காட்டில் விட்டுவிட்டு, ரத்தினத்தை இழுத்துக் கொண்டு வண்டியில் பறந்து விட்டான் ரமேஷ்!



# 20



★ எட்டு மணி நேரத்திற்கு முன்னர் ★

வண்டலூரில் கிளம்பும் போதே, ஷோபாவை இறக்கிவிட்டு விட வேண்டும் என்ற முடிவில் தான் ரத்தினம் இருந்தான். அவனது காரியம் ஆவதற்கு, இந்த இரவு முழுதும் தேவைப்படும் என்ற நிலையில், சபலப் புத்தி கொண்ட மைத்துனனின் முன்னே ஓர் பாவையை வைத்திருக்க அவனுக்கு இஷ்டமிருக்கவில்லை. அதனா லேயே, பேருந்துகள் வந்து போகும் ஓர் தேசிய நெடுஞ் சாலையில், அவளை இறக்கிவிட்டவன், அவளது கைப்பேசியையும் தூக்கி எறிந்து விட்டு வண்டியை எடுத்துக்கொண்டு விரைந்துவிட்டான்! இதை சற்று முன்னரே செய்யலாம் என்றால், பேருந்தைப் பிடித்து ஷோபா சென்னை சென்றுவிட்டால், அவனது காரியம் கெட்டு, அவனையும் துரத்திக் கொண்டு வந்துவிடும் அபாயமிருக்கிறது என்பதை உணர்ந்தமையால், அதிக தொலைவு வந்ததும் ஷோபாவை இறக்கிவிட்டிருந்தான்!

அடுத்து வந்த எட்டு மணிநேரங்களையும் பாண்டிச் சேரி தாண்டி, கடலூர் செல்லும் சாலையிலிருந்த ஓர் கிராமத்தைத் தாண்டி ஓர் காட்டுப்பாதையில் வண்டியை நிறுத்தினான் ரத்தினம்.

வீட்டைப் பிரிந்திருக்கும் தாக்கத்தில் ''ஷோபா மிஸ்...'' ''ம்மா...'', ''ப்பா'' என ஆளாளுக்கு ஒரு

வகையில் அழத் துவங்க, சூரியன் அவர்களை விட்டுத் தன் வீட்டிற்குச் சென்றதில் வானமும் இருண்டு போனது! தங்களது சொந்தங்களும், வானின் சொந்தக் காரனான சூரியனும் சேர்ந்தே மறைந்ததில் பிள்ளைகள் பயம் அதிகரிக்கத் துவங்கியது!

அந்த நிலையிலும் "ஏய், அழுகையை நிறுத்துங்க! அழுதா...கொன்னுடுவேன்!" என ரமேஷ் மிரட்டியதில், பிள்ளைகளின் அழுகை அதிகரித்ததே தவிர குறைய வில்லை. அவர்களுள் சற்று திடமாய் இருந்தது வெண் ணிலா தான்! "அழாதீங்க! அழாதீங்க!" என நண்பர் களைச் சமாதானப்படுத்தியவளுக்கும், சிறுகச் சிறுக அழுகை வருவது போல் தோன்றியது! அந்தச் சிறுப் பிஞ்சும், தாயைத் தந்தையைப் பிரிந்து அதிக நேர மிருந்ததில்லையே! அப்படியே இருந்திருந்தாலும், அந்த நேரத்தில் பாட்டி - தாத்தா என யாராவது ஒருவர் உடன் இருப்பரே! தொடர்ந்து பன்னிரெண்டு மணி நேரங் களாய், ஒருவரது அருகாமையுமில்லாமல், கழுத்தில் கத்தி வைத்த இரு புதியவர்களுடன் இருப்பது அவளுக் குமே பயமாகத் தான் இருந்தது!

ஆனால், பிற பிள்ளைகள் அழுவதைப் பார்க்கையில், அதற்காக ரமேஷ் அதட்டுவதைப் பார்க்கையிலும், அந்த திட்டைத் தான் வாங்கக் கூடாது என்ற எண்ணத்தில் அழுகையை முயன்று அடக்கி, "அழாதே உத்தி! ம்மாகித சீக்கிமே போய்டலாம்!", "விஜுத், குட்டீஸ் அழுதா... காட்க்குப் பிக்கவே பிக்காது! அடிச்சுப் போட்டுடுவார்... பீஸ் விஜுத் அவாதே!", "தேஜு! நீ நத் கேர்ள் தானே? நாம சீக்கிமே வீட்டுக்குப்



போய்தலாம். நீ அவாதே!" போன்ற ஆறுதல் வார்த்தை களுடன் வெண்ணிலா, ஒரொருவராய் சமாதானம் செய்து கொண்டே இருக்க, ரத்தினம் உணவுப் பொட்ட லங்களுடன் வந்து சேர்ந்தான்.

பிள்ளைகளிடம் ஒவ்வொரு பொட்டலாய் அவன் நீட்ட, இரு சிறுவர்கள் அதை வாங்கக் கை நீட்டி விட்டனர். உடனே வெண்ணிலா, நடுவே பாய்ந்து விட்டாள் "ஹே ஷாரா! ஸ்ட்ரேஞ்சர்ஸ் கிட்ட சாப் பிடறது எதுவும் வாங்கக்கூடாது, ஷாரா! உங்கம்மா சொல்லித் தரலையா?" என அவள் தடுக்க, ஷாராவின் கைகள் அப்படியே கீழே தாழ்ந்தன.

அவளது பதிலும், தத்தம் தாய்மார் சொல்லிக் கொடுத்திருந்த "அறியாதவர்களிடமும், நமக்குத் தீங்கு விளைவிப்பவர்களிடமும் ஒன்றும் வாங்கக் கூடாது" என்ற அறிவுரை மனதில் ஆட, அனைவரும் மறுத்துக் கொண்டிருக்கும் போதே, பசி வேகத்திலிருந்த தருண் "அவங்க மத்தும், நம்மளோட சாப்பாடு சாப்பிட்டாங்க! நீ தானே வாங்கிக் கொடுத்தே?! இப்ப மத்தும் வாங்கக் கூடாது சொல்றே?" என எரிந்து விழுந்தான்!

தனது செயலையே அவன் ஞாபகப்படுத்தவும், வெண்ணிலாவால் பதில் பேச முடியவில்லை! அதே சமயம் தாய் சொன்னதை மீறவும் முடியவில்லை! பாவம், இரு வேறு போதனைகளுக்கு இடையே சிக்கித் தடுமாறியது அச்சிறு மனம்! என்ன சொல்வது என அவள் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே "நம்ம ஃபூடு கொடுக்கலாம். தருண்! அவங்ககிட்ட தான் வாங்கக் கூடாது!" எனக் கூறினாள் தேஜஸ்வினி.

''ஏன் வாங்கக் கூடாது?'' என அவன் கேட்க,
''ஆ...அஆன்... அவங்களுக்கு அவங்கம்மா ஸ்ட்ரேஞ்
சர்ஸ்கிட்ட ஃபூட் வாங்கக் கூடாது சொல்லிக் கொடுக்
கலை... அதான் வாங்கித்தாங்க! பாட் பீப்பிள்..நாம குட்
பீப்பிள் தானே? நாம வாங்கக் கூடாது'' எனத் தானாய்
யோசித்து வெண்ணிலா பேசியதும், அங்கே சிறு
சலசலப்பு எழுந்து அடங்கியது.

''ஆனா பசிக்குதே?'' எனத் தருண் வயிற்றைத் தடவ,
''இந்தா.. நா ஆதியோடத் டிபன் பாக்ஸ் கூட கொண்டு
வந்தேன்... அதில இருந்து சாப்புவோம்'' எனத் தன்
கூடையிலிருந்து மற்றொரு டிபன் டப்பாவை எடுத்து,
உணவைப் பகிர்ந்து உண்டனர் சிறார்கள்.

''இது நல்ல சாப்பாடு தான் கண்ணுங்களா! இதோ
பாருங்க... அங்கிள் சாப்புடுறேன்! ஒண்ணும் செய்யாதுடா
பசங்களா... சாப்பிடுங்கப்ப! நீங்க பட்டினி கிடந்தா,
கஷ்டமா இருக்குது!'' என ரத்தினம் மன்றாடியபோது,
லேசாய் அசைந்த பிள்ளைகளை ''சாப்பிடலைன்னா
பட்டினியா கடக்கட்டும்? உனக்கென்ன மாமா வந்தது?
சும்மா கிட'' என ரமேஷின் ஆக்ரோஷம் ''நீங்க பாட்
பீப்பிள்...உங்க கித்த சாப்பித மாத்தோம்'' என நிர்ச்
சனமாய் மறுக்க வைத்தது.

சில மணி நேரங்கள், இட்லியையும் தண்ணீரையும்
வைத்துக் கொண்டு கெஞ்சிய ரத்தினம், முடிவில்
ஓய்ந்து போய் அமர்ந்தான். அப்போதே, சில பேர்
உறக்கத்தை நாடியிருக்க, வெண்ணிலா, விஜூத், ஷாரா
ஆகிய மூவரும் மட்டுமே விழித்திருந்தனர்.



''தூங்கலையா பாப்பா?'' என ரத்தினம் வாஞ்சையாய்
கேட்க, ஷாரா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.
''அவளுக்கு அவங்கம்மாவை கட்டிப் பிடிச்சுக்கிட்டு
படுத்தாத்தான் தூக்கம் வருமாம்...'' என்ற வெண்ணிலா
விடம் தொடர்ந்து பேச்சுக் கொடுத்தான் ரத்தினம்.

''உங்கப்பா பேரு தான் வெற்றிவேந்தனா?'' என்ற
அவனது கேள்விக்கு ''ஆமா'' எனப் பதில் கூறிய வெண்
ணிலா ''அங்கிள்...பீஸ் அங்கிள்! எனக்கு எங்கப்பா
பாக்கணும்... எங்களை அங்க விடுங்க அங்கிள்! இங்க
ரொம்ப பயமா இருக்கு'' என்றாள் பயத்துடன்!

''உனக்கா? பயமா? என்ன மாதிரி சண்டையெல்லாம்
போடுறே?'' என ரத்தினம் சிரிக்க, வெண்ணிலாவிற்கு
அவன் விடப் போவதில்லை போல என்பதில் அழுகை
வந்தது!

அவளது முகத்தைப் பார்த்துவிட்டு ''சரி, விடுறேன்!
உங்க வீடு எங்க இருக்குன்னு சொல்லு... அங்க விடு
றேன்!'' என்றான் சிறு சிரிப்புடன். மற்ற நேரத்தில்
சொல்லியிருப்பாளோ என்னவோ. அந்த இருட்டில்
அவனது சிரிப்புச் சிறு அச்சத்தைக் கொடுக்க ''சொல்ல
மாத்தேன்! நம்மளை அடிக்கிறவங்க கிட்ட, வீடு பத்தி
எதுவும் சொல்லக் கூடாதுன்னு... எங்க ஆகாஷ் அண்ணா
சொல்லியிருக்காங்க... சொல்ல முடியாது! எனக்கு
உங்களைப் பிடிக்கலை... சொல்ல மாத்தேன்'' என
ஆணித் தரமாய் மறுத்துவிட்டு, கால்களைக் கட்டிக்
கொண்டு உறங்கிப் போனாள்.

காலையில் ''மாமா...மாமா'' என்ற ரமேஷின் அலற
லில் ஏற்கனவே விழித்திருந்து, வெற்றிவேந்தனிடம்

பேசிய ரத்தினத்திற்குத் தூக்கிவாரிப் போட, உறக்கத்திலிருந்த குழந்தைகள் யாவரும் அரண்டு போய் விழித்தனர்.

"எங்கடா போய்த் தொலைஞ்ச? நம்ம கேட்ட மாதிரி... எல்லா பத்திரிகையிலும் அந்தப் பள்ளிக் கூடத்தைப் பத்தி... நாறு நாராய்க் கிழிச்சுட்டானுங்க! இப்ப, இந்தப் பிள்ளைங்களைக் கூட்டிப் போய்... அவங்க அவங்க வீட்டில சேர்க்கணும்" என ரத்தினம் கடிந்து கொண்டதோடு, தகவலும் சொல்ல, ரமேஷ் குதித்தான்!

"ஆமா, இங்க உயிருக்கே உலை வருதாம்! நீ... இந்தக் குட்டிப் பிசாசுங்களை வீட்டில விடுறதைப் பத்திப் பேசிட்டு இரு! கடலூர்ல இருக்க என் வூட்டுக்கு ரெண்டு பேர் போய், என்னைப் பத்திக் கேட்டிருக்கானுங்க! நிச்சயமா போலீஸா தான் இருக்கும்... நாய் மாதிரி மோப்பம் பிடிச்சு அலைவங்க... இங்க வரதுக்குள்ளே, நாம ஓடியாகணும்!" எனப் பரபரத்தவன், "நாம அவ்வளவு தூரம் சொல்லியும்... போலீசுக்குப் போயிருக்காங்கன்னா... என்னவொரு தெனாவெட்டு இருக்கணும்?" எனச் சட்டென கோபம் தலைக்கேற, வெண்ணிலாவைத் தன் புறம் பிடித்து இழுத்தான்!

"ம்மா" என அலறிய வெண்ணிலாவை விலக்கி நிறுத்திய ரத்தினம் "புள்ளைங்களை எதுவும் செய்யாதே! நாம சொன்னதை அவங்க செய்துட்டாங்கன்னா... பசங்க உயிருக்கு எந்த ஆபத்தும் வராதுன்னு வாக்குக் கொடுத்திருக்கேன்! அதான் அவங்க நாம கேட்டதுக்கும் மேலா... தலைப்புச் செய்திலேயே வர மாதிரி செய்துட்டாங்களே! விட்டுடு ரமேஷ்!" எனச் சமாதானம் செய்ய முயன்றான்.



"நா அவங்களை ஒண்ணும் செய்யக் கூடாதுன்னா... நீ என்னோட கிளம்பி வரணும்? சென்னையில கொண்டு விடுறேன்... வீட்டில இறக்கி விடுறேங்கிற வேலையெல்லாம் விட்டுடு" என அவன் எரிச்சல் பட்டதற்குப் பதிலாக, "பச்சைப் புள்ளைங்களை... எப்படிடா நடுக் காட்டில்..." எனத் தொடங்கிய ரத்தினத்தின் பேச்சு, ரமேஷின் கத்தி வெண்ணிலாவின் புறம் நீண்டதும் அடங்கி, அவனுடன் சென்று மறைய வைத்தது!

அவர்களது சம்பாஷணையிலிருந்து, அவர்கள் ஓடப் போவதை உணர்ந்திருந்த பிள்ளைகள், மேலும் யோசிப்பதற்கு முன்னர் இரு கடத்தல்காரர்களும் ஓடி மறைந்திருந்தனர்!

தனியாய் விடப் பட்டதில், பத்தாய் இருந்த பிள்ளைகளுடன் பதினொன்றாய் அழுகையும் சேர்ந்து கொள்ள, தேற்றுவதற்குத் தேர்ந்த பெரியோர்கள் யாருமில்லாமல் போனதில், ஒருவரது கையே மற்றவருக்கு ஆதரவாய் இருந்தது!

"பசிக்குது" பால் வேணும்..." "காம்ப்ளான் சாப்பிடணுமே?" என ஒருவருக்கு ஒருவர் சொல்லிக் கொண்டே, அங்கிருந்த பைகளை எல்லாம் குடைந்த போதிலும், உண்ண எதுவும் கிடைக்கவில்லை! இருந்த மிச்சம் மீதியைத் தான் இரவே உண்டு விட்டிருந்தனரே! கைக்கு ஒன்றும் அகப்படாமல் போக, முகம் அழுகையில் கோணத்துவங்கிய போது "ஹே சாக்கி" எனத் தன் பையிலிருந்து இரு மிட்டாய்களை எடுத்து, நண்பர்களிடம் நீட்டினான் சாஷந்த்!

அவனைத் தொடர்ந்து அனைவரும் தத்தம் பைக ளுக்குக் கையை விட்டப்போது தான், முந்தைய தினம் மாலையில் தான் போட்ட செல்போன் துண்டுகள் வெண்ணிலாவின் கைகளில் தட்டுப்பட்டன! அவற்றை எடுத்து அவள் கடைப் பரப்ப, ''ஹே செல்போன்! டாடி கூப்பிட்டு... நம்மளைக் கூப்பிட்டுப் போகச் சொல்ல லாமா?' எனத் தருணும், ''இது எப்பி...கிச்சது வெண்ணி? உனக்குத தனிப்பா செல்போன் இக்கா?'' எனக் கேள்வி பாதி, வியப்பு மீதியாக விஜூத்தும் கேட்க, ''சின்னப் புள்ளைங்க எல்லாம்...செல்போன் வச்சுக்கக் கூதாதுன்னு எங்கம்மா சொல்லியுக்காங்க... உங்கம்மா சொல்லித் தரலையா?'' என முதல் நாள் வெண்ணிலாவின் கேள் விக்குப் பதிலடியாய், இப்போது தானும் ஒரு கேள்வி கேட்டாள் ஷாரா!

''எனனோடது கிடையாது! இது ஷோபா மிஸ்சுது!'' என வெண்ணிலா விளக்கம் கூறவும் ''அவங்ககிட்ட கொடுக்க வேண்டியது தானே? நீ... ஏன் வச்சுக்கே?'' எனத் தேஜஸ்வினி கடிந்து கொண்டான்.

''அவங்ககிட்ட கொடுக்கத் தான் கொண்டு வந்தேன்... ஆனா மிஸ் தா...பாதிலேயே இறங்கிட்டாங் களே!'' என்ற வெண்ணிலாவுடன் சேர்ந்து, கைப்பேசி யின் பாகங்களை இணைக்கத் தொடங்கினர் பிள்ளைகள்.

''எங்கப்பா போன்ல இப்பி...இக்கும்!'', ''நா பார்த் திருக்கேன்... இது இப்படித் தான் வரும்'' எனப் பல விவாதங்களுக்குப் பிறகு, ஒரு வழியாக கைப்பேசி இணைக்கப்பட்டது!



''அய்யயோ! லைட்-டே எரியலையே! நிலா-ஆதி போட்டோ வரவே இல்லையே... கருப்பா இக்கு'' என தன் தந்தையின் கைப்பேசியை மனதில் வைத்து, வெண்ணிலா பேசவும், ''எல்லா போன்லேயும் நிலா-ஆதி போட்டோ வராது! எங்கப்பா போன்ல என்னோட போட்டோ தான் வரும்?'' எனப் பெரும் பேசியது, ஒரு வாண்டு!

''அப்போ ஷோபா மிஸ் போன்-ல அவங்க பாப்பா தான் இக்கும்'' என வெண்ணிலா முடிவு செய்ய, ''ஆனா...ரம்ப கருப்பா இக்கே?'' எனத் தாடையைத் தட்டி யோசித்தவளின் தலையில் தட்டிய விஜூத் ''அதை... ஓன் பண்ணனும்... கொடு'' என்றான், பெரிய மனிதனின் அலுப்புடன்.

''ஹோ! சரி... சரி... நானே செய்வேன்'' எனச் சிலிர்த்துக் கொண்டே வெண்ணிலா, தன் தந்தையின் கைப்பேசியில் விளையாடியதை வைத்து ஏதோ செய்ததில் கைப்பேசி உயிர் பெற்றது!

''ஹையா லைட் வந்துச்சு!'' எனக் கத்தியவள், உடனேயே தன் வீட்டு எண்ணை அழுத்தினாள்! ஆனால், அந்தச் சிறு பிள்ளைக்கு, கைப்பேசியில் வீட்டு எண்ணை அழைக்கும் போது, அந்தந்த ஊருக்கான எஸ்.டி.டி. எண்ணைப் போட வேண்டும் என்பது தெரியவில்லை!

''பீன்...பீன்'' என்ற ஓசைக்குப் பின்னர், தந்தையின் கைப்பேசி எண்ணை அழுத்தினான். மகராசி! நல்ல வேளையாக, கைப்பேசி எண்ணிற்குத் தடா எண் போடத் தேவையில்லை என்பதால் வெற்றிவேந்தனின்

கைப்பேசி சீறியது! அதற்குள், தத்தம் வீட்டிற்குப் பேசுவதற்கு ''நீ...நான்'' எனப் போட்டிப் போட்டுக் கொண்டிருந்தனர், மற்ற மக்கள்!

''இரு... இரு...பேசிட்டு தரேன்'' என வெண்ணிலா சமாதானம் செய்துக் கொண்டிருக்கும் போதே, வெற்றியின் ''ஹலோ''தேனாய் பாய்ந்து வந்தது!

அதற்கேற்ற தேவாமிர்தமாய் ''ப்பா'' எனக் கூவியது செல்லச் சிட்டு!

அந்தப் பக்க வெற்றியின் இதயம் ஒரு முறை நின்று துடிக்க, ''நிலா பேபிபிபிபிபி...'' எனக் கூவியவன். ''எங்க இருக்கடா கண்ணம்மா! இது... யாரோட போன்டா? கூட யாரு இருக்கா? பத்திரமா இருக்கீங்களா?'' எனக் கேள்விகளை அடுக்கத் துவங்கி, ஒருவாறாய் சமாளித்தான்!

தானே இவ்வளவு பதறினால், தன் சின்ன இளவரசி மேலும் பதறிவிடுவாள் என்ற எண்ணம் தோன்ற, ஓரோர் கேள்வியாய் கேட்டவனிடம்,

''எங்க இருக்கடா கண்ணம்மா?''

''எங்க இக்கோம் தெய்யலப்பா! இங்க யாருமே இல்ல... பயமா இக்கு!''

''யாருமே இல்லையா? ரத்தினம்?''

''அந்த அங்கிள் ரெண்டு பேரும்...காணோம்... ஓடிப் போய்த்தாங்க.''

''இது... யாரோட போன்டா?''

''இது ஷோப மிஸ்து.''



''எங்க இருக்கீங்கன்னு கொஞ்சம் பார்த்துச் சொல் டா செல்லம்...''

''நாங்க வேவ பஸ் வந்துட்டோம்பா...இது குட்டியா இக்குது!''

''ப்பா... பசிக்குதுப்பா.''

''ஷோபா மிஸ் கூத நடுல இறங்கிட்டாங்க...நாங்க தனியா இக்கோம்!''

''யாருமே இல்லை'' எனத் தனக்குத் தெரிந்த தகவல்களைக் கூறினாள், வெண்ணிலா! உள்ளம் சுக்கு நூறாய் உடைய, மெலிந்து சுருங்கியிருந்த தன் குரலைச் சரி செய்து கொண்டு வெற்றிவேந்தன் அடுத்தக் கேள்வியைக் கேட்கும் முன்னர், அழைப்பு துண்டானது!

இருபது மணி நேரத்திற்குப் பின்னர் ஒலித்தப் பெண்ணின் குரல் சட்டென நின்று விடவும், திக்கித் திணறி ஓடிக் கொண்டிருந்த வெற்றியின் இதயம், ஸ்தம்பித்து நின்றே போனது! ''நிலா...நிலா பேபி!'' என அவன் கத்த, அத்துவானக் காட்டிலிருந்த பெண்ணோ மீண்டும் கருப்பாய் தெரியத் துவங்கிய கைப்பேசியைப் பார்த்து அழத் துவங்கினாள்!

''நிலாவா? வெண்ணிலாவா? எங்கிருந்து பேசினா?'' எனக் குரல்கள் பரபரக்க, அதில் நிலாவின் தாயினது மட்டும் தனித்து ஒலித்தது! அன்பரசியின் கையைப் பற்றிக் கொண்டு ''நிலா தான்...அன்பு! பத்திரமா இருக்கா... அவளுக்கு எதுவுமில்லை... சீக்கிரமே கண்டு பிடிச்சுடலாம்'' என விவரம் கூறிய வெற்றிவேந்தன், மீண்டும் தனக்கு அழைப்பு வந்த எண்ணிற்கு

அழைத்தான்!! ஆனால், அந்த எண்ணின் உயிரற்ற தன்மை இப்போது பார்த்து அமலுக்கு வந்து, வெற்றி வேந்தனின் உயிர் போக வைத்தது!

தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்த வெற்றியிடம் ஆளாளுக்கு ஒவ்வொன்று கேட்க, ஆனந்த் மட்டும் ''கால் ட்ரெஸ் பண்ணலாம், வெற்றி! பதட்டப் படாதீங்க! கால் வந்த டவர் விவரம் தெரிஞ்சா, பசங் களை ஈஸியா கண்டுபிடிச்சுடலாம்'' எனத் தெம்பூட்டி, அதற்கான வேலைகளைப் பார்க்க வைத்தான்!

தந்தைமார் தமக்காக மலையையே புரட்டிக் கொண்டிருக்கின்றனர் என்ற விவரம் தெரியாமல், தத்தம் வீட்டினருடன் பேச முடியாத வருத்தத்தில் அனைவரும் சுருண்டிருக்க, என்ன முயன்றும் ஷோபாவின் செல்லில் ஒலியைக் கொண்டு வரமுடியவில்லை! மொத்தமாய் செத்து விட்டிருந்தது அது!

''இப்போ, என்ன செய்றது?'' நா...எங்கப்பா கூட பேசவே இல்லை'', ''நீ மட்டும் பேசினே.. எங்களை யெல்லாம் பேசவே விடல...'' எனப் பல குரல்களின் நடுவே, அடுத்த அரை மணி நேரம் கழிய, பிள்ளைகள் இருந்த பேருந்தை சில போலீஸ்காரர்கள் நெருங்கி வந்தனர்.

அந்தப் பக்கமாய் சுள்ளி பொறுக்கப் போன சில பெண்கள் கூறிய தகவலின் படி (தனியாய் ஓர் சிற்றுந்து நிற்பதாகவும் கூறிய தகவலின் படி), அந்தப் பேருந்தை நெருங்கியவர்கள். அங்கே சிறு குழந்தைகள் பத்து பேர் இருப்பதைக் காணவும் திகைத்து விழிக்கும் போதே,



''ஹையா போலீஸ் அங்கிள் வந்துட்டாங்க! இனிமே நம்மை... வீட்டில விட்டுவாங்க! போலீஸ் அங்கிள் எல்லாம் நல்ல அங்கிள்... ஆகாஷ் அண்ணா சொல்லி யுக்காங்க அவங்ககித சொல்தாம்'' எனத் துள்ளிக் குதித்த வெண்ணிலா, காவல்காரர்களிடம் ஓடிச் சென்றாள்!

''நீங்கெல்லாம் யாரு?'' என அவரது ஒரு வார்த்தை போதுமானதாய் இருக்க. வெண்ணிலாவின் மடை திறந்த பேச்சு உதயமானது!

''என் பேரு வெண்ணிலா.''

''எங்க அப்பா பேரு... வெற்றிவேந்தன்... எங்கப்பா டாக்டர்ரா இருக்காங்க...''

''எங்க வீட்டு அட்ரஸ்! நம்பர் டூ, பிரஸ்ட் மெயின் ரோடு, பெசன்ட் நகர், சென்னை.''

''எங்க வீட்டு போன் நம்பர் 24759250'' எனத் தன்னைப் பற்றிய விவரங்களை ஒப்பித்தவள் ''நாங்க எல்லாம் ஜூ பாக்க வந்தோமா? அந்த பஸ்ல ஏறிட்டு இருக்கும் போது...எங்களை மட்டும் இந்த ரெண்டு அங்கிளும் இங்க கூட்டிட்டு வந்துட்டாங்க! ஷோபா மிச்சும் வந்தாங்க... ஆனா நடுல காணாம் போய்ட் டாங்க... அபுதம்... அப்தம்...எங்களை நைஃபு காட்டி மிரட்டுனாங்க...அபுதம் ஓடிப்போய்ட்டாங்க!'' என விவரமும் கூறினாள்.

அவளைத் தொடர்ந்து மற்ற பிள்ளைகளிடமும் அவர் விவரம் கேட்க, தம் பேர் மற்றும் தந்தையின் பேர் தவிர அந்த மூன்று வயது பிஞ்சுகளுக்கு விவரம் தெரிய வில்லை. ஒரு சிலர், தத்தம் வீட்டுத் தொலைப்பேசி

என்னைக் கூறினரே தவிர, அதில் அதிகத் தெளி விருக்கவில்லை.

பத்துப் பேரிடம் விசாரணை நடத்தி முடித்தவரை "எங்க எல்லாரையும்...எங்கப்பாகிட்ட விட்டுடுங்க... எங்கப்பா... அவங்க வீட்டில விட்டுடுவாங்க! நாங் கெல்லாம் பிரண்ட்ஸ் தான்... எங்கப்பா விட்டுட்டா... எங்கப்பாவே எல்லா அப்பா கிட்டயும் விட்டுவாங்க" என்ற பேச்சினால் ஈர்த்தாள், வெண்ணிலா.

அவள் கூறிய விவரங்களை வைத்து, வெற்றியின் எண்ணிற்குத் தொடர்பு கொண்டால் "ரொம்ப தேங்க்ஸ் சார்! நிலா...செய்த காலை வச்சு, அவங்க இருக்க இடத்தை இப்போ தான் ட்ரெஸ் பண்ணிட்டு இருந் தோம்... அதுக்குள்ளே நீங்களே கூப்பிட்டீங்க! நாங்க எல்லாரும் அங்க வரோம் சார்... வந்து பசங்களைக் கூட்டிட்டுப் போறோம்!" என்றுவிட்டு, அங்கே விரைந் தான் வெற்றிவேந்தன்.

அவர்கள் அங்கே போவதற்குள், வெண்ணிலாவின் வாய் ஜாலத்தினால் ரத்தினம் மற்றும் ரமேஷின் அங்க அடையாளங்கள் மட்டுமல்லாது அவர்கள் தப்பிச் சென்ற பைக்கில் மாட்டியிருந்த சிகப்பு ப்ளேட், முருகன் ஸ்டிக்கர் உட்பட அனைத்தும் வெளிவர, ரத்தினமும், ரமேஷும் காவல் துறையினரால் பிடிக்கப் பட்டனர்.

காவல் நிலைய அதிகாரி கேட்டக் கேள்விகளுக் கெல்லாம், சிறிதும் தயங்காமல் பதில் கூறிக் கொண்டே வந்தாள் வெண்ணிலா!

"உங்களை விட்டு ஓடினாங்க இல்லையா? அவங்க எங்கம்மா?"



"காலையில பைக்ல போய்த்தாங்க..."

"அவங்க பேர் தெரியுமா உனக்கு?"

"ஹோ தெரியுமே? ஒரு அங்கிள் பேரு... ரத்தினம்! இன்னொரு அங்கிள் பேர்... வந்து... ரமேஷ்"

"உங்களை ரொம்ப அடிச்சாங்களா?"

"ம்ம்... ரமேஷ் அங்கிள் தான் சும்மா சும்மா திட் டிட்டே இருந்தாங்க... ரத்தினம் அங்கிள் சாப்பாத்து வாங்கித் தந்தாங்க.. நாங்க தா சாப்பிடல..."

"ஏன்மா?"

"ஸ்ட்ரேஞ்சர்ஸ்கிட்ட சாப்பிடக் கூடாது! அம்மா ச்சொல்லி இருக்காங்க!" என்றாள் வெண்ணிலா, இப்போது பயபக்தியுடன்.

அவள் பேசுவதை ஓர் கூர்மையோடும், ஆர்வத் தோடும் கேட்டுக் கொண்டிருந்த காவல் நிலைய அதி காரியிடம் வந்த அவரது கீழ் வேலை செய்யும் ஊழியர், "சின்னக் குழந்தைங்க கிட்ட கேட்கிறதை விட, அவங்க ஸ்கூலுக்கே போன் பண்ணிக் கேட்கலாமே, சார்! இன்னும் தெளிவா விஷயம் தெரியுமே?" என வெண் ணிலாவின் பேச்சைச் சிறு பிள்ளையின் மிளற்றல் என்ற ரீதியில் எடுத்துப் பேசினார்.

"இதை விடத் தெளிவா...உனக்குத் தகவல் வேணுமா? நேர்ல பார்த்தப் பொண்ணு, ஒரு சின்ன விஷயத்தைக் கூட விடாம அழகா சொல்லுது! பிறகென்ன?!" என அந்த நேரத்திலும் அவரால் சிரிக்க முடிந்தது!

ஆனால், மற்ற காவலரின் முகம் கடுகடுப்பதைக் கண்டு ''வெண்ணிலா சொன்ன விவரத்தை வச்சு, அவங்க அப்பாக்குத் தகவல் சொல்லியாச்சு! அவர்... இந்தப் பத்து பேரோட குடும்பத்திற்கும் விவரம் சொல்லி, எல்லாரும் கடலூருக்கு வந்துட்டே இருக் காங்க! கையில விவரத்தை வச்சுட்டு, இதுக்குயா நெய்க்கு அலையணும்! வெண்ணிலா பாப்பா சொல் றதைக் கேட்கலாம்!'' என்றார் மேலும் கூடுதல் விவரம் போல.

"அவங்க என்ன டிரஸ் போட்டிருந்தாங்க?''

''ரத்தினம் அங்கிள்... உங்களை மாதிரி டிரஸ் போட்டிருந்தாங்க (காக்கி உடை). ரமேஷ் அங்கிள் வந்து... தெட்/எல்லோ ரெண்டும் வர மாதிரி டி-ஷர்ட்! அப்தம்...ப்ளாக் கலர் பாண்ட்!'' என அழகாய் விவரம் கூறினாள்.

''அவங்க எதிலடா போனாங்க?''

''எங்களை விட்டுப் போனதா? அதுதா... முன்னா டியே சொன்னேனே... தும்ப தும்ப கேட்க கூடாது...'' எனச் சலித்துக் கொண்டு ''பைக்ல'' என்றாள், சின்னக் குட்டி!

''ஹோ சாரி! அங்கிள் மறந்து போயிட்டேன்! பைக்... என்ன கலர்?''

''ம்ம் பைக் வந்து... வந்து... தெய்ய்ளையே...ப்ளாக் கலர் போல...''

''அதில வேற ஏதாவது இருந்ததா?''



''பின்னாடி... ம்ம்... இந்திய ஃப்ளாக் போட்டுந்துச்சு!''

''வேற...''

''ம்ம்... ஒரு தெட் பாக் போட்டிருந்துச்சு'' என்றாள் அப்தம்...முருகன் உம்மாச்சி இருந்தாரு'' என முடித்தாள்.

''எந்தப் பக்கம் போனாங்க? குட்டி... பார்த்தீங்களா?''

''நீங்க... எங்களை ஜீப்ல கூட்டி வந்தீங்க இல்ல... அந்தப் பக்கம் தா...சர்ர்ர் சார் போய்த்தாங்க!''

''போறதுக்கு முன்னாடி என்ன சொன்னாங்க?''

''ரமேஷ் அங்கிள்... என்னைப் பிடிச்சு இழுத்தாங் களா... என்னைக் கொன்னுடுவேன் சொன்னாங்க... அப்தம்... ரத்தினம் அங்கிள் போவ மாத்தேன் சொன் னாங்க.. அப்தம் திருப்பி ரமேஷ் அங்கிள் இழுத்தாங்க... அப்தம் போய்த்தாங்க'' எனக் கோர்வையாக சொல் கிறேன் பேர்வழி என்று ஒரு மார்க்கமாய் சொல்லி முடித்தாள், வெண்ணிலா!

''ஓகேடா! இந்தச் சாப்பாட்டைச் சாப்பிடுறியா?'' என அவர் உணவுப் பொட்டலத்தை நீட்டவும், ''ம்ம்... எங்கம்மா ஸ்ட்ரே...'' என மீண்டும் ஆரம்பித்தாள்.

''ஆனா. உங்க ஆகாஷ் அண்ணா...போலீஸ் அங்கிள் நல்ல அங்கிள் சொல்லி இருக்கானே?'' என அவர் எடுத்துக் கொடுக்கவும், ''ம்ம்.. த். ஆ.. அஆன்... ஆமா... நீங்க ல்ல அங்கிள் தா... ஆனா ஸ்ட்ரேஞ்சர்ஸ் தானே?'' என எதிர்கேள்வி கேட்டாள் வெண்ணிலா.

''உங்கப்பாவோட எல்லாம் பேசினேன்... உங்கப்பா தேங்க்ஸ் சார் சொன்னாங்க தானே? உன்கிட்ட

கூட...அங்கிள் கூட பத்திரமா இருடா சொன்னாங்க தானே? அப்புறமும் நான் ஸ்ட்ரேஞ்சரா?'' என அவர் பரிதாபமாய் கேட்டதும், வெண்ணிலா உணவுண்ணத் தொடங்கினாள்.

தத்தம் தந்தை மற்றும் தாய் மாருடன் கைப்பேசி மற்றும் தொலைப்பேசியின் வாயிலாக, தாங்கள் நலமாக வந்ததைப் பிள்ளைகள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ரமேஷும்- ரத்தினமும் கடலூர் தாண்டி சிதம்பரம் செல்லும் பாதையில் பிடிப்பட்டதாக தகவல் வந்து சேர்ந்தது!

ரத்தினத்தின் கோபம் நியாயமானது தான் என்ற போதிலும், அதை அவன் செயல்படுத்தி முறை தவறு தானே? அதற்கான தண்டனையை அவன் அனு பவித்தே ஆக வேண்டாமோ?

தாய் மடி தேடும் கன்றுகளாய் தத்தம் கன்றுகளைத் தேடி ஓடி வந்த தாய்-தந்தையார் அனைவரது நெஞ் சிலும் பால் வார்க்கும் வண்ணம், கன்றுகள் அனைவரும் தாய் மடித்தேடி பாய்ந்தனர்!

முழுதாய் ஒரு நாள் காணாத பெண்ணரசியின் பூ முகத்தைக் கண்டதும், அன்பரசியின் ஸப்த நாடிகளும் அடங்கிப் போயின! உடலிலுள்ள ரத்தம் முழுதும் கால் களுக்குள் பாய, கையிலிருந்த ஆதவனை சுபத்ராவிடம் கொடுத்துவிட்டு, வெண்ணிலாவை நோக்கியது அவளை உருவாக்கிய பால் நிலவு!! அன்பரசிக்குத் துணையாக சுபத்ராவும், வெற்றிக்குத் துணையாக ஆனந்தும், ஆதவனுக்குத் துணையாக ஆகாஷும் செய் நன்றி மறவாத மானிடராய் வந்திருந்தனர்.



''ம்மா'' என வெண்ணிலாவும் பாய, ''குட்டிம்மா'' எனப் பால் நிலவு உருக, அங்கே தன் உதிரத்தைப் பாலாக்கி, நெஞ்சை வீடாக்கி, உடலைத் தேராக்கி, ஊட்டி வளர்த்த தாயன்பு வெள்ளமென பாய்ந்து கரை புரண்டோடியது!

கண்களில் கண்ணீர் காவேரியென பாய்ந்த வண்ணமிருக்க, தன் முத்தத்தை கங்கைக்கு நிகராக்கிப் பெண்ணைக் குளுப்பாட்டிக் கொண்டிருந்தாள் அன்னை!

''ம்மா... இங்க நைஃப் வச்சாங்க... நிலா...நல்லா கடுச்சுட்டா'' எனக் கழுத்தில் கையை வைத்துப் பெண் விவரம் கூறத் துவங்கியதும், ''என் செல்வம், அந்த அரக்கனிடம் உயிருக்கு அல்லவே போராடியிருக் கிறது!?'' எனத் தாய் நெஞ்சம் பதறிப் போனது!

அன்பரசியின் உடல் உதறுவதைக் கண்டு ''நிலா பேபி! அதான், அம்மா கிட்ட வந்துட்டீங்களே? இனி மேல், அந்த ரெண்டு அங்கிள் பத்தியும் பேச வேண் டாம்டா... அப்பாக்காக... ப்ளீஸ்'' எனக் கையைச் சிறு மலர் போல் குவித்துக் கெஞ்சினான். அவனது கெஞ்சின் பொருள் புரியாவிடினும், தந்தையின் கெஞ்சல் சிரிப்பை உண்டு பண்ண, ''நிலாக்குச் சாக்கி வாங்கித் தரீங்களா? அப்போ தா...பேசமாத்தேன்!'' எனப் பேரம் பேசினாள், அந்தக் கெட்டிக்காரி!

''காரியத்தில் கெட்டி!'' என சுபத்ரா சிரிக்கும் போதே, ''நிலா குட்டிக்கு இல்லாத சாக்கியா? எத்தனை வேணும்? டூ... த்ரீ... ஃபோர்... எவ்வளவு?'' என

வெற்றிவேந்தன். கைகளை நீட்டிக் கொண்டே போனான். நிலா ''டென்'' கை. அதுவரை அனைவரது வாயையும் பார்த்துக் கொண்டிருந்த ஆதவனின் காதில் ஆகாஷ் ஏதோ கிசுகிசுத்தான் விளைவாக ''எக்கும் டென்...ம்ம்ம் ட்வெண்டி...'' எனக் கை விரலுடன் கால் விரலையும் சேர்த்துக் காண்பிக்கையிலேயே, ''ஆமா, நூறு மிட்டாய் திங்குறாங்க... சும்மா இருங்க! இருக்கிற பத்து பல்லும் பத்தே நாளில் விழறதுக்கு வழி பார்க்கிறாங்க அப்பாவும் - பசங்களும்!'' எனத் தன் பழைய குரலுக்கு மாறியிருந்தாள் அன்பரசி!

அவளிடம் ''பீஸ்''... ''பீஸ்'' எனப் பிள்ளைகள் இருவரும் கெஞ்சிக் கொண்டிருக்கும் போதே, அன்பரசி மற்றும் வெற்றியின் குடும்பத்தினர் அங்கே வந்து சேர்ந்து விட்டிருந்தனர். அவர்களது ஒரே பேத்தி கிடைத்துவிட்டாள். இனி ஒன்றும் பயமில்லை என வெற்றிவேந்தன் கூறியபோதும், தங்கள் மகவுகளின் மரகத மகவைக் கண்களால் காணாமல் அவர்களால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை.

''நிலா கண்ணம்மா'' என ஓடி வந்த வைதேகி, அவளை அணைத்து முத்த மழை பொழிந்து கொண்டிருக்க, அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஆதவனைப் பார்வதி தூக்கிக் கொண்டார். ''பாரு பாத்தீ! நிலா...கிடைச்சுட்டா!'' எனக் குதூகளித்தப் பேரனையும், ''என்னை மாதிரியே போலீஸ் அங்கிள் தா... நிலாவையும் சேவ் செய்துட்டாங்க...இனிமேல் நிலாக்கு ஒன்னுமே ஆகாது! என்னை மாதிரி...ஸ்ட்ராங் ஆகிடுவா'' எனப் பெரிய மனிதனாய் பேசிய ஆகாஷையும்



அவர் உச்சி முகரும் போது, ''நிலா குட்டியை... அடிச்சாங்களா?'' என வைதேகி மீண்டும் தொடங்கினார்.

''அத்தே! இந்த ஒரு நாளில் நடந்த எதையும் திரும்பப் பேசக் கூடாதுன்னு உங்கப் பையன் சொல்லியிருக்காங்க... அது அவளுக்குத் தேவையில்லாத பயத்தை உண்டு பண்ணுமாம்... வர வழி பூராவும் என்கிட்ட சொல்லிட்டே வந்தாங்க... அவ முன்னாடி அழாதே... அழாதேன்னு சொல்லிட்டே வந்தாங்க... ஆனா... என்னால தான்...'' என அன்பரசி மென் குரலில் இழுக்கும் போதே, ''புரியுதும்மா!'' என ஒற்றை வார்த்தையில் மருமகளிடம் ஒப்புதல் கொடுத்த வைதேகி ''நிலா குட்டிக்கும்... ஆதிக் கண்ணனுக்கும் பாட்டி என்ன தெரியுமா கொண்டு வந்திருக்கேன்? கரெக்ட்டா சொல்லுங்க பார்க்கலாம்!'' என ஒன்றும் நடவாதது போல், முயன்று குரலைச் சரி செய்து கொண்டு கேட்டார் வைதேகி.

''பாலு ஸ்வீட்!'' - திரட்டுப் பால் எனும் இனிப்பு வைகைக்குத் தங்களாலான நாமகரணத்தைச் சூட்டிக் கொஞ்சினர் இருவரும்!

அவர்களது பதிலில் ''கரெக்ட்!! உங்க ரெண்டு பேருக்கு மட்டும் தான்... அப்பாக்குக் கொடுக்காம நீங்க மட்டும் சாப்பிட்டுடுங்க!'' என வைதேகி பகிரங்க ரகசியம் பேசவும், ''ச்சரி! ஆகாஷ் அண்ணாக்கு மத்தும் கொடுக்கிறோம்'' என நிலாவும் பகிரங்க ரகசியம் பேசினாள். கூடவே ''என்ன ஆதி?'' எனத் தமையனையும் அவள் கூட்டுச் சேர்க்க, ''சரியான வாலு!''

எனக் காதைத் திருகிய வெற்றியின் முதுகில் ஓர் கை விழுந்தது!

அந்த கைக்குச் சொந்தக்காரரானக் காவல் துறைக் கண்காணிப்பாளர் "மிஸ்டர் வெற்றிவேந்தன்! உங்க பெண்ணை மிக அற்புதமா வளர்த்திருக்கீங்க! என்ன ஒரு தெளிவு, தைரியம், தன்னம்பிக்கை, அறிவுக் கூர்மை... இது போல் எல்லா பிள்ளைகளும் இருந்து விட்டால் பிரச்சனைகள் பலவும் குறைந்துவிடும்!" எனக்கூறி, "அவளைப் பார்க்கும் போது... எனக்கு பாரதி யோட வரிகள் தான் ஞாபகம் வருது...

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை

அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;

வெந்து தணிந்தது காடு – தழல்

வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?"

என்ற பாராட்டுதலுடன்,

வெண்ணிலாவின் கன்னத்தில் முத்தம் வைத்தார்!